# பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
ஔவை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்ப்பல்துறை
A/528
233

குயிலன்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: பிப்ரவரி 1957.
உரிமை பதிவு செய்யப் பெற்றது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம்
தமிழியல்துறை.

ஆசிரியரின் அனுமதியின்றி இக்கதையையோ, இதிலுள்ள அம்சங்களையோ திரைப் படத்திற்கோ, நாடகத்திற்கோ எவரும் உபயோகிக்கக்கூடாது.

நவபாரத் பிரஸ், 76, எல்லீஸ் ரோட், சென்னை—2.

அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்

# பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்

## 1

பொன்னாட்டு மன்னர் நாகநந்தரின் அரண்மனை அன்றொரு புதிய கோலம் பூண்டிருந்தது. அந்தப்புரத்திலுள்ள தோழிகள் அங்கு மிங்குமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் சிலருடைய முகங்களிலே ஏதோ ஒரு வித பயத்தின் ரேகை படர்ந்திருந்தது. சிலர் முகங்களிலே மகிழ்ச்சி தாண்டவ மாடியது. தோழிகள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது தாழ்ந்த குரலில் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டார்கள்.

மன்னர் நாகநந்தர் தன் மண்டபத்திலே வீற்றிருந்தார். ஒரு கிழ வேலைக்காரி விரைந்து வந்து மன்னரின் முன் சிரம் தாழ்த்தி வணங்கினாள். அவளிடம் ஏதோ ஒரு விதப் பதற்றம் தோன்றியது. கால் கைகளெல்லாம் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தன. நடுங்குகிற குரலிலே "அரசே! பெரிய ராணியாருக்கு பிரசவ வேதனை தோன்றியிருக்கிறது. தங்களிடம் அறிவிக்கும்படி உத்தரவிட்டார்கள்" என்று கூறினாள்.

இச் செய்தியைக் கேட்டதும் மன்னரின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு கண நேரமே நீடித்திருந்தது. உடனே ஒரு வித அலட்சிய பாவமும் கவலைக்குறியும் தென்பட்டன. ஆழ்ந்த பெருமூச்சொன்று எழுந்தது. பின்னர் வேலைக்காரியைப் பார்த்து "நல்லது, அரண்மனை மருத்துவச்சியை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள். குழந்தை பிறந்ததும் என்னிடம் உடனடி

யாக வந்து சொல்." என்று கூறினார். வேலைக்காரி மீண்டும் வணங்கிவிட்டு விரைந்து சென்றாள். மன்னர் அருகிலிருந்த பணியாளை அழைத்து மந்திரியைக் கூட்டி வரும்படி உத்தர விட்டுவிட்டு அமைதியின்றி உலவலானார்.

* * *

அரண்மனை மருத்துவப் பெண் வந்து சேர்ந்தாள். அவள் கையிலே மருத்துவம் செய்யும் சாதனங்கள் அடங்கிய ஒரு பெரிய பெட்டி இருந்தது. பெரிய ராணி படுத்திருக்கும் அறைக்குள் சென்று அப்பெட்டியை வைத்தாள். பெரிய ராணி வாசவதத்தை படுக்கையில் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள். வேதனை பொறுக்காமல் அழுது அரற்றிப் புழுவாக நெளிந்து கொண்டிருந்தாள். அறைக்கு வெளியில் காத்துக் கொண்டிருந்த பணிப்பெண்கள் மருத்துவச்சியின் உதவிக்காக வந்து சேர்ந்தார்கள். ஒரு பாத்திரம் நிறைய வெந்நீர் கொண்டுவர உத்தரவிட்டாள். இன்னொரு பணிப் பெண்ணிடம் சில மூலிகைகளைக் கொடுத்து அரைத்து வரச் சொன்னாள். மற்றொருத்தியிடம் மெல்லிய தூய வெண் துணி கொண்டு வரும்படி உத்தர விட்டாள். சிறிது நேரத்தில் பணிப் பெண்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்தனர். இதற்குள் இளையராணி மோகனதத்தை அங்கு வந்து சேர்ந்தாள். அவளும் நிறை கர்ப்பிணி. படுக்கையில் கிடக்கும் வாசவத்தையிடம் ஆறுதல் கூறி உற்சாகப் படுத்திவிட்டு மருத்துவப் பெண்ணைப் பார்த்து "கவனமாக உனனுடைய கடமையைச் செய். ராணிக்கு எவ்விதத் தொந்தரவும் ஏற்படக் கூடாது" என்று கூறி விட்டு, தன் இருக்கைக்குத் திரும்பிவிட்டாள்.

மருத்துவப்பெண் எல்லாப் பணிப் பெண்களையும் வெளியே சென்றிருக்கும்படி கூறினாள், பணிப் பெண்களில் ஒருத்தி "ஏனம்மா! நான் மட்டுமாவது உனக்கு உதவிக்கு இருந்தால் நல்ல தல்லவா?" என்று கேட்டாள்.

"ஒருவரும் வேண்டாம். முந்திய பிரசவத்தின் போது நீதானே என்னுடன் இருந்தாய். அக்குழந்தை பிறந்த உடனேயே உன் முகத்தில் விழித்ததால்தான் பிறந்த மறு

நாளே இறந்துவிட்டது. இப்பொழுது பிறக்கப் போகும் அரச குமாரன் உங்களுடைய துரதிருஷ்டம் பிடித்த முகத்தைப் பார்க்க வேண்டாம். எனவே தயவு செய்து எல்லோரும் வெளியே சென்று விடுங்கள்'' என்று கண்டிப்பாகக் கூறினாள் மருத்துவப் பெண்.

தாதி ஆத்திரத்துடன் வெளியே சென்று கதவைப் படாரென்று மூடிக்கொண்டாள். வெளியே நின்று கொண்டிருந்த மற்றொரு தோழியைப் பார்த்து "கேட்டாயா, இந்த மருத்துவச்சி கூறுவதை! முன்பு பிறந்த குழந்தை என் முகத்தில் விழித்ததால்தான் அற்ப ஆயுளாக இறந்து விட்டதாம். பிறந்த குழந்தை மருத்துவச்சியின் முகத்தில் விழிக்காமல் என் முகத்திலா விழித்தது?'' என்றாள்.

"இருந்தாலும் இருக்கலாம். இப்பொழுது பிறக்கப் போவது அரசகுமாரனல்லவா? சற்று வயதான மருத்துவச்சியின் முகத்தைக் காட்டிலும் உன் முகம் அழகானதல்லவா? அதனால் பிறந்தவுடனேயே உன்னைப் பார்க்க ஆரம்பிக்கலாம். நீ பொல்லாதவள்தானடி'' என்று சொல்லிக் "களுக்'' கென்று சிரித்தாள். அருகில் நின்ற மற்றவர்களும் சிரித்தனர். அச்சிரிப்பின் ஒலி அடங்குவதற்குள் அறையின் கதவு தாளிடப்படும் சப்தம் கேட்டது.

அறையின் கதவைத் தாளிட்டுவிட்டு மருத்துவப் பெண், வாசவதத்தையின் படுக்கை யருகில் சென்றாள். "மகாராணி! உங்கள் வேதனையைப் போக்குவதற்கு இதோ ஒரு மருந்து தருகிறேன். உங்களுக்கு எவ்வித வலியுமின்றிச் சுகப் பிரசவம் நடக்கும்'' என்று கூறினாள். பின்னர் தன் மடியிலுள்ள ஒரு மூலிகையை எடுத்து சிறிது கசக்கிவிட்டு ராணியின் மூக்குக்கு நேராகப் பிடித்தாள். உடனே ராணி பிரக்ஞை இழந்தாள்.

பின்னர் சிறிது நேரத்தில் மருத்துவப் பெண் தன் வேலையில் ஈடுபட்டாள். ராணிக்கு எவ்விதத் தொந்தரவுமின்றி சுகப் பிரசவம் நடந்தது. ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. பிறந்தவுடனேயே தன் கையிலிருந்த மயக்க மூலிகையை அதற்கும் பிரயோகித்தாள். உடனே

அக்குழந்தை மயக்கமுற்றது. பின்னர் மருத்துவப் பெண் தான் கொண்டுவந்திருந்த பெரிய பெட்டிக்குள் கந்தையால் சுற்றப் பட்டிருந்த ஒரு பெண் குழந்தையை எடுத்து வெளியே வைத்தாள். வெளியே மயக்க முற்றிருந்த ராணியின் ஆண் குழந்தையை அந்தக் கந்தையில் சுற்றிப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள். அதன் பின் தான் கொண்டுவந்திருந்த அந்தப் பெண் குழந்தையை ராணியின் அருகில் கிடத்தி தன் மடியில் மற்றொரு பக்கத்தில் தயாராக வைத்திருந்த ஒருவித மூலிகையை எடுத்து, குழந்தையின் மூக்குக்கு நேராகப் பிடித்தாள். மயங்கிக் கிடந்த குழந்தை வீறிட்டு அழ ஆரம்பித்தது. பின்னர் அதே மூலிகையை மயங்கிக் கிடக்கும் ராணிக்கும் பிரயோகித்தாள். ராணி வாசவதத்தை மயக்கம் தெளிந்து விழித்த போது தனது குழந்தை பக்கத்தில் அழுதுகொண்டிருக்கும் இனிய குரலைக் கேட்டாள். அவளுடைய உள்ளமெல்லாம் பூரித்தது. படமுடியாத வேதனை நிறைந்த நரகத்திலிருந்து சொர்க்கத்திற்கு வந்ததைப் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. உடல் வேதனை எல்லாம் தீர்ந்திருந்தது. என்றாலும் பலஹீனம் அதிகமாகவே இருந்தது. மெதுவாகத் தனது வலது கரத்தை உயர்த்தி அருகிலிருக்கும் குழந்தையை ஸ்பரிசித்தாள். அந்த மெல்லிய ஸ்பரிசமும் பாலுக்காகப் பசித்தழும் குரலும் அவளுடைய தாயுள்ளத்திலே இன்ப அலைகளை எழுப்பின. தன்னுடைய அருமைக் குழந்தையைப் பார்ப்பதற்கு ஆவல் அதிகரித்தது. மருத்துவப் பெண்ணிடம் குழந்தையை எடுத்துக் காண்பிக்கும்படி உத்தரவிட்டாள்.

மருத்துவப் பெண் குழந்தையை எடுத்து ராணியின் நேராகப் பிடித்துக்கொண்டு "மகாராணி! பெண் குழந்தை தான்" என்று வருத்தத்துடன் கூறினாள்.

பெண் குழந்தை என்றவுடன் ராணியின் முகத்தில் சற்று சலனம் தோன்றியது. ஆனால் அது ஒரு கண நேரம் கூட நிலைத்து நிற்கவில்லை. மீண்டும் அவளுடைய முகத்திலே அளவற்ற மகிழ்ச்சி பொங்கியது. "ஆணானால் என்ன? பெண்ணானால் என்ன? ஆண்டவனுடைய சித்தம்! குழந்தைக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தால் போதும்,

அதுவே என் பாக்கியம்! " என்று கூறி நெட்டுயிர்ப்பு விட்டாள்.

மருத்துவப் பெண் ராணியிடம் விடை பெற்றுக் கொண்டு தான் வெளியே போய்விட்டு பின்னர் வந்து பார்ப்பதாகக் கூறி வெளியேறினுள். குழந்தைச் சப்தத்தைக் கேட்டு வெளியே ஆவலுடன் காத்திருந்த பணிப் பெண்கள் திமுதிமு வென்று உள்ளே நுழைய ஆரம்பித்தார்கள். உடனே "எல்லோரும் சென்று தொந்தரவு கொடுக்காதீர்கள்" என்று கூறினுள் மருத்துவப் பெண். தோழிகளில் ஒருத்தி "பிறந்திருப்பது இளவரசரா? இளவரசியா?" என்று ஆவலோடு கேட்டாள்.

"இளவரசிதான்! உனக்கு இளவரசர் தேவையாக இருந்ததோ?" என்று வெடுக்கென்று கேட்டாள் மருத்துவச்சி. தோழி அசடு வழியச் சிரித்தாள்.

## 2

மன்னர் நாகநந்தர் வசந்த மண்டபத்தில் அமர்ந்து செய்தியை எதிர்பார்த்து ஆவலுடன் இருந்தார். அவருடைய உள்ளம் ஏதேதோ கனவுகள் கண்டது. நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறித் தலைதூக்கி துவந்த யுத்தம் செய்து கொண்டிருந்தன. ஒரு கணம் நம்பிக்கை மேலோங்கி நிற்கும். மறுகணம் அது தரை மட்டமாகி பாழ்பட்டு அவநம்பிக்கை தலைதூக்கும். இந்த இடையருத போராட்டத்தில் அவநம்பிக்கையின் சக்தியே வெற்றி முரசு கொட்டிக்கொண்டிருந்தது.

ஆம்! முன்னர் நடந்த சம்பவங்களெல்லாம் அவ நம்பிக்கைக்கு ஆதாரமாகவே இருந்தன. மன்னர் நாக நந்தருக்கும் பட்டமகிஷி வாசவதத்தைக்கும் திருமணம் நடந்து சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. வெகு நாட்கள் வரை புத்திரபாக்கியம் கிட்டவில்லை. மற்ற எல்லாச் செல்வங்களையும் அடைந்திருந்த அவருக்கு மக்கட் செல்வம் அடையாதிருந்தது பெரிய குறையாகவே பட்டது. அரசி வாசவதத்தையும் பிள்ளைப்பேறு இல்லாத குறைக்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். எவ்

வளவோ தான தருமங்களெல்லாம் செய்தும் அவர்கள் எண்ணம் வெகு நாள் வரை ஈடேறவில்லை. கடைசியில் அவருடைய அரச குருவாக யிருந்த புரோகிதர் சொற்படி புத்திரகாமேஷ்டி யாகமும் செய்தார். அதன்பின் சுமார் ஐந்தாண்டு சென்று ராணி வாசவதத்தை கருவுற்ருள். மன்னர் மனம் மகிழ்ச்சி அடைந்தது.

முதன் முதலாக அரசரின் அரண்மனை அந்தப் புரத்திலே பச்சிளங்குழந்தையின் அழுகுரல் கேட்டது. பிறந்தது பெண் குழந்தைதான். என்ருலும் அதுவே பெரிய பாக்கியம் என்று பட்டது. அவருடைய உள்ளத்திலே எல்லையற்ற இன்பம் பெருக்கெடுத்தது. அரண்மனையே ஒரு புதிய மறுமலர்ச்சி பெற்றுவிட்டதாகத் தோன்றியது. இளவரசி பிறந்துவிட்ட செய்தியை நாட்டு மக்களுக்கு அறிவிக்க மன்னர் மகிழ்வுடன் பறையறையச் செய்தார். நாடெங்கும் விழா நடத்த உத்தரவிட்டார். தலைநகரம் இந்திரலோகமாகக் காட்சியளித்தது. ஆலய மணிகள் முழங்கின. நகரெங்கும் ஒரே கோலாகலம், தெருவெல்லாம் இசை முழங்கியது. ஆட்டமும், பாட்டும், கூத்தும் அமர்க்களப்பட்டது. அரண்மனை வாசலில் அலங்கார மேடை யமைத்து தானதருமங்கள் வழங்கப் பட்டன. ஆனுல்......

குதூகலமும், கேளிக்கையும், விழாவும் அன்று முழுவதும்கூட நடைபெறவில்லை. மதியத்திற்குமேல் திடீரென்று யாவும் நிறுத்தப்பட்டன. மகிழ்ச்சி பொங்கிய நகரத்திலே திடீரென்று பேயமைதி குடிகொண்டது. எல்லோருடைய முகத்திலும் ஏமாற்றமும், கவலையும், சோகமும் பிரதிபலித்தன. மன்னரின் குழந்தை ஒரு நாள் கூட உயிர் வாழாமல் இறந்துவிட்டதே அதற்குக் காரணம்.

நாகநந்தர் இவற்றை எல்லாம் நினைத்து ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். அவருடைய சிந்தனை மறுபடியும் பழைய சம்பவங்களை நினைத்து ஓடியது. எல்லாம் அவ நம்பிக்கையை அதிகப்படுத்துவனவாகவே இருந்தன. பின்னர் மீண்டும் இருமுறை ராணி வாசவதத்தை கருவுற்ருள். இரண்டு தடவையும் பெண் குழந்தையையே

பெற்ருள். ஆனல் ஒன்றுகூட ஒரு நாள் முடியும் வரை உயிருடன் இருந்ததில்லை. அதன் பின்னர் மோகன தத்தையை இரண்டாந்தாரமாக மணந்துகொண்டார்.

மன்னரின் மனம் இரண்டாவது மணத்தைப்பற்றிய சிந்தனையில் ஈடுபட்டிருக்கும்பொழுது முதலமைச்சர் நீதி வாணர் வந்து குறுக்கிட்டுச் சிந்தனையைக் கலைத்தார். அருகிலிருந்த ஆசனத்தைக் காட்டி அமரச்செய்து "நீதி வாணரே! வாசவதத்தை பிரசவிக்கப் போகிருள். செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். இச் சமயம் நீங்கள் என்னுடன் இருப்பது அவசியமல்லவா? எனவே தான் உங்களை அழைத்துவரச் செய்தேன்" என்ருர் மன்னர்.

மந்திரி ஏதோ பேச ஆரம்பிப்பதற்குள் ஒரு பணிப் பெண் வந்து வணங்கி நின்ருள். "அரசே! பெரிய ராணிக்கு இளவரசி பிறந்திருக்கிருர்" என்ருள்.

"எதிர்பார்த்தபடியே பெண்குழந்தைதானே. ஆச்சரியப்படுவதற்கோ ஏமாற்றமடைவதற்கோ ஒன்றுமில்லை" என்று சொல்லிக்கொண்டு சிரித்தார் நாகநந்தர். ஆனல் அந்தச் சிரிப்பிலே ஏளனமும் அவநம்பிக்கையும் கலந்திருந்தன.

பணிப்பெண் திரும்பச் சென்றதும், மன்னர் நீதி வாணரைப் பார்த்து "நாம் இச்செய்தியை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இக் குழந்தையாவது உயிருடன் நீடித்திருந்தால் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். எப்படியும் இன்னும் நாலைந்து தினங்களில் இளையராணி மோகனதத்தையும் பிரசவித்துவிடுவாள். பின்னர் இரட்டை மகிழ்ச்சியைத் தரும் இச் செய்தியை நகர மக்களுக்குத் தெரிவித்தால் போதும் என்று நினைக்கிறேன்" என்று கூறிஞர். நீதிவாணரும் அதை ஆமோதித்தார்.

இவ்விதம் இளவரசியின் பிறந்தநாள் அரண்மனையிலோ நகரத்திலோ, உற்சாகமும் ஆடம்பரமுமின்றி மௌனமாகக் கழிந்தது.

# 3

பொன்னாட்டின் தலைநகரமாகிய பொன்னகரத்தின் வட பகுதியில் ஊருக்குக் கடைசியில் ஒதுப்புறமாக ஓர் அடர்ந்து வளர்ந்த தோப்பு தென்பட்டது. அதன் மத்தியிலே கூரை வேய்ந்த ஒரு வீடு மௌனமாக நின்றுகொண்டிருந்தது. ஊருக்குக் கடைசியானபடியாலும் உச்சி வெயில் எரிக்கும் நடு மத்தியான வேளையாக இருந்ததாலும் வீதியில் ஆள் நடமாட்டம் இல்லை. அந்த வீதி வழியே மருத்துவப் பெண் தனது பெட்டியுடன் நடந்துவந்து தோப்புக்குள் இருக்கும் குடிசை வீட்டை நோக்கிச் சென்றாள். அவள் நடக்கும்பொழுது மரங்களிலிருந்து உதிர்ந்து காய்ந்துபோன சருகுகள் சலசலத்தன. அந்த ஓசையைக் கேட்டு குடிசை வீட்டிற்குள்ளிருந்த ஒரு நடுத்தர வயதுடைய மனிதன் வெளியே வந்து எட்டிப் பார்த்தான். மருத்துவப் பெண்ணைக் கண்டதும் அவனுடைய முகம் மலர்ச்சி அடைந்தது. சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு மெதுவான குரலில் அவளை உள்ளே வரும்படி அழைத்தான். இருவரும் வீட்டிற்குள் நுழைந்தனர்.

பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, படுக்கையில் கிடக்கும் பெண்ணை ஒரு முறை பார்த்துவிட்டு "குப்பா! பொன்னி மயக்கம் தெளிந்து விழித்துப் பார்த்தாளா?" என்று கேட்டாள் மருத்துவப் பெண்.

"இல்லையம்மா! இன்னும் எழுந்திருக்க வில்லை. வெகு நேரம் மயங்கிக் கிடந்ததால் ஒரு வேளை உயிருக்கு ஆபத்து வந்திருக்குமோ" என்று நடுங்குகிற குரலில் கவலையுடன் கேட்டான் குப்பன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று சொல்லிக்கொண்டே மருத்துவப் பெண் எழுந்துசென்று படுக்கையில் கிடந்த பொன்னியின் கையை எடுத்துப் பிடித்து நாடி பார்த்தாள். பின்னர் திருப்தி பொங்கும் முகத்துடன் திரும்பி வந்து உட்கார்ந்துகொண்டு தனது பெட்டியைத் திறந்தாள். அதற்குள்ளிருந்த ஆண் குழந்தையை

எடுத்து மயக்கத்தைத் தெளிவித்தாள். குழந்தை விழித்து அழ ஆரம்பித்தது.

"அடடே! எவ்வளவு அழகான ஆண்குழந்தை! யாருடைய குழந்தையம்மா?" என்று ஆவலுடன் கேட்டான் குப்பன்.

"இதோபார் குப்பா! இது யாருடைய குழந்தை என்பதை நான் சொல்லமாட்டேன். ஒரு பெரிய செல்வந்தருடைய குழந்தை இது. அந்த அம்மாளுக்குப் பல ஆண் குழந்தைகள் உண்டு. பெண்குழந்தை வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள், அதற்காக வேண்டி உன் குழந்தையைக் கொடுத்துவிட்டு இதைக் கொண்டுவந்திருக்கிறேன். உன் குழந்தை பெரிய மாளிகையிலே செல்வச் செருக்கிலே ராணியைப் போல வளர்ந்து வருவாள். எனவே நீ அவளைப் பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டாம். உன்னுடைய கடமை எல்லாம், இந்தக் குழந்தையை அன்புடனும் ஆதரவுடனும் சொந்தக் குழந்தையாகப் பாவித்து வளர்த்து வரவேண்டுமென்பதே. இதற்கு ஒரு குறையும் ஏற்படக்கூடாது. உன்னுடைய பெண் பெரிய இடத்தில் சுகமாக வாழவேண்டுமென்பதற்காக இந்தக் குழந்தை அந்தச் சுகத்தை எல்லாம் துறந்து, உன்னுடைய ஏழைக் குடிசைக்கு வந்திருக்கிறது. அந்த நன்றியை நீ ஒருபோதும் மறக்கக்கூடாது. இதை உன்னுடைய சொந்தக் குழந்தை போல் பாவிக்கவேண்டும். இதை நல்ல முறையில் வளர்ப்பதற்கு நூறு பொன்களையும் இனமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குழந்தை வரும்பொழுதே உன் வீட்டிற்கு லக்ஷ்மியையும் அழைத்து வந்திருக்கிறது. இனிமேல் உனக்கு அதிர்ஷ்டம்தான். குழந்தைகள் மாற்றப்பட்ட விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது. தெரிந்தால் உனக்குத்தான் ஆபத்து. குழந்தையைப் பற்றிய ரகசியத்தை யாருக்கும் வெளியிடுவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, குழந்தையையும், பொன் முடிப்பையும் பெற்றுக்கொள். உன் மனைவிக்குக்கூட இந்த விஷயம் தெரியக்கூடாது" என்று மருத்துவப் பெண் கூறி முடித்தாள்.

மருத்துவப் பெண், தான் கொண்டுவந்திருந்த கூடத்தை குடிசையின் ஒரு மூலையில் மாட்டப்பட்டிருந்த சுவாமி படத்திற்கு முன் கொளுத்திவைத்தாள். பின்னர் குழந்தையை அவனிடம் கொடுத்தாள். அவன் அழுது கொண்டிருக்கும் அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு ரகசியத்தை வெளியிடுவதில்லை என்று சத்தியம் செய்துகொடுத்தான். உடனே மருத்துவப்பெண் அவனிடம் பொன்முடிப்பையும் கையில் கொடுத்தாள்.

அதன் பின் குழந்தையைக் கொண்டுபோய் பொன்னியின் அருகில் இடத்திவிட்டு, தான் வைத்திருந்த மூலிகையை எடுத்து பொன்னியின் மூக்குக்கு நேராகப் பிடித்தாள். சிலகண நேரம் சென்றதும் பொன்னி மூர்ச்சை தெளிந்தாள். படிப்படியாக பிரக்ஞை பெற்றுவரும் பொழுது தூரத்தில் எங்கோ வெகு தொலைவிலிருந்து ஒரு மெல்லிய அழுகுரல் அவளுடைய செவியிலே விழுந்தது. பின்னர் அந்தச் சப்தம் சிறிது சிறிதாக நெருங்கி வருவதாகத் தோன்றியது. பொன்னி சுய பிரக்ஞை பெற்று தனது அருகில் அழுதுகொண்டிருக்கும் ஆண் குழந்தையை அன்புடன் பார்த்தாள். அவளுடைய உள்ளத்திலே தாய்மை உணர்ச்சி பெருக்கெடுத்தது. பின்னர் தன் அருகில் நின்று கொண்டிருக்கும் கணவனையும் மருத்துவச்சியையும் நன்றியறிதலுடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

மருத்துவப் பெண் பொன்னிக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்துவிட்டு வெளியேறினாள். இப்பொழுது அவளுடைய பெட்டியில் எந்த மனித ஜீவனும் இல்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். குப்பனும் அவளை வழி அனுப்புவதற்காகத் தோட்டத்து வெளி வாசல்வரை கூட வந்தான். வீதியில் இறங்கியபின் மருத்துவப் பெண் குப்பனைப் பார்த்து "குப்பா! நீ அதிர்ஷ்டக்காரன். இனிமேல் உனக்கு ஒரு குறையும் கிடையாது. ஆனால் சத்தியத்தை மறந்துவிடாதே. சத்தியத்தை மறந்தால் சங்கடங்களும் ஆபத்தும் நேரிடும்'' என்று எச்சரித்துவிட்டு தகிக்கும் வெயிலில் நடக்க ஆரம்பித்தாள்.

சற்று தூரம் சென்றதும் அவளுக்குத் தெரிந்த ஒருத்தி வழியில் சந்தித்தாள். "என்ன இருளாயி! நீ

பணக்காரர்களுக்கு மருத்துவம் பார்ப்பவளாச்சே. அந்தக் குடிசை வீட்டில் உன்னுடைய கவனம் எப்பொழுது திரும்பியது!'' என்று கேட்டாள்.

மருத்துவப் பெண் இருளாயியின் நெற்றியில் திடீரென்று முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பின. அது பயத்தாலா அல்லது வெயிலின் கொடூரத்தாலா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. எப்படி இருந்தாலும் இருளாயி கெட்டிக்காரிதான். ஒரு நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். "இந்தத் தோட்டத்திற்குள் வசிக்கும் பொன்னி எனக்கு மிகவும் வேண்டியவள். அவளுக்குப் பேறு காலம் பார்த்துவிட்டு வருகிறேன். பணத்துக்காக இல்லாவிட்டாலும் நட்புக்காக வேண்டிச் சில காரியங்கள் செய்துதானே யாகவேண்டி யிருக்கிறது'' என்று கூறிவிட்டு நடையைக் கட்டினாள்.

சற்று முன்பு சந்தடியற்றுக் கிடந்த அந்த வீதி சிறிது சிறிதாக உயிர் பெற்று எழுவதைப்போலக் காட்சியளித்தது. வெயில் தாழ ஆரம்பித்துவிட்டதால் அங்குமிங்குமாகச் சிலர் அமைதியைக் குலைத்து நடக்க ஆரம்பித்தார்கள். இருளாயியும் அந்த உருவங்களில் ஒன்றாக வீதியின் கோடியில் சென்று மறைந்தாள்.

## 4

ஐந்து நாட்களுக்குப் பின் ஒருநாள் காலை இளையராணி மோகனத்தைக்கு ஆண் குழந்தை பிறந்தது. பணிப் பெண் வந்து மன்னரிடம் இச் செய்தியைக் கூறியதும் அவர் ஆனந்தத்தால் துள்ளி எழுந்தார். மகிழ்ச்சி கரை புரண்டோடியது. அவருடைய இன்பக் கனவுகள் எல்லாம் நனவாகிவிட்டதாக உணர்ந்தார். மோகனத்தை தன் ஆசைக் கனவுகளைப் பூர்த்தி செய்துவிட்டாள் என்று அகமகிழ்ந்தார். அதே சமயம் அவருடைய உள்ளம் சில நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்த்துக்கொண்டது.

ஒருநாள் இரவு நல்ல நிலவு வீசிக்கொண்டிருந்தது. இரவு உணவுக்குப் பின், தன் இரு மனைவிகளையும்

அழைத்து நிலா முற்றத்தில் போடப்பட்டிருந்த ஆஸனங்களில் தன் அருகே அமரச் செய்து, மன்னர் நாகநந்தர் சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். அப்போது சம்பாஷணையின் போக்கு ஒருவிதமாகத் திரும்பியது.

''அடுத்த ஆண்டு இதே நாளில் நான் எனது செல்வக் குமாரனுடன் இப்படிப்பட்ட நிலவிலே மகிழ்ந்திருக்க விரும்புகிறேன். இளவரசனை எனது மடியில் அமர்த்திக் கொண்டு அம்புலி காட்டவேண்டும். அவனுடைய செந்தளிர்ப் பாதங்கள் என் மார்பை உதைக்க வேண்டும். இவ்வித ஆனந்தத்தை அடைவதற்காக எத்தனையோ ஆண்டுகளாகக் காத்திருக்கிறேன். இந்தத் தடவையாவது நீங்கள் இருவரும் எனது ஆசையை நிறைவேற்ற வேண்டும்'' என்று கூறினார் நாகநந்தர்.

மிகவும் அடக்க குணம் படைத்த வாசவதத்தை சற்று வெட்கத்துடனும் வருத்தத்துடனும் தலையைக் குனிந்து கொண்டாள். அவளுடைய உள்ளம் பழைய சம்பவங்களை அலசிப் பார்த்தது. ஒன்றிற்கு மூன்றுமுறை கருவுற்றும் தன்னால் தன் கணவரின் ஆசையை நிறைவேற்ற முடியாததை நினைத்துப் பார்த்தாள். முதல் முறை பெண் குழந்தை பிறந்ததும் அதையொட்டி நகர் முழுவதும் நடந்த கோலாகல விழாக்களும் ஞாபகம் வந்தது. வாழ்த் தொலிகளையும் வாத்திய முழக்கங்களையும் கேட்டு இறுமாப்படைந்தாள். ஆனால் அந்த ஆனந்தவெறி நீர்மேல் குமிழிபோல நிற்காமல் மறைந்துவிட்டது. குழந்தை அன்று தினமே இறந்ததும், கோலாகலங்கள் திடீரென்று நிறுத்தப்பட்டதும், மன்னர் கவலையால் சோக பிம்பமாக விளங்கியதும், அரண்மனை முழுவதும் பயங்கரமௌனம் நிலவியதும், தனது துர்பாக்கியத்தை நினைத்து அழுது அழுது கண்ணீர் வடித்ததும் நினைவிற்கு வந்தன. பின்னர் இரண்டாவது குழந்தை பிறந்தபொழுதும் இதே ஏமாற்றம் தொடர்ந்து நடந்தது. இவற்றை எல்லாம் எண்ணியபோது ஓர் ஆழ்ந்த பெருமூச்சு எழுந்தது. அவளுடைய கடைவிழிகளிலே இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் அரும்பி நிலவொளியிலே பட்டு மின்னின.

மோகனதத்தைக்கு மூத்த ராணி வாசவதத்தையின் மீது எப்பொழுதுமே வெறுப்புணர்ச்சி உண்டு. அவள் பட்டத்தரசியாக யிருப்பதும், தான் கேவலம் இரண்டாவது மனேவியாக இருப்பதும் எப்பொழுதும் மனதை உறுத்திக் கொண்டே இருந்தன. ஆரம்பத்தில் சிறிதளவாக முளைவிட்ட இந்த விரோத மனப்பான்மை நாளடைவில் வளர்ச்சியடைந்து வெறுப்பாகவும் குரோதமாகவும் மாறி விட்டது. எனவே வாசவதத்தையைக் கேவலப் படுத்துவதற்கு இதை ஒரு தக்க தருணம் என்று கருதினுள். மன்னரைப் பார்த்து "அரசே! நான் உங்களுடைய ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன். நிச்சயமாக ஒரு இளவரசனைப் பெற்றுத் தந்து உங்கள் கனவை நனவாக்குவேன். இதை நீங்கள் சபதமாக எடுத்துக்கொள்ளலாம். இதில் நான் தோல்வி அடைந்தால் நான் உங்களுடைய ராணி என்ற மதிப்பை இழந்துவிட்டு, ஆயுள் பூராவும் சிறையில் அடிமைப் பெண்ணுகக் கிடக்கத் தயாராக இருக்கிறேன்" என்று உறுதியான குரலில் கூறினுள். இதைக் கேட்ட மன்னரின் மனம் மகிழ்ச்சி அடைந்தது. மோகனதத்தையின் கரங்களை அன்புடன் பற்றி வருடி விட்டுக்கொண்டே, வாசவதத்தையைப் பார்த்து "பட்டத்து ராணியாகிய நீ என்ன சபதம்செய்து கொடுக்கப் போகிருய்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

வாசவதத்தையும் மெதுவாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே நொந்த உள்ளத்தின் வேதனை படர்ந்திருந்தது. வேதனையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அமைதியான குரலில் "எல்லாம் இறைவனுடைய திருவுள்ளம். இதில் நாம் முடிவு செய்வதற்கு என்ன இருக்கிறது? ஆண்டவன் என்ன செய்யக் காத்திருக்கிருரோ யாரறிவார்? ஆணே பெண்ணே எதுவானுலும் சரி. ஆயுளை அதிகமாகக் கொடுத்து குழந்தையைக் காப்பாற்றினுல் அதுவே போதும்" என்று கூறிக்கொண்டே பெருமூச்சு விட்டாள்.

மன்னர் நாகநந்தருக்கு இப்பொழுது அந்தச் சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. மோகனதத்தை தன்னுடைய

சபதத்திலே வெற்றி கண்டுவிட்டாள். அவள் கூறிய படியே இன்று இளவரசனின் இனிய குரல் அந்தப்புரத்திலே எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. தன்னுடைய நாட்டை ஆள எதிர்கால மன்னன் தோன்றிவிட்டான். அதே சமயம் மூத்த ராணி வாசவதத்தை பெற்றெடுத்த பெண் குழந்தையும் முன்னைப்போல் அற்ப ஆயுளாக முடியாமல் உயிருடன் இருப்பது அவருக்கு மேலும் மகிழ்ச்சியூட்டியது. ஒரே சமயத்தில் தனக்கு ஆண்குழந்தையும், பெண் குழந்தையும் கிடைத்த இரட்டை மகிழ்ச்சி அவருடைய மார்பை இரண்டங்குலம் அதிகமாக விரிவடையச் செய்தது. அந்த மகிழ்ச்சிப் பெருக்கிலே ஆனந்த வெறி தலைக்கேறிய அவர் தனது சுண்டுவிரலில் கிடந்த மோதிரத்தைக் கழற்றி நல்ல செய்தி கொண்டுவந்த பணிப் பெண்ணுக்குப் பரிசாகக் கொடுத்தார். "பெண்ணே! இதோ என்னுடைய அன்பளிப்பு" என்று உவகையுடன் கூறினார். பணிப்பெண் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை எண்ணி அகமகிழ்ந்து தலைதாழ்த்தி வணங்கி விட்டுச் சென்றாள்.

மன்னர் மந்திரியிடம் சொல்லி முரசறையச் செய்தார். மூத்த ராணிக்குப் பெண் குழந்தையும், இளையராணிக்கு ஆண் குழந்தையும் பிறந்த இரட்டை மகிழ்ச்சிச் செய்தி நகரெங்கும் முரசறையப்பட்டது.

பொன்னகர மக்களுக்கு அன்று விடுமுறை. ஆடவரும், பெண்டிரும் அழகழகாக ஆடைகள் உடுத்தி, நீண்ட நாட்களுக்குப் பின் இளவரசன் பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடினர். வீதிகள் தோறும் மாவிலைத் தோரணங்கள் தொங்கின. குலை தள்ளிய வாழை மரங்கள் ஆங்காங்கு கட்டப்பட்டு அழகு பெற்றன. வீடுகள் தோறும் பொன்னூட்டுக் கொடி ஒளி வீசிப் பறந்தது. ஆலயங்கள் தோறும் அரச குமாரனுக்கும், அரச குமாரிக்கும் நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தனைகள் நடந்தன. நகரமெங்கும் கோலாகலம் பெரு வெள்ளமாகப் புரண்டோடியது.

வீதியிலே முரசொலி கேட்டு ஆவலுடன் செய்தி என்னவென்று தெரிந்துகொள்வதற்குக் குப்பன் வெளியே

ஓடிச்சென்று பார்த்தான். மூத்த ராணியும், இளைய ராணியும் பெண் குழந்தையும் ஆண் குழந்தையும் பெற்றிருக்கும் மகிழ்ச்சிச் செய்தி அவனுடைய செவிகளிலும் தேன் எனப் பாய்ந்தது. அவசர அவசரமாகத் தனது குடிசை வீட்டை நோக்கி ஓடி வந்தான். "பொன்னி! பொன்னி! கேட்டாயா சங்கதியை? அரண்மனையில் இரண்டு ராணிகளுக்கும் இன்று குழந்தை பிறந்திருக்கிறதாம். ஒரு ஆணும், ஒரு பெண்ணும். ஒரு இளவரசனும், ஒரு இளவரசியும். ராஜாவின் கலி தீர்ந்துவிட்டது. இளவரசரின் பிறந்த தினத்தை ஊரெல்லாம் கொண்டாடுகிறது. இதோ? நான் போய் நகரத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவசரம் அவசரமாக மூலையிலிருந்த மரப் பெட்டியைத் திறந்தான். அதற்குள் மடித்து வைத்திருந்த நல்ல ஆடைகளை எடுத்து உடுத்திக் கொண்டான். பெட்டியைத் திறந்து ஆடையை எடுக்கும் பொழுது பொன்முடிப்பு பத்திரமாக யிருக்கிறதா வென்று தொட்டுப் பார்த்துக் கொண்டான். பின்னர் பெட்டியைப் பூட்டிவிட்டு வெளியே கிளம்ப ஆரம்பித்தான்.

பொன்னி அவனைக் கூப்பிட்டாள். "மச்சான்! மச்சான்! இளவரசர் பிறந்த கொண்டாட்டத்தைப் பாக்கப் போவது கிடக்கட்டும். இங்கே நம்ம இளவரசர் காலைக் கையை உதைத்துக் கொண்டு அழுது கொண்டிருக்கிறுரே தெரிய வில்லையா? இளவரசரைக் குளிப்பாட்ட வேண்டும். மரியாதையாக வெந்நீர் போட்டுக் கொடுத்து விட்டுப் போ" என்று கூக்குரலிட்டாள். ஆனுல் அதை ஒன்றும் காதில் போட்டுக் கொள்ளாமல் குப்பன் வெளியே ஓடி விட்டான்.

வெகு நேரம் கழித்து, குப்பன் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தான். அரண்மனை வாசலில் தானம் கொடுத்த வேட்டியும் துண்டும் ஒரு கையிலே இருந்தன. மற்ருெரு கையில் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுவதற்கான ஒரு சிறு பொம்மை முரசு இருந்தது. அதை அவன் வரும் வழியில் கடையில் வாங்கி வந்திருந்தான்.

குப்பன் உள்ளே நுழைந்ததும் பொன்னி ஆத்திரத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஒன்றும் பேசவில்லை. அதைப் பார்த்த குப்பன் "என்ன குட்டி! ஒரே முறைப்பாக முறைக்கிறாய். ஊரெல்லாம் கொண்டாட்டமாக யிருக்கிறது. நீ கோபமாக யிருக்கிறாயே. இதைப் பார்த்தாயா? இளவரசர் பிறந்திருப்பதற்காக இனிப்புப் பண்டம் கொடுத்திருக்கிறார்கள்" என்று கூறிக்கொண்டே தான் கொண்டு வந்திருந்த இனிப்புப் பண்டத்தை எடுத்து அவள் வாயில் திணித்தான். கோபமாக இருந்த பொன்னி ஆத்திரம் ஆத்திரமாக அந்த மிட்டாய்களை விழுங்கித் தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டாள். இப்பொழுது அவளுடைய உள்ளமெல்லாம் இனிப்பாக யிருந்தது. குப்பனின் கையிலிருந்த விளையாட்டு முரசை வெடுக்கென்று பிடுங்கினாள். "நமது நாட்டின் இளவரசர் பிறந்ததற்கு முரசறைந்து விட்டார்களல்லவா? இதோ பார் இப்பொழுது நம்மள் வீட்டு இளவரசர் பிறந்த செய்தியை பறை சாற்றப் போகிறேன்" என்று கூறிவிட்டுக் கையிலிருந்த விளையாட்டு முரசை மடமட வென்று தட்டினாள். பின்னர் "ராஜ ராஜ ராஜமார்தாண்ட ராஜ கம்பீர தோட்டக்கார ராஜா...உங்கள் பெயரைச் சொல்லுங்கள்."

"குப்பன்"

"உம் மேற்படி மகாராஜாவுக்கு இளவரசர் பிறந்திருக்கிறார். அதை நாட்டு மக்கள் எல்லாம் இன்றுதினம் கொண்டாடும் விழாவோடு சேர்த்துக் கொண்டாடி விடுங்கள்" என்று கூறிவிட்டு மறுபடியும் மட மட வென்று தட்டினாள். அதைக் கேட்டுக்கொண்டு அப்பொழுது தான் அவர்கள் வீட்டிற்குள் நுழைந்த பக்கத்து வீட்டுப் பெண் விழுந்து விழுந்து சிரித்தாள். "பொன்னி உன் மகன் பிறந்ததினத்தை ஊரெல்லாம் கொண்டாடுகிறது. பார்த்துவிட்டுத்தான் வந்தேன்" என்று சொல்லி மறுபடியும் சிரித்தாள்.

குடிசைக்குள்ளே மூன்று குரல்கள் ஏககாலத்தில் சிரித்தன. அதே சமயம் ஒரு குழந்தையின் இன்பமான அழுகுரலும் அதோடு சேர்ந்துகொண்டது. வெளியே

ஆலயங்களில் முழங்கும் மணியோசை கம்பீரமாக இன்னும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

## 5

சுமார் ஒரு வாரம் கழிந்தது. அரண்மனை குதூகல ஆரவாரங்களெல்லாம் அடங்கி ஒருவாறு அமைதி அடைந்தது. அப்படியிருக்கும்பொழுது ஒரு நாள் பிற்பகலில் மருத்துவப் பெண் இளைய ராணியைச் சந்திப்பதற்குச் சென்றாள். இளைய ராணி மோகனதத்தை ஆளப் பிறந்த தன் அருமை மகனைச் சீராட்டிக் கொஞ்சிக் குலவிக் கொண்டிருந்தாள். அருகிலே இரண்டு பணிப்பெண்கள் நின்றுகொண்டிருந்தனர். மருத்துவப் பெண் இருளாயி உள்ளே நுழைந்ததும், வணக்கம் தெரிவித்தாள். மோகனதத்தையும் அவளைப் புன்சிரிப்புடன் வரவேற்று சற்று தூரத்திலிருந்த தணிவான ஆசனம் ஒன்றில் அமரும்படி கூறினாள். "வேண்டாம் மகாராணி. ஏழை மருத்துவப் பெண்ணாகிய நான் தங்கள் முன் அமருவதற்கு அருகதையற்றவள். ஆசனம் தேவையில்லை; அன்பும் கருணையுமிருந்தால் அதுவே போதும்" என்று கூறிவிட்டு உட்காராமல் நின்று கொண்டேயிருந்தாள்.

மோகனதத்தை அருகிலிருந்த பணிப் பெண்களிடம் ஏதோ வேலை ஏவி ஒவ்வொருவராக வெளியே அனுப்பி விட்டாள். ராணியையும், மருத்துவப் பெண்ணையும் தவிர வேறு அங்கு யாருமில்லை. சற்றுநேரம் மௌனம் நிலவியது. பின்னர் மருத்துவப் பெண் இருளாயி, வாசற்புறமாகச் சென்று வேறு யாரும் வெளியே நிற்கிறார்களா என்று பார்த்தாள். யாருமில்லை. மீண்டும் திரும்பி உள்ளே வந்தாள். தொண்டையைச் செருமிச் சரிப்படுத்திக்கொண்டு தாழ்ந்த குரலில் "மகாராணி! அடிமை தாங்களிட்ட வேலையைத் திட்டப்படியே செய்து முடித்து விட்டேன். பிறந்த ஆண்குழந்தையை மாற்றிப் பெண் குழந்தையாக்கிவிட்டேன். எல்லாம் உங்களுடைய நன்மைக்குத்தான்......"



காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

மருத்துவப் பெண் வாக்கியத்தை முடிக்குமுன் மோகனதத்தை மெதுவாக ஏளனத்துடன் சிரித்தாள். "இருளாயி எல்லாம் என்னுடைய நன்மைக்குத் தானா? இதிலே உன்னுடைய நன்மையும் சுயநலமும் சிறிதுகூட யில்லையா?" என்று கேட்டாள்.

மருத்துவச்சி அசடு வழியச் சிரித்தாள். "இருக்கிறது மகாராணி, இருக்கிறது. இதற்காகத் தாங்கள் கொடுக்கும் பரிசை எதிர்பார்க்கும் சுயநலமும் இல்லாமலில்லை. ஆனால் அதுமட்டும் காரணமல்ல. உங்களுடைய உப்பைத் தின்றிருப்பதற்காக என்னுடைய கடமையைச் செய்தேன்" என்றாள்.

"என்னுடைய உப்பா? நீ தின்றது மன்னருடைய உப்பல்லவா! நீ தின்ற உப்பிலே என்னைவிடப் பட்ட மகிஷிக்குத்தானே அதிகப் பங்கு இருக்கிறது. அப்படியானால்......?"

"பட்டமகிஷி இருக்கட்டும். நான் உங்கள்மீது மிகவும் அன்பு கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் இந்தக் காரியத்தைச் செய்திருக்க மாட்டேன்."

"உன்னுடைய அன்பை மறக்கவில்லை. மறக்கப் போவதுமில்லை. அது கிடக்கட்டும். நீ கொண்டுவந்து கொடுத்திருக்கும் பெண்குழந்தை யாருடையது? மூத்த ராணியின் ஆண்குழந்தை எங்கே யிருக்கிறது?"

எதிர்பாராத இந்தக் கேள்வி மருத்துவச்சியின் தலையிலே இடி விழுந்ததுபோல் இருந்தது. அவள் தன்னுடைய துரோகச் செயலுக்கு வெகுமதியை எதிர்பார்த்து வந்தாளேயொழிய, குறுக்கு விசாரணையை எதிர்பார்க்கவில்லை. எனவே அவளுக்கு இது அச்சத்தை உண்டாக்கியது. ஏற்கெனவே தான்செய்த ஒரு பிழை போதாதென்று இப்பொழுது மீண்டும் ஒரு குற்றம் செய்வதா? மூத்த ராணியின் ஆண்குழந்தை இருக்குமிடத்தைச் சொன்னால் நிச்சயமாக அதைக் கொன்றுவிடுவார்கள். அதனால் தன்னுடைய சதிக்குற்றம் வெளிப்பட வேண்டியதேற்படும். பின்னர் தன் உயிருக்கே ஆபத்து. இவற்றை

எல்லாம் எண்ணிப் பயத்தால் நடுங்கினாள். எப்படியும் குழந்தையைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்தாள். தன் மனதை உறுதிப் படுத்திக்கொண்டு "அரசியாரே! தாங்கள் அதைக் கேட்கக்கூடாது. அந்தக் குழந்தையைப் பெற்றவர்களிடம் ரகசியத்தை வெளியிடுவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்து, சத்தியம் வாங்கி யிருக்கிறேன். எனவே தயவுசெய்து என்னை நிர்ப்பந்தப் படுத்தாமல் மன்னித்துவிடுங்கள். நேரமாகிறது. யாரும் வந்துவிடுவார்கள். தாங்கள் எனக்கு வாக்களித்தபடி ஆயிரம் பொன்னையும் கொடுத்தனுப்புங்கள்" என்று பதற்றத்துடனும், நடுக்கத்துடனும் கேட்டாள்.

மோகனதத்தை ஏதோ சிறிது யோசித்துக்கொண்டிருந்தாள். பின்னர் அன்பான குரலில் "இருளாயி! நான் உன்னை என்றென்றும் மறக்கமாட்டேன். உனக்குச் சேர வேண்டிய ஆயிரம் பொன்னையும் இன்று மாலையே நமது அரண்மனை மெய்க்காப்பாளர் படைத் தலைவராகிய வீரசேனரிடம் கொடுத்தனுப்புகிறேன். மாலையில் நீ அவருடைய மாளிகைக்குச் சென்று பெற்றுக்கொள்" என்று கூறினாள். அதே சமயம் வெளியே சென்றிருந்த பணிப்பெண்களும் திரும்பிவிட்டனர். எனவே மேலும் தொடர்ந்து பேச முடியவில்லை. மோகனதத்தையிடம் விடை பெற்றுக்கொண்டு மருத்துவப் பெண் வெளியேறினாள்.

இருளாயி வீரசேனனின் மாளிகைக்குப் புறப்படும் பொழுது விளக்கு வைக்கும் நேரமாகிவிட்டது. வீரசேனனின் மாளிகை நகரின் மத்திய பாகத்திலே அமைந்திருந்தது. அந்த வீதி முழுவதும் அரண்மனையில் உத்தியோகம் பார்க்கும் பெரிய மனிதர்கள் வசித்து வந்தார்கள். மாலை இருள் கவியும் அந்த நேரத்தில் வீடுகள்தோறும் அலங்கார விளக்குகள் அழகுறக் காட்சி அளித்தன. வீதி நெடுகிலும் ஆண்களும் பெண்களும் போவதும் வருவதுமாக ஜனசந்தடி அதிகமாக யிருந்தது. பிரபுக்களின் சாரத்தியங்கள் வீதியிலே ஓசையிட்டுக்கொண்டு சென்றுகொண்டிருந்தன. மந்திரிகளும், பிரதானிகளும்,

சேனைத்தலைவர்களும் அதே வீதியில் வசித்து வந்ததால் அதற்கு ராஜவீதி என்று பெயர். ராஜவீதியின் கீழ்க் கோடியில் வீரசேனனின் மாளிகை ஒரு பெரிய சோலையின் மத்தியிலே அமைந்திருந்தது.

வீரசேனன் ராணி மோகனதத்தையின் உடன் பிறந்த ஒரே சகோதரன். அவன் வெகு நாட்களாகவே அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவனாக வேலை பார்த்து வருகிறான். அவன் குடும்பம் அரசர் நாகநந்த ருக்குத் தூரத்து உறவாக யிருந்தபடியால் அந்த வேலை கிடைத்திருந்தது. ராணி வாசவதத்தைக்குக் குழந்தைப் பேறு இல்லாமல் போனபடியால் மன்னர் இரண்டாவது மணம் முடிப்பதென்று முடிவுக்கு வந்தார். அதற்கு முன்பே அந்தப்புற ராஜ விருந்துகளில் வீரசேனன் தங்கையாகிய மோகனதத்தையை மன்னர் பல முறை பார்த்திருக்கிறார். அவள் மிகவும் அழகி. தூர உறவினர் களாக இருந்தபடியால் அவளை மணம் செய்துகொண் டார். அதற்குப் பின்னர் வீரசேனன் தன் தங்கையின் சலுகையால் அரண்மனையில் முக்கியமான புள்ளியாகி விட்டான்.

இருளாயி வீரசேனனின் மாளிகை வாயில்காப்போ னிடம் வீரசேனரைப் பார்க்க வந்திருப்பதாகக் கூறினாள். காவலன் உள்ளே சென்று மருத்துவப்பெண் வந்திருப்ப தாகக் கூறினான். வீரசேனன் உடனே அழைத்து வரும்படி உத்தரவிட்டான். அவனும் அவளை எதிர்பார்த் துக்கொண்டுதான் இருந்தான். பிற்பகலில் தன் தங்கை யைச் சந்தித்து விஷயத்தை அறிந்திருந்தான்.

காவல்காரன் மருத்துவப்பெண்ணை உள்ளே அழைத் துக் கொண்டுவந்து விட்டுவிட்டு வெளியே சென்று விட்டான். பின்னர் வீரசேனன் மருத்துவப்பெண்ணை அழைத்துக்கொண்டு தன்னுடைய அந்தரங்க அறைக்குச் சென்றான். அவளைப் பார்த்து "இருளாயி! நீ வந்த காரியம் எனக்குத் தெரியும். பரிசு வாங்கிச் செல்லத் தானே வந்திருக்கிறாய்!" என்று கூறிவிட்டுப் புன்னகை செய்தான்.

மருத்துவப்பெண் மகிழ்ச்சி பொங்கக் கூறினாள். "ஆமாம் பிரபு! இளைய ராணியார் உங்களிடம் வந்து ஆயிரம் பொன்னையும் வாங்கிக்கொள்ளும்படி உத்தர விட்டார்."

"ஆயிரம் பொன்னென்ன? ஐம்பதினாயிரம் பொன் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அதை இப் பொழுது கொடுக்கக்கூடாது. ஏனென்றால் நீ பின்னர் ரகசியத்தை வெளியிட்டுவிட்டால் என்ன செய்வது? எனவே ரகசியத்தை வெளியிட முடியாத இடத்திற்கு உன்னைக் கொண்டுபோய் வைத்துவிட்டு ஆயிரம் பொன் னென்ன ஐம்பதினாயிரம் பொன்னையும் உனக்குக் கொடுக் கிறேன். நான் சொல்வது சரிதானே" என்று கேட்டு விட்டுப் பயங்கரமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பு இருளாயியின் உள்ளத்தையும், உயிரையும் உலுக்கியது. இருதயம் திடீரென்று வேலை செய்யாமல் நின்றுவிட்ட தைப்போலவும், ரத்தமெல்லாம் உறைந்து குளிர்ந்து பிண மாகிவிட்டதைப் போலவும் ஓர் உணர்ச்சி தோன்றியது. பதில் பேசுவதற்கு முயற்சி செய்தாள். அவளுடைய தொண்டையை யாரோ இரும்பு வளையத்தால் இறுக்கி விலங்கிட்டதுபோல் இருந்தது. எங்கோ அதலபாதாளத் திலிருந்து வெளிவரும் அபயக்குரல் போன்று அவளுடைய குரல் சன்னமாகவும் நடுங்கிக்கொண்டு மிருந்தது. அவள் கூறினாள். "ஐயா! நான் ரகசியத்தை ஒருபோதும் வெளியிடமாட்டேன். என்னைப் பரிபூரணமாக நம்புங்கள். நான் உங்களுடைய அடிமை. நன்றி விசுவாசமுள்ள நாய்" என்று கெஞ்சினாள்.

"நாயென்று கூறுகின்றாய். விசுவாசமிக்க அந்த இனத்தை கேவலப்படுத்தாதே பேயே! உன்னை நாங்கள் எப்படி நம்புவது? எத்தனை காலமாக நீ அரண்மனை மருத்துவப்பெண்ணாக வேலை செய்து வருகிறாய்?"

"இருபது ஆண்டுகளாக வேலை செய்கிறேன்" என்று தயங்கித் தயங்கிக்கொண்டே கூறினாள்.

"நினைத்துப்பார். நீ நன்றி விசுவாசமுடையவள் என்று கூறுகிறாயே, அது உண்மைதானா என்பதை

நினைத்துப்பார். இத்தனை ஆண்டுகளாக யாருடைய உப்பைத்தின்று வளர்ந்தாயோ அவர்களுக்கு எங்களுடைய பேச்சைக் கேட்டுத் துரோகம் செய்துவிட்டாய். இதைப் போல நம்பிக்கைத் துரோகம் வேறு இருக்க முடியாது. இப்படிச் செய்வதற்குப் பெயர்தான் விசுவாசம் என்று உன் அகராதியில் எழுதியிருக்கிறதா? இப்படிப்பட்ட உன்னை நம்பும்படியாக எங்களிடம் நீலிக்கண்ணீர் வடிக்கிருய், நாங்கள் ஏமாளிகள் அல்ல. நீ செய்த துரோகத்திற்குச் சரியான பரிசை அடையப் போகிருய். மன்னரின் பிரதிநிதியாக யிருந்து நானே அந்தப் பரிசைக் கொடுக்கிறேன். பெற்றுக்கொள்'' என்று கூறிவிட்டு மீண்டும் ஒரு முறை பயங்கரமாகச் சிரித்தான்.

இருளாயியின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டன. இந்தக் கயவர்களுடன் சேர்ந்து மன்னருக்கும், பெரிய ராணிக்கும் எவ்வளவு பெரிய துரோகம் செய்துவிட்டோம் என்பதை உணர்ந்து கண்ணீர் வடித்தாள். எப்படியாவது இந்த அரக்கனிட மிருந்து தப்பித்துச் சென்று நேரடியாக மன்னரிடம் முறையிட்டுத் தன்னுடைய குற்றத்தையும் ஒப்புக் கொண்டு அதற்குரிய தண்டனையையும் பெற்றுக் கொள்ள அவள் மனம் அக்கணமே உறுதி கொண்டது. ஆனால் எப்படித் தப்புவது? ''ஐயா! காப்பாற்றுங்கள். பொன்னும் பொருளும் வேண்டாம். எனக்கு உயிர்ப்பிச்சை அளித்துக் காப்பாற்றுங்கள்'' என்று கூறிக் கீழே மண்டியிட்டு அவனுடைய கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். படாரென்று தன் கால்களை உதைத்து அவளைப் பந்துபோல் தூக்கி எறிந்தான் வீரசேனன். அருகிலிருந்த சுவரில் போய் விழுந்து மோதிக் கூக்குரலிட ஆரம்பித்தாள். உடனே இடையிலுள்ள வாளை உருவி அவளின் மார்பின் மீது இலேசாகப் பதித்துக்கொண்டு ''உம்; சப்தம் செய்யாதே! கூச்சலிட்டால் உதவிக்கு ஆள் வரும் என்று நினைக்கிருயா? ஒன்றும் நடக்காது. புலியின் குகைக்குள் அகப்பட்ட மாமிச பிண்டமே! இனிமேல் உன்னால் தப்ப முடியாது. காப்பாற்றவா சொல்கிருய்! யாரைக் காப்பாற்றுவது? உன்னைக் காப்பாற்றுவதா? அல்லது எங்கள் ரகசியத்தைக் காப்பாற்றுவதா? இரண்டில் ஒன்றைத் தான் காப்பாற்ற முடியும். நாங்கள் காப்பாற்ற வேண்டி

யது ரகசியம். உன் உயிரல்ல'' என்று கூறிக் கொண்டே அவளை ஒரு மூலையில் தள்ளி வாயில் துணியைத் திணித்து கைகளையும் கட்டினான். பின்னர் அந்தப்புரப் பெண்கள் செல்வதற்காக உள்ள திரையிடப்பட்ட இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியை பின்பக்கமாகக் கொண்டு வந்து நிறுத்தச் செய்தான். வண்டியைத் தயாராக நிறுத்தி விட்டு சாரதி வழக்கம் போல சற்று ஒதுங்கிப் போய் நின்று கொண்டான்.

வீரசேனன் மருத்துவப் பெண்ணை கைத்தாங்கலாக ரகசிய வழியாகக் கொண்டு வந்து வண்டிக்குள் தள்ளிப் பூட்டினான். பின்னர் தானே சாரதி ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு வண்டியை ஓட்ட ஆரம்பித்தான். சாரதி வண்டி ஓட்டுவதற்காக வந்தபொழுது வேண்டாமென்று தடுத்து விட்டான். தானே அரண்மனை வரையிலும் போய்த் திரும்பி வந்துவிடுவதாகக் கூறி குதிரைகளின் லகானைப் பிடித்துச் சுண்ட ஆரம்பித்தான். குதிரைகள் மிடுக்குடன் கிளம்பின.

வண்டி புறப்பட்டது. ராஜ வீதியின் வழியே செல் லாமல் பக்கவாட்டில் நுழைந்து ஒரு குறுகிய வீதிவழியே சென்றது. நன்றாக இருள் கவிந்துவிட்டது. வண்டி வேகமாக ஓடும்பொழுது ஊடூடே வீதி விளக்குகளின் வெளிச்சம் பாய்ந்து பாய்ந்து மறைந்தது. வண்டி புழுதி யைக் கிளப்பிக்கொண்டு பொன்னகரத்தைத் தாண்டி மலையை நோக்கிச் செல்லும் ஏகாந்தமான சாலையிலே திரும்பி வாயுவேக மனோவேகமாகப் பறந்தது. ஒருமுறை வீரசேனன் பின்னால் திரும்பி, தூரத்தே மறைந்து கொண் டிருக்கும் நகரத்தைப் பார்த்தான். பொன்னகரம் வெகு தூரத்தில் மறைந்துவிட்டது. நகர மாடமாளிகைகளின் விளக்குகள் மின்மினிப் பூச்சிகளைப் போல மினுக்கிட்டுக் கொண்டிருந்தன. தூரத்தில் எங்கோ ஆந்தை அலறியது. நரி ஒன்று ஊளையிட்டது. பலதிசைகளிலுமிருந்து அதற்கு எதிரொலியாக பல ஊளைச்சத்தங்கள் கிளம் பின. பனிகலந்த குளிர்காற்று வீசியது. குதிரைகள் இருளையும், காற்றையும் கிழித்துக்கொண்டு அம்புபோலப் பாய்ந்து பறந்து கொண்டிருந்தன.

திடீரென்று ஒரு சப்தம். வண்டியில் எங்கோ ஒரு முறிவு. குதிரைகள் இரண்டும் பிய்த்துக் கொண்டு தனித் தனியே ஓடிவிட்டன. மலைப்பாதையிலிருந்து குடை கவிழ்ந்த வண்டி கடகட வென்று பள்ளத்தாக்கை நோக்கி உருண்டது. சட்டங்களும் சிலாகைகளும் நொறுங்கின. ஒரு பயங்கர ஓலத்துடன் வீரசேனன் பாறைகளிலே உருண்டு கொண்டிருந்தான். வண்டியோடு சேர்ந்து மருத்துவப் பெண்ணும் உருண்டு கொண்டிருந்தாள். வாய்க் கட்டவிழ்ந்து அவள் கூக்குரலிட்டு அலறும் சப்தம் கேட்டது. அதன் பின் ஒரே மௌனம். இருளில் வெகு தொலைக்கப்பால் இரண்டு குதிரைகள் மட்டும் கனைக்கும் சப்தம் எதிரொலித்து மறைந்தது. சிள் வண்டின் ரீங் காரம் இருளின் பயங்கரத்தை அதிகப் படுத்திக் கொண் டிருந்தது.

## 6

ஒரு மாதம் கழிந்தது. நாகநந்தரின் அருமைக் குழந் தைகளுக்கு காதணி விழாவும், பெயர் சூட்டு விழாவும் நடந்தது. அரண்மனை மீண்டும் ஒரு முறை அழகும் ஆனந் தமும் நிறைந்து விளங்கியது. நகரிலுள்ள பிரபுக்களும், முன்னணியில் நிற்கும் பெரிய மனிதர்களும் வந்து கலந்து கொண்டார்கள். மூத்த ராணி வாசவதத்தையின் சகோ தர ராகிய சோலை நாட்டு மன்னர் தயாளநந்தர் இவ்விழா வுக்கு பிரத்தியேக அழைப்பின் பேரில் விஜயம் செய்திருந் தார். வெகு காலத்திற்குப் பின் தன் தங்கை வாசவதத் தைக்கு பிறந்த குழந்தைக்கு ஏராளமான பரிசுப் பொருள் களையும் கொண்டு வந்திருந்தார். நாகநந்தர் தன் மைத் துனர் தயாளநந்தரை மிகவும் அன்புடனும் மரியாதை யுடனும் வரவேற்று உபசரித்தார். அவருடைய மரியா தைக்கு வேறு சில முக்கிய காரணங்களும் உண்டு. சோலைநாடு பொன்னூட்டைவிடப் பெரியது. படை பலங் களும், செல்வ வளங்களும் நிறைந்தது. முன்பொரு சம யம் பொன்னூட்டின் மீது எதிரிகள் படையெடுத்து சின்னா பின்ன மாக்கிவரும் பொழுது தயாளநந்தரின் உதவிதான் பொன்னூட்டைக் காப்பாற்றியது. எனவே நாகநந்தர்

அளவு கடந்த மரியாதையும், அன்பும் வைத்திருந்தார். விழா இனிது முடிந்தது. வாசவதத்தையின் பெண் குழந்தைக்கு கலாநந்தினி என்றும், மோகனதத்தையின் ஆண் குழந்தைக்கு வீரநந்தன் என்றும் பெயர் சூட்டினார்கள். விழா முடிவடையும் பொழுது தயாளநந்தர் தாம் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருள்களை வழங்கினார். வீரசேனனும் தன் தங்கையின் குழந்தைக்குத் தன் கையாலியன்ற பொருள்களைப் பரிசு வழங்கினான். எப்படியிருந்தாலும் அவன் ஒரு சாதாரண பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன்தானே! அரண்மனையில் வேலை பார்க்கும் படைத்தலைவன் தானே? அவனால் ஒரு பெரிய அரசர் அளிக்கும் பரிசுகளைப் போல அளிக்க முடியுமா?

தீய குணம் படைத்த மோகனதத்தைக்கு இது மிகவும் பொறாமையைத் தூண்டி விட்டது. தன்னை எல்லோரும் கூடி இழிவு படுத்துவதாக நினைத்தாள். இந்தத் தாழ்வு மனப்பான்மை ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. அழுகையும், ஆவேசமும் பொங்கி வந்தது. ஆனால் அவற்றை எல்லாம் அடக்கிக் கொண்டாள்.

விழா முடிந்து சிறிது நேரத்திற்குள்ளேயே விருந்து உண்டு முடித்துவிட்டு தயாளநந்தரும் அவருடைய பாதுகாப்பாளர்களும் அவசரமாகச் சோலை நாட்டுக்குத் திரும்பிவிட்டனர். மற்ற பிரமுகர்களும் தத்தம் வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர்.

விருந்து முடிந்த பின்னர் வாசவதத்தையையும், மோகனதத்தையையும் மன்னர் தன் வசந்த மண்டபத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார். அங்கு சென்று அமர்ந்து பழ வர்க்கங்கள் அருந்தித் தாம்பூலம் தரித்து அளவளாவிக் கொண்டிருந்தனர்.

மன்னர் மோகனதத்தையைப் பார்த்து வேடிக்கையாகக் கேட்டார். "மோகனா! நீ உன்னுடைய சபதத்திலே வெற்றி கண்டுவிட்டாய். நீ வாக்களித்தபடி இளவரசனை ஈன்றெடுத்து எனது ஆசைக் கனவுகளை நனவாக்கிவிட்டாய். எனவே நீ வெற்றியடைந்து விட்டாய். நான் தோல்வி அடைந்து விட்டேன். நீ தோல்வி அடைந்திருந்

தால் உன்னைச் சிறையில் அடைக்கும்படி சபதமிட்டாய். ஆனால் வெற்றியடைந்திருந்தாலும்கூட உனக்கு அதே சிறைத் தண்டனையைத்தான் கொடுக்க விரும்புகிறேன்'' என்று கூறி மோகனதத்தையைச் சற்று கோபமாகப் பார்த்தார்.

உடனே மோகனதத்தைக்கு நடுக்கம் தோன்றியது. சந்தேகம் தலை தூக்கியது. மருத்துவப் பெண்ணைக் கொலை செய்யப்போகும்போது வண்டி குடை கவிழ்ந்து உருண்டதும், வீரசேனன் தூக்கி எறியப்பட்டு மூர்ச்சையாகிக் கிடந்ததும், பின்னர் அவன் அதிகாலையில் விழித்துப் பார்க்கும்பொழுது மருத்துவப் பெண்ணின் உடல் அங்கு இல்லாமலிருந்ததும் அவளுக்கு ஞாபகம் வந்தது. ஒருவேளை அவள் உயிருடன் தப்பிச் சென்று மன்னரிடம் எல்லா விபரங்களையும் சொல்லியிருப்பாளோ என்று சந்தேகப் பட்டாள். அதனால்தான் மன்னர் இவ்வாறு கூறுகிறார் என்று நினைத்தாள். இவ்விதம் நினைத்து நடுங்கிக்கொண்டிருக்கும்பொழுது நாகநந்தரின் சிரிப்பொலி அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

''என்ன மோகனா! பயந்துவிட்டாயா? நான் உன்னை இதயச் சிறையிலே அடிமைப்படுத்திவிட்டேன். தண்டனை சரியானதுதானே'' என்று கேட்டு மீண்டும் சிரித்தார்.

மோகனதத்தை பயந் தெளிந்து நிம்மதியாக மூச்சு விட்டாள். தன்னுடைய பயம் வீணானது என்று புரிந்து கொண்டாள். தன் சதி அம்பலமாகவில்லை. மருத்துவப் பெண் விழுந்துகிடந்த இடத்தில் ரத்தம் சிந்தியிருந்தது என்று வீரசேனன் கூறியிருந்தான். அவள் இறந்திருப்பாள். பிண வாடையை மோப்பம் பிடித்து அறிந்து வந்த காட்டு மிருகங்கள் அவளை இழுத்துச் சென்றிருக்கலாம். எனவே தன்னுடைய சதி இனிமேல் ஒருக்காலும் வெளி வராது. மருத்துவப்பெண் உயிரோடிருந்தால் இவ்வளவு நாள்வரை அவள் மன்னரிடம் வந்து சொல்லாமலிருந்திருப்பாளா? எனவே தன் சதி வெற்றியடைந்துவிட்டது என்று ஊர்ஜிதப் படுத்திக்கொண்டாள். வெற்றியின் மயக்கம் அவளை மேலும் தன் போக்கிலேயே செல்லும்படி

தூண்டியது. சற்றுமுன் விழாவில் தனக்குக் கிடைத்த கேவலம் இன்னும் மனதை உறுத்திக்கொண்டிருந்தது. அதற்குத் தக்கபடி வாசவதத்தையைப் பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்தாள். அதற்காக மெதுவாக வலை வீசினாள்.

"அரசே! நான் என் சபதத்திலே வெற்றியடைந்து விட்டேனல்லவா? அதற்காக எனக்கு என்ன பரிசு தரப் போகிறீர்கள்?"

"எது வேண்டுமானாலும் கேள், தருகிறேன்."

"உண்மைதானா! நான் உறுதியாக நம்பலாமா?"

"தாராளமாக நம்பலாம். நாகநந்தன் ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டான்."

"அப்படியானால் நான் சொல்லுகிறபடி செய்வதாகச் சத்தியம் செய்து கொடுங்கள்."

"சத்தியம் செய்து கொடுக்கிறேன். என்னால் முடியும் காரியமாக நீ கேட்டால் நிச்சயமாகச் செய்துமுடிப்பேன். இது சத்தியம்."

மோகனதத்தை சிரித்துக்கொண்டே கூறினாள் "அன்றுநான் சபதம் எடுத்துக் கொண்டமாதிரி மூத்த ராணியார் சபதம் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார். நான் சபதத்தில் தோற்றிருந்தால் என்ன தண்டனையை அனுபவித்திருப்பேனோ அதே தண்டனையை பட்ட மகிஷியாருக்கு இன்று நீங்கள் அளிக்கவேண்டும். இதுவே என் வேண்டுகோள்." இவ்விதம் கூறிவிட்டு மோகன தத்தை நாகநந்தரையும் வாசவதத்தையையும் ஏறிட்டுப் பார்த்தாள்.

நாகநந்தர் இடியோசைகேட்ட நாகமானார். மோகன தத்தையின் கெட்ட எண்ணத்தை உணர்ந்து ஆத்திரம் கொண்டார். "மோகனதத்தை! நீ கேட்பது அநியாயம். இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நிறைவேற்ற முடியாது" என்று சீறினார். கோபத்துடன் எழுந்து சற்றுத் தொலைவில் போய் நின்றார். அவருடைய கண் களிலே தீப்பொறி பறந்தன. முகத்தை வேறுபக்கமாகத்

திருப்பிக்கொண்டு கைகளை நெறித்துத் தன் ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

மன்னர் எழுந்ததும் ராணிகள் இருவரும் எழுந்து நின்றனர். மோகனதத்தை வாசவதத்தையைக் கடித்து விழுங்கிவிடுபவளைப்போல வெறுப்புடன் பார்த்தாள். ஆனால் வாசவதத்தை அமைதி குலையாமல் முடிவை எதிர் பார்த்து நின்றாள். அவளுடைய அந்த அமைதி, இவ்வளவு பெரிய இடி விழுந்தும் நிலை குலையாத தன்மை மோனதத்தைக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியது. மோகனதத்தை வெறிபிடித்தவளைப் போலக் கூச்சலிட்டாள். "எது அநியாயம்? நீங்கள் செய்வது அநியாயமா? நான் செய்வது அநியாயமா? சற்றுமுன் சத்தியம் செய்து கொடுத்து நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன் என்றீர்கள். ஆனால் அடுத்த கணமே தவிடு பொடியாக்கி விட்டீர்கள். சத்தியம் புறக்கணிக்கப் பட்டது. நம்பிக்கை தகர்த்தெறியப் பட்டது. பொன்னாட்டு மன்னரின் சத்திய மெல்லாம் இவ்வளவுதானா?"

ஆத்திரம் மேலிட்ட நாகநந்தி மோகனதத்தையின் மீது சீறிப் பாய்ந்தார். அப்படியே அவளைப் பிடித்து நசுங்கிச் சாறு பிழிய வேண்டும்போல் தோன்றியது. நடுங்குகிற கரங்களுடன், சினம் பொங்கும் கண்களுடன் மன்னர் மோகனதத்தையை நெருங்கினர். அதே சமயம் "நிறுத்துங்கள்" என்ற குரல் இருவரையும் திடுக்கிடச் செய்தது.

அமைதியின் குன்று எரிமலையாக வெடித்தது. ஆனால் அதிலிருந்து அக்கினிக் குழம்பு பாயவில்லை. பத்தினிச் சிறப்பு பெருக்கெடுத்து ஓடியது. வாசவதத்தை கூறினாள். அமைதியும் ஆனால் கண்டிப்பும் நிறைந்த குரலில் கூறினாள். "நிறுத்துங்கள்!...மேன்மை தங்கிய பொன்னாட்டு மன்னர் சத்தியம் தவறியவர் என்ற சொல்லுக்கு ஆளாகவிடமாட்டேன். மன்னர் சத்தியம் தவறுவது மக்களுக்கு இழிவு. மக்களுள் நானும் ஒருத்தி என்ற முறையில் நான் மன்னரைச் சத்தியம் தவற விடமாட்டேன். மனைவி என்ற முறையில், நாட்டு மக்கள் எல்லாம் புகழக்கூடிய என்

னுடைய கணவர் சத்தியம் தவறியவர் என்றோ, ஆத்திரத்தால் நிலைகுலைந்து தனது இரண்டாவது மனைவியைக் கொன்ற அரக்கர் என்றோ நான் கேள்விப்பட விரும்பவில்லை. என் கணவர் பொன்னாட்டு மன்னர் சத்தியவந்தர். அவருடைய சத்தியம் வீண்போகாது. மோகனதத்தையின் விருப்பத்தை நான் பூர்த்தி செய்து வைக்கிறேன். என்னைச் சிறையிலடையுங்கள். என் கணவரின் மானத்தைக் காப்பாற்றுவதற்கு நான் சிறையிலிருக்கத் தயார். இனிமேல் எனக்குச் சிறையே சுவர்க்கம்'' என்று கூறி முடித்தாள் வாசவதத்தை.

மன்னர் நாகநந்தரின் கண்களிலே நீர் தாரை தாரையாக வழிந்தது. நாடாளும் மன்னர் சிறு குழந்தையைப் போல விக்கி விக்கி அழுதார். ''வேண்டாம் வாசவதத்தை! வேண்டவே வேண்டாம். சத்தியம் அநியாயத்திற்குக் கட்டுப்படக் கூடாது'' என்று தேம்பினார் நாகநந்தர்.

இதற்குள் வசந்த மண்டபத்தில் நடக்கும் தகராறு அரண்மனை முழுவதும் பரவிவிட்டது. வாசலில் நின்று கொண்டிருந்த சில வீரர்கள் மந்திரி நீதிவாணரிடம் சென்று கூறினர். மிகவும் அவசர அவசரமாக அவர் அங்கு வந்து சேர்ந்தார். அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவனான வீரசேனன் திட்டமிட்டபடியே அங்கு வந்துசேர்ந்தான். மன்னரின் தர்மசங்கடமான நிலையை அறிந்த நீதிவாணரும் மனங்கலங்கினார்.

ராணி வாசவதத்தை தானே விரும்பிச் சிறைக்குச் செல்வதாகவும் கைது செய்து சிறையிலடைக்கும்படியும் கேட்டுக்கொண்டாள். கைகேயியின் சூழ்ச்சியால் தசரதன் தடுமாறியபோது, ராமன் தந்தையின் சத்தியத்தைக் காப்பாற்ற, தானே வலிந்து வனம் சென்றதுபோல் இருந்தது அக்காட்சி.

நீதிவாணர் வாயடைத்து நின்றார். மன்னர் கண்ணீர் சொரிந்தார். மோகனதத்தை வெற்றிப் புன்னகையோடு நின்றாள்.

அமைதியின் உருவமான வாசவதத்தை பத்தினித் தன்மையின் நிலைக்களனான வாசவதத்தை, மன்னரை

வணங்கிவிட்டுத் தன் குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு காவலர்களை வரும்படி கூறிவிட்டுச் சிறையை நோக்கி நடந்தாள். விதி அவளுக்கு வழி காட்டிச் சென்றது. தருமம் அவள் நிலையைக் கண்டு கண்ணீர் வடித்துக்கொண்டு அவள் பின்னே காவலாகச் சென்றது. அவள் கையிலிருந்த பச்சிளங் குழந்தை அலறிக் கொண்டிருந்தது.

## 7

கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பின் ஒருநாள். வீரசேனன் எங்கோ சென்றுவிட்டு தனது மாளிகையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். போகும் வழியில் நேரடியாகச் செல்லாமல் குதிரையை நகரின் வடபுறமாக வுள்ள வீதியில் திருப்பினன். அவ் வீதியில் சென்று கொண்டிருக்கும் பொழுது அவனுக்கு முன்னே யாரோ ஒரு அழகிய பெண் குளத்திற்குச் சென்று நீர் எடுத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தாள். அவளுடைய பின் அழகையும், பின்னல் அழகையும் கண்டு ரசனையில் ஈடுபட்டுவிட்டான். இடுப்பில் குடத்தை வைத்து ஒற்றைக்கையை லாகவமாக வீசிக் கொண்டு ஒயிலாக நடந்து செல்லும் அந்தத் தங்க விக்ரகத்தைக் கண்டதும் அவனுடைய குதிரையின் வேகம் தளர்ந்தது. லகானை இழுத்துப் பிடித்து மெதுவாக நடக்கச் செய்தான். அவளையே பார்த்துக்கொண்டு சென்ற வீரசேனன், வழியிலே ஒரு குழந்தை மரக்குதிரை ஏறி விளையாடுவதைக் கவனிக்க மறந்துவிட்டான் அந்தக் குழந்தையை கிட்டத்தட்ட மோதி உருட்டிவிடும் நிலைமைக்கு வந்துவிட்டது வீரசேனின் குதிரை. அப்பொழுது குழந்தை திடீரென்று கூச்சலிடத் தொடங்கியது. அதன் பின்னர்தான் வீரசேனன் குழந்தையையும், குழந்தை ஏறியிருக்கும் மரக்குதிரையையும் கண்டான். குதிரையைச் சற்று ஒதுக்கி நிறுத்திக்கொண்டு குழந்தையைக் கவனித்தான்.

குழந்தை கூச்சலிடுவதை நிறுத்திவிட்டு உயிருள்ள நிஜக்குதிரையையும், உயிரற்ற தன்னுடைய மரக்குதிரை

யையும் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தது. வீரசேனன் சற்று ஆத்திரத்துடனும் வெறுப்புடனும் அந்தக் குழந்தையை நோக்கினுன். பையனுக்கு ஐந்து வயதுக்குள் இருக்கும். பார்ப்பதற்கு அழகாக இருந்தான். முகத்திலே கவர்ச்சியும், குறுகுறுப்பும் நிறைந்திருந்தது. வீரசேனன் பையனைப் பார்த்து, "ஏனடா! இப்படித்தான் நடுவீதியில் குதிரை ஓட்டுவதோ?" என்று கேட்டான்.

குழந்தையும் கிளிப்பிள்ளையைப் போல அதே கேள்வியைத் திரும்பக் கேட்டான். "இப்படித்தான் நடுத்தெருவில் குதிரை ஓட்டுவதோ?"

வீரசேனனுக்குச் சற்று சிரிப்பு வந்தது. "யாரடா நீ!" என்று கேட்டான்.

"என்னைத் தெரியாது? நான்தான் ராஜா" என்று மழலை கலந்த இனிய மொழியில் கூறினுன்.

"ஓஹோ ராஜாவா? எந்த நாட்டுக்கு ராஜா? ஐயா மரக்குதிரை ராஜாவே ஓடாத குதிரையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்குள் போய்ச் சேரும்" என்று கேலி செய்தான் வீரசேனன்.

குழந்தை உள்ளத்தில் கோபம் உண்டானது. "உன்னுடைய குதிரைதான் ஓடாது நொண்டிக்குதிரை, சண்டிக்குதிரை" என்று திட்ட ஆரம்பித்துவிட்டான்.

உடனே கோபம்கொண்ட வீரசேனன் குதிரையை விட்டுக் கீழே குதித்து பையனை அடிப்பதற்கு நெருங்கினுன். பையன் பலமாகக் கூக்குரலிட்டான். கூக்குரலைக் கேட்டுக் குப்பன் அங்கு ஓடிவந்தான். "ஐயா! ஐயா! குழந்தையை அடிக்காதீர்கள். அவனுக்கு என்ன தெரியும்?" என்று கெஞ்சிக்கொண்டே பையனைத் தூக்கி எடுத்துக் கொண்டான்.

"அப்பா! அப்பா! இந்த நொண்டிக் குதிரைக்காரன் என்னை அடிக்க வருகிருன்" என்று கூறிக்கொண்டே தேம்ப ஆரம்பித்தான்.

"அடே! அப்படி எல்லாம் பேசக்கூடாது. அவர் ராஜாங்க அதிகாரி. மரியாதையாகப் பேசவேண்டும்" என்று குப்பன் தன் மகனிடம் கூறிச் சமாதானப் படுத்தினன்." பின்னர் வீரசேனனைப் பார்த்து "எஜமான் மன்னித்துக் கொள்ளுங்கள். சின்னப் பிள்ளை ஏதோ தெரியாத்தனமாகப் பேசிவிட்டது" என்று கூறி வணங்கித் தோட்டத்து வாசலை அடைத்துவிட்டு, பையனை அழைத்துக்கொண்டு மரக் குதிரையையும் எடுத்துக் கொண்டு தன் குடிசையை நோக்கி நடந்தான்.

வீரசேனன் தன் குதிரைமீது ஏறிக்கொண்டு கிளம்பினுன். அவனுடைய கண்கள் தண்ணீர்க் குடம் சுமந்து செல்லும் தாரகையைத் தேடியது. ஆனால் இதற்குள் அவள் எங்கோ சென்று மறைந்துவிட்டாள்.

குப்பன் தன் மனைவியிடம் பையனின் வீரப் பிரதாபத்தை அளந்துகொண் டிருந்தான். "கேட்டாயா? பொன்னி! நமது செல்ல ராஜா என்ன போடுபோட்டான் தெரியுமா? இவனுடைய மரக்குதிரைதான் நல்ல குதிரையாம். நமது அரண்மனை வீரசேனர் இருக்கிருரே அவருடைய குதிரை நொண்டிக் குதிரையாம். பயல் துடுக்குக் காரன்தான்" என்று கூறித் தன் மகனை அன்புடன் வாரி அணைத்துக் கொண்டான். அதே சமயத்தில் குப்பன் பின் வருமாறு நினைத்துக்கொண்டான். 'எப்படி யிருந்தாலும் பெரிய இடத்தில் பிறந்த பையனல்லவா? அதனுல்தான் அந்தத் தைரியம். நம் குழந்தையாக யிருந்தால் இவ்வளவு துடுக்கு எங்கிருந்து வரும்' என்று நினைத்துக் கொண்டான். தனக்கு இவ்வளவு கெட்டிக்காரக் குழந்தையைக் கொடுத்து நூறு பொன்களையும் பரிசாகக் கொடுத்த மருத்துவப் பெண் இருளாயியை மனதிற்குள் வாழ்த்திக் கொண்டான். இப்பொழுது ஏன் அவள் இந்தப் பக்கமே வருவதில்லை? ஒருவேளை அடிக்கடி வந்தால் ரகசியம் வெளிப்பட்டுவிடும் என்று நினைக்கிருளோ என்னவோ? என்னை என்ன நினைத்துக்கொண்டாள்? சத்தியம் செய்து கொடுத்துவிட்டு அதற்கு விரோதமாக,குப்பன் ஒருநாளும் நடந்துகொள்ள மாட்டான் என்பது அவளுக்குத் தெரி

யாதுபோல் இருக்கிறது! இவ்வாறெல்லாம் குப்பனின் மனம் ஒருகணம் சிந்தனையில் மூழ்கியது.

குப்பன் எதையோ நினைத்துக்கொண் டிருக்கும் பொழுது பொன்னி தன் மகனை அவள் பக்கம் இழுத்து அணைத்து முத்தமிட்டுக் கொண்டாள். "என் செல்ல ராஜா! இதோ பார். நீ நன்ருகப் படித்து உத்தியோகம் பார்க்க வேண்டும். குதிரைச் சவாரி செய்யவேண்டும். அப்போது உனக்கு மரக்குதிரை வேண்டாம். நல்ல பஞ்ச கல்யாணிக் குதிரையில்தான் என் ராஜா சவாரி செய் வான். தேசிங்கு ராஜாவின் குதிரையைப்போல அவ்வளவு நல்ல நல்ல குதிரை எல்லாம் கிடைக்கும். என்னடா ராஜா! அப்படித்தானே?" என்று கூறிக்கொண்டே கொஞ்சிஞள்.

இச் சமயம் தோட்டத்தின் வெளியில் யாரோ நடந்து வரும் ஒலி கேட்டது. இருவரும் ஆவலாக வெளியே எட்டிப் பார்த்தார்கள். அரண்மனையில் தோட்ட வேலை பார்க்கும் வயோதிக கந்தன் வந்து கொண்டிருந்தான்.

"வாருங்கள் மாமா! என்ன ரொம்ப நாளாக இந்தப் பக்கம் வரவே காணேம்" என்று கூறிக் கொண்டே குப் பன் வெளியே ஓடிக் கந்தனை எதிர்கொண்டு அழைத்து வந்தான். கட்டிலிலே உட்கார வைத்துவிட்டுக் குப்பன் கீழே உட்கார்ந்து கொண்டான்.

"என்ன பெரியப்பா! உங்கள் பேரனைப் பார்க்கக்கூட உங்களுக்கு நேரம் கிடைக்கவில்லையா?" என்று அன்புடன் கேட்டாள் பொன்னி.

கந்தன் தான் கொண்டு வந்திருந்த சிறிய மூட்டையை அவிழ்த்தான். அதிலிருந்து ஒரு விளையாட்டு வண்டியை யும் ஊதுகுழலையும் எடுத்து தன் பேரன் கையில்கொடுத்து விட்டு மற்றொரு பொட்டலத்திலிருந்த தின்பண்டத்தை எடுத்து செல்ல ராஜாவின் வாய்க்குள் புட்டுப்போட்டுச் சாப்பிடும்படி சைகை காட்டினுன். பின்னர் "இனிமேல் நேரம் கிடைக்காமல் என்ன. இனி எப்பொழுது பார்த் தாலும் ஓய்வுதான். வயதாகிவிட்டதல்லவா? வேலையை விட்டுவிடத் தீர்மானித்து விட்டேன்" என்று கூறினுன்.

"ஐயையோ! ஏன் மாமா? எப்படி இருந்தாலும் அரண்மனைச் சேவகம் அல்லவா? அதை விட்டுவிட்டால் என்ன செய்வது" என்று ஆச்சர்யத்துடன் கேட்டான் குப்பன்.

கிழவன் சிரித்துக் கொண்டே கூறினன். "மாப் பிள்ளை, உனக்கொரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கி றேன். எனக்கு வயதாகிவிட்டதால் வேலை செய்ய முடிய வில்லை என்றும் எனக்குப் பதிலாக உன்னை அந்த வேலைக்கு அமர்த்துவதாகவும் ராஜாங்கத்தில் கூறினேன். அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். நாளையிலிருந்தே நீ வேலைக்கு வரவேண்டும். என்ன சம்மதம் தானே?" என்று கேட்டான்.

பொன்னியின் முகம் மகிழ்ச்சியால் பிரகாச மடைந்தது.

"என்ன இருந்தாலும் எங்கள் பெரியப்பாவுக்கு தன் மகளைவிட என்னிடம்தான் பிரியம் அதிகம். அதனுல் தான் இந்த வேலையை அவர் உங்களுக்குச் சிபாரிசு செய் திருக்கிறார்" என்று கூறினாள்.

குப்பனுக்கு அதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. "அதெல்லாமில்லை. என்னிடம்தான் பிரியம் அதிகம். அப்படித்தானே மாமா?" என்று கேட்டான் குப்பன்.

கிழவன் அவர்கள் இருவர் சொல்லுவதையும் மறுத்து விட்டான். "அப்படி யெல்லா மில்லை. எனக்கு என்னிடம் பிரியம் அதிகம். நான் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகி றேன். அதனுல்தான் என் வேலையை என் மகள் பொன் னியின் புருஷனிடமும் என் மாப்பிள்ளை குப்பனிடமும் ஒப்படைக்கிறேன். என்ன! சரிதானே?" என்று கேட்டுக் கொண்டே உரக்கச் சிரித்தான். பொன்னியும் குப்பனும் சேர்ந்து சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பொலியை அடக்கு வதற்குப் பையன் செல்லராஜன் தன் ஊதுகுழலை எடுத்துக் காது செவிடுபடும்படி ஊத ஆரம்பித்தான். அந்த ஓசை தான் குடிசையை அதிரச் செய்துகொண்டிருந்தது. அவர் கள் பேச்சுக்குரல் மறைந்துவிட்டது.

# 8

பொன்னாட்டு மன்னரின் அரண்மனை மிகவும் பிரம்மாண்டமானது. சுற்றிலும் விஸ்தீரணமான கோட்டை அமைந்திருந்தது, அதற்குள்ளே அணி அணியாகப் பல மாளிகைகள் எழுந்து வானோங்கி நின்றன. ஒரு புறம் ராணிகளின் அந்தப்புரம். மற்றொரு புறம் மன்னர் தங்குவதற்கு ஏற்ற வசந்த மண்டபம். தலைவாசல் வழியே உள்ளே நுழைந்ததும் முன்னால் அமைந்திருந்தது ராஜாங்க மாளிகை. அதில் ஒரு புறமாக மிகப்பெரிய கொலு மண்டபம் அலங்கரித்துக் கொண்டிருந்தது. இவை தவிரக் கோட்டையின் மற்றொரு புறத்தில் வெளி நாட்டு மன்னர்கள் தூதுவர்கள் போன்ற விருந்தினர்கள் வந்தால் தங்குவதற்கு விருந்தினர் மாளிகை ஒன்று தனியாக நின்றது. அதற்கு அருகிலே அரசாங்கப் பள்ளி. இவை எல்லாம் கடந்து அரண்மனையின் தெற்கு ஓரத்தில் பெரிய உத்தியான வனம் ஒன்று பூத்துக் குலுங்கி எழிலும் மணமும் பரப்பிக் கொண்டிருந்தது. ஓய்வு நேரங்களில் மன்னரோ அல்லது அந்தப்புர அணங்குகளோ அங்கு பொழுது போக்க வருவார்கள்.

அரசாங்கப் பள்ளிக்கென்று அமைந்த கட்டிடம் வெகு நாட்களாக உபயோக மின்றிக் கிடந்தது. இப்பொழுது அதற்கு மீண்டும் புத்துயிர் பிறந்தது. மன்னர் தன் குழந்தைகளைக் கல்வி பயிலச் செய்வதற்கு நல்ல நாள் பார்த்திருந்தார். விரைவில் அரசாங்கப் பள்ளியின் துவக்க விழா நடக்கவிருந்தது. அதற்காக அரசாங்கப் பள்ளியின் கட்டடம் புதுப்பிக்கப் பெற்று அழகு படுத்தப் பட்டது.

அரசாங்கப் பள்ளியில் மன்னரின் குழந்தைகளும் ராஜ வீதியில் வசித்து வரும் பிரபுக்களினுடைய குழந்தைகளும் கல்வி பயிலுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. முன்பு பிரதம படைத் தலைவராக யிருந்து இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கும் விஜயவாணர் அரசாங்கப் பள்ளியில் பிரதம குருவாக நியமிக்கப் பட்டார். விஜயவாணர் சகல வித்தைளிலும் சிறந்த ஞானமும் தேர்ச்சியும் பெற்றிருந்தார். போர்ப் பயிற்சியில் மிகவும் திறம்

படைத்தவர். பண்பாட்டில் உயர்ந்தவர். அவருக்குக் கீழே இன்னும் சிலஆசிரியர்களும் நாட்டியம், சங்கீதம் போன்ற கலைப் பயிற்சிகளுக்கு இரு பெண் ஆசிரியைகளும் நியமிக்கப் பட்டிருந்தார்கள்.

அன்று விஜயதசமி. அரசாங்கப் பள்ளியின் துவக்க விழா. ராஜ வீதியிலுள்ள பிரபுக்களும், மந்திரி பிரதானிகளும், சேனைத் தலைவர்களும் விழாவுக்கென வந்து குழுமியிருந்தார்கள். இவ்வளவு நாளும் வெளியில் நகரப் பள்ளியில் பயின்றுகொண்டிருந்த அவர்களுடைய குழந்தைகள் இனி அரசாங்கப் பள்ளியிலேயே பயிலப் போகிறார்கள். இவ்விஷயம் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி யூட்டியது. விஜயவாணரின் கீழ் பயிற்சி பெறுவதற்குத் தங்கள் குழந்தைகள் கொடுத்துவைத்தவர்கள் என்று பேசிக் கொண்டார்கள். விழாவுக்கு இன்னும் சிறிது நேரமேயிருந்தது. மன்னர் வருகைக்காக அவர்கள் ஆவலுடன் காத்திருந்தனர்.

ஆனால் மன்னர் அப்பொழுது அரண்மனையில் இல்லை. அவர் தம் அருமை மகள் கலாநந்தினியை அழைத்துக் கொண்டு வாசவதத்தை யிருக்கும் சிறைக்குச் சென்றிருந்தார். மன்னரும், இளவரசியும் அமர்ந்திருந்த ரதம் சிறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. ரதத்திற்குப் பின்னால் மெய்க்காப்பாளர் படைத்தலைவன் வீரசேனனும், வேறு சில வீரர்களும் பாதுகாப்புக்காகக் குதிரை மீது சென்றுகொண்டிருந்தனர். ரதம் சிறைவாசலை வந்தடைந்தது. மன்னரும் இளவரசியும் கீழே இறங்கினர். வீரசேனன் குதிரையை விட்டுக் கீழிறங்கி மன்னருக்கு முன்னால் வழி காட்டிக்கொண்டு சென்றான். மன்னரின் பின்னால் இரண்டு வீரர்கள் உருவிய வாளுடன் ஜோடியாகச் சென்றனர்.

சிறைக் கதவைத் திறந்துவிட்டு சிறைக் காவலர்கள் வணங்கி ஒதுங்கி நின்று வழிவிட்டனர். மன்னரும் இளவரசியும், வீரசேனன் முன்செல்ல நீண்டு கிடக்கும் குறடு வழியே நடந்து சென்றனர்.

கடைசியாக உள்ள ஒரு நீண்ட அறையில்தான் ராணி வாசவதத்தை சிறை யிருந்தாள். அந்தக் காராக்

கிரகமே அவளுடைய அந்தப்புரமாகத் திகழ்ந்தது. பட்டுப் பஞ்சணைகளும், பகட்டான ஆடம்பரப் பொருள் களும், இசையும், பாட்டும், கூத்தும் சூழ, பட்டத்து ராணியாக விளங்கவேண்டிய அவள் எளிமைக்கோலம் பூண்டு தவமிருந்தாள். அறையின் ஓரத்தில் ஒரு ஓட்டுத் திண்ணை. அதிலே ஒரு ஓலைப்பாய் விரித்துக்கிடந்தது. மரக்கட்டை ஒன்று தலையணையாகத் திகழ்ந்தது. தங்கப் பாத்திரங்களை உபயோகிக்கவேண்டிய அவள், மாட்சிமை பொருந்திய சோலைநாட்டு மன்னரின் தங்கை, நாடாளும் நாகநந்தரின் பட்டமகிஷி, வெறும் மட்கலங்களையே உபயோகித்து வந்தாள். மன்னர் அவளுக்கு எவ்வளவோ வசதிகள் செய்து கொடுப்பதாகக் கூறியும் அவள் கண்டிப் பாக மறுத்துவிட்டாள். ராஜபோகங்களைத் துறந்து எளிய விரத வாழ்க்கையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருந்தாள்.

மன்னரின் வருகையைக் கண்டதும் வெளியே அமர்ந் திருந்த பணிப்பெண்கள் எழுந்து வணங்கி நின்றனர். மன்னர் அறையின் வாசற்புறத்தில் வந்து நின்றார். உடனே வாசவதத்தை மகிழ்ச்சி பொங்க எழுந்து வந்து மன்னரின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். பின்னர் தன் மகளை வாரி எடுத்து அணைத்து முத்தமிட்டாள்.

மன்னர் தழுதழுத்த குரலில் ராணியைப் பார்த்துக் கூறினார். "வாசவதத்தை! இன்று கலாநந்தினி கல்விப் பயிற்சி தொடங்குகிறாள். அரசாங்கப் பள்ளியின் துவக்க விழா, இன்னும் சிறிது நேரத்தில் ஆரம்பமாகப் போகிறது. நமது அருமைச் செல்வி உனது ஆசீர் வாதத்தைப் பெற வந்திருக்கிறாள். வாழ்த்தி அனுப்பு" என்றார்.

பின்னர் கலாநந்தினி தன் தாயின் காலில் விழுந்து வணங்கினாள். அப்போது அவளுடைய கண்களிலே நீர் வழிந்தது. அதைக் கண்ட ராணி அவளை அன்புடன் தூக்கி நிறுத்தி, "கண்ணே! சகல நன்மைகளும் உண்டா கும். எதற்காகக் கண்ணீர் வடிக்கிறாய்? தந்தையிருக்கும் பொழுது உனக்கென்ன கவலை? நான் தொலைவில் இருந் தாலும்கூட என்னுடைய உள்ளமும் உயிரும், உன்னுட

னேயே யிருக்கும். நீ நன்முகக் கல்வி கற்றுக்கொள். கலை களில் தேர்ச்சிபெறு. பொன்னுட்டு மன்னரின் மதிப்பிற் குரிய மகள் என்று பெயரெடு'' என்று கூறிவிட்டுக் கலா நந்தினியின் கண்களில் வழிந்த நீரைத் துடைத்து விட் டாள்.

மன்னரும், மகளும் மீண்டும் திரும்பினர். வீரசேனன் முன் செல்ல இருவரும் வந்தவழியே திரும்பினர். ராணி வாசவதத்தை அறையின் வாசலில் நின்றுகொண்டு அவர் கள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளு டைய மனக்கண்ணிலே அரசாங்கப் பள்ளியின் துவக்க விழாவின் இனிய காட்சிகள் ஒவ்வொன்முக எழுந்தன. ஆனால் அதே சமயம் புறக்கண்ணிலே அவளையுமறியாமல் கண்ணீர்த்துளிகள் முத்து முத்தாக அரும்பி நின்றன. அத்துளிகள் அவளுடைய பார்வையை மங்கச்செய்தன. மன்னரும் மகளும் அவளுடைய பார்வையிலிருந்து மறைந்துவிட்டனர்.

* * *

அரசாங்கப் பள்ளி மாளிகையில் வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. மலர்களின் மணமும் வாச னைப் புகைகளும் மண்டபம் முழுவதும் வியாபித்திருந்தன. பிரமுகர்களும், அவர்களுடைய மனைவிமார்களும், குடும் பத்திலுள்ள மற்ருேரும் இருபுறங்களிலும் போடப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். ஆசிரிய பீடத்தில் விஜயவாணரும், பிறரும் இருந்தார்கள். அவர்களுக்கு எதிரே பயிற்சி பெறுவதற்குரிய மாணவ, மாணவிகள் அமர்ந்திருந்தனர்.

திடீரென்று வாத்தியங்களின் ஒலி நின்றது. வாசலில் நின்ற இரண்டு வீரர்கள் கம்பீரமான குரலில் ''புக ழோங்கும் பொன்னுட்டு மன்னர் வாழ்க!'' என்று மும் முறை கூறினர். மன்னரும், மோகனதத்தையும், இளவர சன் வீரநந்தனும், இளவரசி கலாநந்தினியும் மண்டபத் திற்குள் நுழைந்தனர். அமர்ந்திருந்த எல்லோரும் எழுந்து நின்றனர்.

மன்னர் குடும்பத்திற்கென மூன்று ஆசனங்கள் இடப்பட்டிருந்தன. அவற்றில் நடுவிலிருந்த உயர்ந்த ஆசனத்தில் சென்று மன்னர் அமர்ந்தார். மற்றொரு ஆசனத்தில் மோகனதத்தை அமர்ந்தாள். வாசவதத்தைக்கென ஒரு ஆசனம் காலியாக யிருந்தது. மூத்தராணி விரதவாழ்க்கையில் ஈடுபட்டதிலிருந்து அரசாங்க வைபவங்களில் இம்முறை கடைப் பிடிக்கப்பட்டுவந்தது. இளவரசனும் இளவரசியும் மேடையிலேறி மற்ற மாணவ, மாணவிகளிடையே நடுநாயகம் பெற்றனர்.

மன்னர் அமர்ந்ததும், எல்லோரும் தத்தம் ஆசனத்தில் அமர்ந்தனர். பின்னர் இறை வணக்கத்துடன் விழா தொடங்கியது. மீண்டும் வாத்திய இசைகள் முழங்கின.

அதே சமயம் நகரின் ஒரு மூலையிலுள்ள ஒரு சிறிய பள்ளியில் குப்பன் தன் மகனைச் சேர்த்துக்கொண்டிருந்தான். பொன்னி தான் கொண்டுவந்திருந்த காப்பரிசியைக் குழந்தைகளுக்கு வழங்கிக்கொண்டிருந்தாள். பள்ளிச் சிறுவர்களின் கும்மாளக் குரல் காதைச் செவிடுபடுத்திக் கொண்டிருந்தது.

## 9

பொன்னிக்கு இப்பொழுது அளவுகடந்த உற்சாகம். அவள் தன்னுடைய பழைய சிநேகிதிகள் யாரைக் கண்டாலும் "என் புருஷனுக்கு அரண்மனையில் சேவகம்" என்று சொல்லுவதில் பெருமை யடைந்தாள். கேவலம் சாதாரண தோட்டக்காரனாக யிருந்தாலும் அரசாங்கத் தோட்டக்காரனல்லவா?

அரசாங்கத் தோட்டக்காரனின் மனைவிக்குப் பெருமைப் பட்டுக்கொள்ள உரிமை இல்லையா என்ன? அரசாங்கத்தில் மற்ற பெரிய வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களெல்லாம் ராஜ வீதியிலே மதிப்போடு வசித்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் அந்தப் பழைய குடிசையிலேயே தான் வசித்து வந்தார்கள். அதற்காகக் குப்பன் பார்ப்பது அரண்மனை உத்தியோகமில்லை என்று சொல்லிவிட

முடியுமா? ஆகையால் பொன்னி பெருமையால் பூரித்துப் போயிருந்தாள்.

அவளுடைய பெருமைக்கு மற்ருெரு காரணமும் உண்டு. அவளுடைய அருமை மகன் பள்ளிக்கூடத்தில் மிகவும் கெட்டிக்காரஞக இருந்தான். அவனுடைய அறிவையும், திறமையையும் கண்டு ஆசிரியரே வியந்தாராம். ஓவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது புதிய புதிய மகிழ்ச்சிச் செய்திகளைக் கொண்டுவந்தான். அவன் பேசும் அழகை நாள் பூராவும் கேட்டுக்கொண்டிருக்கலாம். உணவும், உறக்கமும்கூடத் தேவையில்லை. இப்படிப்பட்ட குழந்தையைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தேனே என்று பெருமைப் பட்டுக்கொண்டாள்.

குப்பனைப் பார்த்து "மச்சான்! மச்சான்! நம் ராஜா பெரியவனுனல் உலகத்தையே ஆளக்கூடிய ராஜாவாக ஆகப் போகிருன் பார்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுவாள் பொன்னி. குப்பனும் சிரித்துக்கொண்டே பதில் கூறுவான், "எந்தச்சாமி புண்ணியமோ, பெரிய வீட்டில் பிறக்க வேண்டிய குழந்தை நம் குடிசையிலே வந்து பிறந்திருக்கிறது. எல்லாம் நாம் செய்த அதிர்ஷ்டம்தான்." ஆனுல் அதே சமயம் அவனுடைய உள்ளம் வேறுவிதமாக நினைத்துக்கொள்ளும். 'நம் குழந்தையாக யிருந்திருந்தால் இவ்வளவு புத்திசாலித்தனம் எங்கிருந்து வரும்? அந்தப் பெண்குழந்தை இங்கிருந்திருந்தால் தாய்க்கு உதவியாகத் தண்ணீர் தூக்குவதிலும், வீடுவாசல் பெருக்குவதிலும் தன் திறமையைக் காட்டிக் கொண்டிருக்கும்' என்று நினைத்துத் தனக்குள் தானே சிரித்துக்கொள்வான். தன்னுடைய பெண்குழந்தையைப் பற்றிய தாழ்வான எண்ணம், தான் வளர்த்துவரும் ஆண்குழந்தையிடம் அதிக அன்பு செலுத்துவதற்கு உதவியாக யிருந்தது. பொன்னியும், குப்பனும் செல்லராஜனை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார்கள். சிற்சில நாட்களில் மாலை வேளையில் ராஜாவும் தன் தகப்பன் குப்பனுடன் அரண்மனைத் தோட்டத்திற்குச் செல்வான். அங்கே குப்பன் தோட்ட வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது ராஜா தோட்டத்திலுள்ள மலர்களுடன் ஏதேதோ கதைகள் பேசி

விளையாடிக் கொண்டிருப்பான். சிற்சில சமயங்களில் தந்தைக்கு உதவியாகச் சிறிய வேலைகளும் செய்வான். ராஜாவுக்கு ரோஜா என்றால் மிகவும் பிரியம். தோட்டத் தின் மூலையில் சிறிய பாத்தி கட்டி அதிலே சில ரோஜாச் செடிகளை நட்டுக் கொடுத்திருந்தான் குப்பன். அதை ராஜா தன்னுடைய தோட்டமாகவே மதித்து வந்தான். அதிலுள்ள ஒவ்வொரு செடியும் அவனுடைய நண்பர் கள். அந்தச் செடிகளிலே புதிதாகத் தளிர் விடுவதைக் கண்டு, அவனுடைய உள்ளமும் ஆசைத் தளிர்கள்விடும். அவற்றிலே மலர் அரும்பெடுக்கும் பொழுது ராஜா அதை ஆசையாகக் கவனிப்பான்.

ஒருநாள் மாலை குப்பனுடன் ராஜாவும் அரண்மனைத் தோட்டத்திற்குச் சென்றிருந்தான். முதலில் தன் தோட் டத்தைக் கவனித்துவிட்டு, பிறகு தன் தந்தை வேலை செய் யும் மற்றொரு மூலையில் சென்று விளையாடிக்கொண் டிருந்தான்.

அன்று ஒரு பணிப்பெண் அரசரின் குழந்தைகள் இருவரையும் சோலையில் உலவுவதற்கு அழைத்து வந் திருந்தாள். குழந்தைகள் இருவரும் தென்றலில் அசைந் தாடும் மலர்களைக் கண்டு ஆனந்தப்பட்டனர். மரக்கிளை களில் மறைவாக அமர்ந்துகொண்டு குயில்கள் கீதம் பாடிக்கொண் டிருந்தன. கலாநந்தினியின் இளம் இதயம் குயிலின் கீதத்திலே லயித்துவிட்டது. குயில் எப்படி யிருக்கும் என்பதைப் பார்ப்பதற்கு அவளுக்கு ஒரு ஆவல். பணிப்பெண்ணிடம் குயிலைக் காட்டும்படி தொந்தரவு செய்தாள். பணிப்பெண்ணும் கலாநந்தினியும் குயிலைத் தேடுவதிலே முனைந்தனர்.

இளவரசன் வீரநந்தனனின் ஆசை வேறுவிதமாகத் திரும்பியது. ராஜா ஆசையுடன் வளர்த்து வந்த செடி களில் மலர்ந்திருந்த ரோஜா மலர்கள் அவன் கவனத்தைக் கவர்ந்தன. பணிப்பெண்ணும் அவனைக் கவனிக்காமல் குயிலைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தாள். கவனித்திருந்தா ளானால் ரோஜாச் செடியின் அருகே ராஜகுமாரனைச் செல்ல விட்டிருக்க மாட்டாள். ஏனெனில் இளவரசனின் மெல்லிய கரங்களில் ரோஜா முள் தைத்துவிட்டால்

பணிப்பெண்தானே தண்டனையை அனுபவிக்க வேண்டும். பணிப்பெண் காவலிலிருந்து விடுபட்ட இளவரசன் வீரநந்தனன் ஆவலோடு சென்று ரோஜா மலர்களைப் பறிக்க ஆரம்பித்தான். அதே சமயம் அங்கு வந்துசேர்ந்த தோட்டக்காரன் மகன் செல்லராஜாவுக்கு ஆத்திரம் பொங்கியது. தான் ஆசையுடன் வளர்த்த செடியில் மலர்ந்த அழகிய பூக்களை இன்னொரு சிறுவன் பறிப்பதென்றால் அந்தப் பிஞ்சு இதயம் பொறுக்குமா? திடீரென்று புகுந்து வீரநந்தனனின் முதுகிலே ஒரு அறை வைத்தான். வீரநந்தனன் மலர்களைக் கொட்டிவிட்டு அவனைத் திருப்பி அடிக்க முயன்றான். ஆனால் அரசபோகத்தில் வளர்ந்த குழந்தையின் கரங்களைவிட குடிசை வாழ்க்கையில் வளர்ந்த குழந்தையின் கரங்கள் உறுதியாகயிருந்தன. வீரநந்தனனுக்குத் தோல்வி ஏற்பட்டது. உடனே அலற ஆரம்பித்தான். கூக்குரலைக் கேட்ட பணிப்பெண் ஓடோடி வந்து தோட்டக்காரன் மகனின் முதுகில் நாலு அறை வைத்தாள். உடனே ராஜாவும் அழ ஆரம்பித்தான். இதற்குள் கூக்குரலைக் கேட்டுத் தோட்டக்காரன் குப்பனும் அங்கு வந்துசேர்ந்தான்..

"ஏ தோட்டக்காரா! உன் மகன் செய்ததைக் கேட்டாயா? இளவரசரோடு சண்டை போடுகிறான்" என்று ஆத்திரத்துடன் கூறினாள் பணிப்பெண்.

"ஐயையோ! அடபாவி! இப்படிச் செய்யலாமா? இளவரசரை யாரென்று நினைத்தாய்?" என்று கூறிக்கொண்டே பையனின் முதுகில் அவனும் இரண்டு அறை வைத்தான்.

இதுவரை அழுது கொண்டிருந்த பையன் தாக்குதல் மேல் தாக்குதல் வந்ததும் அழுகையை நிறுத்திவிட்டு தற்காப்புக்காக வாதாட ஆரம்பித்தான். "ஏனப்பா என்னை அடிக்கிறாய்? அவன் செய்ததுதானே தப்பு. என்னுடைய தோட்டத்தில் வந்து அவன் ஏன் பூவைப் பறித்தான்?" என்று கேட்டான் செல்வராஜன்.

"உன்னுடைய தோட்டமா? ஆளைப்பாரு ஆளை. இது ராஜாவினுடைய தோட்டம்" என்று அதட்டினாள் வேலைக்காரி.

"ஆமாம். ராஜாவினுடைய தோட்டம்தான். நான் தானே ராஜா. என்னுடைய தோட்டம்தானே இது" என்ருன் ராஜா.

"அடே! நீ பேருக்குத்தான் ராஜா. ஆனுல் உண்மையில் தோட்டக்காரன் மகன்தானே. கூலிக்காரன்தான். உனக்கென்ன உரிமை இருக்கிறது?" என்ருள் பணிப்பெண்.

"நான்தானே நட்டு வளர்த்தேன். எனக்குத்தானே சொந்தம்?" என்ருன்.

பணிப்பெண்ணுக்கு இப்பொழுது கோபம் அடங்கிச் சிரிப்பு வந்துவிட்டது. "கெட்டிக்காரப் பையன்தானடா நீ. நீ நட்டு வளர்த்தால் உனக்குச் சொந்தமாகி விடுமோ? அப்படியானுல் இந்தத் தோட்டத்திலுள்ள செடிகளை உன் அப்பன் நட்டு வளர்க்கிருனே, அப்படியானுல் தோட்டம் உன் அப்பனுடையதா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

குப்பன் இப்பொழுது குறுக்கிட்டான். "அடே இப்படி யெல்லாம் பேசக்கூடாது. உனக்கு யார் இப்படிச் சொல்லிக் கொடுத்தது. இந்தத் தோட்டம் இவருக்குச் சொந்தமானதடா. நாம் வேலைக்காரர்கள். நாம் அரசருடைய அடிமைகள். இவர்தானடா எதிர்கால அரசர். அவர் காலில் விழுந்து இனிமேல் இப்படியெல்லாம் செய்ய மாட்டேன் என்று மன்னிப்புக் கேட்டுக்கொள்" என்று கூறிவிட்டுத் தன் மகனை அரசரின் மகன்முன் இழுத்துக் கொண்டுபோய் விட்டுக் கும்பிட்டு விழும்படி கூறினுன். ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படிச் செய்வது கேவலமாகப் பட்டது. இருந்தாலும் தகப்பன் சொல்லைத் தட்ட முடியவில்லை. இளவரசனின் காலில் கும்பிட்டு விழுந்தான்.

பணிப் பெண்ணும், அரசனுடைய மக்களும் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட ஆரம்பித்தார்கள். அச்சமயம் பணிப் பெண்ணைப் பார்த்து "அம்மா! இதை யாரிடமும் செல்லாதீர்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்

தோட்டக்காரன். பணிப்பெண் அதை யாரிடமும் கூறுவதாக இல்லை. அப்படிக் கூறினால் அது அவளுக்குத்தானே தொந்தரவு!

அவர்கள் எல்லோரும் சென்றதும், குப்பன் தன் மகனை அணைத்துக் கொண்டு முதுகைத் தடவிக் கொடுத்தான். "வலிக்குதாடா கண்ணு? இனிமேல் நீ இப்படி எல்லாம் செய்யக் கூடாது. நாம் ஏழைகள். நாம் தவறு செய்தால் நாம் சாப்பிடுகிற சோற்றில் ராஜா மண்ணை அள்ளிப் போட்டுவிடுவார். தெரிந்ததா?" என்றான்.

"அதெப்படி மண்ணை அள்ளிப் போட முடியும்? நிஜ ராஜாதான் நம் குடிசைக்கு வரமாட்டாரே," என்றான் செல்லராஜா.

"இல்லையடா! அவர் அரண்மனையில் இருந்து கொண்டே மண்ணை அள்ளிப் போட்டுவிடுவார். அவர் நினைத்தால் எதுவும் செய்யலாம்."

"அப்படியானால் அவர் கை அவ்வளவு நீளமானதா?"

"ஆமாம். இந்தத் தேசம் முழுவதும் அவர் கைக்கு எட்டிய பிரதேசம்தான். நாம் என்ன செய்தாலும் அவருக்குத் தெரிந்துவிடும். நாம் என்ன பேசினாலும் அவருக்குக் கேட்டுவிடும். அதனால் நாம் தவறு செய்யக் கூடாது" என்றான் குப்பன்.

செல்லராஜாவின் உள்ளத்திலே ராஜாவைப் பற்றிய கற்பனை எழுந்தது. அவர் எப்படியிருப்பார் என்று நினைத்துப் பார்த்தான். நீளமான கைகளும், பெரிய விழிகளும் கொண்ட ஒரு மனித உருவம் அவன் கண் முன்னே தோன்றியது. "ஓஹோ! இவர்தான் நிஜ ராஜாவா?" என்று தனக்குள்தானே கேட்டுக் கொண்டான்.

## 10

இரவு வெகுநேரமாகிவிட்டது. பொன்னகரத்து வீதிகள் யாவும் இருளால் திரை யிடப்பட்டிருந்தன. அநேகமாக நகர மாந்தர் எல்லோரும் படுத்துறங்க ஆரம்

பித்துவிட்டனர். சில வீடுகளில் மட்டும் விளக்கொளியும் பேச்சரவமும் கேட்டது. அநேகமாக வீதிகளில் ஜன நடமாட்டமில்லை.

இருளினூடே ஒரு கிழவர் மெதுவாக நடந்து சென்று கொண்டிருந்தார். தாடி மீசைகளுடன் பழுத்த பழமாக யிருந்தார். குளிருக்காக போர்வை ஒன்றைப் போர்த் திருந்தார். கையிலே தடி ஒன்று இருந்தது. ஆனாலும் அவர் அந்தத் தடியின் உதவி கொண்டு நடந்ததாகத் தெரியவில்லை. அவருடைய நடையிலே மிடுக்கும், பலமும் இருந்தது. வீதி வழியே மெதுவாக நடப்பதும், சற்று தாமதிப்பதும், மறுபடியும் அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தி எதையோ தேடுவதுபோலவும் நடந்துகொண் டிருந்தார்.

நகரத்தின் வடக்குக் கோடியில் உள்ள ஒரு வீதியை அடைந்தபோது அவருக்கு எதிர்ப்புறமாக வெகு தூரத்தி லிருந்து ஒரு பெண் குரல், பரிதாபமாகக் கூவி அழைக்கும் சப்தம், காற்றிலே மிதந்து வந்தது. அந்தக் குரலிலே தாய்மையின் ஏக்கம் பிரதிபலித்தது. அந்தப் பெண்ணின் உள்ளத்திலே எழுந்த சோக உணர்ச்சி அந்த அழைப்பிலே பொங்கி வழிந்துகொண்டிருந்தது. "அடே ராஜா! அடே செல்ல ராஜா!" என்று அந்தப் பெண் அன்பு கலந்த குரலில் உள்ளத்தை உருக்கும்படி அழைத்துக் கொண் டிருந்தாள்.

கிழவரின் உள்ளத்தை அந்தக் குரல் மிகவும் இளக்கி விட்டது. சற்று தூரம் அவர் நடந்ததும் அந்தக் குரல் அருகிலே கேட்டது. அவர் மேலும் கொஞ்சதூரம் சென்றதும் ஒரு பெண் இருளினூடே "ராஜா! ராஜா!" என்று அழைத்தபடியே வந்துகொண்டிருந்தாள். கிழவர் உருக்கத்துடன் கேட்டார். "யாரம்மா நீ? ஏன் இந்த இருளில் தனியாக வருகிறாய்?"

பொன்னி கிழவரை நெருங்கினாள். மிகவும் அருகில் வந்ததும் கிழவர் அவளை உற்றுப் பார்த்தார். நட்சத்திரங் களின் மங்கலான ஒளி அவள் முகத்திலே பட்டது. அந்த மங்கலான ஒளியிலும் அவள் கண்களில் வழிந்த

நீர்த் தாரை மின்னிக் கொண்டிருந்தது. "யாரை அம்மா தேடுகிருய்?" என்று அனுதாபத்துடன் கேட்டார் கிழவர்.

"ஐயா பெரியவரே! நீங்கள் வரும் வழியில் யாராவது ஒரு பையனைப் பார்த்தீர்களா? என்னுடைய ஒரே மகன் உலக மறியாத சின்னஞ்சிறு குழந்தை. அப்பா அடித்து விட்டார் என்று கோபித்துக்கொண்டு எங்கோ சென்று விட்டான்! இரவு வீட்டிற்கு வருவான் என்று நினைத் திருந்தேன். இன்னும் வரவில்லை" என்று பதைத்துக் கொண்டு கூறினுள்.

"ஏனம்மா உன் கணவர் குழந்தையை அடித்தார்?"

"ஐயா! அவன் ஒரு குற்றமும் செய்யவில்லை. அவன் மிகவும் நல்லவன், கெட்டிக்காரன். நல்ல புத்திசாலி. இன்று தினம் என் கணவரை வேலையிலிருந்து விலக்கி விட்டார்கள், அவனுல்தான் என் கணவரின் வேலை போனதாம். 'அட சனியன்பிடித்த பயலே உன்னுல் தானடா அரசர் நாம் தின்கிற சோற்றிலே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டார். இனிமேல் பட்டினி கிடக்க வேண்டியதுதான்' என்று கோபத்தில் கூறி, அவனை அடித்துவிட்டார். கோபமாகச் சென்ற பையன் இன்னும் திரும்பி வரவில்லை.'

"அப்படியா! அரசரா உன் கணவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்? அரசருக்கு உன் மகன் என்ன தீங்கு செய் தான்?"

"ஒன்றுமில்லை பெரியவரே! என் வீட்டுக்காரர் அரண்மனைத் தோட்டத்தில் வேலை பார்த்துவந்தார். என் மகனும் நேற்று தினம் தோட்டத்திற்குப் போயிருந்தான். அப்போது ராஜாவின் மகன் அங்கே விளையாட வந்திருந் தாராம். குழந்தைகள் இருவரும் ஏதோ சண்டைபோட் டிருக்கிருர்கள். குழந்தைகளுக்கு என்ன தெரியும்? அரசன், ஆண்டி என்ற வித்தியாசமெல்லாம் பெரியவர் களுக்குத்தானே தெரியும். குழந்தைகளுக்கு எப்படித் தெரியும்? அரசருடைய குழந்தையோடு, தோட்டக்காரன் குழந்தை விளையாடக்கூடாது, சண்டைபோடக்கூடாது என்பதெல்லாம் அதற்கென்ன தெரியும்? குழந்தைகள்

சண்டைபோட்டுக் கொண்டதற்காக எங்கள் குடும்பத்தையே பட்டினி போட்டுவிட்டார்கள். நீங்களே சொல்லுங்கள் ஐயா! இது நியாயமா?" என்று சொல்லிவிட்டுக் கண்ணீர் விட்டாள்.

கிழவர் தலையை ஆட்டிக்கொண்டே "நியாயமில்லை. நம் அரசர் மிகவும் அநியாயக்காரர்தான் போலிருக்கிறது" என்று சற்றுக் கோபத்துடன் கூறினார்.

"இல்லை! இல்லை! அரசர் அநியாயக்காரர் அல்ல. அவர் இந்த சாதாரண விஷயத்திலெல்லாம் தலையிடமாட்டார். எல்லாம் கீழே உள்ள அதிகாரிகள் செய்த வேலை. அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவர் வீரசேனர் தான் என் வீட்டுக்காரரைப் போகச் சொல்லிவிட்டாராம்" என்றாள் பொன்னி.

"அப்படியானால் ஏன் நீங்கள் அரசரிடம் முறையிட்டுக்கொள்ளக்கூடாது?" என்று கேட்டார் கிழவர்.

"ஏழை சொல் அம்பலம் ஏறுமா பெரியவரே?"

கிழவர் பொன்னியை சமாதானப்படுத்தி அனுப்பினார்.

பையன் காலையில் வந்து விடுவான் என்றும் இருட்டில் அலையாமல் வீட்டிற்குப் போய்ச் சேரும்படியும் கூறிவிட்டு, கிழவர் மேலே நடந்தார்.

பல வீதிகளைத் தாண்டி நகரின் கிழக்கு ஓரத்திலுள்ள ஒரு வீதியை அடைந்தார். இருளில் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு மெல்லிய தேம்பும் குரல் கேட்டது. கிழவர், குரல் வரும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே ஒரு சிறிய ஓட்டுத் திண்ணையில் சுமார் ஆறு வயதுடைய ஒரு பையன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான். கிழவர் குனிந்து பார்த்து "தம்பி! ஏனப்பா அழுகிறாய்? வா உங்கள் வீட்டிற்குப் போகலாம்" என்று கூறி அவன் முதுகிலே அன்புடன் தடவிக் கொடுத்தார்.

செல்லராஜா கிழவரை நிமிர்ந்து பார்த்தான். அவருடைய அன்பு பொங்கும் முகமும், ஆதரவான பேச்சும்

அவன் மனதிற்குத் தெம்பை ஊட்டின. "தாத்தா! நான் வீட்டிற்கு வரமாட்டேன். என்னுல்தான் அரசர் நாங்கள் தின்கிற சோற்றில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாராம். தாத்தா! அரசர் ரொம்பவும் பொல்லாதவரோ? அவருக்குக் கை ரொம்ப நீளமானதாமே. ஊரில் என்ன நடந்தாலும் அவர் பார்த்துவிடுவாராம். என்ன பேசிக் கொண்டாலும் அவர் காதுக்குக் கேட்டுவிடுமாம். அப்படியானல் ஏன் தாத்தா எங்களுடைய கஷ்டம் அவருக்குத் தெரியாதா?" என்று கூறினன்.

கிழவருக்குச் சிரிப்பு வந்தது. பையனைத் திண்ணையிலிருந்து கீழே இறக்கினர். "தம்பி! நீ உங்கள் வீட்டிற்குப் போகாவிட்டால் பரவாயில்லை. என் வீட்டிற்கு வா!" என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு மெதுவாக நடந்தார். ராஜாவுக்குக் கிழவரை மிகவும் பிடித்திருந்தது. குளிரில் நடுங்கிக் கொண்டே அவருடன் நடந்தான். பையன் குளிரால் நடுங்குவதைக் கிழவர் கண்டார். தன் போர்வைக்குள் அவனை இழுத்து அணைத்துக் கொண்டே நடந்தார். சற்று தூரம் சென்றதும் பையன் தாத்தாவைப் பார்த்துக் கேட்டான். தாத்தா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். நியாயமாகப் பதில் சொல்லுகிறீர்களா?" என்றான்.

"ஏதடா! நீ கூட எனக்கு நியாயப் பரீட்சை வைக்க ஆரம்பித்து விட்டாயா? பரவாயில்லை கேள்" என்றார்.

"தாத்தா! நான் ஒரு பொருளைச் செய்கிறேன். அது யாருக்குச் சொந்தம்?"

"உனக்குத்தான் சொந்தம்."

"நீங்கள் சொல்வதுதான் தாத்தா சரி. அப்படியானல் இன்னென்று சொல்லுகிறேன் கேளுங்கள். அரண்மனைத் தோட்டத்திலே ஒரு ரோஜாச் செடி வளர்த்தேன். அந்த ரோஜாச் செடியில் மலரும் பூக்கள் எனக்குத்தானே சொந்தம். எனக்குச் சொந்தமில்லை என்று சொல்லி எல்லோரும் அடித்து விரட்டிவிட்டார்கள். போதும் போதாதற்கு என் அப்பாவையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். என் அப்பாவுக்கு வேறு எங்காவது வேலை தேடிக்

கண்டுபிடித்து விட்டுத்தான் நான் வீட்டிற்குப் போவேன். தாத்தா உங்கள் வீட்டில் தோட்டமிருக்கிறதா?''

''இருக்கிறதே! பெரிய தோட்டமிருக்கிறது.''

''அப்படியானல் என் அப்பாவை நீங்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறீர்களா தாத்தா? நானும்கூட அவர் கூட வந்து வேலை செய்வேன். அவருக்கு மட்டும் சம்பளம் கொடுத்தால் போதும்.''

''அப்படியானுல் உனக்குப் படிக்க விருப்பமில்லையா?'

''படிக்கத்தான் செய்வேன். ஓய்வு நேரங்களில் தான் தோட்டத்திற்கு வேலை செய்யவருவேன். தாத்தா எனக்கு இன்னொரு ஆசை. நன்ருகப் படித்து குதிரைமீது சவாரி செய்ய வேண்டும். என் அம்மா கூட இதைத்தான் கூறி யிருக்கிருர்கள்'' என்ருன்.

கிழவருக்குப் பையன் மீது தன்னை அறியாமல் ஓர் அளவிறந்த பாசம் ஏற்பட்டது. ''சரி பார்ப்போம்'' என்று கூறி, பையனை அணைத்துக் கொண்டே சென்ருர்.

சற்றுதூரம் சென்றதும் பையனுக்கு நடக்க முடிய வில்லை. தூக்கம் வேறு கண்ணைச் சுற்றியது. தூங்கி விழுந்து கால் தடுமாறினன். அதைக் கண்ட கிழவர் பையனைத் தானே தூக்கிக்கொண்டார். தாத்தாவின் அணைப்பும், போர்வையின் கதகதப்பும் அவனுக்கு இத மாக இருந்தன. பையன் நன்ருகத் தூங்கிவிட்டான்.

## 11

பொழுது புலர்ந்தது. மன்னர் படுக்கையி லிருந்து விழித்தெழுந்தார். அருகிலே சிறுவன் இன்னும் நன்ருக உறங்கிக் கொண்டிருந்தான். மன்னர் புன்னகை தவழ அவனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு காலைக் கடன் களை முடிக்க வெளியே சென்ருர்.

மன்னரின் படுக்கை அறையைச் சுத்தம் செய்வதற்குப் பணிப் பெண் வந்து சேர்ந்தாள். முன்பு தோட்டத்திற்கு அரச குமாரனையும் இளவரசியையும் அழைத்துவந்திருந்த அதே பணிப் பெண் தான் இவள். மன்னரின் படுக்கையிலே தோட்டக்காரன் மகன் படுத்திருப்பதைக் கண்டதும் அவளுக்கு ஆத்திரம் பொங்கியது. இவன் இங்கு எப்படி வந்தான் என்று ஆச்சரியப்பட்டாள். பின்னர் படுக்கை யருகில் சென்று "அடே மூதேவி! உனக்கு ராஜாவின் பஞ்சணை மெத்தை இல்லாமல் சரிப்பட்டு வரவில்லையோ? எழுந்திரடா முண்டமே!" என்று திருப்பள்ளி எழுச்சி பாடிக்கொண்டு அவனை உலுக்கினாள்.

ராஜா தூக்கம் கலைந்து விழித்தெழுந்தான். தான் எங்கிருக்கிறோம் என்பது அவனுக்கு முதலில் புரியவில்லை. அறையைச் சுற்று முற்றும் ஒருமுறை பார்த்தான். தான் எங்கோ சொர்க்கத்திலிருப்பது போன்று தோன்றியது ஆடம்பரப் பொருள்களும் அலங்காரப் பண்டங்களும் நிறைந்த அப்படிப்பட்ட அழகிய இடத்தை அவன் இதற்கு முன்பு கண்டதேயில்லை. "நான் எங்கே இருக்கிறேன்" என்று வாய்விட்டுக் கேட்டுக்கொண்டான்.

"அதா, உன் தாத்தா வீட்டில்" என்று ஒரு குரல் பதில் சொல்லியது. குரல் வந்த திசைக்குத் தன் பார்வையைத் திருப்பினான் செல்லராஜா. அங்கே துடைப்பக் கட்டையும் கையுமாக ஒருத்தி நிற்பதைக் கண்டான். அப்பொழுது தான் தூக்கம் கலைந்திருந்ததால் அவளை யாரென்று புரிந்துகொள்ள முடியவில்லை. "ஓஹோ! தாத்தா இவ்வளவு பெரிய பணக்காரரா? அப்படியானால் அவருடைய தோட்டம் மிகவும் பெரியதாகத் தானிருக்கும். நிச்சயமாக என் அப்பாவுக்கு வேலை கொடுப்பார். தாத்தா உண்மையிலேயே நல்லவர்தான்." என்று நினைத்துக் கொண்டான். பின்னர் அந்தப் பெண்ணைப் பார்த்து "தாத்தா எங்கே போயிருக்கிறார்?" என்று கேட்டான்.

"உங்கள் பாட்டியைத் தேடிப் போயிருக்கிறார். தாத்தாவும் பாட்டியும் சுடுகாட்டிற்குப் போகப்போகிறார்கள்! இறங்கடா மூதேவி படுக்கையைவிட்டு" என்று அதட்டினாள் வேலைக்காரி.

பையன் ஒன்றும் புரியாமல் கீழே இறங்கி நின்று கொண்டு மிரள மிரள விழித்தான். எங்கே போவது,? என்ன செய்வது, என்று அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பணிப் பெண் மீண்டும் அவனைப் பார்த்து உறுமினுள். "எப்படியடா இங்குவந்தாய்?" என்று அதட்டினுள்.

"நானு! என் தத்தா என்னைத் தூக்கிக் கொண்டு வந்தார். தாத்தா இப்போது எங்கே போய்விட்டார்?" என்று பதில் கேள்வி போட்டான்.

இதைக் கேட்ட தோழிக்குக் கோபம் வந்தது. "உன் தாத்தாவு மாச்சு நீயு மாச்சு!" என்று கூறிக்கொண்டே அவனுடைய கையைப் பிடித்து வேகமாக இழுத்துக் கொண்டு படுக்கையறையின் வாசலை நோக்கி வந்தாள். அதே சமயம் மன்னரும் உள்ளே நுழைந்தார். மன்னரைக் கண்டதும் பணிப் பெண்ணுக்குப் பயம் வந்துவிட்டது. இரவு அவர் இங்கு படுத்திருந்தது அவளுக்குத் தெரியாது தன் அறையில் ஒரு ஏழைச் சிறுவன் படுத்துறங்கியது தெரிந்தால் மன்னர் கோபித்துக் கொள்வாரே என்று நடுங்கினுள். மன்னரைக் கண்டதும் பையனுக்கு அவர் யாரென்று புரியவில்லை. ஆளைப்பார்த்தால் மிகவும், கம்பீரமாகவும், அழகாகவும், செல்வச் செருக்குடனும் இருப்பதைக் கண்டான். "இந்த வீடு தாத்தாவின் வீடென்ருல் தாத்தா மிகவும் பணக்காரராகத்தானே யிருக்க வேண்டும்.? அப்படியானுல் ஒரு வேளை இவர் தாத்தாவின் மகனுக இருக்கலாம்?" என்று நினைத்துக் கொண்டான்.

"ஐயா! இரவு என்னைக் கொண்டு வந்த தாத்தா எங்கே? நீங்கள் யார்? தாத்தாவின் மகனு?" என்று கேட்டான்.

இவனுடைய கேள்வியைக் கண்டதும் பணிப் பெண்ணுக்குக் கோபமும் சிரிப்பும் வந்தது. "அடே! மரியாதையாகப் பேசடா! இவர்கள்தான் நம் மகாராஜா. நீ நின்று கொண்டிருப்பது அவர்களுடைய அரண்மனை அறையில்" என்று விஷயத்தை விளக்கிக் கூறினுள் பணிப் பெண்.

பையனுக்கு இப்பொழுது நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. அவன் இதுவரை வேலைக்காரர்களுக் கென்று

பிரத்தியேகமாக உள்ள தோட்ட வாசல் வழியே தோட்டத்திற்கு வந்திருக்கிறனே யொழிய அரண்மனைக்குள் வந்தது கிடையாது. மன்னரையும் பார்த்தது கிடையாது. மன்னர் தன் மீது கோபமாக யிருப்பதாகவும், அதனுல் தான் தன் தகப்பனுக்கு வேலை போய்விட்டது என்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். எனவே மன்னர் இப்பொழுது என்ன செய்யப் போகிருரோ வென்று பயந்தான்.

சிறுவன் பயப்படுவதை அறிந்த மன்னர் அவனிடம் அன்புடன் நெருங்கி, தட்டிக் கொடுத்துக் கொண்டே "தம்பி! பயப்படாதே. தாத்தா எல்லாவற்றையும் என்னிடம் கூறி யிருக்கிருர்" என்று கூறி விட்டு, பணிப் பெண்ணைப் பார்த்து "இவனை அழைத்துச் செல். குளிக்கச் செய்து ஆகாரமெல்லாம் கொடுத்து இவனை மறுபடியும் என்னிடம் அழைத்துவா" என்ருர்.

பணிப் பெண்ணுக்கு ஒன்றும் புரியவில்லை. புரியாத புதிரை விடுவிப்பதற்கு அவளுடைய மூளை வேலை செய்யுமளவுக்கு அப்பொழுதில்லை. எனவே மன்னரை வணங்கி விட்டுப் பையனைத் தன்னுடன் அழைத்துச் சென்ருள்.

* * *

குப்பனின் குடிசையில் சோகம் தாண்டவ மாடியது. வேலை போய்விட்டதற்காகக் குப்பன் வருத்தப் பட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் பையன் காணுமல் போனதும் அவன் வருத்தத்தை அதிகப்படுத்திக்கொண்டிருந்தது. ஆனுல் பொன்னி வேலை போனதைப்பற்றிக்கூடக் கவலைப் படவில்லை. தன் ஆசை மகனைக் காணவில்லையே என்று அழுது அழுது கண்களை வீங்க அடித்துக்கொண்டிருந்தாள். அதே சமயம் தங்கள் குடிசையை நோக்கி அரண்மனை வீரர்கள் இருவர் வருவதைக் கண்டதும் அவர்களுடைய பயம் அதிகமாகியது. என்னவோ ஏதோவென்று திடுக்கிட்டார்கள். வீரர்கள் வருவதைக் கண்டு பயத்துடன் எழுந்து நின்றனர்.

"அரண்மனைத் தோட்டத்தில் வேலை பார்த்த குப்பன் வீடு இதுதானே. குப்பனையும், பொன்னியையும் கூட்டி

வரும்படி அரசர் உத்தரவிட்டிருக்கிறார். உடனே புறப் படுங்கள்" என்றனர்.

குப்பனும், பொன்னியும் ஒருவரை ஒருவர் பயத் துடன் பார்த்துக்கொண்டார்கள். "ஐயோ! நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே. சிறுவன் செய்த குற்றத் திற்குத்தான் வேலையைவிட்டு நீக்கிவிட்டார்களே. அது போதாதென்று இனியும் என்ன செய்யப்போகிறார் களோ?" என்று புலம்பிக்கொண்டே இருவரும் சேவகர் களின் பின்னே நடந்தனர். தெருவில் போகும்போது அங்கு நின்ற எல்லோரும் குப்பனையும், பொன்னியையும் ஏளனத்துடன் பார்த்துச் சிரித்தனர்.

மன்னர் இருக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் நிறுத்தினர். மன்னரைக் கண்டதும் அவர் காலடி யில் போய் விழுந்து "மகாராஜா! ஏழை ஒரு குற்றமும் செய்யவில்லை" என்று கெஞ்சினான் குப்பன்.

மன்னருக்கு அவனுடைய செயல் சிரிப்பை மூட்டி யது. புன்சிரிப்புடன் குப்பனைப் பார்த்து "எழுந்திரு குப்பா! உனக்கு ஒன்றும் தண்டனை கொடுக்கவில்லை. நீ மறுபடியும் அரண்மனைத் தோட்ட வேலையை ஒப்புக் கொள்" என்று கூறிவிட்டு, பிறகு அருகிலிருந்த ஒரு பணிப்பெண்ணைப் பார்த்து, பையனை அழைத்துவரும்படி கூறினார். அவள் சென்று ராஜாவை அழைத்து வந்தாள். பின்னர் மன்னர் பொன்னியைப் பார்த்து "பொன்னி! உன் மகன் மிகவும் கெட்டிக்காரன். அவனை நாளையிலிருந்து ராஜாங்கப் பள்ளிக்குப் படிப்பதற்கு அனுப்பி வை" என்று உத்தரவிட்டார்.

அருகிலுள்ள எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். "பிரபுக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் சாதா ரண தோட்டக்காரன் மகன் படிப்பதா?" என்று வியந் தனர். ராஜன், மன்னரின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு மகிழ்ச்சியுடன் தன் தாய் தந்தையரோடு வீட்டிற் குப் புறப்பட்டான். பொன்னியின் மகிழ்ச்சிக்கு எல்லையே யில்லை. ஏதோ மந்திரத்தால் மாங்காய் காய்த்ததைப் போல அவளுக்கு ஆச்சரியமாக யிருந்தது.

# 12

அன்று இரவு பூராவும் குடிசையிலிருந்த மூன்று ஜீவன்கள் சரியாகத் தூங்கவில்லை. குப்பனும், பொன்னியும் மன்னரைப் பற்றியும், அவருடைய பெருந்தன்மையைப்பற்றியும், தங்கள் மகனின் புத்திசாலித்தனத்தைப் பற்றியும் பேசிக்கொண்டேயிருந்தார்கள். "நான் இரவில் கண்ட கிழவர் மன்னராகத்தான் இருக்கவேண்டும். அவரிடம் என்னென்னவோ பேசிவிட்டேன்! அவர் எவ்வளவு அன்பாகப் பேசினார்! பையனையும் அவர்தான் அழைத்துச் சென்றிருக்கிறார்" என்று சொல்லி வியந்துகொண்டேயிருந்தாள் பொன்னி. "ஐயையோ! சேவகர்கள் கூப்பிட வந்ததும் நான் எவ்வளவு பயந்து போய்விட்டேன் தெரியுமா?" என்று கூறித் தன் அறியாமையை எண்ணிச் சிரித்துக்கொண்டான் குப்பன். ராஜனுடைய இளம் உள்ளம் இரவில் கண்ட தாத்தாவைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தது. அவர்தான் மன்னர் என்று பெற்றோர்கள் சொன்னதை அவனால் நம்பவே முடியவில்லை. தான் இரவில் கண்ட கிழவர்தான் மன்னர் என்றால் மன்னர் எவ்வளவு அன்பானவர் என்று எண்ணி மகிழ்ந்துகொண்டான். அவர் தன்னை ராஜாங்கப் பள்ளியில் சேர்த்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். அங்கு நன்றாகப் படிக்கவேண்டும். பெரியவனானதும் அரசாங்க உத்தியோகம் பார்க்கவேண்டும். நல்ல பஞ்சகல்யாணிக் குதிரையில் சவாரி செய்யவேண்டும். இவ்வாறெல்லாம் அவனுடைய பிஞ்சு மனம் கற்பனைக் கடலில் மூழ்கி இருந்தது. இரவு அவன் தூங்கும்பொழுது பஞ்சகல்யாணிக் குதிரை அடிக்கடி கனவில் வந்தது. அதிலேறிக்கொண்டு அவன் ஆகாசத்தில் பறந்துகொண்டிருந்தான்.

பொழுது விடிந்ததும் வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு பொன்னி தன் மகனை அலங்காரம் செய்தாள். குப்பன் அதிகாலையிலேயே தோட்டத்திற்குச் சென்றுவிட்டான். போன வேலை புண்ணிய வசத்தால் திரும்பக் கிடைத்திருக்கிறது. தன் கடமையை ஒழுங்

காகச் செய்யவேண்டு மல்லவா? அதனால் அதிகாலையி லேயே புறப்பட்டுப் போய்விட்டான்.

பொன்னி செல்லராஜாவை அழைத்துக் கொண்டு அரசாங்கப் பள்ளிக்குப் புறப்பட்டாள். அரண்மனையின் தலைவாசலிலிருந்து அரசாங்கப் பள்ளிக்கெனத் தனியான பாதை பிரிந்து சென்றது. பிரபுக்களினுடைய குழந்தை கள் எல்லோரும் வண்டிகளில் பள்ளிக்குச் சென்றுகொண் டிருந்தனர். வழக்கமாக வரும் அந்த வண்டிகளைக் கண் டதும் வாயில்காப்போன் தலைவணங்கி நின்று வழிவிட் டான். பொன்னி தன் மகனை அழைத்துக்கொண்டு அங்கு வந்ததும் காவல்காரன் அவர்களைத் தடுத்துநிறுத்தி னான். பொன்னிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. செல்லராஜாவுக்கு வெட்கமாக இருந்தது. "வழிவிடுங் கள் ஐயா! பள்ளிக்குப் படிக்க வந்திருக்கிறேன். அரசர் என்னை வரச் சொல்லி யிருக்கிறார்" என்று கூறினான்.

"இது பிரபுக்களினுடைய குழந்தைகள் படிக்கும் பள்ளி. உன்னை அனுமதிக்க மாட்டார்கள்" என்று கூறி ஏளனமாகச் சிரித்தான் காவல்காரன். இச்சமயம் அர சாங்கப் பணிப் பெண் ஒருத்தி அங்கு வந்து அவனை உள்ளே விடும்படி மன்னர் சொல்லி அனுப்பினார் என் றாள். காவல்காரனின் முகத்தில் பயமும் ஆச்சரியமும் தோன்றின. பொன்னியைத் திருப்பி அனுப்பிவிட்டு ராஜாவை உள்ளே செல்ல அனுமதித்தான்.

ராஜா உள்ளே சென்றான். அங்கு காணும் ஒவ் வொரு காட்சியும் ஆச்சர்யத்தையும், மகிழ்ச்சியையும் உண் டாக்கியது. பிரம்மாண்டமான அரசாங்கப் பள்ளியின் அழகிய கட்டடத்தைக் கண்டதும் பிரமித்துப் போய்விட் டான். அந்தக் கட்டடத்தோடு தான் இதுவரை படித்து வந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தை ஒப்பிட்டுக்கூடப் பார்க்க முடியவில்லை. அந்த அரசாங்கப் பள்ளியின் விசாலமான படிக்கட்டுகளில் காலெடுத்து வைத்து ஒவ் வொரு படியாக ஏறும்போது வாழ்க்கையில் ஒவ்வொரு படியாகக் கடந்து முன்னேறிக் கொண்டிருப்பது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. பள்ளியின் உட்புறத்தை

அடைந்ததும் விசாலமான கூடத்தில் மாணவர்களும், மாணவிகளும் கூடியிருப்பதைக் கண்டான். குழந்தைகள் எல்லோரும் ஆடம்பரமாக உடை அணிந்திருந்தார்கள். ஏராளமான நகை அணிந்திருந்தார்கள். அவர்கள் பூசி இருந்த வாசனைத் திரவியங்களின் மணம் கூடமெங்கும் வியாபித்துச் சூழ்ந்திருந்தது. அந்த மணத்திலே தான் மிதந்து கொண்டிருப்பதாகவும் எங்கோ ஆகாயத்தை நோக்கிப் பறந்து கொண்டிருப்பதாகவும் அவனுக்குத் தோன்றியது. குழந்தைகள் எல்லோரையும் உற்று உற்று ஆச்சர்யத்துடன் பார்த்தான். எல்லாம் முன்பின் கண்டறி யாத முகங்கள்.

அங்கிருந்த பிரபுக்களினுடைய குழந்தைகள் எல் லோரும் செல்லராஜாவை அலட்சியத்தோடு பார்த்தார் கள். யாரோ வழிதவறி உள்ளே வந்துவிட்டான் என்று நினைத்தார்கள். இவனைவிடச் சற்று வயதில் மூத்த ஒரு வன் ராஜாவின் அருகே வந்தான். ஏற இறங்கப் பார்த் தான். "யாரப்பா நீ! எங்கே வந்தாய்?" என்று கேட் டான்.

"பள்ளிக்குத்தான் வந்திருக்கிறேன்" என்று கூறி னான் ராஜா அச்சமயம் அவனுடைய குரல் என்ன காரணத்தாலோ கம்மிவிட்டது.

அருகிலிருந்த மற்றொருவன் கூறினான் "ஓஹோ! ஒரு வேளை நமக்கு வேலை செய்வதற்காக இவனை நியமித்திருக் கிறார்களோ என்னவோ? என்னடா அப்படித்தானே?"

"இல்லை! படிப்பதற்கு வந்திருக்கிறேன்" என்றான் சற்று தைரியமாக. அவனுடைய குரலில் ஏற்பட்டிருந்த கம்மல் இப்பொழுது தீர்ந்துவிட்டது.

ராஜனின் இந்தப் பதிலைக் கேட்டதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். சிரிப்பின் ஒலி பள்ளி மண் டபத்தையே கிடுகிடுக்கச் செய்தது. அப்போது ராஜாவின் இளம் உள்ளத்தில் பல்லாயிரக்கணக்கான ஊசிகள் கொண்டு குத்துவது போன்ற வேதனை ஏற்பட்டது. அதே சமயத்தில் அளவு கடந்த ஆத்திரமும் ஏற்பட்டது.

ஒருவன் "உன் பெயரென்ன?" என்று கேட்டான்.

"ராஜா!" என்று கம்பீரமாகப் பதிலளித்தான்.

"எந்தக் காட்டிற்கு?" என்று திரும்பக் கேட்டான் அந்தப் பையன்.

மறுபடியும் சிரிப்பொலி எழுந்தது. செல்லராஜாவுக்குக் கோபம் கட்டு மீறியது. வயதில் பெரியவனுக இருந்தாலும் அவனைத் தனது உறுதியான கரங்களால் அடித்து நொறுக்கித் தூள் தூள் ஆக்கலாம்போல் தோன்றியது. ஆனுல் அப்படிச் செய்வது சரியல்ல என்று அவனுடைய அறிவு போதித்தது. மௌனமாக கோபமும் கண்ணீரும் பொங்கும் கண்களுடன் அவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்ருன்.

அச்சமயம் மெய்க்காப்பாளர் படைத் தலைவனுகிய வீரசேனன் பின்தொடர இளவரசன் வீரநந்தனும், இளவரசி கலாநந்தினியும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும் செல்லராஜாவுக்கு உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது. தனக்குத் தெரிந்த இருவர் வந்து விட்டதால் ஏதோ துணை ஏற்பட்டுவிட்டதைப் போன்ற உணர்ச்சி தோன்றியது. அதோடுமட்டுமல்ல; தன்னை அன்புடன் ஆதரித்த மன்னரின் மக்களல்லவா அவர்கள்?

இளவரசி கலாநந்தினி செல்லராஜனைக் கண்டதும் அன்புடன் சிரித்தாள். அன்று தோட்டத்தில் நடந்த சம்பவம் அவளுக்கு ஞாபகம் வந்தது. அன்று தினம் தோட்டக்காரனும், பணிப் பெண்ணும் சேர்ந்து அவனை அடித்துவிட்டார்களல்லவா? அதற்காக அவள் மனம் அப்பொழுது பச்சாதாபப் பட்டுக் கொண்டிருந்தது.

"நீ இங்கு படிக்க வந்திருக்கிருயா?" என்று கேட்டாள். ராஜன் ஆம் என்று தலையாட்டினுன். அவன் மனம் இன்னும் வாய்திறந்து பேசுமளவுக்கு சமாதானம் அடையவில்லை.

ஆசிரியர்கள் வந்துசேர்ந்ததும் மாணவர்களும் மாணவிகளும் தத்தம் இடத்திற்குச் சென்று அமர்ந்தார்

கள். செல்லராஜாவுக்கு தான் எங்கே உட்காருவது என்று புரிய வில்லை. ஒரு ஓரமாக நின்றுகொண்டே யிருந்தான்.

தலைமை ஆசிரியர் விஜயவாணர் அவனை ஏறிட்டுப் பார்த்தார். மன்னரிடமிருந்து அவருக்கு ஏற்கெனவே செய்தி கிடைத்திருந்தது. வழக்கத்திற்கு விரோதமாக ஒரு ஏழைக் குழந்தை அரசாங்கப் பள்ளிக்கு வந்திருப்பதால் அவனுக்குத் தாழ்வு மனப்பான்மை தோன்ருதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அவன் விரைவில் முன்னுக்கு வரக்கூடிய கெட்டிக்காரன் என்றும் மன்னர் தெரிவித்திருந்தார். எனவே விஜயவாணர் அவனிடம் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டி யிருந்தது. விஜய வாணர் ராஜனை மேடைக்கு வரும்படி அழைத்தார். ராஜனுக்கு அது மிகவும் மகிழ்ச்சியை ஊட்டியது. என்ருலும் அவனுக்குச் சற்றுமுன் நேர்ந்த அவமானத்தை மறக்க முடியவில்லை. வருத்தம் தோய்ந்த முகத்துடன் மேடைக்குச் சென்ருன். விஜயவாணர் அவனை உற்றுப் பார்த்தார். பையனுடைய முகத்திலே நல்ல அறிவுச்சுடர் ஒளி வீசுவதையும், ஆனல் சற்று வருத்தம் தோய்ந்திருப்பதையும் கண்டுகொண்டார். அதைப் போக்குவதற்கு அவனுக்கு உற்சாக மூட்டவேண்டும். எனவே அவனை அருகில் நிறுத்திக்கொண்டு தன்னுடைய ஆசனத்தை விட்டு எழுந்து நின்று பின்வருமாறு கூறினர்.

"இளவரசரே! இளவரசியே! குழந்தைகளே! இன்று தினம் உங்களுக்கு ஒரு புதிய நண்பனை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இதோ இங்கு என் அருகில் நின்றுகொண்டிருக்கும் செல்லராஜன் நம் பள்ளியிலே ஒரு மாணவனுகிருன். அவனுடைய கெட்டிக்காரத் தனத்தைக் கண்டு மன்னர் அவனுக்கு இங்கு படிக்கும் வாய்ப்பை அளித்திருக்கிருர். அவனுடைய ஏழ்மைமிக்க வெளித் தோற்றத்தைக் கண்டு நீங்கள் அவனை அலட்சியப் படுத்தக் கூடாது. இன்றிலிருந்து அவன் உங்கள் கூட்டத்தில் ஒருவன். மன்னரின் பிரத்தியேக சலுகையின்பேரில் அவன் இங்கு கல்வி கற்க வந்திருப்பதால் அவனை நாம் மிகவும் அன்புடனும், மரியாதையுடனும் நடத்தவேண்டும்.

செல்லராஜன் நன்கு படித்து, சகல வித்தைகளிலும் தேர்ச்சி பெற்று அரசாங்கத்திற்குச் சிறந்த பணிபுரிய வேண்டும் என்று அவனை வாழ்த்துகிறேன்.''

ஆசிரியர் பேசி முடிந்ததும் மாணவர்களும், மாணவி களும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். சற்று முன்பு ஏளனச் சிரிப்பொலியால் புண்பட்டுப் போயிருந்த ராஜ னுடைய உள்ளம் இந்த ஆரவாரத்தைக் கேட்டதும் ஆறுதல் அடைந்தது. மகிழ்ச்சியுடன் புன்னகை புரிந்தான்.

பின்னர் விஜயவாணர் அவனை இளவரசருக்கும், மந்திரி நீதிவாணரின் மகன் இருந்த ஆசனத்திற்கும் அரு கில் உள்ள ஒரு ஆசனத்தைச் சுட்டிக் காட்டி அங்கு செல்லும்படி கூறினர். அதற்கப்புறம் இறைவணக்கத் துடன் பள்ளியின் அன்றைய வேலை துவங்கியது.

## 13

மூத்த ராணி வாசவதத்தை சிறைக்குச் சென்றதிலி ருந்து அரண்மனையில் பலவித மாறுதல்கள் நிகழ்ந்திருந் தன. அதே மாதிரி மன்னரின் மனோ நிலையிலும் பலத்த மாறுதல் ஏற்பட்டிருந்தது. வாசவதத்தையின் குழந்தை தன் தாயின் மாளிகையிலேயே வைத்து வளர்க்கப் பட்டாள். அரசருடைய ராஜ்யபார அலுவல் நேரங்கள் போக மற்ற நேரமெல்லாம் இளவரசி வளர்க்கப்பட்டுவரும் வாசவதத்தையின் மாளிகையிலேயே கழிந்தது. தன் மகளை அழைத்துக்கொண்டு வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரு முறை சிறைச்சாலைக்குச் சென்று மூத்த ராணியைப் பார்த்து வருவார். இளைய ராணி மோகனதத்தையிடம் முன்னைப் போலப் பிரியம் காட்டுவதில்லை. அவளுடைய வஞ்சக உள்ளம் வெட்ட வெளிச்சமாகியதிலிருந்து அவள் பால் இருந்த அன்பு குறைந்துவிட்டது. இளவரசனைப் பார்த்து அவனுடன் இருந்து பொழுது போக்குவதற் கென்று மன்னர் சிலசமயங்களில் இளையராணியின் மாளிகைக்குச் சென்று வருவார்.

ஒரு நாள் இளையராணியின் மாளிகைக்கு மன்னர் சென்றிருந்தபோது மோகனதத்தை மன்னரிடம் பின் வருமாறு கூறினாள். "அரசே! நீங்கள் மறுபடியும் தோட்டக்காரனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டதாகவும், அவனுடைய மகனை அரசாங்கப் பள்ளியில் பயிற்சி பெறுவதற்கு அனுமதி கொடுத்திருப்பதாகவும் கேள்விப்பட்டேனே அது உண்மைதானா?"

"ஆம்!" என்று பதிலுரைத்தார் மன்னர்.

இளைய ராணிக்கு மன்னரின் பதில் ஓரளவு ஆத்திரமூட்டியது. ஏற்கெனவே மன்னரின் அரண்மனையில் இளவரசி என்ற ஸ்தானத்தில் முன் பின் தெரியாத யாரோ ஒரு ஏழைப்பெண் வளர்ந்துவருவது அவளுக்கு மனதை உறுத்திக்கொண்டிருந்தது. ஆனால் திருடனுக்குத் தேள் கொட்டியது போன்று வெளிக்குக் காட்டிக் கொள்ள முடியாமல் மௌனமாக மனம் புழுங்கிக்கொண்டிருந்தாள்.. இப்பொழுது தோட்டக்காரன் மகன்வேறு அரண்மனையில் அரசாங்கப் பள்ளியில் தன் மகனுக்குச் சமமாகப் பழகிப் படித்துவருவது அவளுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

"ஏன் இந்த மாதிரி வழக்கமில்லாத வழக்கம் செய்கிறீர்கள்? இது நமது கௌரவத்திற்கு இழுக்கல்லவா?" என்றாள் மோகனதத்தை.

மன்னருக்கு மோகனதத்தையின் பேச்சு கோபத்தை உண்டாக்கியது. ஏனெனில் அன்று கண்டதிலிருந்தே தோட்டக்காரனின் மகன்மீது ஒருவித நல்ல எண்ணமும் அன்பும் ஏற்பட்டிருந்தது. அது நாள்தோறும் வளர்ந்து கொண்டே வந்தது. இளவரசி கலாநந்தினி தன் தந்தையிடம் அடிக்கடி தோட்டக்காரனின் மகனுடைய கெட்டிக்காரத்தனத்தையும், புத்திசாலித்தனத்தையும் புகழ்ந்து வந்தாள். அதனால் பையன் மிகவும் முன்னுக்கு வருவான் என்ற எண்ணம் வலுவடைந்து வந்தது. அது தவிர அரசாங்கப் பள்ளியின் தலைவராகிய விஜயவாணரும் ராஜனைப் பற்றி அடிக்கடி புகழ்ந்து கூறிவந்திருக்கிறார். ஒரு ஏழைச் சிறுவனை முன்னுக்குக் கொண்டு

வந்து நல்ல வீரனுக்கினுல் தனக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமானவனுக இருப்பான் என்று நம்பினுர். எனவே இப்பொழுது மோகனதத்தை அவனை அரசாங்கப் பள்ளி யிலிருந்து விலக்கிவிடவேண்டு மென்ற விருப்பத்தைத் தெரிவித்தது சற்று ஆத்திரமூட்டியது.

மோகனதத்தை மீண்டும் கூறினுள். "மற்ற பிரபுக்க ளுடைய மக்களின் மத்தியில் தோட்டக்காரனின் மகன் தன்னுடைய ஏழ்மைக்கோலத்தில் இருப்பது அவனுக்குக் கேவலமாகத் தோன்றுமலிருக்கலாம். ஆனுல் அது அர சாங்கப் பள்ளியின் மதிப்பைத்தான் கேவலப்படுத்து கிறது" என்றுள்.

மன்னர் சிறிது நேரம் வரை ஒன்றும் பேசவில்லை. ஏதோ சிந்தனையிலிருந்தார். பின்னர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். சற்று சிரித்துக்கொண்டே "மோகனதத்தை! நீ கூறுவது கவனிக்கவேண்டிய விஷயந்தான். சரி பார்ப் போம்" என்று சொல்லிவிட்டுச் சென்றுர். மோகன தத்தை நிம்மதியாக மூச்சுவிட்டாள். அவளுடைய முகத் திலே வெற்றிப் புன்னகை தவழ்ந்தது.

அன்று மாலையில் பள்ளி முடிந்து எல்லோரும் வீட் டிற்குச் செல்லும் நேரத்தில் விஜயவாணர் ராஜனை அழைத்தார். மன்னரை வந்து பார்க்கும்படி உத்தரவு வந்திருப்பதாகவும், அவரைப் பார்த்துவிட்டு வீட்டிற்குப் போகும்படியும் கூறினுர். ராஜன் அப்படியே செய்வதாகக் கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் மன்னரின் மாளிகையை நோக்கி நடந்தான்.

மாளிகையின் வாசலை அடைந்ததும் வாயிற் காப்போன் அவனை உள்ளே செல்லும்படி அனுமதி கொடுத்தான். ஏனென்றுல் இப்பொழுது ராஜன் அரண் மனையிலுள்ள எல்லோராலும் பேசிக்கொள்ளப்படும் பிரபல புள்ளியாகிவிட்டான். ராஜ வீதியிலுள்ள பிரபுக் களினுடைய குடும்பங்களிலெல்லாம் ராஜனுடைய பெயர் அடிபட்டுக்கொண்டிருந்தது. அவனுடைய கெட்டிக்காரத் தனத்தையும், அறிவுத் திறமையையும்பற்றிப் பேசிக் கொண்டார்கள். குழந்தைகள் ஏதாவது தவறு செய்து

விட்டால் "நீயும் இருக்கிறுயே. அந்தத் தோட்டக்காரன் மகன் ராஜனைப் பார்த்தாயா? எவ்வளவு கெட்டிக்காரனுக இருக்கிறுன்!" என்று இடித்துக் கூறி ராஜனை உபமானப் பொருளாக ஆக்கிவிட்டார்கள். நகரத்திலுள்ள பெரும் பாலோர் ராஜனை நேரடியாகப் பார்த்ததில்லை. என்றுலும் பெயரைக் கேள்விப்பட ஆரம்பித்தார்கள். இன்னும் சிலர் வேறு விதமாகவும், ரகசியமாகக் கதை கட்ட ஆரம்பித்தார்கள். "அந்தத் தோட்டக்காரன் மனைவி மிகவும் அழகானவளாம். மன்னருக்கும் அவளுக்கும் வெகு நாளாகத் தொடர்பாம். அவன் அவருக்குப் பிறந்தவன் தாஞம். காரணமில்லாமலா மன்னர் கருணை காட்டு கிறுர்?" என்று சில பொறுமைக்காரர்கள் குசுகுசுத்தனர். இவ்வளவு பிரபலமாகிவிட்ட ராஜனை அரண்மனைச் சேவகனுக்குத் தெரியாமலிருக்க நியாயமுண்டா?

ராஜன் உள்ளே சென்று மன்னரை வணங்கிவிட்டு மரியாதையாக நின்றுன். மன்னர் அவனைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தார். அவனுடைய அழகிய உருவமும், அறிவுச் சுடர்விடும் முகமும், பராக்கிரமம் மிக்க உடற் கட்டும் அவருக்கு மகிழ்ச்சியையும், பற்றுதலையும் உண் டாக்கின.

"செல்லராஜா! அரசாங்கப் பள்ளியில் பயிலுவது உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆம் அரசே! தங்களுடைய கருணையினுல் எனக்கு இந்தப் பாக்கியம் கிட்டியிருக்கிறது. தங்களுடைய அன்பை என்றும் மறக்கமாட்டேன்" என்றுன்.

"மற்ற பிரபுக்களினுடைய குழந்தைகளின் ஆடம்பர உடைகளைக் கண்டு நீ பொறுமைப்படுவதுண்டா?"

"இல்லை! நானேன் பொறுமைப்படவேண்டும். அவர் களுடன் பழகும் பாக்கியம் கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சி யடைகிறேன்."

"அவர்கள் உன்னைப் பார்த்து ஏளனம் செய்வ துண்டா?"

"இருந்திருக்கலாம். நானேன் பொருட்படுத்த வேண்டும்? மன்னரின் கருணை எனக்கிருக்கும் பொழுது அவர்களுடைய ஏளனம் என்னை என்ன செய்யமுடியும்?"

மன்னர் அவனுடைய பதிலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். "நீ இனிமேல் அரசாங்கப் பள்ளிக்கு வரும்பொழுது அவர்களைப் போலவே ஆடையணிந்து வரவேண்டும். தினமும் அரண்மனையிலிருந்து உன் வீட்டிற்கு வண்டி வரும். அதில்தான் நீ பள்ளிக்கு வந்து செல்லவேண்டும். சம்மதம் தானே?" என்றார்.

அன்று ராஜன் வீட்டிற்குத் திரும்பும்போது அவனுடைய உள்ளம் அளவற்ற ஆனந்தம் அடைந்திருந்தது. அவனுடைய எதிர்காலக் கனவுகள் மேலும் வலுப் பெற்றன.

மறு நாளிலிருந்து குப்பனின் குடிசை வீட்டிற்கு அரண்மனை வண்டிகளிலொன்று சென்றுவர ஆரம்பித்தது. வீதியிலுள்ள எல்லோரும் ஆச்சர்யப்பட்டனர். பொன்னியின் மகனுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து பேச ஆரம்பித்தார்கள். பொறுமைக்காரர்கள் தங்கள் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தனர். தோட்டக்காரன் மகனுக்குக் கிடைத்த புதிய சலுகையைக் கண்டு ராணி மோகனதத்தை வயிற்றெரிச்சலை அதிகமாக்கிக் கொண்டாள். முன்பெல்லாம் ஏளனமாகப் பேசிய பிரபுக்களுடைய குழந்தைகள் வாயடைத்து மௌனமாகி மரியாதை காட்டத் தொடங்கினர். ராஜன் இவைகளால் இறுமாப்பு அடையவில்லை. அதற்குப் பதிலாக கல்வியில் அதிகக் கவனம் செலுத்தினான். எல்லாப் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கினான். பள்ளிக்குச் செல்லும் பொழுது மட்டும் மன்னர் அளித்த ஆடம்பர உடைகளை அணிந்து சென்றான். மற்ற நேரங்களில் தோட்டக்காரன் மகனுகவே காட்சியளித்தான். ஓய்வு நேரங்களில் தன் தந்தையுடன் அவனும் அரண்மனைத் தோட்டத்திற்குச் செல்வான். தோட்ட வேலைகளைச் செய்து உடலுழைப்பு மூலம் பலமும் அடைந்து வந்தான்.

ஆண்டுகள் தோறும் அவனுடைய அறிவும் தேர்ச்சியும் அதிகரித்து வந்தது. அத்துடன் புகழும் அதிகரித்

துக் கொண்டே வந்தது. பொன்னியும், குப்பனும் தன் மகன்மீது பரிபூரண அன்பைச் சொரிந்தார்கள்.

## 14

சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின் ஒரு நாள். அரண்மனைத் தோட்டத்தில் குப்பனும், வேறு இருவரும் ஒருபுறமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். குப்பனிடம் முன்பிருந்த வாலிபத்தெம்பு இப்பொழுது தென்படவில்லை. நடுவயதைக் கடந்திருந்தான். இங்கொன்றும் அங்கொன்றுமாக நரை தோன்ற ஆரம்பித்து விட்டது. சற்றுத் தளர்ந்திருந்தான்.

மாலை நேரமானதால் செல்லராஜா தோட்டத்திற்கு வந்திருந்தான். தகப்பனுக்கு உதவியாக வேலை செய்யும் வழக்கத்தை அவன் இன்னும் கைவிடவில்லை. அரசாங்கப் பள்ளியில் முக்கிய மாணவனாக, கல்வி கேள்விகளில் சிறந்து, போர்ப் பயிற்சிகளில் தீரமும் திறமையும் பெற்றிருந்துங்கூட தன்னுடைய எளிய வாழ்க்கையை மறந்து விடவில்லை.

தோட்டத்தில் உலவுவதற்காக இளவரசி கலாநந்தினி இரண்டு பணிப்பெண்களுடன் அங்கு வந்திருந்தாள். அவள் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த செல்லராஜாவைப் பார்த்தாள். முன்புபோல விளையாட்டுப் பெண்ணல்ல. இளமையின் வனப்பால் பூரிப்புடன் திகழும் இள நங்கை. எனவே முன்புபோல செல்லராஜாவுடன் அவளால் இப்பொழுது பேசமுடியவில்லை. என்றாலும் செல்லராஜாவிடம் அவளுக்கு ஒருவித அன்பும் பற்றுதலும் இருந்தது. ஆனால் இப்பொழுது அதை வெளிக்குக் காட்டிக்கொள்ள முடியுமா?

தோட்டத்தில் உலவி வரும்பொழுது முன்னர் செல்லராஜாவுக்கும், இளவரசர் வீரநந்தனுக்கும் சண்டை நடந்த அந்த இடத்திற்கு வந்துசேர்ந்தாள். சற்று நின்று பார்த்தாள். அந்த இடத்தில் இன்னும் ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கிக்கொண் டிருந்தன. அவற்றைக் கண்

டதும் அவளுக்குப் பழைய ஞாபகங்களெல்லாம் வந்தன. தன் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். அதைப் பிரதிபலிப்பது போன்று செடியிலுள்ள ரோஜா மலர்களும் தங்கள் செவ்விதழ்களை விரித்துச் சிரித்துக்கொண்டிருந்தன. அதைக் கண்ட இளவரசி ரோஜா மலர்களைப் பார்த்து "உங்களுக்கும் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்து சிரிக்கிறீர்களா?" என்று கேட்க நினைத்தாள். ஆனால் அதே கேள்வியை வேறு யாரோ கேட்பது செவியில் விழுந்தது. திரும்பிப் பார்த்தாள். அங்கே செல்லராஜா நின்றுகொண் டிருந்தான். தன் அருகில் பணிப் பெண்களைக் காணேம். அவர்கள் சற்று தூரத்தில் ஒதுங்கி நின்று தங்களுக்குள் ஏதோ ஆழ்ந்த சர்ச்சை செய்துகொண் டிருந்தார்கள்.

"இளவரசியாரே! தங்களுக்குப் பழைய சம்பவங்கள் நினைவிற்கு வருகிறதோ?" என்று பணிவுடன் புன்னகை செய்துகொண்டே கேட்டான்.

கலாநந்தினி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முன்பைவிட எவ்வளவோ மாறியிருந்தான். இளமையின் மெருகேறிய உடற்கட்டு வனப்புடன் திகழ்ந்தது. அரசாங்கப் பள்ளியில் ஆடம்பர உடைகளுடன் பிரபுக்கள் குடும்பக் குழந்தைகளைப்போல கம்பீரமாகத் திகழும் அவன் இப்பொழுது ஒரு சாதாரண தோட்டக்காரனுகக் காட்சியளித்துக்கொண் டிருந்தான். எவ்வளவு மாறுதல்! எவ்வளவு எளிமை!

இளவரசி செடியிலுள்ள மலர்களைச் சுட்டிக் காட்டிக்கொண்டு "இந்த மலர்கள்......"

"உங்களுக்குத்தான் சொந்தம். முன்புமாதிரி எனக்குச் சொந்தமென்று கூறமாட்டேன். இப்பொழுது மலர்கள் மட்டுமல்ல நானும் என் பெற்றேர்களும்கூட மன்னருக்குச் சொந்தமான பொருள்கள் என்பது எனக்குத் தெரியும்" என்று கூறினுன்.

"ராஜா! இந்த ஆண்டோடு பள்ளிப் பயிற்சி முடிந்துவிடுமல்லவா? பயிற்சி முடிந்ததும் என்ன வேலை செய்யப் போகிறீர்? தோட்ட வேலைதான் செய்யப் போகிறீரா?"

"மன்னர் எனக்கிடும் கட்டளை எதுவாகயிருந்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன். போர்க்களத்திற்குச் சென்று உயிரைவிடச் சொன்னால் அப்படியே செய்வேன். தோட்டக்காரனாக வேலை செய்யச் சொன்னால் இந்தத் தோட்டத்திலேயே வேலை செய்து அழகழகான மலர்களை உற்பத்தி செய்து அந்தப்புரத்திற்கு அனுப்புவேன். மன்னர் இடும் வேலை எதுவாக இருந்தாலும் அதுவே என்னுடைய கடமை."

"உம்முடைய உடல் பொருள் ஆவி எல்லாம் மன்னருடைய உடைமைதானே! மன்னருடைய உடைமையில் எனக்கும் பாத்தியதை உண்டல்லவா?" என்று கேட்டு விட்டாள்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் இளவரசியின் உள்ளம் சற்று பதைத்தது. எதையோ பேச நினைத்து எதையோ பேசிவிட்டதை உணர்ந்தாள். அவளுடைய உடலெல்லாம் நடுக்கமுற்றது தான் அவ்விதம் பேசியது தவறு என்று நினைத்துக்கொண்டாள். இவ்வளவு துடுக்குத்தனமாகப் பேசியதற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

இளவரசியின் அந்தக் கேள்வி ராஜனின் உள்ளத்திலும் ஒரு புரட்சியை உண்டுபண்ணியது. பாம்பை மிதித்தவன்போல் விதிர்த்துப் போய்விட்டான். அவன் கையிலிருந்த களைவெட்டும் சிறிய மண்வெட்டி நழுவிக் கீழே விழுந்தது. பதமாக யிருந்ததால் அவன் காலில் விழுந்து வெட்டிப் பலத்த காயம் ஏற்படுத்திவிட்டது. அதிலிருந்து ரத்தம் பீறிட்டது. அதைக் கண்ட இளவரசி "ஐயோ" என்று கூக்குரலிட்டாள். உடனே சற்று தூரத்தில் பேசிக் கொண்டிருந்த பணிப்பெண்கள் ஓடி வந்தனர். "என்ன நடந்தது?" என்று கேட்டனர் பணிப்பெண்கள்.

செல்லராஜன் கீழே உட்கார்ந்து காயம்பட்ட இடத்தை ரத்தம் ஒழுகாதபடி அழுத்திப் பிடித்துக் கொண்டு "ஒன்றுமில்லை. மண் வெட்டி காலில் விழுந்து விட்டது. காயம் பட்டுவிட்டது. அவ்வளவுதான்" என்று சமாதானம் கூறி அவர்களை அனுப்பிவைத்தான்.

பணிப் பெண்கள் இளவரசியைக் கூட்டிக் கொண்டு தோட்டத்தில் வேறொருபுறத்திற்கு உலாவச் சென்றார்கள். ஆனால் இளவரசியின் உள்ளம் ஒருநிலையில் இல்லை. மிகவும் சோர்வு தட்டியிருந்தது. தான் ராஜனின் உள்ளத்தில் ஏற்படுத்திய காயத்தின் பிரதிபலிப்புதான் அவன் காலிலே தோன்றியது என்று நினைத்துக்கொண்டாள். எனவே அவளுடைய உள்ளம் படாதபாடு பட்டது. உடம்புக்குச் சரியில்லை என்று சொல்லி, பணிப் பெண்களை அழைத்துக்கொண்டு தன் மாளிகைக்குச் சென்று விட்டாள்.

இரவு வெகுநேரம் வரையிலும் செல்லராஜா படுக்கையில் தூக்கமின்றி எதை எதையோ நினைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டான். இளவரசியின் கேள்விக்கு அர்த்தமென்ன? அவள் சிறு குழந்தையாக இருந்தது முதற்கொண்டே தன்னிடம் அன்பு காட்டி வந்திருக்கிறாள் என்பதை அவன் அறிவான். ஆனால் அது இவ்விதம் மாற்றுருவம் கொள்ளும் என்று அவன் நினைத்தது கிடையாது. மன்னர் தன்னிடம் காட்டும் கருணையையே, மகளும் தன்னிடம் காட்டி வருவதாக நினைத்திருந்தான். மன்னனிடம் எவ்வளவு மரியாதையும், பேரன்பும் கொண்டிருந்தானோ அதே போன்று மன்னரின் மகளிடமும் கொண்டிருந்தான். இதில் எவ்வித மாசும் மறுவும் கிடையாது. ஆனால் இன்று இளவரசி கேட்ட கேள்வி? ஆம்! அது அவனைத் திடுக்கிடச் செய்தது. தான் அந்தப் பாக்கியத்தை அடைய முடியாது என்று எண்ணினான். ஏழைத் தோட்டக்காரன் எங்கே? ஏற்றமிக்க இளவரசி எங்கே? அது ஒருக்காலும் நிறைவேறாது. எட்டாத பேராசைக் கோட்டைகளைக் கட்டி வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளக்கூடாது. சேற்றிலே கிடந்த பன்றிக் குட்டியை சிங்கமாக மாற்றிய மன்னருக்குக் கடமை தவறாமல் பணிபுரிய வேண்டும். அது ஒன்றே தன்னுடைய கடமை என்று உறுதிப் படுத்திக்கொண்டான். ஆனாலும் அன்பும், அழகும் ததும்பும் காலாநந்தினியின் முகம் அவனுடைய அகக்கண்ணிலே மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருந்தது. நிம்மதியின்றி பெருமூச்சு விட்டுக்கொண்டே புரண்டு படுத்தான்.

அமைதியின்றிப் புரண்டு கொண்டிருக்கும் மகனைக் கண்ட பொன்னி "காயம் பட்ட இடத்தில் வலிக்கிறதாப்பா?" என்று அன்புடன் கேட்டாள். அவளுக்கென்ன தெரியும்? காலில் பட்ட காயத்தைப் பற்றி அவள் விசாரித்தாள். ஆனால் உள்ளத்தில் பட்ட காயம்?

## 15

அன்று அரசாங்கப் பள்ளியின் ஆண்டுவிழா. இதற்கு முன்னர் நடந்த ஆண்டுவிழாக்களையெல்லாம்விட இது மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. ஏனெனில் இந்த ஆண்டு விழாவில் பள்ளியிலிருந்து பல பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறுகிறார்கள். முக்கியமாக இளவரசருக்கும் இளவரசிக்கும் இந்த ஆண்டோடு பள்ளிப் படிப்பு முடிவு பெறுகிறது. இனிமேல் இதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இவ்விதம் படிப்பை முடித்தவர்கள் வெளியேறத்தான் செய்வார்கள். என்றாலும் இந்த ஆண்டுபோல் மற்ற ஆண்டுகளில் விழா சிறப்பாக நடைபெற முடியாது. இவ்வாண்டோடு தோட்டக்காரன் மகன் செல்லராஜாவின் பள்ளிப் பயிற்சியும் முடிந்தது. முதல் முதலாக அரசாங்கப் பள்ளியில் தேறிய மாணவர்கள் தங்கள் சக்தியையும், திறமையையும், பொதுமக்களுக்குக் காட்டிப் புகழையும், அரசாங்கப் பரிசுகளையும் பெற்று, பின்னர் பொது வாழ்வில் ஈடுபவார்கள்.

அரசாங்கப் பள்ளியை அடுத்தாற் போலிருந்த திறந்த வெளியில் அரங்கம் அமைத்திருந்தார்கள். மன்னர் குடும்பம் அமருவதற்கென்று ஒரு உயர்ந்த மேடையில் ஆடம்பரமான ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அதை அடுத்தாற்போல் சற்றுத் தாழ்வாக மந்திரிகளுக்கும் மற்ற அரசாங்க நிர்வாகிகளுக்கும் ஆசனங்கள் போடப்பட்டிருந்தன அதை ஒட்டினாற்போல் ராஜ வீதியில் வசிக்கும் பிரபுக்கள் குடும்பத்தினர் உட்கார்ந்து பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இவற்றைத் தவிர இந்த மேடைக்கு இரண்டு பாரிசங்களிலும் பிறை வடிவமாக,

பொது ஜனங்கள் அமர்ந்து பார்ப்பதற்கென்று இடம் தயாரித்து ஒதுக்கி யிருந்தனர். மன்னர் குடும்பத்தினரும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அமர்ந்து பார்க்கும் இடத்திற்கு மேலே அழகிய கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் கொடிகளும், தோரணங்களும் அழகு படுத்திக் கொண்டிருந்தன. பார்வையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அரைவட்ட ஆசனங்களுக்கு இடையே உள்ள திறந்தவெளியில் போர்ப்பயிற்சி, பலப் பரீட்சை முதலியன நடைபெறும். அந்தத் திறந்தவெளி மைதானத்திற்கும் இப்பால் பார்வையாளர்களுக்கு எதிரே கடைசி விளிம்பில் இசை நாட்டியம் போன்ற லலித கலைகளுக்கென ஓர் அரங்கமும் அமைக்கப்பட்டிருந்தது.

• பிற்பகல் ஆகத் தொடங்கியதுமே நகர மக்கள் வந்து ஆசனங்களில் இடம் பிடிக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவரும் விதவிதமான ஆடைகள் அணிந்து மலர்கள் சூடி, வாசம் பூசி மகிழ்வுடன் வந்திருந்தனர். சற்று நேரம் சென்றதும் பிரபுக்கள் குடும்பத்தினரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வந்து அமர்ந்தனர். கடைசியில் மன்னர் குடும்பத்தினர் வந்து சேர்ந்தனர். மன்னர் வந்ததும் எல்லோரும் எழுந்து நின்று வாழ்த்துக்கூறி ஆரவாரம் செய்தனர். மன்னர் கைகூப்பி வணங்கித் தன் ஆசனத்தில் அமர்ந்தார். இதுவரையிலும் சளசளவென்று பேசிக் கொண்டிருந்த மக்கள் தத்தம் ஆசனத்தில் அமைதியுடன் அமர்ந்திருந்தனர். எங்கும் நிசப்தம் நிலவியது. மன்னருக்குப் போடப் பட்டிருந்த ஆசனத்திற்கு அருகில் இளைய ராணி மோகனதத்தை அமர்ந்திருந்தாள். மன்னருக்கு மற்றொரு புறத்தில் மூத்தராணிக்குரிய ஆசனம் காலியாக இருந்தது. அதற்கு அடுத்தாற்போலிருந்த ஆசனம் ஒன்றில் இளவரசி கலாநந்தினி அமர்ந்திருந்தாள். மோகனதத்தையின் அருகில் மெய்க்காப்பாளர் படைத்தலைவன் வீரசேனன் நின்றுகொண்டிருந்தான். மன்னருக்கும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், பிரபுக்கள் குடும்பத்தினருக்கும் அமைத்திருந்த ஆசனங்களுக்கு நேராக மைதானத்தை ஒட்டிச் சில ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றில் அரசாங்கப் பள்ளியின் தலைவர் விஜய

வாணரும் மற்ற ஆசிரியர்களும், போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளும் மாணவ வீரர்களும் அமர்ந்திருந்தனர்.

முதலில் வீரமுரசும், கொம்பும் முழங்கின. அவற்றின் ஓசை அடங்கியதும் மன்னர் தன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கம்பீரமான குரலில் "அன்புமிக்க பொது மக்களே! பிரபுக்களே! அரசியல் அறிஞர்களே! இவ்வாண்டில் பரிசளிப்பு விழா பொன்னாட்டின் சரித்திரத்திலே ஒரு முக்கிய கட்டம். வெகு நாட்களுக்குப் பிறகு அரசாங்கப் பள்ளி தொடங்கியதும் அதில் மாணவர்களுக்குக் கல்வி போதனைகளுடன், அரசியலையும், போர்ப் பயிற்சிகளையும் போதித்து வந்தோம். சுமார் பத்து ஆண்டுகளாக அவர்கள் இந்தக் குருகுல வாசத்திலே பயிற்சி பெற்றார்கள். இப்பொழுது அவர்களுடைய படிப்பு முடிந்துவிட்டது என்று கூறமுடியாது. ஆனால் பள்ளிப்படிப்பு முடிந்துவிட்டது. இனிமேல் வாழ்க்கையில் படிக்கவேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் இந்தப் பள்ளிப்படிப்பு ஒரு அஸ்திவாரமாக அமையும் என்று நம்புகிறேன். இன்று தினம் அரசாங்கப் பள்ளியின் மாணவர்கள் நாட்டு மக்களின் கண் முன்னே போட்டி இட்டுத் தங்கள் ஆற்றலைக் காட்டப்போகிறார்கள். அவர்களிலே சிலர் வெற்றியடையலாம். சிலர் தோல்வி அடையலாம். ஆனால் இந்த வெற்றி தோல்விகள் நிரந்தரமானவை அல்ல. இதில் அடையும் வெற்றியைக் கண்டு இறுமாப்பு அடைவதோ, தோல்வியைக் கண்டு மனம் தளர்வதோ கூடாது. இங்கு நடக்கும் போட்டியை ஒரு விளையாட்டென்றே கருத வேண்டும். அப்பொழுதுதான் மன மாசுக்கு வழி இருக்காது. இப்பொழுது போட்டிகளைத் தொடங்கி வைக்கும்படி அரசாங்கப் பள்ளியின் தலைவர், முன்னாள் படைத் தலைவர் விஜயவாணர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று கூறிமுடித்தார். மக்களின் ஆரவாரமும் கைதட்டுதலும் வானைப் பிளந்தன.

முதலில் அம்பு எய்யும் போட்டி நடந்தது. வெகு தொலைவில் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் ஒரு கோடு இடப்பட்டிருந்தது. அதை நோக்கி மாணவர்கள்

எய்யும் அம்பில் அவரவர்களுக்குரிய அடையாளம் இருந்தது. அதைக் கொண்டு யார் அந்தக் கோட்டிற்கும் அப்பால் வெகு தூரத்திற்கு அம்பெய்கிறார்களோ அவர்கள் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். இந்தப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து அங்கு வைத்திருந்த வில்லை எடுத்து வளைத்து அம்பை எய்தார்கள். முதலில் இளவரசர் வீரநந்தர் எய்தார். பின்னர் விஜயவாணரின் புதல்வர். அதற்கப்புறம் பிரதம மந்திரி நீதிவாணரின் மகனும், மற்ற மந்திரிகளின் மக்களும் எய்தனர். அதற்குப் பின் பிரபுக்கள் குடும்பத்தினரின் மக்கள் எய்தனர். கடைசியில் தோட்டக்காரன் மகன் செல்லராஜனும் எய்தான்.

செல்லராஜன் வந்து அம்பெய்யும் பொழுது கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. கூட்டத்திலுள்ளவர்கள் அவனைச் சுட்டிக்காட்டி ஏதோ முணுமுணுத்துக் கொண்டார்கள். சிலர் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கியது. அரசாங்கத்தினருக்கும், பிரபுக்களினுடைய மக்களுக்கும் என்று அமைக்கப்பட்ட பள்ளியில் பயிற்சி பெற்ற ஒரே ஒரு சாதாரணப் பிரஜை அல்லவா அவன்? அதனால் பொதுமக்களில் பலருக்கு அவன் கலந்து கொண்டது மகிழ்ச்சி அளித்தது. வேறு சில பொறாமைக்காரர்கள் நாகப்பாம்பைப் போன்று பெருமூச்சு விட்டார்கள். பார்வையாளரின் மத்தியில் அமர்ந்திருந்த பொன்னிக்கும் குப்பனுக்கும் தலைகால் புரியாத சந்தோஷம். ஆனாலும் குப்பனுடைய உள்ளத்தின் ஒரு மூலையில் "இவன் மட்டும் என்ன சாதாரணப் பிரஜையா? பெரிய இடத்துப் பையனல்லவா? எப்படியோ இனம் இனத்தோடு சேர்ந்துவிட்டது. ஆனால் எப்படி யிருந்தாலும் அவனால் கிடைக்கும் நன்மைகளை நாம்தானே அனுபவிக்கப் போகிறோம்' என்ற எண்ணமும் தலை தூக்கி நின்றது.

விஜயவாணரும், வேறுசில மத்தியஸ்தர்களும் அம்புகளைச் சென்று பொறுக்கினர். நல்ல வேளையாக எந்த அம்புமே எல்லைக் கோட்டை அடையாமல் நின்றுவிடவில்லை. எல்லா அம்புகளையும் பொறுக்கி எடுத்தபின்னர் விஜயவாணர் முடிவை வெளியிட்டார். முதலாவதாக

செல்லராஜனும், இரண்டாவதாக இளவரசரும் வெற்றி பெற்றிருப்பதாக அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்டதும் மக்கள் ஆரவாரித்தனர். மன்னர் மகிழ்ச்சி யடைந்தார். தான் தேர்ந்தெடுத்த பையன் உண்மையிலேயே சிறந்தவன் என்பது வெளியாகிவிட்டதல்லவா? அதிலே ஒரு பெருமை. ராணி மோகனதத்தையின் முகத்தில் ஈ யாடவில்லை. அவள் அருகில் நின்ற வீரசேனனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. மன்னரின் கடைக்கண் பார்வை மோகன தத்தையின்மீது விழுந்தது. அவர் முகத்திலே புன்னகை அரும்பியது. செல்லராஜனின் வெற்றி இளவரசியின் உள்ளத்திலே அளவுகடந்த மகிழ்ச்சியை ஊட்டியது. ஆனால் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் திறமையாக மறைத்துக்கொண்டாள். கூட்டத்தில் அமர்ந்திருந்த பொன்னிக்குப் பெருமை தாங்க முடியவில்லை. மூச்சு விட முடியாமல் திணறினாள். ஆனந்தத்தால் மூர்ச்சையாகி விடுவாள் போல இருந்தது.

பின்னர் குறி தவறாமல் எய்யும் போட்டி நடந்தது. அதனுடைய முடிவுகள் அறிவிக்கப்பட்டபொழுது இளவரசரின் பெயருக்கு இடமில்லாமல் போய்விட்டது. முதலாவதாகச் செல்லராஜனும், இரண்டாவதாக விஜயவாணரின் மகன் மதிவாணனும் வெற்றிபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதைக் கேட்டதும் இளையராணிக்குப் பொறுக்கவேயில்லை. அவமானத்தால் தலை குனிந்துகொண்டாள். இவ்விதம் போட்டி நடத்துவதையே அவள் வெறுத்தாள். வீரசேனனின் உதட்டிலிருந்து கடிபட்ட காயத்தால் ரத்தம் கசிந்துகொண்டிருந்து. அச்சமயம் மத்தியஸ்தர்களில் ஒருவர் மன்னரிடம் நெருங்கிவந்து, பணிவுடனும் தாழ்ந்த குரலுடனும் "அரசே! இளவரசர் மூன்றாவதாக வெற்றிபெற்றிருக்கிறார். அவருடைய பெயரையும் சேர்த்து அறிவிக்கலாமா?" என்று கேட்டார். மன்னர் மறுத்து விட்டார். "வேண்டாம். இது வெறும் விளையாட்டுத்தான். இதில் பாரபட்சம் காட்டுவதோ, மனச்சலனங்களுக்கு இடங் கொடுப்பதோ கூடாது." என்று கூறிவிட்டுத் தன் அருகிலிருந்த மோகனதத்தையைத் திரும்பிப்

பார்த்தார். 'நீ ஏன் பொறுமைப் படுகிறாய்?' என்று கேட்பதைப் போலிருந்தது அந்தப்பார்வை.

அடுத்தபடியாகக் குதிரை ஏற்றம், மற்போர், வேல் எறிதல் முதலிய போட்டிகள் நடைபெற்றன. எல்லாவற்றிலும் செல்லராஜனே முதன்மை பெற்றிருந்தான். இளவரசர் இரண்டாவதாகவும், சில சமயங்களில் மூன்றாவது, நான்காவதாகவும் வெற்றிபெற்றார். கூட்டமெங்கும் சலசலப்பு அதிகமாகிவிட்டது. தோட்டக்காரன் மகனின் திறமையைப் பற்றி எல்லோரும் வியந்து பேசிக் கொண்டார்கள். சில சந்தேகப் பேர்வழிகள் காதும் வாயும் வைத்தாற்போல் ரகசியமாக "தோட்டக்காரன் மகனா வெற்றி பெற்றான்? அவனும் மன்னருடைய மகன் தானே. அரசர் ரத்தம் வீரம் நிறைந்த தல்லவா?" என்று பேசிக்கொண்டார்கள்.

கடைசியாக வாட்போர்ப் போட்டி நடந்தது. முதலில் இரண்டு மாணவர்கள் கூர்மையும் பளபளப்பும் மிக்க வாட்களை எடுத்துக்கொண்டு போட்டி அரங்கிலே இறங்கினர். போட்டியிடும் இருவரும் வாளை மன்னருக்கு நேராகப் பூமியைத் தொடும்படியாகத் தாழ்த்திப் பிடித்து, தலையைத் தாழ்த்தி வணங்கிவிட்டு, கையில் கேடயமும் வாளுமாக அரங்கின் நடுவே நின்றனர். இச்சமயம் அரசர் மீண்டும் எழுந்து நின்று, மாணவர்களைப் பார்த்து "இப்பொழுது நீங்கள் வாளுடன் விளையாடுகிறீர்கள். அது நெருப்புடன் விளையாடுவதைப் போன்றது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருவர் மீது ஒருவர் காயம் படும்படி நடந்து கொள்ளக்கூடாது. போட்டியில் வெற்றி பெறுவதற்குக் குறுக்கு வழிகளைக் கையாண்டு எதிரியைக் காயப்படுத்துவது என்பது கூடாது. இதை எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டு அமர்ந்தார்.

பின்னர் வாள்போட்டி நடைபெற்றது. கேடயங்கள் அடிபடும் 'டணார், டணார்' என்ற சப்தமும், வாளோடு வாள் மோதும்போது ஏற்படும் உலோகச் சப்தமும், வாளை வீசும்பொழுது ஏற்பட்ட ரீங்காரமும் அரங்கத்தில் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருந்தன. பொது

ஜனங்களும், பிரமுகர்களும் கண்கொட்டாமல் மூச்சுப் பேச்சின்றிப் போரிடுபவர்களையே கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கண்களிலே வாள்களின் மின்னல் ஒளி பிரதிபலித்துக் கொண்டிருந்தது. சில சமயங்களில் கோழை உள்ளம் படைத்தவர்கள், போட்டியிடும் இருவரில் ஒருவர் தலை அறுந்து கீழே விழுவதாக நினைத்துக் கண்ணை மூடிக்கொண்டனர். ஆனால் அடுத்த கணம் அவர்கள் கண்ணைத் திறந்து பார்க்கும்பொழுது இரண்டு மாணவர்களும் யாருடைய தலைக்கும் குறைவு ஏற்படாமல் போரிட்டுக் கொண்டிருப்பதைக்கண்டு நிம்மதியாக மூச்சு விட்டனர்.

இவ்விதம் இருவர் இருவராக அரங்கத்தில் இறங்கிப் போராட்டம் நடத்தினர். இருவரில் வெற்றி கண்டவனுடன் வேறொரு மாணவன் புதிதாக வந்து பொருதினான். பின்னர் அவர்களிருவரும் சண்டை செய்து அவர்களில் யார் வென்றானோ அவனுடன் புதிதாக மற்றொருவன் வந்து போரிடுவான். இவ்விதம் வாள்போர் தொடர்ந்து நடைபெற்றது. எல்லோரும் நன்கு போராடினர். எல்லா மாணவர்களையும் மந்திரி நீதிவாணரின் மகன் வெற்றி கண்டான். பின்னர் அவனுடன் விஜயவாணரின் மகன் போரிடுவதற்கு அரங்கத்தில் இறங்கினான். இருவரிடையேயும் போராட்டம் மும்முரமாக நடைபெற்றது. கடைசியில் விஜயவாணரின் மகன் தோல்வியுற்றான். பின்னர் செல்லராஜனைப் போரிடும்படி பள்ளித் தலைவர் விஜயவாணர் உத்தரவிட்டார். செல்லராஜன் அரசருக்கும், பொதுமக்களுக்கும் வணக்கம் செலுத்திவிட்டு விஜயவாணரிடம் நெருங்கினான். அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு சிம்மம்போல அரங்கத்தில் இறங்கினான். அவன் சென்று எதிரியைப் போருக்கு வரவேற்ற பாணியே மிகவும் அழகாக யிருந்தது.

கூட்டத்திலுள்ள அனைவரும் தங்கள் கண்களைத் தீட்டி வைத்துக்கொண்டு ஆவலுடன் அரங்கத்தைப் பார்த்தனர். மோகனதத்தையின் விழிகளிலும் வீரசேனனின் விழிகளிலும் ஆத்திரமும், வஞ்சகமும் பொங்கியது. செல்லராஜன் தோல்வியுற வேண்டுமென்று மனமாறப்

பிரார்த்தித்துக் கொண்டனர். மன்னர் செல்லராஜனையே வைத்த கண் வாங்காமல் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். இளவரசி கலாநந்தினியின் கண்களில் ஒரு புதிய ஒளி தோன்றியது. அவள் உள்ளத்தில் அளவு கடந்த ஆனந்தம் பொங்கியது. குப்பனும் பொன்னியும் என்ன நடக்குமோ என்று பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தனர்.

கார்கால வானத்தைப்போல பளிச் பளிச்சென்று வாள்களின் மின்னல்கள் தோன்றின. கேடயங்கள் மோதிக் கொள்ளும்பொழுது இடியோசைபோலச் சப்தம் எழுந்தது. அந்த இடியோசையைக் கேட்டு கூட்டத்திலுள்ளவர்களில் சிலர் இடியோசை கேட்ட நாகமென நடுங்கினர். வாட்களும், கேடயங்களும் உராயும்பொழுது பொறிகள் கிளம்பின. இருவரும் பம்பரம்போலச் சுழன்று பாய்ந்து போரிட்டனர். சில சமயங்களில் அவர்கள் விடும் ஆசுவாசப் பெருமூச்சு நாகசர்ப்பத்தின் சீற்றத்தைப்போல, கூடியிருந்தோர்களின் செவிகளில் விழுந்தது. இவ்விதப் பயங்கரச் சண்டை அதிகநேரம் நீடிக்கவில்லை. வெகு விரைவிலேயே செல்லராஜன் தன் எதிரியை முறியடித்துவிட்டான். உடனே கரகோஷம் வானைப் பிளந்தது. மக்கள் ஆரவாரம் செய்த சப்தம் புயற்காலக் கடலைப்போல ஓசை எழுப்பியது. தனக்குக் கிடைக்கும் வாழ்த்தை மிகவும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு தலைவணங்கி நின்றான் செல்லராஜன்.

பின்னர் எல்லோரும் எதிர்பார்த்திருந்த அந்தக் கட்டமும் வந்தது. கடைசியாக இளவரசன் வீரநந்தன் போரிடுவதற்குத் தயாரானான். விஜயவாணர் எழுந்து நின்று "நமது மதிப்பிற்குரிய இளவரசர் வீரநந்தரும், செல்லராஜனும் இப்பொழுது போட்டியிடப் போகிறார்கள்" என்று அறிவித்தார். கூட்டத்திலுள்ளவர்கள் இதைக் கேட்டு ஆர்ப்பரிக்கவோ, கைதட்டவோ முன்வரவில்லை. அவர்களுடைய உள்ளங்களிலே ஒருவித திகில் ஏற்பட்டது. நிச்சயமாக இளவரசர் தோல்வியுறுவார். அதனால் வேறு ஏதாவது தொந்தரவு ஏற்படும் என்று எண்ணினர். இளவரசன் வீரநந்தனும் தன்னுடைய வெற்றியில்

நம்பிக்கை வைக்கவில்லை. தன்னைத் தோல்வியும் அவமானமும் சூழப்போகிறதே என்று மனம் நொந்தான். ஆனால், போட்டியில் கலந்து கொள்ளாமல் ஒதுங்குவது என்பதும் முடியாது. செய்வதறியாமல் நடுங்குகிற உள்ளத்துடன் அரங்கத்தில் இறங்கினான். சிரம்தாழ்த்தி மன்னரையும், பள்ளித் தலைவரையும் வணங்கிவிட்டு நம்பிக்கையின்றி நின்றான். இந்தப் போட்டியில் தோற்று உயிருடன் இருப்பதைவிட செல்லராஜனின் வாளுக்கு உயிரைக் கொடுத்துவிடுவது நல்லதென்று எண்ணினான்.

பொதுமக்கள் பதுமையாகச் சமைந்துவிட்டனர். விஜயவாணர் தர்மசங்கடத்தில் தத்தளித்தார். மன்னர் எவ்விதக் கவலையுமின்றி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். மோகனதத்தையின் உள்ளம் வெந்துகொண்டிருந்தது. இவ்விதப் போட்டியை ஏற்படுத்திய மன்னரை மனமாறச் சபித்துக்கொண்டிருந்தாள். வீரசேனனின் ஆத்திரத்திற்கு அளவேயில்லை. தனக்குக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை தெரிந்திருந்தால் இளவரசனின் உடலில் தான் புகுந்துகொண்டு இந்தத் தோட்டக்காரப் பயலை வெட்டி வீழ்த்திவிடலாமே என்று எண்ணினான். அவன் இவ்விதம் தலைதூக்கி வந்துவிடுவான் என்று தெரிந்திருந்தால், அன்றே அவன் மரக்குதிரை ஏறி விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது தன் குதிரைக் காலில் மிதிபடச் செய்து கொன்றிருக்கலாமே என்று நினைத்தான். ஆனால் எல்லாம் தலைக்கு மீறிவிட்டது. இனி என்ன செய்வது? கனல் கக்கும் விழிகளுடன் தோட்டக்காரன் மகனையே பார்த்துக்கொண்டிருந்தான். கூட்டத்தின் மத்தியிலிருந்த பொன்னியும், குப்பனும் இப்பொழுது பயத்தால் நடுங்கினர். இளவரசியின் உள்ளம் பெருமையால் துள்ளியது. இப்படியாக எல்லோரும் அரங்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வாள் வீச்சு தொடங்கும் அந்தக் கணத்தையே எல்லோருடைய விழிகளும், உள்ளமும் எதிர்பார்த்திருந்தன.

ஆனால் என்ன நடந்தது? செல்லராஜன் தன் வாளுடன் மன்னரை நோக்கிச் சென்றான். மன்னருடைய காலடியிலே வாளை வைத்துவிட்டு வணங்கி நின்றான்.

பின்னர் அவன் வாளை எடுக்காமலே விஜயவாணர் நிற்கு மிடத்திற்குத் திரும்பினுன். எல்லோரும் ஒன்றும் புரி யாமல் விழித்தனர். பொது மக்களிடையே சிறிது சல சலப்பு ஏற்பட்டது. ஆனுல் அடுத்த கணத்திலே செல்ல ராஜனின் கம்பீரமான குரல் கூட்டத்தின் சலசலப்பை அடக்கிவிட்டது.

''அன்பும், கருணையும் கொண்ட வீரமிக்க அரசர் அவர்களே! பெரியோர்களே! பொதுமக்களே! இப் பொழுது எனக்கு இட்டிருக்கும் கட்டளையை என்னுல் நிறைவேற்ற முடியாது. விளையாட்டிற்காகவேனும்கூட நான் இளவரசருடன் சண்டை போடுவதற்கு அருகதை யற்றவன். எனது கைகளால் மன்னரின் காலடியிலே சமர்ப்பித்திருக்கும் அந்த வாள் மன்னருக்காகவும், மன்ன ருடைய குடும்பத்திற்காகவும், இந்த நாட்டின் நன்மைக் காகவும் எதிரிகளுடன் போராடவேண்டிய வாள். அதை மன்னரின் மகனுக்கு விரோதமாக விளையாட்டிற்காக வேனும் நான் உபயோகிக்கமாட்டேன். நான் மன்னரின் அடிமை. எங்கோ ஊரும் பேரும் தெரியாமல் இருந்த என்னை உங்கள் முன் புகழும், வீரமும் நிரம்பிய ஒரு வனுக நிற்கச் செய்தது மன்னரின் அன்பு. அந்த அன்புக்கு என்னுடைய ஆயுள் முழுவதும் கடமைப்பட் டிருக்கிறேன். இப்பொழுது நடந்த வாள் போட்டியில் நான் தோல்வி அடைந்துவிட்டேன். வென்றவர் எனது மதிப்பிற்குரிய இளவரசர். இந்த வெற்றி தோல்வியைக் கண்டுபிடிப்பதற்குப் போராட்டம் தேவையில்லை'' என்று கூறி முடித்தான்.

கற்சிலைபோல் அமர்ந்திருந்த மக்கள், ஆச்சரியத் தாலும், ஆவேசத்தாலும் உணர்ச்சி வசப்பட்டு கட்டுப் பாடிழந்து ஆர்ப்பரித்தனர். ஆரவாரம் வெகுநேரம் நீடித் தது. மன்னருக்குப் பெருமை தாளவில்லை. இவ்வளவு நன்றி யுள்ள ஒரு வீரன் நாட்டிற்கு எவ்வளவு பயன்படுவான் என்று பூரித்துப் போனுர். முன்பு ஒரு தினம் நடுநிசியில் குளிரில் தேம்பிக் கொண்டிருந்தபொழுது அவன்மீது ஏற் பட்ட பரிவைவிட இப்பொழுது ஆயிரம் மடங்கு அதிக மாகப் பரிவும், கருணையும் ஏற்பட்டது. அப்படியே ஆரத்

தழுவிக்கொள்ள வேண்டும்போல இருந்தது. ஆனால் உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அமைதியாக இருந்தார். இளவரசி கலாநந்தினியின் உவகைக்கு அளவேயில்லை. பண்புமிக்க அந்த வீர இளைஞனைப் பார்வையால் பருகிக்கொண்டிருந்தாள். மோகனதத்தை ஒருவாறு நிம்மதியாக மூச்சுவிட்டாள். ஆனால் வீரசேனனுக்கு இன்னும் ஆத்திரம் அடங்கவில்லை. "இந்தப் பயல் சண்டை யிடாமலேயே வென்றுவிட்டானே. இப்படிச் செய்ததன்மூலம் இளவரசரை மேலும் கேவலப்படுத்தி விட்டானே" என்று எண்ணிப் பெருமூச்செறிந்தான். பொன்னி தன்னுடைய மகனின் பெருமைக்காக மன மகிழ்ந்துகொண்டாள்.

போட்டிகள் முடிவடைந்துவிட்டதால் மன்னர் எழுந்து நின்று பரிசளிக்கத் தொடங்கினார். முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் மன்னரின் தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கப் பட்டன. அது தவிர பாரபட்சமின்றி எல்லா மாணவர்களுக்கும் மன்னர் வாழ்த்துக் கூறி வேறு சில பரிசுகளையும் அளித்தார். கடைசியில் "அன்புள்ள பொதுமக்களே! பிரபுக்களே! அரசியல் அறிஞர்களே! இன்று நடந்த விழாவில் நமது நாட்டின் எதிர்கால வீரர்களை பொது மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறோம். அவர்களுடைய சேவை நமது நாட்டின் செல்வம். இப்பொழுது உங்களுக்கு இன்னொரு முக்கியமான செய்தியை வெளியிடப் போகிறேன். எல்லாப் போட்டிகளிலும் சிறந்து விளங்கிய செல்வராஜனுக்கு என்னுடைய அன்பைத் தெரிவிப்பதற்கு மற்றொரு பரிசையும் வழங்குகிறேன். அவனுடைய ராஜ விசுவாசத்திற்கும், வீரத்திற்கும் அதுவே ஏற்ற பரிசு. நாளையிலிருந்து அவனை அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவனாக நியமித்திருக்கிறேன்" என்று கூறிமுடித்தார்.

மக்கள் கரகோஷம் செய்து மன்னரின் முடிவை வரவேற்றனர். பிரபுக்கள் குடும்பத்தினர் ஒருவரை ஒருவர் விழித்துப் பார்த்துக்கொண்டனர். இளவரசி பெருமிதத்தால் பூரித்துப் போனாள். மோகனதத்தை ஆத்திரமடைந்

தாள். தன் கணவரின் இந்த அடாத செய்கையை முழு மனதுடன் வெறுத்தாள். "அப்படியானால் இனிமேல் வீரசேனனின் நிலை என்ன" என்று கேட்பதைப்போல வீரசேனனைத் திரும்பிப் பார்த்தாள். ஆனால் வீரசேனன் அங்கில்லை.

செல்லராஜன் எழுந்து நின்று வணக்கம் தெரிவித்து "மன்னர் எனக்குக் கொடுத்திருக்கும் பரிசை என்னுடைய கடமையாகக் கொள்ளுவேன். மன்னரின் சேவையிலிருந்து ஒருபொழுதும் தவற மாட்டேன்" என்று கூறி மன்னரிடம் சென்று மண்டியிட்டு வணங்கினான். மன்னர் இதுவரையில் தம்முடைய காலடியில் கிடந்த செல்லராஜனின் வாளை எடுத்துக் கையில் கொடுத்து ஆசி கூறினார்.

விஜயவாணர் பொதுமக்களுக்கு இரவு நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவித்துக்கொண்டிருந்தார். எதிரே அமைக்கப் பட்டுள்ள கலா மண்டபத்தில் இரவு கலைப் போட்டிகள் நடைபெறும் என்றும், அதில் இளவரசியைத் தவிர மற்ற எல்லா மாணவிகளும் பங்கெடுத்துக் கொள்வார்கள் என்றும் அறிவித்தார்.

இரவு உணவை முடித்துக்கொண்டு சீக்கிரம் திரும்புவதற்காகப் பொதுமக்கள் தத்தம் வீடுகளை நோக்கி விரைந்து நடந்தனர்.

## 16

மறுநாள் மன்னர் தன் மாளிகையில் இருக்கும் பொழுது மோகனதத்தை வந்து சேர்ந்தாள். நேற்று நடந்த சம்பவங்களால் அவளுடைய உள்ளத்தில் எழுந்த கொதிப்பு இன்னும் அடங்கவில்லை. அது அவளுடைய நடையிலும் முகத்திலும் பிரதி பலித்தது. மன்னருக்கு அவளுடைய வருகையின் காரணம் புரிந்துவிட்டது. சிரித்துக்கொண்டே வரவேற்றார். "என்ன மோகன தத்தை! காலை நேரத்திலேயே விஜயம் செய்துவிட்டாயே. ஏதும் வரம் கேட்க வந்திருக்கிறாயோ. நான் முன்பு செய்த

தைப்போல முன்கூட்டியே சத்தியம் செய்து கொடுக்கத் தயாரில்லை'' என்று கூறி நகைத்தார்.

மோகனதத்தை அருகிலிருந்த ஆஸனத்தில் அமர்ந்து கொண்டே ''நேற்று நடந்த போட்டி சிறிதும் நியாயமில்லாதது'' என்றாள்.

''ஏன்? எல்லாவற்றிலும் இளவரசன் முதலாவதாக வெற்றி பெறாமல் தோட்டக்காரன் மகன் வெற்றி பெற்றானே என்ற காரணத்தாலா?'' என்று கேட்டார் மன்னர்.

''ஆமாம். மன்னர் மகனுடன் கேவலம் தோட்டக்காரன் மகன் போட்டியிடுவதென்றால் எந்த முறையில் நியாயமாகும்? சற்றுவது அருகதை வேண்டாமா?''

''அருகதை இல்லாமலா வெற்றி பெற்றான். வீரப் போட்டிகளில் கலந்து கொள்ளுவதற்கு வீரம்தான் அருகதையை நிர்ணயிக்கிறது. சாதியும், பிறப்புமல்ல.''

''சரி. அப்படியே வெற்றி பெற்றாலும் அவனுக்குப் பரிசளிப்பதற்கு வேறு இல்லையா? மெய்க்காப்பாளர் படைத்தலைவனாக நியமித்துவிட்டதாகக் கூறினீர்களே. அப்படியானால் என் சகோதரர் வீரசேனர் நிலை என்ன?'' என்று ஆத்திரம் பொங்கக் கேட்டாள்.

மன்னர் சிறிது சிரித்துவிட்டு ''நிலை என்ன? ஏற்கெனவே இருப்பவரின் பதவிக்கு இன்னொருவரை நியமித்தால் ஏற்கெனவே இருந்தவரின் பதவி உயர்ந்துவிடும். இதுதான் வழக்கமான நிலை?'' என்றார்.

இப்பொழுது மோகனதத்தையின் முகத்தில் சிறிது மகிழ்ச்சி தோன்றியது. ''அப்படியானால் வீரசேனர் என்ன பதவிக்கு உயர்த்தப்படுவார்?'' என்று கேட்டாள்.

''உயர்த்தப்படுவாரா? ஏற்கெனவே உயர்த்தப்பட்டு விட்டார். இன்றிலிருந்து அவர் பிரதம படைத்தலைவருக்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கிறார். போதுமா?'' என்று கூறினார் மன்னர்.

ராணி மோகனதத்தை சிரித்த முகத்துடன் தன் மாளிகைக்குத் திரும்பினுள்.

அன்று மாலையில் இளவரசி கலாநந்தினி தன் தாயைச் சந்திக்கச் சிறைக்குச் செல்வதாக இருந்தது. ஆனுல் மன்னருக்கு வேறு வேலை யிருப்பதாகக் கூறி இளவரசியை ஒரு பணிப்பெண்ணுடன் போய்ப் பார்த்து வரும்படி உத்தர விட்டார். கலாநந்தினி தன் தோழியைப் போன்ற ஒரு பணிப்பெண்ணை அழைத்துக்கொண்டு தாயைச் சந்திக்கச் சென்ருள்.

இளவரசியும் தோழியும் ஏறியிருந்த ரதம் முன்னே சென்றது. அதன் பின்னே அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவனுக புதிதாக பதவி ஏற்ற செல்லராஜன் இரண்டு வீரர்கள் பின்தொடர குதிரைமீது சென்ருன். நேற்று நடந்த சம்பவங்களால் அவனுடைய உள்ளம் பெருமிதம் அடைந்திருந்தது. மன்னர் தன்னுடைய வாழ்க்கையை எவ்வளவு சிறப்படையச் செய்திருக்கிருர் என்பதை எண்ண எண்ண அவனுடைய ராஜ விசுவாசம் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. மன்னர் எவ்வளவு அன்பு செலுத்துகிருர் என்று நினைத்துப் பார்த்துக் கொண்டான். முன்பொரு சமயம் தன் தாய் கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது. 'என் மகன் தேசிங்கு ராஜனின் குதிரையைப் போன்ற பஞ்ச கல்யாணிக் குதிரையில் ஏறுவான். தேசத்தை ஆளும் ராஜாதி ராஜனுவான்' என்றெல்லாம் கூறினுள் அல்லவா. அது இப்பொழுது ஓரளவு உண்மையாகி இருக்கிறது என்று நினைத்தான்.

அவனுடைய உள்ளம் திடீரென்று இளவரசியைப் பற்றி நினைக்க ஆரம்பித்தது அன்று தினம் தோட்டத்தில் அவள் என்ன கேட்டாள்? 'நீ மன்னருடைய சொத்து. அப்படியானுல் மன்னரின் சொத்தில் எனக்கும் உரிமை இருக்கிறதல்லவா?' அவள் கேட்டது உண்மைதான். தன்மீது அதிகாரம் செலுத்துவதற்கு அவளுக்கு அதிகார மிருக்கிறது. இல்லாவிட்டால் அவள் தன் தாயைக் காணப்போகும்பொழுது நான் ஏன் பின்னுல் பாதுகாப்பிற்காகச் செல்ல வேண்டும்? ஆனுல் இந்த உரிமையைத் தான் அவள் குறிப்பிட்டாளா?

அவனுக்கு இன்னொரு சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. இளவரசி புறப்படுவதற்காக ரதத்தின் அருகில் வந்தாள். அங்கே மெய்க்காப்பாளர் படைத்தலைவனாக பதவி ஏற்ற செல்லராஜன் நிற்பதைக் கண்டாள். அவனை ஆவல் ததும்பும் விழிகளுடன் உற்று நோக்கினாள். நேற்று போட்டி அரங்கத்திலே அவன் வீசிய வாள் வீச்சைவிட அது சக்தி வாய்ந்ததாக இருந்தது. "புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் மெய்க்காப்பாளரே. உமக்கு இளவரசியின் வாழ்த்துக்கள்" என்று கூறினாள். "மிகவும் நன்றி!" என்று வணங்கிக்கொண்டே அந்த வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டான். ஆனால் அவனால் அந்தப் பார்வையை மறக்க முடியவில்லை. மறுபடியும் உள்ளம் குழம்பத் தலைப்பட்டது.

ரதத்தில் அமர்ந்திருந்த இளவரசியின் மனமும் பின்னால் குதிரைமீது வந்துகொண்டிருக்கும் மெய்க்காப்பாளன்மீது சென்றுகொண்டிருந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அரசாங்கப் பள்ளியில் மற்ற மாணவர்கள் கேலி செய்யும்படி அனுதையைப் போல வந்து நின்ற அவன்தானா இவன் என்று எண்ணி ஆச்சர்யப்பட்டுக் கொண்டாள். நேற்று போட்டி அரங்கத்திலே நடந்த ஒவ்வொரு சம்பவமும் அவள் கண் முன்னே ஒவ்வொன்றாக வந்துகொண்டிருந்தன.

தோழியின் குரலைக் கேட்டு இளவரசியின் கற்பனை கலைந்தது. ரதம் சிறையின் முன்னால் வந்து நின்று விட்டது. தோழி கீழே இறங்கி நின்றுகொண்டு இளவரசியை இறங்கிவரும்படி வேண்டிக்கொண்டாள். அதுவரையிலும் சிந்தனையில் மூழ்கி இருந்த இளவரசி திடுக்கிட்டுத் தன்னுணர்வு பெற்றுக் கீழே இறங்கினாள். குதிரையைவிட்டுக் கீழிறங்கிய செல்லராஜன் இளவரசியை வழிகாட்டி அழைத்துச் செல்லத் தயாராக நின்றான். அவர்களின் பின்னே உருவிய வாளுடன் குதிரைமீது வந்த வீரர்கள் மரியாதைக்காக நின்றுகொண்டிருந்தனர்.

செல்லராஜன் முன் செல்ல, இளவரசியும் தோழியும் பின்னே வந்தார்கள். செல்லராஜனின் உள்ளத்திலே

இப்பொழுது ஒரு புதிய சிந்தனை தோன்றியது. முன்னர் பள்ளிப்பருவத்திலே இளவரசியும் செல்லராஜனும் அடிக்கடி நெருங்கிப் பழகிப் பேசியதுண்டு. அப்பொழுது ஒரு சமயம் இளவரசி தன் தாயைப்பற்றியும், அவளுடைய விரத வாழ்க்கையைப்பற்றியும் கூறினுள். அதைக் கேட்ட செல்லராஜன் அந்தப் பட்டத்தரசியை—உத்தமியைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டான். அவளுடைய துன்பங்களை எண்ணி இளவரசியுடன் சேர்ந்து கண்ணீர் வடித்திருக்கிருன். இப்பொழுது அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டி யிருக்கிறது. அந்த உத்தமியைப் பார்த்து அவள் பாதங்களைத் தொட்டு வணங்கவேண்டும் போலிருந்தது.

இளவரசியும், தோழியும், செல்லராஜனும் அரசியின் அறைக்கு வந்து சேர்ந்தனர். எளிமைக்கோலத்திலிருக்கும் அரசி இளவரசி கோலத்திலிருக்கும் தன் மகளைக் கட்டி அணைத்துக்கொண்டாள். அந்தக் காட்சியைப் பார்த்த செல்லராஜனின் கண்கள் நீரைப்பெருக்கின. அரசியைக் கண்டதும் அவனை அறியாமல் அவனுக்கு ஒருவித அன்பும், பக்தியும் ஏற்பட்டது. அந்தப் புண்ணியவதி அவளுடைய அருமைக் கைகளால் தன்னை ஒரு முறை ஸ்பரிசித்து அன்புடன் சில வார்த்தைகள் சொல்ல மாட்டாளா என்று ஏங்கினுன்.

தன் மகளை அன்புடன் அணைத்துப் பேசிக்கொண்டிருந்த ராணியின் பார்வை, வெளியே நின்றுகொண்டிருக்கும் வாலிப வீரனின்மீது பாய்ந்தது. அவனுடைய கண்ணீர் ததும்பும் முகத்தைக் கண்டதும் அவளுடைய உள்ளம் என்ன காரணத்தாலோ நெக்குவிட்டு உருகியது. அவனுடைய முகத்திலே ஏதோ ஒரு தனிக்கவர்ச்சி இருப்பதாகத் தோன்றியது. அவனை அப்படியே வாரி அணைத்துக் கண்களைத் துடைத்துவிடவேண்டும்போலத் தோன்றியது. அவன் அழுவதைக் கண்டு அவளுடைய கண்களிலும் கண்ணீர் மல்கியது. "ஏனப்பா அழுகிருய்?" என்று கேட்டாள் வாசவதத்தை.

"ஒன்றுமில்லை யம்மா! உங்களை இந்த நிலையில் பார்க்கும்பொழுது என் உள்ளத்தில் என்னவோ வேதனை உண்டாகிறது" என்று நாத் தழுதழுக்கக் கூறினான்.

இளவரசி அவனை அறிமுகப்படுத்தினாள். "அம்மா! இவர்தான் நான் முன்பு கூறியிருக்கும் செல்லராஜன். நேற்று நடந்த போட்டிகளில் எல்லாம் முதன்மையாக வெற்றி பெற்றார். அதற்காக மன்னர் இவரை மெய்க்காப்பாளர் படைத்தலைவராக ஆக்கியிருக்கிறார். இப்பொழுது இவருடைய தந்தைதான் நம் அரண்மனைத் தோட்டக்காரராக யிருக்கிறார்" என்று கூறினாள்.

"அப்படியா? மகனே, உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகட்டும். உன்னைப் பெற்றவள் பாக்கியம் செய்தவள்" என்று அன்பு ததும்பக் கூறினாள் வாசவதத்தை.

மகனே என்று வாசவதத்தை அழைத்ததும் செல்லராஜனின் உள்ளத்தில் ஒருவித மகிழ்ச்சி உண்டாகியது.

சிறையைவிட்டு அரண்மனைக்குத் திரும்பும்போது ராஜனின் உள்ளத்தில் புதிதாக ஒரு பிரிவு உணர்ச்சி ஏற்பட்டது. தன் இதயத்தின் ஒரு பாகத்தை, சிறையிலே விட்டுவிட்டு வந்ததாகத் தோன்றியது. இவ்வளவு அன்பு மிகுந்த பட்டத்து அரசியைச் சூழ்ச்சியால் சிறையில் வாடச் செய்த இளையராணி மோகனதத்தையின்மீது முதன் முதலாக ஒருவித வெறுப்பும் தோன்ற ஆரம்பித்தது.

# 17

**பொ**ன்னாட்டின் தலைநகரமாகிய பொன்னகரத்திலிருந்து சுமார் பத்துக் காதவழி தூரத்தில், கடற்கரையை ஒட்டினாற்போல் ஒரு உல்லாசப் பொழுதுபோக்கு ஸ்தலம் இருந்தது. மற்ற இடங்களைப்போல் அல்லாமல், கடல் அலைகள் பாறைகளில் மோதி ஒலி எழுப்பும்படி ஆங்காங்கு சிற்சில குன்றுகள் நிமிர்ந்து நின்றன. அந்தக் குன்றுகளை அடுத்தாற்போல் நீண்டு பரந்து கிடக்கும்

பச்சைப் பசேலென்ற சமவெளியும் அதற்குமப்பால் அடர்ந்த காடுகளும் இருந்தன. நாகநந்தருடைய பாட்டனார் காலத்தில், வெறும் பாறைக் குன்றுகளாக இருந்த அந்த இடம் கலைக்கோயிலாக மாறியது. ஏராளமான சிற்பி களின் கைத்திறமும், சித்திரக்காரர்களின் கைத்திறமும் கல்லைக் கவிதையாக மாற்றியிருந்தன. அழகழகான கற் கோயில்கள், இசை பாடித் தழுவிவரும் கடலலைகள் முத்தமிடும்படி நின்றுகொண் டிருந்தன. பச்சைப் பசிய சமவெளி, பன்னிற மலர் சொரியும் பூங்காவனமாக மாற் றப்பட்டிருந்தது. எனவே இந்த இடம் பொதுமக்களுக்கு பார்வைக்குரிய ஸ்தலமாகவும், மன்னர் குடும்பத்தினருக்கு பொழுதுபோக்கு ஸ்தலமாகவும் விளங்கிவந்தது. ஆனால் மூத்தராணி சிறை சென்றபின் இந்த சுகவாசஸ்தலத் திற்கு மன்னர் குடும்பத்தினர் வருவது அறவே நின்று போய்விட்டது. மன்னர் நாகநந்தர் தன் தர்மபத்தினி யைச் சிறையி லடைத்துவிட்டு இந்த இடத்திற்கு வர விரும்பவில்லை. இக் காரணத்தைக் கொண்டே இளைய ராணியும் இங்கு பொழுதுபோக்க வரவேண்டுமென்ற பேச்சையே எழுப்பவில்லை. இவ்விதம் பல ஆண்டுகள் அந்தக் கலைநகரம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது, வெகு காலத்திற்குப் பிறகு இளவரச னும் இளவரசியும் கேட்டுக் கொண்டதின்பேரில் மன்னர் குடும்பத்தினர் மூன்று நாட்கள் அங்கு சென்று தங்குவ தாக ஏற்பாடாகியது.

கலைக்கோயில்களுக்கு அருகே பூத்துக் குலுங்கும் சம வெளிப் பிரதேசத்தில் பல கூடாரங்கள் நிறுவப்பெற்றன. முழுமதிக் காலமாகப் பார்த்து மன்னர் குடும்பத்தினரும், காவல் வீரர்களும், பல்லக்குகளிலும் குதிரைகளிலும் அங்குபோய்ச் சேர்ந்தார்கள். ஆனால் மன்னர் மட்டும் வர மறுத்துவிட்டார்.

இளவரசர் ஒரு கூடாரத்தில் தங்கினார். அவருக்குத் துணையாக உதவிப் படைத்தலைவர் வீரசேனர் சென்றிருந் தார். இளையராணி மோகனதத்தை தனது பணிப்பெண் களுடன் இன்னொரு கூடாரத்தில் தங்கியிருந்தார். இள

வரசி கலாநந்தினி தன்தோழிகளுடன் மற்றொரு கூடாரத்தில் தங்கியிருந்தாள். இவற்றைச் சுற்றிலும் நின்ற சிறிய கூடாரங்களில் காவல் வீரர்களும், குதிரை வீரர்களும் தங்கியிருந்தனர். அரச குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக இசைவாணர்களும், நாட்டிய நங்கையரும் தலைநகரிலிருந்து தினந்தோறும் வரவழைக்கப்பட்டனர்.

இச் சமயம் மெய்க்காப்பாளர் படைத் தலைவனாகிய செல்லராஜாவின் பொறுப்பு மிகவும் அதிகமாக யிருந்தது. இரவு பகல் ஓய்வின்றித் தன் கடமையைக் கவனமாகச் செய்துவந்தான். தன்னுடைய பொறுப்பில் அல்லவா மன்னர் நம்பிக்கை வைத்து நிம்மதியாக யிருக்கிறார் என்று எண்ணியபோது அவனுடைய உள்ளத்தில் புதிய சக்தி பிறந்தது.

ஒருநாள் இரவு முழுமதி நிலவு பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது. எதிரே இருக்கும் நீலக்கடல் பால் கடலாக மாறிப் பண்ணிசைத்துக்கொண்டிருந்தது. மலையைக் குடைந்து செதுக்கிய கற்கோயில்கள் தந்தச் சிலைகளாக மாறியிருந்தன. நடுச் சாமத்திற்கு மேலாகி விட்டதால் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கூடாரத்தின் முன்னிலும் மெய்க்காப்பாளர் படையைச் சேர்ந்த வீரர்கள் காவல் புரிந்துகொண்டிருந்தனர். தூக்கம் வராமல் இருப்பதற்காக அவர்கள் முன்னும், பின்னுமாக உலவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நடந்துகொடுக்கும்பொழுது அவர்களின் பாதரட்சைகள் கிரீச்சிடும் சப்தமும், கூடாரத்திற்குள்ளிருந்து சில கும்பகர்ணப் பேர்வழிகள் விடும் குறட்டைச் சப்தமும் அமைதியைச் சிறிதளவு கெடுத்துக்கொண்டிருந்தன.

காவல் வீரர்கள் எல்லோரும் விழித்திருக்கிறார்களா என்று கவனிப்பதற்காக, செல்லராஜன் ஒருமுறை எல்லாக் கூடாரங்களையும் சுற்றிப் பார்த்துவந்தான். பின்னர் அந்த அழகிய நிலவில் தந்தப் பதுமைகளைப் போலத் தோன்றிய கற்கோயில்கள் அவன் கருத்தைக் கவர்ந்தன. ஏகாந்தமான அந்த வேளையில் அதைச் சென்று பார்த்து

ரசிக்கவேண்டும் போல இருந்தது. மெதுவாகக் கடற்கரைக் கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கோயிலை நெருங்கும்பொழுது கடலலைகளின் ஓசையின் சுருதியோடு சேர்ந்து ஏதோ ஒரு இனிய கானம் மெதுவாகக் காற்றிலே கலந்து வந்தது. அவனுக்கு ஆச்சரியம் அளவு கடந்தது. இந்த ஏகாந்த வேளையில் நட்ட நடு நிசியில் கடற்கரைக் கோயிலிலிருந்து இன்னிசை பரப்புவது யார்? கடல் கன்னி கலைக்கோயிலைக் கண்டு ஆனந்தக் களிப்புப் பாடுகிறுளா என்ன? இல்லை. அந்தக் கானத்திலே ஆனந்தம் தொனிக்கவில்லை. ஏக்கம் பிரதிபலித்தது. அது தேவகானம் இல்லை. சாதாரண மனித கானமாகவேயிருந்தது. செல்லராஜன் இன்னும் சற்று நெருங்கியதும் சந்தேகமறத் தெரிந்துகொண்டான். யாரோ ஒரு அபலைப் பெண் தன்னுடைய உள்ளத்தின் ஏக்கத்தை இசையாக வடித்துக்கொண்டிருந்தாள். யார் அந்த அபலைப் பெண்?

அருகில் நெருங்கிச் சென்றதும், நிலவொளியிலே தெரிந்த அந்த உருவத்தைக் கண்டு செல்லராஜன் திடுக்கிட்டான். "யார்! இளவரசியாரா?" என்று ஆச்சர்யத்துடனும், பயத்துடனும் கேட்டான்.

"இல்லை. இளவரசி கூடாரத்திற்குள்ளே தூங்கிக் கொண்டிருப்பாள். நான் கூண்டிலிருந்து விடுபட்ட கோகிலம், ஒரு சர்வ சாதாரண அபலை" என்று கூறி ஒரு வித சோகப் புன்னகை புரிந்தாள் கலாநந்தினி.

"இளவரசியாரே! நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? காவல் வீரர்கள் யாரும் உங்களைக் கவனிக்கவில்லையா? அவர்கள் எல்லோரும் தூங்குகிறுர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான். அச்சமயம் தனக்குக் கீழ் வேலை பார்க்கும் காவல் வீரர்களின் மீது அவனுடைய ஆத்திரம் கரைபுரண்டோடியது.

"இளவரசி! இளவரசி! நான் ஏன் இளவரசியாகப் பிறந்தேனே தெரியவில்லை? அரச குடும்பம் என்ற தங்கக் கூண்டிற்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன். விடுதலை

காணமுடியாத வேதனையால் தவிக்கிறேன். போதும் இந்த அரச வாழ்க்கை. ஏகாந்தமான இந்த நேரத்திலாவது என்னை ஒரு சாதாரணப் பெண்ணாக நினைத்துப் பேச மாட்டீர்களா ராஜன்? இளவரசி என்று கூப்பிடாமல் கலாநந்தினி என்று ஒரு முறை கூப்பிடுங்கள். இந்தச் செவிகளுக்கு உங்கள் வாயிலிருந்து வரும் அந்த வார்த்தை அமுத கீதமாகத் தொனிக்கும்'' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே கூறினாள் கலாநந்தினி.

செல்லராஜன் ஒன்றும் புரியாமல் திகைத்தான். ஏகாந்தமான இந்த வேளையில் தன்னையும் இளவரசியையும் யாராவது இங்கு பார்த்துவிட்டால் தவறாக நினைத்துக் கொள்வார்களே என்று பதற்றப்பட்டான். அது மட்டுமல்ல. மன்னர் தனக்கிட்ட கட்டளையைச் சரியாக நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே என்று தவிதவித்தான். ஆனால் அதே சமயம் கலாநந்தினியின் பேச்சு, ஏக்கம் ததும்பிய பார்வை, அவனுடைய உள்ளத்திலே சலனங்களை ஏற்படுத்தின. ஆனால் அந்தச் சலனத்திற்குத் தான் பலியாகாமல் இருக்க வேண்டுமென்று பயப்பட்டு உடனடியாக அங்கிருந்து இளவரசியை அழைத்துக்கொண்டு கூடாரத்திற்குச் சென்றுவிட வேண்டுமென்று முடிவு செய்தான்.

''இளவரசியாரே! புறப்படுங்கள். இங்கு நீங்கள் தனித்திருப்பது சரியல்ல. உங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு என் கடமையாக மாறியிருப்பதால்தான் தங்களுக்கு நான் இந்த உத்தரவை இடவேண்டியிருக்கிறது. அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள்."

''ராஜன்! உங்களுடைய மரியாதை கலந்த உத்தரவு எனக்குத் தேவையில்லை. மரியாதைகளையும், ஆடம்பரங்களையும் கண்டு என் மனம் அலுத்துப் போய்விட்டது. எனவே மரியாதை கலந்த உத்தரவு வேண்டாம். உங்களுடைய உத்திரவில் அன்பு கலந்திருக்கட்டும். உங்களுடைய அன்பின் ஆணை எதுவாகயிருந்தாலும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.''

''இளவரசியாரே! இந்த அடிமையிடம் தாங்கள் மரியாதை காட்டுவது சரியல்ல. நான் மன்னனின் அடிமைப்

பொருள். அதனால் உங்களுக்கும் அடிமை. நீங்கள் இவ் விதமெல்லாம் பேசுவது சரியல்ல'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினான் ராஜா.

"அடிமை, ஆண்டை என்ற வித்தியாசம் அன்புக்குக் கிடையாது. நீங்கள் என்னுடைய அடிமையாக யிருப் பதைவிட நான்உங்களுடைய அடிமையாக இருக்க விரும்பு கிறேன். இன்னும் புரியவில்லையா ராஜன்?'' என்று கூறிக் கொண்டு தேம்ப ஆரம்பித்து விட்டாள்.

அவள் அழுவதைக் கண்ட செல்லராஜனுக்கு உள் ளம் வெடித்து விடும்போல யிருந்தது. அவளை அன்புடன் அணைத்துக் கண்ணீரைத் துடைத்துவிட வேண்டும்போல இருந்தது. ஆனால் யாரோ தன்னுடைய கரங்களை விலங் கிட்டுத் தடுத்திருப்பதாக உணர்ந்தாள்.

"புரிகிறது. ஆனால் கடமை என்னை விலங்கிட்டு இருக்கிறதே! நான் இந்த நாட்டின் பிரஜை. மன்னரின் நம்பிக்கைக்குரிய வீரன். அவருடைய உப்பைத் தின்று வளர்ந்தவன். அதை மறந்துவிட என்னால் முடியாது. காதலை விட கடமைதான் வீரனுக்கு முக்கியம். இளவரசி! என்னை மன்னித்துவிடுங்கள்............சரி புறப்படுகிறீர் களா? அல்லது........''

"அல்லது? என்னைக் கரகர வென்று இழுத்துச் செல் லப் போகிறீர்களா? அப்படியானால் சரி. இதோ என்னு டைய கரங்கள்'' என்று கூறிக்கொண்டே தன்னுடைய அழகிய கரங்களை செல்லராஜனின் முன் நீட்டினாள். நில வொளியிலே அவளுடைய கரங்கள் தந்தத்தால் செதுக்கப் பட்டவை போலக் காட்சி யளித்தன. அவற்றை அப்ப டியே பிடித்துத் தன்னுடைய செவ்விதழ்களைப் பதித்து முத்த மிடவேண்டும் போலத் தோன்றியது. சற்று முன் வந்தான். ஒரு கணம் தாமதித்தான். பின்னர் தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டான்.

"நான் சொல்வது அப்படியல்ல, நீங்கள் இங்கிருந்து புறப்படாவிட்டால் என்னைக் காட்டிக் கொடுப்பதற்குச் சமானமாகும். கடமையில தவறிய எனக்குத் தண்டனை

கிடைக்கும். உங்களுக்கு விருப்பம் எதுவோ அப்படியே செய்யுங்கள்" என்று கூறிவிட்டு மௌனமாகத் தலை குனிந்து நின்றான்.

காலநந்தினியின் உள்ளத்திலே ஒரு விதப் பயம் ஏற்பட்டது. தன்னுடைய குற்றத்திற்காக ராஜன் தண்டனை அடைவதை அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. மெதுவாக அடிபெயர்த்து வைத்துக் கூடாரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இருவரும் மௌனமாக அந்த அமைதி நிறைந்த இரவிலே நடந்து சென்றார்கள். இருவருடைய உள்ளங்களிலும், நிலவைக் கண்டு பொங்கி எழும் கடலலைகள் போல ஆயிரம் ஆயிரம் சிந்தனைகள் எழுந்து கொண்டிருந்தன. இவ்விதம் சிறிது சென்றதும் எதிரே ஒரு உருவம் மரநிழலில் ஒதுங்கி மறைவதைக் கண்டு திடுக்கிட்டான் செல்லராஜன். "யாரது?" என்று கேட்டுக்கொண்டே வாளை உறையிலிருந்து எடுத்துக் கொண்டு ஒளிந்த உருவத்தை நெருங்கினான். அந்த உருவம் பதில் பேசவில்லை. ஆத்திர மடைந்த ராஜன் அருகே சென்று கையைப் பிடித்து இழுத்து நிலவு வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தான். தாடி மீசையுடன் நின்ற அந்தக் கிழ உருவத்தைக் கண்டதும் ராஜனின் நெற்றியிலே சுருக்கங்கள் விழுந்தன. வெகு காலத்திற்கு முன்பு இதே உருவத்தை ஒரு முறை சந்தித்திருப்பது இலேசாக ஞாபகம் வந்தது. ஆச்சரியத்தால் மலைத்துப் போனான். கைகளை விடுவித்துக் கொண்டு மரியாதையுடன் ஒதுங்கி நின்றான். கிழவர் உதட்டிலே விரலை வைத்து தான் யார் என்பதை வெளியிடவேண்டாமென்று கேட்டுக்கொள்வதைப் போல ஜாடை காட்டினார். இளவரசி ஒன்றும் புரியாமல் இந்த மௌன நாடகத்தைக் கண்டு திகைத்து நின்றாள். செல்லராஜனின் உள்ளம் பயத்தால் நடுங்கியது. தன்னையும், இளவரசியையும் தனியிடத்தே கண்ட மன்னர் என்ன நினைத்துக்கொள்வாரோ என்று பயந்தான்.

"மெய்க்காப்பாளரே! யார் இந்தக் கிழவர்? இங்கு இந்நேரத்தில் ஏன் வந்தார்?" என்று கேட்டாள் கலாநந்தினி.

"இளவரசியாரே! இவர் எனது தாத்தா. பார்த்து வெகு நாளாகிவிட்டது. பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்திருக்கிருர்" என்முன்.

"பின் ஏன் நம்மைக் கண்டதும் பயந்து ஒளிய வேண்டும்? இதில் ஏதோ சூது யிருக்கிறது என்று நினைக்கிறேன். என்ன கிழவரே! உள்ளதைச் சொல்லுங்கள்" என்று கூறிக் கிழவர் நின்ற இடத்தை நோக்கிஞள். ஆனல் கிழவர் ஒன்றும் பேசாமல் நடையைக்கட்ட ஆரம்பித்தார். அந்தக் கிழவுருவம் நில வொளியிலே வெகு தூரம் சென்று கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது.

## 18

பொழுது போக்குக் கலை நகரத்திலிருந்து எல்லோரும் திரும்பி வந்ததும், ஒருநாள் இளையராணி மோகனத்தை மன்னரைச் சந்தித்தாள். "அரசே! உங்கள் பெண் கலாநந்தினிக்குத் திருமணம் செய்துகொள்ளும் வயதாகி விட்டதே. ஏன் இன்னும் பேசாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அதைப்பற்றி அவளுடைய தாயும் நானும் கவலைப் படாமலிருக்கும்போது உனக்கு மட்டும் அக்கறை வந்திருக்கிறதே! காரணமில்லாமல் நீ யார்மீதும் அக்கறை செலுத்தமாட்டாயே?" என்று ஏளனமாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் மன்னர்.

"காரணமில்லாமலில்லை. காரணத்தோடுதான் சொல்லுகிறேன்."

"அப்படிச் சொல்."

"நீங்கள் இன்னும் உங்கள் மகளை நன்ருகப் புரிந்து கொள்ளவில்லை. விரைவில் திருமணம் செய்யாவிட்டால் விபரீதங்கள் நேரிடும்."

"என் மகளைப் பற்றிச் சந்தேகப்படுவதற்கு நான் அவ்வளவு மோசமானவனல்ல. ஒழுக்கத்தைப்பற்றிப்

பொன்னாட்டு மன்னர் பரம்பரைக்கு யாரும் போதனை செய்யவேண்டியதில்லை."

"அப்படித்தான் நானும் எண்ணியிருந்தேன். ஆனால் நடப்பது வேறுவிதமாக இருக்கிறது. கலை நகரத்திலே நடந்த சம்பவத்தை நீங்கள் அறிந்திருந்தால் இவ்விதம் கூறமாட்டீர்கள். ஒரு நாள் இரவு இளவரசி தங்கியிருந்த கூடாரத்திலுள்ள பணிப்பெண்களில் ஒருத்தி திடீரென்று நடுநிசிக்குப் பிறகு விழித்துப் பார்த்தாளாம். ஆனால் இள வரசியைக் காணவில்லை. என்ன செய்வதென்று புரியா மல் திகைத்துக்கொண்டிருக்கும்பொழுது இளவரசியார் மெய்க்காப்பாளர் தலைவருடன் நிலாக்காய்ந்துவிட்டு வந் தாராம். இது இப்பொழுது எல்லோருக்கும் தெரிந்த பரம ரகசியமாகிவிட்டது. இதற்குமேல் வேறு என்ன கார ணம் வேண்டும்?" என்று கூறி முடித்துவிட்டு மன்னரைக் கர்வத்துடன் பார்த்தாள்.

"நீ சொல்வதை நான் நம்பமாட்டேன். செல்லராஜன் கடமை தவறுபவனல்ல. அவன் ஒருக்காலும் எனக்குத் துரோகம் செய்யமாட்டான். ஏதோ அசந்தர்ப்பமாக நடந்த சம்பவத்தை இவ்விதம் கயிறு திரிப்பது சரியல்ல. யாராயிருந்தாலும் நாவை அடக்கிப் பேசவேண்டும். வீண் புரளிகளைக் கிளப்பினால் தண்டனைக்கு ஆளாகவேண்டி யது ஏற்படும் என்று எச்சரிக்கிறேன்" என்று கூறிக் கடுமையாகக் கண்டித்தார் மன்னர்.

"அப்புறம் உங்கள் பாடு" என்று கூறிவிட்டு மோக னதத்தை தன்னுடைய பேச்சை முடித்துக்கொண்டாள்.

## 19

நடுநிசி. இரவில் பாதி கழிந்து விட்டது என்பதைக் குறிக்க அரண்மனைக் கோட்டை வாசலில் இருந்த சேமக் கலம் டணார் டணா' என முழக்கம் செய்தது. முன் இர விலே ஜன சந்தடியுடன் ஒளி வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த அந்த அரண்மனை இப்பொழுது ஒளி மங்கி அமைதியுடன் தூங்கிக் கொண்டிருந்தது. இங்கொன்றும்

அங்கொன்றுமாக இரண்டொரு விளக்குகள் மினுக்கிக் கொண்டிருந்தன. மங்கிய ஒளியிலே காவல் வீரர்கள் நடந்துகொண்டிருக்கும் சப்தம் மட்டும் நிசப்தத்தைச் சிறிது கலைத்துக் கொண்டிருந்தது. அரண்மனை மெய்க் காப்பாளர் படைத்தலைவனுகிய ராஜன் காவல் வீரர்கள் கடமையை ஒழுங்காகச் செய்கிறுர்களா என்று கவனிக்க அரண்மனை முழுதும் சுற்றிப் பார்த்து வந்தான். எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு இளவரசியின் அந்தப் புரத்திற்கு வரும்பொழுது அங்கு காவல் செய்து கொண்டிருந்த வீரனைக் காணவில்லை. சற்றுத் திகைப்புடனும் ஆத்திரத்துடனும், காவல்காரன் நிற்க வேண்டிய இடத்திற்கு வந்து சுற்றுமுற்றும் தன் பார்வையைச் செலுத்திஞன். அந்தச் சோம்பேறிக்குச் சரியான தண்டனை விதிக்க வேண்டுமென்று அவன் உள்ளம் குமுறியது. ஆனுல் சற்று தூரத்திலிருந்து பரிதாபமாக முனங்கும் ஒரு குரல் அவன் செவியில் விழுந்தது. ராஜன் அந்தக் குரல் வந்த திசையை உற்றுக் கவனித்தான். சற்று தூரத்தில் ஒரு மனித உருவம் நுடக்கி முடக்கிக்கொண்டு கிடப்பதைக் கண்டான். வேதனை தாளாமல் முனகும் அந்த உருவத்தின் அருகே சென்று பார்த்தான். காவல் காத்து நின்ற வீரன் வயிற்று வலி தாளமாட்டாமல் துடித்துக்கொண்டிருந்தான். அவனுடைய நிலையைக் கண்ட ராஜனுக்குப் பரிதாபம் தோன்றியது. அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, இன்னும் சற்று ஒதுப்புறமாகவுள்ள இடத்திற்குக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று படுக்க வைத்தான். அவனை நிம்மதியாகப் படுத்து ஓய்வு பெறும்படி கூறித் தானே காவல் புரிவதாகச் சொல்லி வந்து காவல் வீரன் நிற்கவேண்டிய இடத்தில் நின்று கொண்டான்.

சற்று நேரம் சென்றது. வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட வீரன் இப்பொழுது வலி தீர்ந்து நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய குறட்டைச் சப்தம் சன்னமாக வந்து ராஜனின் செவிகளிலே சுருதி மீட்டுக் கொண்டிருந்தது. கொட்டுகிற குளிரிலே நின்றபடி தன் கடமையைச் செய்துகொண்டிருந்தான்.

சுமார் ஒரு நாழிகை கழிந்திருக்கும். அந்தப் புரத்தின் அறையொன்றிலிருந்து மெல்லிய கீதம் மிதந்து வந்தது. அந்தக் குரலிலே ஏக்கம் தொனித்தது. இதே குரலையும் ஏக்கம் தொனிக்கும் அந்தக் கீதத்தையும் முன்பு எங்கோ ஒருமுறை கேட்டிருப்பதாக அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆம்! சில நாட்களுக்கு முன்பு இதே மாதிரி நட்ட நடுநிசியில், கடல் அலைகளின் பின்னணி ஓசையுடன் அந்தக் கீதத்தைக் கேட்டிருக்கிறான். உடனே பாடுவது யாரென்று நன்றாகத் தெரிந்துவிட்டது. அந்தப் பாடலும், ஏக்கம் நிறைந்த அந்தக் குரலும் அவன் உள்ளத்தைச் சித்திரவதை செய்தன. யுகம் யுகங்களாக அவன் இந்தப் பாடலைக் கேட்டிருப்பதாக நினைத்துக்கொண்டான். எத்தனையோ ஜன்மங்களாக அந்தப் பாடலின் ஒலி தன்னைவிடாமல் தேடிக்கொண்டிருப்பதாக ஒரு பிரமை தோன்றியது. மனதைக் கல்லாக்கி அந்த அழைப்பை மறுப்பது மேலும் முடியாது என்று பட்டது. ஆனால் நல்ல வேளையாக அந்த மெல்லிய இசை மாய்ந்து மறைந்துவிட்டது. ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு தன்னைச் சமாளித்துக்கொண்டு காவல் நிலையிலே நின்றான் செல்லராஜன்.

சிறிது நேரம் சென்றதும் மாளிகையின் வாசல் வழியாக யாரோ மிக மெதுவாக நடந்துவரும் ஓசை கேட்டது. ராஜன் மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். மங்கிய ஒளியிலே வரும் அந்த உருவம் யாரென்று அவனுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. இளவரசி கலாநந்தினி கனவுலகிலே நடந்து வருவதுபோன்று வந்துகொண்டிருந்தாள். அவளுடைய முகத்திலே சோகச் சாயை படர்ந்திருந்தது. கன்னங்கள் வழியாக கண்ணீர்வழிந்த தழும்பு மங்கிய ஒளியிலும் மின்னிக்கொண்டிருந்தது. செல்லராஜனுக்கு ஒன்றும் புரியவில்லை. இளவரசி நடுநிசியில் ஏன் வெளி வரவேண்டும்? காவல்காரன் நிற்கும்பொழுதுகூட அவள் இவ்விதம் வெளி வருவதென்றால் இச்சம்பவம் அடிக்கடி நடக்கிறதென்றுதான் நினைக்க வேண்டியதிருக்கிறது. இளவரசிக்கு இரவெல்லாம் அமைதியின்றித் தவிக்க வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? இந்தக் கேள்விகள் அவன் உள்ளத்தில் வரிசையாக எழுந்தன. அவளுடைய

தவிப்புக்குக் காரணம் தான்தான் என்று அவனுடைய உள் மனதில் யாரோ ரகசியம் கூறிக்கொண்டிருந்தார்கள். இந்த எண்ணம் தோன்றியதும் அவனுடைய உடலிலே ஒருவித நடுக்கம் தோன்றியது. இவன் இவ்வித சிந்தனைகளில் ஆழ்ந்திருக்கும்பொழுது இளவரசி அவனைக் கடந்து சென்றுவிட்டாள். அதற்கப்புறம் அவனுடைய உள்ளத்திலே ஒருவித விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. சற்று தூரத்தில் சென்றுகொண்டிருந்த இளவரசியைப் பின் தொடர்ந்தான்.

ஏகாந்தமான அந்த இரவிலே மாளிகையிலிருந்து சற்று ஒதுங்கினாற்போல் அமைந்திருந்த நிலாமுற்ற மேடையிலே நிலவில்லாத நேரத்திலே இளவரசி கலா நந்தினி வந்து அமர்ந்துகொண்டு தன் தலைவிதியை நினைத்துக் கண்ணீர் வடித்தாள். காதல் வேதனையால் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் யாரோ வரும் காலடியோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். சற்று தூரத்தில் தன் மாளிகைக் காவல் வீரன் வந்துகொண்டிருப்பதைக் கண்டதும் அவளுக்கு ஆத்திரம் பொங்கியது. தன்னந்தனியே அமர்ந்து மனம் விட்டு அழுவதற்குக்கூட உரிமையில்லையா என்று உள்ளம் குமுறினாள். ஆத்திரத்துடன் காவல் வீரனைப் பார்த்து "என்னை ஏன் தொடர்ந்து வந்தாய்? மாளிகையைக் காவல் செய்தால் போதும். மனிதர்களைக் காவல் செய்யத் தேவையில்லை" என்று சீறினாள். ஆனால் காவல் வீரன் கொடுத்த பதிலைக் கேட்டதும் அவள் பிரமித்துப் போய் விட்டாள்.

"இளவரசியாரே! மனிதர்கள் இருப்பதால்தான் மாளிகையைக் காவல் செய்கிறோம். நீங்கள் இந்த நடு நிசியில் கொட்டுகிற பனியில் தன்னந்தனியே வந்து திறந்த வெளியில் அமர்ந்திருப்பது சரியல்ல" என்று கூறினான் செல்லராஜன்.

செல்லராஜனின் குரலைக் கேட்டு ஆச்சரியப்பட்ட இளவரசி கண நேரம் திகைத்திருந்தாள். பின்னர் திகைப்பு மாறி உணர்ச்சி பொங்கியது. தான் யுகம் யுக

மாகத் தேடி அலையும் அந்தத் தெய்வம் தன் அருகிலிருப்பதை உணர்ந்தாள். அந்த உணர்ச்சியிலே தன்னை மறந்துவிட்டாள். "என் அன்புத் தெய்வமே! என் அருகில் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால் உங்களை அடைய முடியாமல் ஏதோ ஒன்று என்னை விலங்கிட்டிருக்கிறது. தினமும் நீங்கள் பார்க்கிறீர்கள். காவல் புரிகிறீர்கள். ஆனால் நீங்கள் எனக்குக் கிட்டாத பொருளாக இருக்கிறீர்கள். நான் உங்களைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறேன். ஒவ்வொரு இரவும் நான் உங்களுக்காக எனது கண்ணீர்த்துளிகளை மாலைகளாகக் கோத்து அர்ச்சனை செய்துகொண்டிருக்கிறேன். ஆனால் நீங்கள்......நீங்கள்........."

இளவரசிக்கு அதற்குமேல் பேச முடியவில்லை. தனது சேலைத் தலைப்பை சுருட்டி வாயில் கடித்துக் கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். ராஜனும் நிலைகுலைந்துவிட்டான். அவனுடைய இரும்பு உள்ளம் கசிந்துருகியது. கடமை உணர்ச்சி சற்றுத் தலைகுனிந்து கொண்டது. நடுங்குகிற கைகளுடன் இளவரசி அருகில் சென்று அன்பு பொங்கும் குரலில் "வேண்டாம். கண்ணீர் விட வேண்டாம். உங்களுடைய கண்ணீர் என் உள்ளத்தை அறுக்கிறது. அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை......அன்பே!......எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மன்னர் பெருமானுடைய அன்பு என்னை அடிமையாக்கிவிட்டது. உன்னுடைய அன்பு என்னை அந்தத் தளையை அறுத்தெறியும்படி தூண்டுகிறது. நான் என்ன செய்வேன்......" என்று கூறிக் கொண்டே கலாநந்தினியின் நீலக்குவளை மலர்க் கண்களில் இருந்த பனிநீரைத் துடைத்துவிட்டான். ஆனால் அவளுடைய கண்ணீர் வற்றவில்லை. தொட்டனைத் தூறும் மணற்கேணியைப் போன்று வற்றாமல் சுரந்துகொண்டிருந்தது. அவள் தன் முகத்தை அவனுடைய மார்பிலே புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அந்த விம்மல் ஒலி இருளின் பேரமைதியிலே விட்டு விட்டு மெதுவாகக் கேட்டுக் கொண்டே யிருந்தது.

திடீரென்று ஏக காலத்தில் தங்களைச் சுற்றிலும் காலடியோசை நெருங்கி வருவதைக் கேட்டு திடுக்கிட்டுச்

சுற்றுமுற்றும் பார்த்தார்கள். பல வீரர்கள் தங்களைச் சுற்றிலும் உருவிய வாளுடன் வருவதைக் கண்டு, செல்ல ராஜன் எச்சரிக்கை அடைந்துவிட்டான். தன் வாளை எடுத்துக் கரத்திலே பிடித்துக்கொண்டு மற்றொரு கரத்திலே இளவரசியை அணைத்தபடி, தன்மேல் பாய்ந்துவரும் எந்தத் தாக்குதலையும் முறியடிக்கத் தயாரானன்.

சுற்றிலும் வீரர்கள் சூழ்ந்து வியூகம் அமைத்துக் கொண்டு நின்றார்கள். உடனே, அவர்கள் கொண்டுவந்திருந்த தீப்பந்தங்கள் கொளுத்தப்பட்டன. விளக்கொளியிலே சுற்றி நிற்கும் வீரர்களை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். வீரசேனன் தீப்பொறி பறக்கும் கண்களுடன் நின்றுகொண்டிருந்தான். அவன் அருகிலே இளவரசன் வீரநந்தன் வேங்கையைப் போலச் சீறிக் கொண்டு நின்றான். வீரசேனனின் மற்றொரு புறத்தில் நிற்கும் வீரனைக் கண்டதும் நடந்த சதியெல்லாம் பட்டவர்த்தனமாக விளங்கிவிட்டது. சற்று நேரத்திற்கு முன்பு வயிற்று வலியால் முடக்கிக் கொண்டிருந்த அவன், இப்பொழுது வாள் வலியைப் பார்ப்பதற்காக வந்துநின்றான். வீரசேனன் உறுமினன். "நன்றிகெட்ட நாயே! உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த ஊதாரியே! குற்றம் புரிந்த நீ எங்களுடைய வாள் முனையிலிருந்து தப்புவதற்கு இளவரசியைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறயா? அவரைத் தனியாக விட்டுவிட்டு நீ மட்டும் வாளை வீசு. பேடியைப் போலப் பெண்ணுக்குப் பின்னல் ஒளிந்துகொள்ளவேண்டாம். இதுதான் அரண்மனைப் பள்ளியின் தலைசிறந்த மாணவனின் வீரமோ?" என்று ஆத்திரம் பொங்கக் கூறினன்.

"நான் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கவுமில்லை. உங்கள் அத்தனை பேருடைய வாளுக்கும் பயப்படவுமில்லை. மன்னருக்கும், நீதிக்கும் பயப்படுவேனேயொழிய மறலிக்குக் கூடப் பயப்படமாட்டேன்" என்று கண்களில் கனல் தெறிக்கக் கூறிக்கொண்டே இளவரசியை ஒரு பக்கமாகத் தள்ளி வியூகத்திற்கு வெளியே செல்லும்படி நிர்ப்பந்தித்தான். ஆனல் இளவரசி கலாநந்தினி தன் காதலனை, சூழ்ந்து நிற்கும் அத்தனை பேர்க

ளுடைய வாட்களுக்கும் இலக்காக விட்டுவிட்டுச் செல்வ தற்குத் தயங்கினுள். மீண்டும் செல்லராஜனின் முன்னே வந்து நின்றுகொண்டு இரண்டு கைகளையும் பரப்பி விரித்துக்கொண்டு "முடியாது. நான் செல்லமாட்டேன். தன்னந்தனியே நிற்கும் ஒருவரைத் தாக்குவதற்குச் சூழ்ந்து நிற்கும் வீராஇ, வீரர்களே! அவரைத் தாக்குவ தற்குப் பதிலாக என்னைத் தாக்குங்கள். அதற்குச் சம்மத மில்லையானுல் சென்றுவிடுங்கள். நீங்கள் அவர்மீது சுமத்தும் குற்றத்தை என்மீது சுமத்துங்கள். வேண்டு மானுல் என்னைக் கொலை செய்யுங்கள்" என்று ஆத்திரத் துடன் கண்ணீர் சிந்தக் கூறினுள். உடனே வீரசேனன் வீரநந்தனிடம் கண்ஜாடை காட்டினுன். இளவரசன் வீரநந்தன் சென்று கலாநந்தினியின் கரம் பற்றி இழுத்து வியூகத்திற்கு வெளியே கொண்டுவந்து நிறுத்தினுன். உடனே சூழ்ந்து நின்ற வீரர்கள் ஏககாலத்தில் செல்ல ராஜன்மீது பாய்ந்தனர். வாள்களின் ஒலி பயங்கரமாகக் கர்ஜித்தது. அந்த ஒலியைக் கேட்டதும் தன்னந்தனியே அகப்பட்டுக்கொண்ட தன் காதலனை நினைத்துக் கண் களைப் பொத்திக்கொண்டு வீரிட்டுக் கதறினுள் இளவரசி. அடுத்த கணமே மூர்ச்சையாகித் தரையில் வீழ்ந்தாள்.

தொடர்ந்து வாள் வீச்சின் ஒலி பயங்கரமாகக் கேட் டுக்கொண்டேயிருந்தது. ஊடூடே சில வீரர்கள் அபயக் குரலிட்டுத் தரையில் வீழ்ந்தனர். முதலில் அலட்சிய மாகப் பாய்ந்து நெருங்கிய வீரர்கள் இப்பொழுது செல்ல ராஜனின் தீரத்தைக் கண்டு, உயிரின்மீது ஆசை கொண்டு சற்றுப் பின்தங்கி நின்று போரிட ஆரம்பித்தார்கள். ஆனுல் அதே சமயம் செய்தியைக் கேள்வியுற்ற மன்னர் சில வீரர்களுடன் அங்கு வந்துசேர்ந்தார். எல்லோரும் திடீரென்று சண்டையை நிறுத்தினர். உடம்பிலே பட்ட காயங்களுடன் சுற்றிலும் வீரர்கள் புடைசூழ நிற்கும் செல்லராஜனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார் மன்னர். அடுத்த கணம் அவருடைய பார்வை அருகில் மூர்ச்சை யடைந்துகிடக்கும் தன் அருமை மகள் கலாநந்தினியின் மீது பாய்ந்தது. இவ்விரண்டு காட்சிகளும் மன்னரின் உள்ளத்திலே சினத்தீயை மூட்டிவிட்டன. கண்கள் செந்தணலாக மாறின. "இதுதான் நன்றி மறக்காமல்

செய்யும் கடமையோ?'' என்று செல்லராஜனைப் பார்த்துச் சீறினுர்.

''அரசே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நான் நிரபராதி. உங்களுடைய அடிமை'' என்று கூறி மன்ருடி நின்ருன் செல்லராஜன். ஆனுல் மன்னர் அதை லட்சியம் செய்யவில்லை.

''அப்படியானுல் சரி. நீ இன்னும் விசுவாசம் உள்ளவனுக யிருந்தால், உடனே வாளைக் கீழே போடு. உன்னுடைய வாதங்களை யெல்லாம் நாளை கவனித்துக் கொள்ளலாம்'' என்ருர்.

செல்லராஜன் மறு பேச்சின்றி வாளைக் கீழே போட்டான். ''உம். விலங்கிட்டு அழைத்துச் செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டார் மன்னர்.

மன்னருடன் வந்திருந்த ஒரு வீரன் தான் கொண்டு வந்திருந்த இரும்புச் சங்கிலிகளை செல்லராஜனுக்குப் பூட்டினுன். நான்கைந்து வீரர்கள் சங்கிலியைப் பிடித்து அவனை இழுத்துச் சென்றனர். அவர்கள் செல்லும் பொழுது கீழே கிடந்த செல்லராஜனின் வாள் வீரர்களின் கால்களில் மிதி பட்டது. எந்த வாள் அவனுடைய வீரத்திற்கும், கடமைக்கும் மன்னரால் பரிசாகக் கொடுக்கப் பட்டதோ அந்த வாள் இப்பொழுது மாண்பிழந்து மண்ணிலே கிடந்தது.

வாள் மட்டும் மண்ணிலே கிடக்கவில்லை. சற்று தூரத்தில் மதிப்பிற்குரிய இளவரசியும் மண்ணிலே கிடந்தாள். மன்னர் அந்த வாளையும், தன் மகளையும் உற்றுப் பார்த்தார். தன்னுடைய மகளைப் பார்த்ததும் அவருடைய ஆத்திரம் கரைபுரண்டது. அன்ெருரு நாள் இரவு கலை நகரத்திலே நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. அது இவ்வளவு விபரீதமாக உருவெடுக்குமென்று அவர் நினைக்கவில்லை. செல்லராஜன் கடமை தவற மாட்டானென்று அவர் நம்பினுர். ஆனுல் இன்று அந்த நம்பிக்கை தகர்ந்து மண்ணுகிவிட்டதை நினைத்து ஆத்திரம் கொண்டார். அவருடைய அந்த நம்பிக்கை மண்ணோடு மண்ணுகிப் புழுதியில் வீழ்ந்ததைப் போன்று அவருடைய நம்

பிக்கையின் பரிசாக அளித்த அந்த வாளும் புழுதியிலே கிடந்தது. அவருடைய அன்புக்கும், கௌரவத்திற்கும் சின்னமாக விளங்கிய இளவரசியும் மாசுபடிந்து மண்ணிலே கிடப்பதைக் கண்டார். அவரால் பொறுக்க முடியவில்லை. பணிப் பெண்களை அழைத்து இளவரசியை உள்ளே தூக்கிச் செல்லும்படி உத்தரவிட்டுவிட்டு ஆத்திரத்துடனும், வருத்தத்துடனும் தன் மாளிகைக்குத் திரும்பினார்.

## 20

**ம**று நாள் அரண்மனையில் ஒரு புறத்தில் அந்தரங்க விசாரணை நடைபெற்றது. இந்தச் சம்பவத்திலே இளவரசி சம்பந்தப் பட்டிருப்பதால் பகிரங்க விசாரணை செய்வது சரியில்லை என்று மந்திரி கூறியதை மன்னரும் ஒப்புக் கொண்டார். எனவே வேறு பிரமுகர்களோ, பொது மக்களின் பிரதிநிதிகளோ விசாரணையில் கலந்துகொள்ள வில்லை. விசாரணையின்போது செல்லராஜனின் தாய் தந்தையர் வரவழைக்கப் பட்டிருந்தனர். முக்கிய சாட்சிகளாக வீரசேனரும், இளவரசர் வீரநந்தரும், வயிற்று வலி வீரனும் வந்திருந்தனர். ஒரு தோழியும் சாட்சிக்கு வந்திருந்தாள். தீர்ப்புக் கூறும் நீதிபதியாக முதல் மந்திரி பொறுப் பேற்றிருந்தார். விசாரணை மிகவும் சுருக்கமாக முடிந்துவிட்டது. விஷயங்களை அலசி ஆராய்வது அவமானத்திற்குரியதாக யிருந்ததால் சிறிது நேரத்திற்குள் செல்லராஜன் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவன் தான் நிரபராதி என்று எவ்வளவோ மன்றாடியும் பயனற்றுப் போய்விட்டது. குற்றவாளியை நாடு கடத்துவதென்று முடிவு செய்தார்கள். தோட்டக்காரனின் மனைவி துடியாகத் துடித்தாள். "ஐயோ தெய்வமே! உனக்கும் கண்ணில்லையா? என் மகனுக்கு இந்தக் கதியா ஏற்பட வேண்டும்? அவன் ஒருக்காலும் இந்தக் குற்றத்தைச் செய் திருக்க மாட்டான்." என்று புலம்பிக் கண்ணீர் வடித் தாள். ஆனால் தோட்டக்காரன் வைராக்கியத்துடன் விளங்கினான். "அரசே! நீங்கள் என்ன தண்டனை விதித் தாலும் பொருந்தும்," என்று கூறினான். யாருடைய குழந்

தையோ செய்த குற்றத்திற்காகத் தன்னுடைய அரண்மனை வேலை போய்விடக்கூடாதே என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் தலை தூக்கி யிருந்தது. ஆனால் எதையும் பொருட்படுத்தாமல் மன்னரின் கட்டளைக்குத் தலை வணங்கி நின்றான் செல்லராஜன்.

அன்று பொன்னகர மக்கள் திடுக்கிடும் செய்தி யொன்றைக் கேள்விப்பட்டார்கள். அரண்மனை மெய்க் காப்பாளர் படைத்தலைவன் பதவியிலிருந்த செல்லராஜன் மன்னருக்கு விரோதமாகச் சதி செய்த குற்றத்திற்காகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு நாடு கடத்தப்படுவதாகவும், பிற்பகலில் ராஜவீதி வழியாக இழுத்துச் செல்லப்பட்டு நாட்டின் எல்லைப்புறத்திற்குக் கொண்டு போகப்படுவான் என்றும் அரண்மனைச் சேவகர்கள் பறை சாற்றினார்கள்.

இச் செய்தி கேள்விப்பட்டதும் எல்லோரும் ஆச்சரி யப்பட்டார்கள். நல்லோர் மனம் வருந்தினர். அவர்க ளால் இச்செய்தியை நம்ப முடியவில்லை. யார் செய்த சதியோ அவன் தலையில் வந்து விடிந்திருக்க வேண்டும் என்று ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். பொறாமைக் காரர்கள் சந்தோஷப் பட்டார்கள். "பார் இந்தத் தோட் டக்காரன் மகனை. மன்னர் செய்த உதவியால் முன்னுக்கு வந்த அவன் மமதையால் மண்ணாகிவிட்டான்." என்று மன மகிழ்ந்தனர். அவனுடைய வீழ்ச்சியைத் தங்களுடைய வெற்றியாக நினைத்துக்கொண்டனர். எப்படி யிருந்தா லும் நாடு கடத்தப்படும் செல்லராஜனை வேடிக்கை பார்ப் பதற்காக மத்தியானத்திற்கு மேல் பதை பதைக்கிற வெயி லில் ராஜவீதியில் வந்து இரு மருங்கிலும் கூட ஆரம்பித் தார்கள். மாடிகளிலும், சாளரங்களிலும் மக்கள் குற்ற வாளியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

கலாநந்தினியின் உள்ளம் படாத பாடு பட்டது. இரவு நடந்த சம்பவங்களால் அவள் மிகவும் களைத்துப் போயி ருந்தாள். பொழுது விடியும்போது அவள் மூர்ச்சை தெளிந்து பிரக்ஞை பெற்றுவிட்டாள். என்றாலும் உட லிலே பலஹீனம் இருந்தது. இரவு நடந்த சம்பவங்கள் பயங்கரமான கனவுபோல படிப்படியாக நினைவுக்கு

வந்தன. அவள் அருகே அமர்ந்திருந்த தோழிகளெல்லாம் ஆச்சரியத்துடனும் வருத்தத்துடனும் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைப் கவனித்தாள். தன்னுடைய விஷயம் இவ்வளவு விபரீதமாக மாறிவிட்டதே என்ற கவலை அவளை அரித்துத் தின்றது. சோகப் பெருமூச்சு விட்டுக்கொண்டே பிறகு என்ன நடந்தது என்று விசாரித்தாள். செல்லராஜன் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக வைக்கப் பட்டிருப்பதாகவும், இன்னும் சிறிது நேரத்தில் அந்தரங்க விசாரணை நடக்கப் போவதாகவும் ஒரு தோழி கூறினாள். விசாரணை என்றவுடன் அவளுடைய உள்ளத்திலே ஒரு வித ஆவேசம் பிறந்தது. தான் அங்கு செல்லவேண்டும் என்றும், தன்னை அழைத்துப் போகும் படியும் தோழிகளுக்கு உத்தரவிட்டாள். அவள் அங்கு வரக்கூடாது என்று மன்னர் கண்டிப்பாக உத்தரவிட்டிருப்பதாகக் கூறி, தோழிகள் தடுத்து நிறுத்திவிட்டனர். சிறிது நேரத்தில் ஒரு தோழி அங்குவந்து செல்லராஜனுக்குத் தண்டனை விதித்துவிட்டதாகவும், மதியத்திற்கு மேல் நாடுகடத்தப் போகிறார்கள் என்றும் சேதி கூறினாள். அதைக் கேட்டதும் கலாநந்தினி தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாள். இதைக்கண்ட தோழிகளில் சிலர் தத்தம் மனத்திற்குள்ளேயே சிரித்துக்கொண்டனர். வேறு சிலர் அனுதாபப்பட்டனர்.

பிற்பகலில் நல்ல வெயில் நேரத்தில் நாடுகடத்தும் சடங்கு நடைபெற்றது. செல்லராஜனின் அரசாங்க உடைகளைக் களைந்துவிட்டுக் கிழிந்த பழைய ஆடைகளை உடுத்துவித்தனர். இவ்வித அலங்காரம் முடிந்ததும் மன்னரும், மந்திரியும் அங்கு வந்துசேர்ந்தார்கள். அவர்கள் அருகே ஒரு வீரன் பழைய மண்பாண்டம் ஒன்றைக் கொண்டுவந்தான். மன்னர் அவனுக்கு ஜாடை காட்டினார். அந்த வீரன் மண்பாண்டத்தை விலங்கிடப்பட்ட செல்லராஜனின் கைகளிலே கொடுத்தான். உடனே மன்னர் "நீ செய்த குற்றத்திற்கு உனக்கு மரண தண்டனையே விதித்திருக்கலாம். ஆனால் இவ்வளவு நாளும் உன்னைக் குழந்தைபோலப் போற்றி வளர்த்த தோஷம் அப்படிச் செய்யாமல் தடுத்துவிட்டது. எனவே உனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்திருக்கிறேன். ஆனால் நீ பிறந்த

பொன்னாட்டின் மண்ணை மிதிக்கக்கூட அருகதையற்ற வன். நன்றி மறந்த உன்னை நாடு கடத்துகிறேன். அங்கு சென்று பிச்சை எடுத்தாவது பிழைத்துக்கொள்ள ஒரு உதவி வேண்டுமே, அதற்காகத்தான் இந்த ஓடு உன் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. சரி. இனி உன் பிர யாணத்தைத் தொடங்கலாம்'' என்று கூறிமுடித்தார்.

செல்லராஜன் ஒன்றும் கூறவில்லை. நீர் நிறைந்த கண்களுடன் மன்னரின் முன் மண்டியிட்டு வணங்கினான். பின்னர் மீண்டும் எழுந்து நின்றான். மன்னரிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் அதற்குள் மன்னர் அவ் விடத்தைவிட்டு நகர்ந்துவிட்டார். அதே சமயம் காவல் வீரர்களும், செல்லராஜனைப் பிணைத்திருந்த சங்கிலியை இழுத்து வெளியேற்ற ஆரம்பித்தார்கள்.

முன்னே நான்கு வீரர்களும், பின்னே நான்கு வீரர்க ளும் ராஜனைப் பிணைத்திருந்த சங்கிலிகளைப் பிடித்து இழுத்துச் சென்றனர். கைதியின் இரண்டு புறங்களிலும் சில வீரர்கள் உருவிய வாளுடன் காவல் புரிந்து சென்ற னர். கந்தல் உடைகளை அணிந்து, கரத்தில் மண்ணோடு ஏந்தி, பிச்சைக்காரனைப்போல செல்லராஜன் சென்று கொண்டிருந்தான். அன்பும் மதிப்பும் கொடுத்து ஆச்சரி யத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அதே அரண்மனை, வெறுப்பும் கேவலமும் பொங்க அவனை உற்று நோக்கிக் கொண்டிருந்தது. செல்லராஜனின் உள்ளம் அவமானத் தால் சாம்பியது. நேற்று இரவு நடந்த சம்பவங்கள் அவன் உள்ளத்திலே அடிக்கடி காட்சியளித்துக் கொண் டிருந்தன. தன்னுடைய மார்பிலே ஆதரவுடன் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்த கலாநந்தினியை அவனால் மறக்க முடியவில்லை. பின்னர் வீரர்கள் சூழ்ந்து கொண் டதும் அவள் தன்னைப் பாதுகாப்பதற்காக ''குற்றம் புரிந் தவள் நான். வேண்டுமானால் என் மீது வாளை வீசுங்கள்'' என்று கூறிச் சாவை எதிர்த்து நின்ற காட்சி அவனை மெய் சிலிர்க்கச் செய்தது. அவள் தன்னை எவ்வளவு நேசிக்கிறாள் என்பதைப் பரிபூரணமாக உணர்ந்துகொண் டான். அச்சமயத்திலிருந்தே அவளுக்காக இந்த உலகத் தில் தனக்குள்ள சகலத்தையும் இழப்பதற்குத் தயாராகி

விட்டான். தான் கைது செய்யப்பட்டு வரும்பொழுது அருகே மூர்ச்சை யடைந்து மண்ணில் புரண்டு கிடக்கும் அந்த மாணிக்கத்தைக் கண்டதும் அப்படியே வாரி யெடுத்து அணைத்து அவளுடைய இன்னலைப் போக்க வேண்டும் என எண்ணினான். ஆனால் பிணைத்திருந்த சங்கிலிகளும், எதிரே நின்ற மன்னரின் உருவமும் அவ்வாறு செய்ய வொட்டாமல் தடுத்தன. இவற்றை எல்லாம் எண்ணிக் கண்கலங்கியபடி அவன் மெதுவாகத் தலை குனிந்தபடியே அரண்மனையிலிருந்து தலைவாசலை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அதே சமயம் தனக்குப் பின்னால் ஏதோ சந்தடி கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அவனுடைய பார்வை இளவரசி கலாநந்தினியின் மாளிகையின் மேல்மாடத்திலே பாய்ந்தது. அங்கே கலா நந்தினி மிகவும் சோர்வுற்ற நிலையில் தள்ளாடி நின்று கொண்டு "ராஜன்...ஐயோ" என்று பயங்கரமாகக் கூக்குரலிட்டு, சுருண்டு விழ ஆரம்பித்தாள். அவள் இருந்த நிலையில் மாடியிலிருந்து விழுந்து உயிர் நீத்துக் கொள்வதுபோலத் தோன்றியது. உடனே செல்லராஜ னின் உள்ளத்திலே வெறி கிளம்பியது. ஆத்திரத்தால் ஒரு உத்வேகம் பிறந்தது. தன்னைப் பிணைத்திருந்த சங்கிலி களையும் தன்னிலையையும் மறந்து இளவரசியைக் காப் பாற்றுவதற்காகத் திரும்பிப் பாய்ந்தான். அச்சமயம் சங்கிலிகளைப் பிடித்திருந்த இரண்டொரு வீரர்கள் தடு மாறிக் கீழே விழுந்தனர். ஆனால் இதற்குள் மாடியில் இளவரசியின் அருகே நின்ற தோழிகள் இளவரசியைக் கீழே விழுந்துவிடாமல் பிடித்து, மறுபடியும் மூர்ச்சை யடைந்த அவளை உள்ளே கொண்டு சென்றனர்.

காவல் வீரர்கள் சமாளித்துக்கொண்டனர். செல்ல ராஜனைத் திமிறவிடாமல் பிடித்து இழுத்துச் சென்றனர். ஆத்திரமடைந்த ஒரு வீரன், பிடித்திருந்த சங்கிலி முனை யால் செல்லராஜன் முதுகிலே பளாரென்று ஒரு அடி கொடுத்தான். உடனே மற்ற வீரர்கள் ஏளனமாகச் சிரித்தனர்.

அரண்மனை வாசலைக் கடந்து வெளியே வந்ததும், அங்கு தயாராகக் காத்து நின்றுகொண்டிருந்த தோட்டக்

காரன் மனைவி பொன்னி அலறி அரற்றிக்கொண்டு ஓடி வந்தாள். ஆனால் அவளை அருகே வரவொட்டாமல் தடுத்துத் துரத்திவிட்டார்கள் காவல்காரர்கள். அருகே நின்ற குப்பனும் அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

கைதியை ராஜ வீதி வழியாக அழைத்துச் செல்லும் போது ராஜ வீதியின் இருமருங்கிலும் கூட்டம் நெறி பட்டது. செல்லராஜனின் வழக்கு அந்தரங்கமாக நடை பெற்றபோதிலும்கூட பொது ஜனங்களுக்கு இதற் குள்ளே எல்லா விஷயமும் பரவிவிட்டது. எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித மனப்பான்மையுடன் கைதியைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். அன்று அரண்மனைப் பள்ளியின் பரிசளிப்பு விழாவிலே வெற்றி பெற்று அரசரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திர மாகி அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவனுகப் பதவி வகித்த அந்தத் தோட்டக்காரன் மகனின் இன்றைய அவல நிலையைப் பார்ப்பதற்கென்றே பலர் வந்திருந் தனர். கலாநந்தினியின் காதலனுகும் பாக்கியம் பெற்ற அந்த இளைஞனைப் பார்ப்பதற்கென்று வேறு சிலர் வந்திருந்தனர். சில பொருமைக்காரர்கள் அவனுடைய வீழ்ச்சியைக் காண்பதற்கு மகிழ்ச்சியுடன் வந்திருந்தனர். சிலர் அவன்மீது இரங்கி வருத்தப்பட்டனர். சிலர் அவ னுடைய நன்றி கெட்ட செயலுக்காக ஆத்திரப்பட்டனர். ஆனல் அந்தப் பழைய சந்தேகப் பேர்வழிகள் வேறு விதமாகப் பேசிக்கொண்டனர். அவர்கள் மிகவும் தாழ்ந்த குரலில் "எப்படி யிருந்தாலும் இவன் இப்படிச் செய்யக் கூடாதுதானே. மன்னரின் மகளை மன்னருக்குப் பிறந்த மகனே காதலிப்பதென்றால் அதை அவர் அனுமதிப் பாரா?'' என்று காதைக் கடித்துக்கொண்டனர்.

திடீரென்று கூட்டத்தில் ஒருபுறத்தில் குழப்பம் ஏற்பட்டது. கூடியிருந்த ஜனங்களைத் தள்ளி விலக்கிக் கொண்டு கூக்குரலிட்டபடியே பொன்னி திடீரென்று தன் மகன் முன்னே ஓடிப் பாய்ந்தாள். "ஐயோ மகனே! என் செல்வமே! உனக்கு இந்தக் கதியா வரவேண்டும்? இதற்குத்தானு நீ இவ்வளவு கெட்டிக்காரனுக முன்னுக்கு

வந்தாய்?'' என்று கதறி, பாய்ந்து சென்று அவனை அணைத்துக்கொண்டாள். செல்லராஜனும் தன் தாயின் பரிதாப நிலையால் குழந்தைபோல விக்கி விக்கி அழ ஆரம்பித்தான். அக்காட்சி கூடியிருந்த பலரையும் உருக்கிவிட்டது. அவர்களும் கண்ணீர் விட்டார்கள். காவல் வீரர்களும் சற்று தாமதித்து நின்றனர். ஆனால் காவல் வீரர்களின் தலைவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, இழுத்துச் செல்லும்படி உத்தரவிட்டான். மீண்டும் சங்கிலிகளால் இழுக்கப்பட்ட செல்லராஜன் தாயின் கரங்களை விலக்கி விட்டுவிட்டு நடக்க ஆரம்பித்தான். ஆனால் பொன்னி விடுவதாக யில்லை. கீழே விழுந்து அவனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினாள். வலுக்கட்டாயமாக இழுக்கப்பட்ட செல்லராஜன் மேலும் முன்னேறினான். அவனுடைய காலைப் பிடித்திருந்த பொன்னி சுடுகிற வெய்யிலிலே வீதியின் புழுதியிலே சிறிது தூரம் வரை பரபரவென்று இழுத்துச் செல்லப்பட்டாள். பின்னர் அவளுடைய கைப்பிடி தவறிவிட்டது. செல்லராஜனின் பாதங்கள் அவளுடைய கரங்களிலிருந்து நழுவி விட்டன. அப்படியே துக்கமும், சோர்வும் மேலிட்டவளாகப் புழுதியிலே குப்புறப்படுத்தபடியே விசித்து அழுதாள். சற்று நேரத்தில் குப்பன் அங்கு வந்துசேர்ந்தான். பொன்னியைத் தூக்கி உட்காரவைத்து அவள்மீது படிந்திருந்த புழுதியைத் துடைத்தான். பொன்னி கண்ணீர்த் துளிகள் நிறைந்த தன் பார்வையை தன் மகன் சென்ற திசையில் திருப்பினாள். அவனுடைய உருவம் வெகு தூரத்தில் சென்று மறைந்துகொண்டிருந்தது.

நாட்டின் எல்லைக் கோட்டிற்கு வந்து சேர்ந்ததும் செல்லராஜனைப் பிணைத்திருந்த சங்கிலிகளை அவிழ்த்து விட்டனர். காவல் வீரர்களின் தலைவன் செல்லராஜனைப் பார்த்து "ராஜத் துரோகியே! நீ இனிமேல் பொன்னாட்டின் மண்ணை மதிக்கக்கூடாது. இது மன்னரின் கட்டளை. மீண்டும் இந்நாட்டில் கால்வைத்தால் சிரச்சேதம் செய்யப்படுவாய். போ! வேறு எந்த நாட்டிலாவது போய் பிச்சை எடுத்தாவது பிழைத்துக்கொள். அதற்காகத்தான் மன்னர் உன் கையில் ஓட்டைக் கொடுத்திருக்கிறார்" என்று சொல்லி ஏளனமாகச் சிரித்தான்.

பொன்னுட்டின் எல்லைக் கோட்டுக்கு அப்பால், விலங்குகளிலிருந்து விடுதலை பெற்று நின்ற செல்லராஜ னின் உள்ளத்திலே ஒரு சுதந்திர உணர்ச்சி பிறந்தது. அதே சமயத்தில் தன் நாட்டின் மண்மீது கால் வைக்கக் கூடாது என்று சொல்லி ஏளனம் செய்வோரின்மீது ஆத் திரமும் பிறந்தது. இதுவரை மௌனமாக நடந்து வந்த அவனுக்கு இரண்டொரு வார்த்தைகள் பேசவேண்டும் என்று தோன்றியது. "நல்லது; பொன்னுட்டில் பிறந்த எனக்கு மண்ணேட்டைக் கொடுத்து அனுப்பினீர்களே அதற்காக நன்றி செலுத்தத் தயாராகயில்லை. நான் உயிர் வாழ்வதற்கு இந்த ஓடு தேவையில்லை. மன்னர் எனக்கு ஏராளமான வேறு திறமைகளைக் கொடுத்து உதவியிருக் கிருர். அவை போதும். அவற்றிற்காக நான் நன்றி செலுத்தத் தயாராக இருக்கிறேன். பொன்னுட்டின் மண்ணை மிதிக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கும் பொழுது, பொன்னுட்டு மண்ணை எடுத்துச் செல்வது மட் டும் எப்படி நியாயமாகும்? இதோ இதுவும் பொன்னுட்டு மண்தான். இது உங்களுக்குத்தான் சொந்தம்; ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறித் தன் கையிலிருந்த ஓட்டை பொன்னுட்டின் எல்லையில் நிற்கும் வீரர்களை நோக்கி வீசினுன். அது அவர்கள் காலடியில் விழுந்து சுக்கு நூருகாக நொறுங்கியது. இளவரசியின் உள்ளத்தைப் போல அந்த மண்ணேடும் தூள் தூளாகிவிட்டது.

## 21

இதுவரை பொன்னுட்டைத் தன்னுடாகக் கருதி யிருந்த செல்லராஜனுக்குப் பொன்னுடு விடைகொடுத்து அனுப்பிவிட்டது. இப்பொழுது அவன் எந்த நாட்டை யும் சேராத எல்லைப்புறத் துண்டுப் பகுதியிலே நின்று கொண்டிருந்தான். அவனுக்கு முன்னுல் அடர்ந்த காடும் பரந்த நிலப்பகுதியும் விரிந்து கிடந்தன. ஒருபுறம் சோலை நாடு பரந்து கிடந்தது. மற்ருெரு புறம் மங்கல நாடு அகன்று கிடந்தது. அவன் எங்கு வேண்டுமானுலும் போகலாம். ஆனுல் அந்த நாடுகள் அவனை எப்படி வர வேற்கும்? அன்னிய நாட்டுப் பிரஜை என்ற ஹோதாவில்

உள்ளே நுழைய முடியும். பொதுவாக ஒரு நாட்டுப் பிரஜை மற்றொரு நாட்டிற்குச் சென்று வியாபாரம் செய்வது வழக்கம். ஆனால் இவனைப் பார்த்த மாத்திரத்திலேயே வியாபாரி அல்ல என்று கூறிவிடலாம். அதோடு மட்டுமல்ல அவன் பொன்னாட்டின் பிரஜை என்று கூறிக் கொள்வதற்குக்கூட உரிமையற்றவனாகிவிட்டான். அவன் இப்பொழுது தான் பிறந்த நாட்டிலிருந்து ராஜத் துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டு விட்டான். நாடு கடத்தப்பட்ட ராஜத்துரோகியை எந்த நாடுதான் கௌரவமாக ஏற்றுக்கொள்ளும்? எனவே அவனுடைய எதிர்கால வாழ்க்கை ஒரு பெரும் புதிராக முன்னே நின்றது. காலையிலிருந்து உணவருந்தாதபடியால் பசியும் தாகமும் களைப்பும் வாட்டின. இரவு சண்டை செய்யும்பொழுது உடம்பில் ஏற்பட்ட காயங்கள் வலி எடுத்தன. பசியும் வேதனையும் மயக்கத்தை உண்டாக்கும் போலிருந்தன. இந்த ஜன சஞ்சார மற்ற பிரதேசத்தில் மேலும் தங்கியிருந்தால் பட்டினியால் உயிர்விட வேண்டியதுதான். எப்படியும் எங்கேயாவது போயாக வேண்டும். வேறு வழியில்லை. இரவும் நெருங்கிக்கொண்டிருந்தது. எனவே மெதுவாகத் தனக்கு முன்னே தோன்றிய ஒற்றையடிப் பாதை வழியாகக் காட்டிற்குள் நடந்தான். காட்டைக் கடந்துவிட்டால் ஏதாவது ஓர் ஊருக்குப் போய்ச் சேரலாம். அப்புறம் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

நடக்க நடக்கக் காடு நீண்டுகொண்டே போவதுபோல் தோன்றியது. இரவு வெகுநேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. வானத்திலே பிறைச்சந்திரன் புறப்பட்டு மங்கிய ஒளியை வீச ஆரம்பித்தான். மரம் அடர்ந்து இருள் சூழ்ந்த அந்தக் கானகத்திலே தன்னந்தனியாக நடந்து கொண்டிருந்தான். திடீரென்று சற்று தூரத்தில் ஏதோ ஒரு மிருகம் உறுமுவதுபோலக் கேட்டது. நிராயுதபாணியாக இருந்த செல்லராஜன் பயத்துடன் சப்தம் வந்த திசையை உற்று நோக்கினான் சற்றுதூரத்தில் இருந்த ஒரு புதருக்குள் இரண்டு தீப்பந்தங்கள் எரிவதைப்போலத் தோன்றின. ஆம். சந்தேகமே இல்லை. புலியோ, சிறுத்தையோ இன்னும் சில கணங்களில் அவன்மீது பாயப்

போகிறது என்று நினைத்தான். கையில் ஒரு வாளிருந்தால் அவன் எந்த மிருகத்தையும் எதிர்க்கத் தயார். ஆனால் இப்பொழுது அவனிடம் வாளில்லை. அதற்குப் பதிலாக உடல் முழுவதும் காயங்களும், அளவுகடந்த சோர்வும் இருந்தன. ஓடி ஒளிவதற்குக்கூட சக்தி யில்லை. எனவே என்ன நடந்தாலும் சரி என்று துணிந்து அருகில் இருந்த மரத்தின் தாழ்ந்த கிளை யொன்றில் மெதுவாக ஏறி உட்கார்ந்துகொண்டான்.

புதருக்குள் இருந்த சிறுத்தை வெளியே வந்து சீறிக் கொண்டு நிற்பது மங்கிய ஒளியிலே தெரிந்தது. திடீரென்று சிறுத்தையினுடைய சீற்றத்துடன் மற்றொரு பயங்கரமான உறுமலும் கேட்டது. எங்கிருந்தோ வந்த காட்டு முள்ளம்பன்றி ஒன்று சீறி நிற்கும் சிறுத்தையுடன் போருக்குத் தயாராகியது.

சிறிது நேரம் வரை இரண்டு விலங்குகளும் பயங்கரமாகப் போரிட்டன. அவைகளுடைய ஆக்ரோஷமான உறுமல்கள் இரவின் நிசப்தத்திலே பயங்கரமாக எதிரொலித்தன. மரங்களில் கூடுகளில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த பறவை இனங்கள், கூக்குரலிட்டபடி இறக்கை அடித்துக்கொண்டு பறந்தன. சற்று முன்பு அமைதியாக உறங்கிக்கிடந்த அந்தக் காடு இப்பொழுது பயங்கர ஓலங்களால் விழித்தெழுந்துவிட்டதைப் போலத் தோன்றியது. போராட்டம் சிறிது நேரம்வரை நீடித்தது. கடைசியில் ஒன்றை ஒன்று வெல்ல முடியாமல் இரண்டும் வெவ்வேறு திசைகளை நோக்கி ஓட ஆரம்பித்தன. முள்ளம்பன்றி எங்கோ ஓடி மறைந்துவிட்டது. உடலெல்லாம் காயம்பட்ட சிறுத்தை வேதனை பொறுக்கமுடியாமல் முனகிக்கொண்டே மற்றொரு புறமாகச் சென்றது. அங்கே ஒரு செடி அடர்ந்து வளர்ந்துகிடந்தது. சிறுத்தை அந்தச் செடியிலே கிடந்து வெகு நேரம்வரை புரண்டது. அதனால் அதனுடைய காயங்கள் ஆறி வேதனை குறைந்ததைப் போலத் தோன்றியது. இப்பொழுது அது முணக்கம் எதுவுமின்றி வேகமாக நடந்து வெகு தூரத்துக்கப்பால் எங்கோ போய் மறைந்தது.

நடந்தவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த செல்லராஜன் ஆச்சரியப்பட்டான். சிறுத்தை போய்ப் புரண்ட அந்தச் செடியில் ஏதோ ஒருவித மருந்துச் சக்தி இருக்கவேண்டுமென நினைத்தான். அப்படியானால் ஏன் தானும் அந்த மருந்தை உபயோகித்துப் பார்க்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது. சிறிது நேரம் சென்றதும் மெதுவாக மரத்தைவிட்டு இறங்கி அந்தச் செடி இருக்குமிடத்திற்குப் போனான். அருகில் சென்றதும் அந்தச் செடியிலிருந்து ஒருவித வாசம் வீசியது. அந்த வாசத்தை நுகர்ந்ததுமே அவன் உடம்பில் தெம்பு ஏற்பட்டதாக உணர்ந்தான். ஆகையால் மிகவும் மகிழ்ச்சியடைந்து அந்தச் செடியின் இலைகளைப் பறித்துக் கசக்கி அதிலிருந்து வந்த சாற்றைத் தன் உடம்பின்மீதிருந்த காயங்களில் பூசினான். என்ன ஆச்சரியம்! வலி மாயமாக மறைந்துவிட்டது. செல்லராஜனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. மனிதர்களைவிடக் காட்டு மிருகங்கள் இயற்கையை எவ்வளவு நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன என்று எண்ணி மனம் பூரித்துப் போனான். அந்தச் செடியிலிருந்து வைத்திய சிகிச்சை பெற்ற அவன் தெம்புடன் நடந்துசெல்ல ஆரம்பித்தான். சிறிது தூரந்தான் சென்றிருப்பான். அதற்குள் இன்னொரு ஆச்சரியமான சம்பவம் நடந்தது. தூரத்தில் எங்கிருந்தோ ஒரு குதிரை பாய்ந்து ஓடிவரும் குளம்படி ஓசை கேட்டது. இந்த நடு நிசியில் யார் அவ்வழியே வரப் போகிறார்கள் என்று காத்து நின்றான். குதிரையின் குளம்போசை மிகவும் சமீபமாகக் கேட்டது. இப்பொழுது இரவின் அந்த மங்கிய ஒளியிலும்கூட உருவம் நன்றாகத் தெரிந்தது. யாரோ ஒரு வீரன் ஒரு அழகிய குதிரையின் மீது வேகமாக வந்துகொண்டிருந்தான். இருளில் சற்று ஓரமாக நின்றுகொண்டிருந்த செல்லராஜன் அந்தக் குதிரைவீரனைத் தடுத்து நிறுத்த நினைத்தான். அவ்விதம் நிறுத்தினால் தன்னுடைய நிலைமையைச் சொல்லித் தன்னையும் ஏற்றிக்கொண்டுபோய் அருகிலிருக்கும் ஏதாவது ஒரு ஊரில் விடச் சொல்லலாம் என நினைத்தான். ஆனால் அவன் நினைப்பு ஈடேறவில்லை. குதிரைமீது வந்த வீரன் இவனைக் கவனிக்காமலேயே வெகு வேகமாகத் தாண்டிச்

சென்றுவிட்டான். செல்லராஜன் ஏமாற்றத்துடன் தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் குதிரையையும் வீரனையும் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். ஆனால் அதே சமயம் குதிரை ஏதோ ஒரு கல்லால் இடறப்பெற்று கனைத்துக்கொண்டே விழுந்து உருண்டது. அதன்மீது இருந்த வீரனும் பந்துபோலத் தூக்கி எறியப்பட்டுக் கீழே விழுந்தான். காலிலோ கையிலோ காயம் பட்டிருக்க வேண்டும். வேதனை பொறுக்க முடியாமல் முனகிக் கொண்டே எழுந்து நின்றான். பின்னர் மெதுவாக நொண்டிக்கொண்டு குதிரையின் அருகே சென்றான். ஆனால் குதிரை எழுந்திருக்கவே இல்லை. ஒருவேளை குதிரைக்கும் ஏதாவது காயம் பட்டிருக்கலாம்.

இவற்றை யெல்லாம் தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த செல்லராஜன் அடிபட்டு விழுந்த குதிரையும், குதிரைவீரனும் இருக்குமிடத்தை நோக்கி நடந்தான். அவனுக்கு உதவி செய்து தானும் அவனுடன் போய்ச் சேரலாம் என்று ஆசை தோன்றியது.

நடுக்காட்டிற்குள் நல்ல நிசி வேளையில் தன்னந்தனியாக விழுந்து காயம்பட்ட குதிரை வீரன், தன்னை நோக்கி யாரோ வருவதைக் கண்டதும் சந்தேகப்பட ஆரம்பித்தான். வாளை உருவித் தயாராக வைத்துக்கொண்டு "யாரது? எதற்காக என்னை நெருங்கி வருகிறாய்? பாதையிலே கல்லைப்புரட்டி வைத்ததும் நீதானா?" என்று ஆத்திரத்துடன் சீறினான்.

செல்லராஜனுக்கு வேடிக்கையாக இருந்தது. நாம் ஒன்று நினைத்தால் வேறொன்று நடக்கிறதே என்று தனக்குள் தானே சிரித்துக் கொண்டான் "ஐயா! தாங்கள் ஒன்றும் சந்தேகப் படவேண்டாம். நான் எந்தக் கெட்ட நோக்கத்துடனும் உங்களை நெருங்க வில்லை. நீங்கள் குதிரையிலிருந்து விழுந்ததைக் கண்டு ஏதாவது உதவி செய்யலாமா என்றுதான் வந்தேன். எனவே தங்களுடைய வாளுக்கு வேலை ஒன்றுமில்லை" என்று சொல்லிப் புன்னகை செய்தான்.

செல்லராஜனின் பேச்சைக் கேட்ட குதிரை வீரன் சற்று சமாதானம் அடைந்தான். தன் எதிரில் நிற்கும்

மனிதனின் தோற்றம் இரக்கம் உண்டாக்குவதாக இருந்தது. கிழிந்த ஆடைகளை அணிந்து களைத்துப் போயிருக்கும் அந்த ஏழை மனிதன் தன்னை என்ன செய்யப் போகிருன் என்று நினைத்தான். ஆனல் எளிமையும், சோர்வும் நிறைந்த அந்த நிலையிலும்கூட அவன் முகத்திலே ஜ்வலிக்கும் தேஜஸைக் கண்டு ஒரு விதக் கவர்ச்சி ஏற்பட்டது. "ஏனப்பா! உனக்கு எந்த ஊர்? இந்த இராத்திரி வேளையில் தன்னந்தனியாக ஏன் காட்டிற்குள் வந்திருக்கிருய்?" என்று கேட்டான் குதிரை மீது வந்த வீரன்.

"ஐயா! எனக்கு எந்த ஊரும் இப்பொழுது சொந்தமல்ல. ஊரும் சதமல்ல, உற்ருர் சதமல்ல" என்று சொல்லி இலேசாகச் சிரித்தான் செல்லராஜன்.

இதைக் கேட்ட குதிரை வீரனுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. "ஓஹோ! அப்படியா! 'காடேசதம்; கனிகிழங்கே போஜனம்!' என்று நம்பி இந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே துறவு பூண்டு விட்டீர்களோ? சாமிக்குப் பூர்வாசிரமத்தில் எந்த ஊரோ? என்ன பேரோ?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளுவோம். உங்களுக்கு இப்பொழுது காலிலே பலமான காயம் ஏற்பட்டிருக்கிறது போல இருக்கிறதே. அதன் வலியைத் தீர்க்காமல் நீங்கள் மேலும் பிரயாணம் செய்ய முடியாதல்லவா? வேதனை அதிகமாக இருக்கிறதோ?" என்று செல்லராஜன் கேட்டான்.

"என்னுடைய காயத்தைப்பற்றிக் கவலை இல்லை. குதிரையின் குளம்பில் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. அதனல் காலை ஊன்றி நிற்கக்கூட முடியவில்லை. குதிரை எழுந்து நடக்காவிட்டால் பிரயாணம் தடைப்பட்டு விடும். அதனல் பலவித முக்கியமான காரியங்கள் கெட்டுப்போய் விடும். அதுதான் என்ன செய்வது என்று புரியவில்லை" என்று வருத்தத்துடன் கூறினன் குதிரை வீரன்.

இதைக் கேட்ட செல்லராஜன் உள்ளத்திலே ஒரு யோசனை தோன்றியது. "ஐயா! நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்...காயங்களை உடனடியாக ஆற்றுவதற்கு

என்னிடம் மருந்து இருக்கிறது. போய் அரை நொடியில் பறித்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிக் கிளம்ப ஆரம்பித்தான்.

உடனே குதிரை வீரன் "ஸ்வாமிக்கு வைத்தியம் கூடத் தெரியுமா? பச்சிலை உடனே ஆற்றிவிடுமா என்ன?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஒன்றும் சந்தேகப் படவேண்டாம். சற்று நேரத்திற்கு முன்பு என் உடலிலிருந்த காயங்களுக்கெல்லாம் இந்த மருந்தைத்தான் போட்டேன்.''

"ஸ்வாமியின் உடம்பைக் காயப்படுத்திய பாவிகள் யாரோ?'' என்று இரக்கத்துடன் கேட்டான் குதிரை வீரன்.

"எல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டுச் செல்லராஜன் இருளுக்குள் மறைந்தான்.

சற்று நேரத்தில் செல்லராஜன் பச்சிலைகளுடன் திரும்பி வந்தான். பச்சிலையைக் கசக்கி, சாற்றைக் குதிரை வீரனின் காயத்தின் மீது பிழிந்தான். காயம் பட்ட இடத்திலே ஒருவித ஜிலுஜிலுப்பு ஏற்படுவதைப் போன்ற உணர்ச்சி தோன்றுவதைக் கண்டான் குதிரை வீரன். பின்னர் வலி அறவே நின்றுவிட்டது. குணமடைந்த குதிரை வீரன் மனமார நன்றி தெரிவித்தான். பின்னர் செல்லராஜன் எஞ்சியிருந்த பச்சிலைகளைக் கசக்கி குதிரையின் காயம்பட்ட குளம்பிலே சாற்றை வடியவிட்டான். பின்னர் சாறு கசிந்துகொண்டிருக்கும் பச்சிலைச் சக்கையை, குதிரையின் குளம்பிலே வைத்துவிட்டு, கட்டுவதற்குத் துணியைத் தேடினான். குறிப்பறிந்த குதிரை வீரன் தன்னுடைய தலைப்பாகையை அவிழ்த்து அதிலிருந்து ஒரு ஓரத்தைக் கிழிப்பதற்கு முயன்றான். அதைக் கண்ட செல்லராஜன் "ஐயா! வேண்டாம் நல்ல ஆடையை ஏன் வீணுகக் கிழிக்க வேண்டும்? நான் உடுத்திருக்கும் துணி கந்தல்தான். கந்தலைக் கிழிப்பதால் ஒன்றும் பாதகமில்லை'' என்று கூறிக்கொண்டே தன்னுடைய ஆடையைக் கிழித்துக் குதிரையின் குளம்பிலே கட்டினான்.

குதிரை வீரன் செல்லராஜனை அன்புடன் உற்றுப் பார்த்தான். "ஸ்வாமி! நீங்கள் மிகவும் நல்லவராக இருக்கிறீர்கள். உங்களுடைய ஆடைகள் ஏன் கிழிந்திருக்கின்றன? உங்களுக்குக் காயம் ஏற்படுத்தித் துன்புறுத்தியது யார்? தங்களுடைய பூர்வாசிரமம் யாது?" என்று வினயமாகக் கேட்டான்.

"பூர்வாசிரமம் கிடக்கட்டும். இப்பொழுது சிரமத்தைத் தவிர எந்த ஆசிரமமும் கிடையாது. தாங்கள் மரியாதை கொடுக்கக் கூடிய அளவுக்கு நான் ஒன்றும் சாமியாரல்ல. நான் ஒரு சாதாரண வீரன். பொன்னாட்டின் மாஜிப் பிரஜை."

"அப்படியானால் இப்பொழுது?"

"இப்பொழுது பொன்னாட்டு மன்னரால் ராஜத்துரோகி என்று நாடுகடத்தப் பட்டிருக்கிறேன். இன்று மாலையில்தான் பொன்னாட்டின் எல்லைக்கோட்டிற்கு இப்பால் கொண்டுவந்து என்னுடைய விலங்கை அவிழ்த்து விரட்டிவிட்டார்கள். அதற்கப்புறம் இரவெல்லாம் காட்டிலே அலைந்தேன். எங்கு போவது என்று வழிதெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறேன்."

"அப்படியா? என்ன ராஜத்துரோகம் செய்தீர்கள்?"

"நான் ஒன்றும் ராஜத் துரோகம் செய்யவில்லை. ராஜத்துரோகம் செய்யும் வேறு சிலர் இன்னும் அரண்மனையிலேயே இருக்கிறார்கள். அவர்களுடைய சதி என்னை ராஜத்துரோகியாகப் பட்டம் கட்டிவிட்டது. அதனுடைய பலனை இப்பொழுது அனுபவிக்கிறேன்."

"அப்படியானால் பொன்னாட்டு மன்னர் அவ்வளவு மோசமானவரா? அவருக்கு நியாய அநியாயம் தெரியாதா? அந்த ராஜத்துரோகிகளை நீங்கள் அம்பலப்படுத்தலாமே."

"அம்பலப்படுத்துவதற்கு என்ன இருக்கிறது? மன்னரின் இரண்டாவது மனைவி மோகனத்தை தன்னுடைய பொறுமைக் குணத்தால் மூத்தராணி தவாசவத்

தையைச் சிறையில் அடைக்கச் செய்திருக்கிருர். அதை ஏன் என்று கேட்பதற்கு நாதியில்லை. இப்பொழுது மூத்த ராணியின் மகள் கலாநந்தினியின்மீது அவருடைய தாக்குதலைத் தொடுத்திருக்கிருர்.''

''மூத்த ராணி சிறையில் இருக்கிருரா? எப்பொழுது நடந்தது இந்தச் சம்பவம்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் குதிரைவீரன்.

''இன்று நேற்றல்ல! சுமார் இருபது வருடங்கள் ஆகிவிட்டன. பக்கத்துச் சோலை நாட்டில் மூத்தராணி வாசவதத்தையின் சகோதரர் அரசராக இருக்கிருர். ஆனுல் அவருக்குக்கூடச் செய்தி தெரியாமல் மூடி மறைத்திருக்கிருர்கள்.''

இதைக் கேட்ட குதிரை வீரன் சற்று மௌனமாக யோசித்தான். பின்னர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக்கொண்டே ''சரி! அதெல்லாம் இருக்கட்டும். உன்மீது என்னதான் குற்றம் சாட்டிஞர்கள்?'' என்று கேட்டான்.

''நான் ஒன்றும் குற்றம் செய்யவில்லை. மன்னர் என்னை அன்புடன் நேசித்து வளர்த்தார். அரண்மனை மெய்க்காப்பாளர் படைத்தலைவஞக என்னை அமர்த்திஞர். இளவரசியும் நாஞம் சிறு பிள்ளையி லிருந்தே ஒன்ருகப் பழகிவந்தோம். இளவரசி என்னைக் காதலிக்க ஆரம்பித்தார். அது என்னுடைய குற்றமல்ல. ஆனுல் அதற்காக எனக்குத் தண்டனை மட்டும் கொடுத்துவிட்டார்கள். அதெல்லாம் சரி! நீங்கள் யார் என்பதைச் சொல்லவில்லையே?'' என்று கேட்டான் செல்லராஜன்.

''தம்பி! நான் சோலை நாட்டு மன்னரின் ஒற்றர் படைத் தலைவன். இப்பொழுது நான் சோலை நாட்டுக்குத் தான் செல்கிறேன்'' என்று எதையோ யோசித்தபடியே கூறிஞன் குதிரை வீரன்.

''ஐயா! அப்படியாஞல் என்னையும் சோலை நாட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள். சோலை நாட்டில் ஏதாவது வேலை பார்த்துப் பிழைத்துக் கொள்கிறேன். அதோடு

மன்னரையும் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள். மூத்த ராணியைப் பற்றி அவருடன் பேசியாக வேண்டும்.''

குதிரை வீரன் சம்மதித்தான். பின்னர் இருவரும் குதிரையின்மீது ஏறிக்கொண்டு மெதுவாகப் பிரயாணத்தைத் தொடங்கினர்கள். பின்னிரவுக்குள் காட்டைக் கடந்து ஒரு ஊருக்கு வந்துசேர்ந்தனர். ஊரில் ஒதுப்புறமாக உள்ள ஒரு வீதியில் ஒரு வீட்டின் முன் குதிரை வந்து நின்றது. இருவரும் கீழே இறங்கினர். குதிரை வீரன் வீட்டின் வாசலைத் தட்டி ''அஞ்சலை! அஞ்சலை!'' என்று கூப்பிட்டான். சிறிது நேரத்திற்குள் கையில் விளக்குடன் அஞ்சலை வந்து கதவைத் திறந்தாள். அஞ்சலையைப் பார்த்துக் குதிரை வீரன், அவ்வீட்டுடன் சேர்ந்தாற்போல் இருக்கும் குதிரை லாயத்தைத் திறக்கச் சொன்னன். லாயத்தின் கதவு திறக்கப்பட்டதும் குதிரையைப் பிடித்துக்கொண்டு செல்லராஜனையும் அழைத்துக் கொண்டு குதிரை வீரன் லாயத்திற்குள் நுழைந்தான். அஞ்சலையும் கையில் விளக்குடன் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தாள்.

குதிரை லாயத்திற்குள் வேறு நான்கு உயர்ந்த ஜாதிக் குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. குதிரை வீரன் உள்ளே நுழைந்ததும் எல்லாக் குதிரைகளும் அவனை அன்புடன் உற்றுப் பார்த்தன. தான் பிரயாணம் செய்து வந்த குதிரையை அங்கே கட்டிவிட்டு, வேறொரு குதிரையை அவிழ்த்துக்கொண்டு வெளியே வந்தான். பின்னர் அஞ்சலையைப் பார்த்து ''அஞ்சலை! இந்த வீரன் இன்றிரவு இங்கு தங்கி இருப்பான். உணவு கொடுத்து படுப்பதற்குப் படுக்கையும் கொடு. நாளைக் காலை ஆகாரம் முடிந்த பிறகு லாயத்திலிருந்து ஒரு குதிரையை இவனுக்குக் கொடு...... தம்பி! அஞ்சலை உனக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பாள். காலையில் எழுந்ததும் குளித்து உடைகளை மாற்றிக் கொண்டு ஆகாரத்தையும் முடித்துக்கொண்டு குதிரையிலேறித் தலைநகரத்திற்குப் புறப்பட்டு வா! நான் மன்னரிடம் உன்னைப்பற்றிக் கூறுகிறேன். அரண்மனைக்கு வந்து மன்னரைச் சந்திக்கலாம்'' என்று கூறிவிட்டுத் தன் கையிலிருந்த ஒரு மோதிரத்தை

யும் கழற்றி அவன் கையிலே அடையாளத்திற்காகக் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்று மறைந்தான்.

## 22

மறுநாள் காலை செல்லராஜன் கண் விழித்துப் பார்க்கும்போது விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டது. முதல் நாள் பகலும் இரவும் பிரயாணம் செய்த களைப்பினால் நன்றாகத் தூங்கிவிட்டான். நல்ல நிம்மதியான தூக்கத்திற்குப்பின் இப்பொழுது அவனுடைய உடலிலே புதிய சக்தி ஏற்பட்டிருந்தது. எதிர்பாராத சம்பவங்களால் சோலை நாட்டு ஒற்றர் படைத்தலைவரின் நட்பும், சோலை நாட்டு மன்னரைச் சந்திப்பதற்கு ஏற்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருந்ததால் அவனுடைய உள்ளத்தில் ஒருவித மகிழ்ச்சி நிறைந்திருந்தது. புதிய தெம்புடனும், நம்பிக்கையுடனும் தனது படுக்கை அறையைவிட்டு வெளியே வந்தான். முன்பின் கண்டறியாத புதிய நாட்டில், புதிய ஊரில், புதிய வீட்டில் கண்விழித்து எழுந்த அவன் தனக்கு அறிமுகமான அஞ்சலையைத் தேடினான். அந்த வீடு நேற்றிரவு வெளியிலிருந்து பார்ப்பதற்கு மிகவும் சிறியதாகத்தான் தோன்றியது. ஆனால் இப்பொழுது அந்த வீட்டைப் பார்த்தால் சிறியதாகத் தென்படவில்லை. பல அறைகளும் கூடங்களும் இருந்தன. ஆனால் அவன் கண்ணில் ஆட்கள் யாரும் தென்படவில்லை. இரண்டு மூன்று அறைகளைத் தேடிவிட்டுக் கடைசியில் சற்று ஒதுப்புறமாக உள்ள ஓர் அறைக்கு வந்துசேர்ந்தான். அங்கே ஒரு வயதான கிழவி உட்கார்ந்திருந்தாள். காலை நேரத்தில் தன்னந்தனியாக உட்கார்ந்து அவள் என்னதான் சிந்தனை செய்துகொண் டிருக்கிறாளோ என்பதுஅவனுக்குப் புரியவில்லை. அவன் வந்ததைக்கூட அவள் கவனிக்கவில்லை. செல்லராஜன் அவளைப்பார்த்து "பாட்டி! அஞ்சலை எங்கே?" என்று கேட்டான். செல்லராஜனின் குரலைக் கேட்டு பாட்டி திடுக்கிட்டுத் திரும்பினாள். சிலகண நேரம் செல்லராஜனையே உற்றுப் பார்த்தாள். பின்னர் பயத்துடன் "ஐயோ! என்னைக் கொல்லவேண்டாம். நான் ரகசி

யத்தை ஒருபோதும் சொல்லமாட்டேன்'' என்று நடுங்கிக் கொண்டே கூறினாள்.

"ரகசியமா! இதில் என்ன ரகசியமிருக்கிறது? அஞ்சலை எங்கே? சொல்லுங்க பாட்டி'' என்று மறுபடியும் கேட்டான்.

உடனே கிழவி மீண்டும் பழைய பல்லவியையே பாட ஆரம்பித்தாள். "ஐயோ! என்னைக் கொல்லவேண்டாம். நான் ரகசியத்தை யாரிடமும் சொல்ல மாட்டேன்'' என்று கூறி, செல்லராஜனிடமிருந்து தப்பித்துக்கொள்ள நினைப்பவளைப்போல அறையின் வேறொரு மூலைக்குப் போய்விட்டாள்.

செல்லராஜனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் ஒரே புதிராக இருந்தது. "அஞ்சலையைக் கேட்டால் இந்தக் கிழவி ஏன் இப்படிக் கூறுகிறாள்? அஞ்சலை இருக்குமிடம் அவ்வளவு ரகசியமானதா என்ன? இரவு தான் சந்தித்த ஆள் ஒற்றர் படைத்தலைவன் என்று கூறினார். அதனால் அஞ்சலையும் ஒற்றர் படையைச் சேர்ந்தவளாக இருக்கலாம். இந்த வீட்டில் எல்லாம் பரம ரகசியம்தான் போலிருக்கிறது. நாம் இங்கு வந்து மாட்டிக்கொண்டோமே'' என்று பலவாறாக சிந்தித்துக்கொண்டு அங்கேயே தயங்கி நின்றான். அச்சமயம் அஞ்சலை அங்கு வந்து சேர்ந்தாள். "என்ன ஐயா! நல்ல தூக்கம் போலிருக்கிறதே. தூக்கத்தைக் கெடுக்க விரும்பாததால் உங்களை எழுப்பவில்லை'' என்று சிரித்துக்கொண்டே கூறினாள் அஞ்சலை.

"என்னம்மா! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்கள் எங்கே என்று இந்தக் கிழவியிடம் கேட்டேன். இவள் ரகசியத்தைச் சொல்லமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாளே'' என்று செல்லராஜன் குழப்பத்துடன் கூறினான்.

"ஐயையோ! நீங்கள் இந்தக் கிழவியிடமா கேட்டீர்கள்? அது ஒரு முக்கால் பைத்திய மாயிற்றே. நீங்கள் எதைக் கேட்டாலும் அந்தக் கிழம் ரகசியத்தைச் சொல்ல

மாட்டேன் என்று கூறிவிடுமே. பெரிய ரகசியப் புலி. அது கிடக்கட்டும். நீங்கள் போய் கொல்லைக் கிணற்றில் குளித்துவிட்டு வாருங்கள். அதோ அந்த அறையில் மாற்றுடைகள் வைத்திருக்கிறேன். குளித்துவிட்டு அந்த உடைகளை அணிந்துகொண்டு ஆகாரம் சாப்பிடலாம்'' என்று கூறி, கொல்லைப் புறத்திலிருக்கும் கிணற்றுக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டாள்.

காலை ஆகாரம் முடிந்ததும் செல்லராஜன், லாயத்திலிருந்து ஒரு குதிரையை எடுத்துக்கொண்டு மன்னரைச் சந்திப்பதற்காகத் தலைநகரத்திற்குப் புறப்பட்டான். அஞ்சலை தலைநகரத்துக்குச் செல்லும் வழியை விவரமாகக் கூறி அனுப்பினுள்.

செல்லராஜன் குதிரையின்மீது ஏறிக்கொண்டு அஞ்சலை கூறிய வழியின்படியே சென்றுன். வழியெங்கும் வளம் நிறைந்த வயல்களும், கால்வாய்களும் தென்பட்டன. நெல்லும், வாழையும், கரும்பும் சாலையின் இரு மருங்கிலும் செழித்தோங்கி வளர்ந்திருந்தன. தலைநகருக்குச் செல்லும் சாலையானபடியால் ஜன நடமாட்டம் அதிகமாக இருந்தது. வழியில் வரும் மக்கள் கம்பீரமான குதிரையின்மீது வேகமாகச் செல்லும் செல்லராஜனை நின்று ஏறிட்டுப் பார்த்து மரியாதையுடன் ஒதுங்கி வழி விட்டனர். இதைக் கண்ட செல்லராஜனின் உள்ளம் பெருமித மடைந்தது. நேற்றுப் பகல் இதே நேரத்தில் கைகளில் விலங்கு பூட்டி, கிழிந்த உடைகளை அணிவித்து கேவலப்படுத்தி பொன்னுடு அவனை வழி அனுப்பியது. அப்போது அவனுடைய உள்ளம் எதிர்காலத்தில் என்னென்ன துன்பங்கள் அனுபவிக்க வேண்டியிருக்குமோ என்று எண்ணி ஏங்கியது. நேற்று நடுநிசி வரையிலும் கூட தன்னுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றி அவநம்பிக்கையுடன்தான் இருந்தான். ஆனல் இன்று பொழுது விடியும் போதே அவனுக்கு ஒரு புதிய வாழ்வு பிறந்துவிட்டதாகத் தோன்றியது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது தன் வாழ்வில் ஏதோ அதிர்ஷ்டச் சக்கரம் சுழன்று கொண்டே இருப்பதாக நினைத்து மகிழ்ச்சியடைந்தான். இவ்விதம் தன்னை மறந்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கும்

போது குதிரை அவனுக்கு அனுபவமில்லாத புதிய நண்பனாக இருந்தபடியால் சில சமயங்களில் இடக்குச் செய்தது. அதைத் தட்டிக் கொடுத்துச் சமாளித்துக்கொண்டு உச்சி வெயில் நேரத்திற்குள் தலைநகருக்கு வந்து சேர்ந்தான்.

சோலை நாட்டின் தலைநகரம் பொன்னகரத்திற்கு எவ்விதத்திலும் சளைத்ததாக இல்லை. வரிசை வரிசையாக வீதிகளும் அணி அணியாக அழகு மாளிகைகளும் நகரத்திற்கு அழகு செய்தன. பல வீதிகளைக் கடந்து சோலை நாட்டு மன்னரின் கோட்டை வாயிலுக்கு வந்து சேர்ந்தான். வாயில் காப்போன் செல்லராஜனை அடையாளம் கண்டு கொள்ளா விட்டாலும்கூட அவன் ஏறிவந்த குதிரையை அடையாளம் கண்டுகொண்டான். வணங்கி நின்று வழிவிட்டான். செல்லராஜன் மேலும் உள்ளே கடந்து சென்றான். ஒரு மாளிகையின் முன்பு பல குதிரைகள் சேணம் அவிழ்த்துக் கட்டப்பட்டிருந்தன. அங்கே வந்தடைந்ததும் செல்லராஜன் குதிரையிலிருந்து கீழே இறங்கினான். அதைக் கண்ட காவல் வீரன் ஒருவன் செல்லராஜனின் அருகே வந்து குதிரையின் கடிவாளத்தைக் கையில் வாங்கிக்கொண்டு "ஐயா! குதிரையைப் பார்த்தால் நீங்கள் எல்லைப் பக்கத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. ஒற்றர்படைத் தலைவர் அனுப்பினாரோ?" என்று கேட்டான்.

"ஆமாம்! மன்னரைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்று கூறினான். அதற்கு அந்த வீரன் "நல்லது பார்க்கலாம். ஆனால் இப்பொழுது முடியாது. உணவு வேளையானபடியால் நீங்கள் நேராக விருந்தினர் மாளிகைக்குச் செல்ல வேண்டும். ஒற்றர் தலைவர் கொடுத்த அடையாளச் சீட்டைக் காண்பித்தால் தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பார்கள். உணவெல்லாம் முடித்துக்கொண்டு மாலையில் மன்னரைச் சந்திக்கலாம்' என்று கூறினான்.

செல்லராஜன் தனக்கு அடையாளச் சீட்டுக் கொடுக்கவில்லை என்றும் ஆனால் ஒரு மோதிரம் கொடுத்திருப்பதாகவும் கூறி தன் கையில் அணிந்திருந்த முத்திரை மோதிரத்தைக் காண்பித்தான். அந்த மோதிரத்தைப்

பார்த்த மாத்திரத்திலேயே காவல் வீரன் வியப்படைந்தான். அந்த மோதிரம் மிகவும் முக்கியமானவர்களுக்குக் கொடுக்கப்படுவது. எனவே வந்திருப்பவர் மிகவும் மரியாதைக் குரியவர் என்று தெரிந்துகொண்டு அவன் செல்லராஜனை விருந்தினர் மாளிகை வரை அழைத்துச் சென்றான். விருந்தினர் மாளிகை நிர்வாகியிடம் அழைத்சென்ற காவல் வீரன் அவரிடம் ஏதோ ரகசியமாகக் கூறினான். உடனே அந்த நிர்வாகி மிக்க மரியாதையுடன் உபசரித்து ஒரு பிரத்தியேக அறையில் தங்கச் செய்தார்.

பிற்பகலில் மன்னர் அழைத்துவரச் சொல்வதாகக் கூறி, ஒரு சேவகன் வந்து செல்லராஜனை அழைத்தான். அது செல்லராஜனுக்கு மகிழ்ச்சியை ஊட்டியது. "ஒற்றர் படைத் தலைவர் தன்னைப் பற்றி மன்னரிடம் மிகவும் உயர்வாகவும், விவரமாகவும் கூறியிருக்கிறார். இல்லா விட்டால் மன்னரே தன்னை அழைத்து வரும்படி உத்தர விட்டிருப்பாரா?" என்று நினைத்துக்கொண்டான். எனவே மகிழ்ச்சியுடன் மன்னரைப் பார்க்கப் புறப்பட்டான்.

மன்னரின் மாளிகையில் நுழைந்து உள்ளே சென்று மன்னரின் முன் சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டு "அரசர் பெருமானே! தங்களைப் பார்ப்பதற்கு அனுமதி கொடுத்ததற்காக மிகவும் நன்றி. தங்களிடம் கொடுக்கும்படி ஒற்றர் படைத் தலைவர் இந்த மோதிரத்தைக் கொடுத்திருக்கிறார்" என்று கூறி மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தான்.

மன்னர் அந்த மோதிரத்தைப் பெற்றுக்கொண்டே புன்சிரிப்புடன் "உன் பெயரென்ன சொன்னாய்? மறந்து விட்டேனே!" என்றார்.

அவர் பேச்சைக் கேட்டதும் செல்லராஜன் ஆச்சர்யப் பட்டான். குரலை எங்கோ கேட்டிருப்பதைப் போன்று தோன்றியது. சற்று குழப்பத்துடன் "என் பெயர் செல்ல ராஜன், உங்களிடம் இதற்கு முன்பு நான் எப்படி என் பெயரைச் சொல்லியிருக்க முடியும்?" என்று பணிவுடன் தெரிவித்துக்கொண்டான்.

மன்னர் இலேசாகச் சிரித்துவிட்டு மோதிரத்தைக் கையில் அணிந்துகொண்டே "நாம் இதற்கு முன்பு சந்திக்கவில்லையா? மறந்து போய்விட்டேன்" என்று கூறி எழுந்து சற்று இங்குமங்கும் உலாவினர். அப்படி உலவும் பொழுது ஒரு காலை இலேசாகத் தாங்கித் தாங்கி நடந்தார். அதைக் கவனித்த செல்லராஜனின் உள்ளத்திலே ஒருவித சந்தேகம் உண்டாகியது. "மன்னரின் காலிலே ஏதோ" என்று இழுத்தான்.

"ஆமாம்! இன்னும் வலி இருக்கிறது. நீ ஏதாவது பச்சிலை வைத்திருக்கிருயா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் மன்னர்.

செல்லராஜனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. இரவு ஒற்றர்படைத் தலைவர் வேடத்தில் வந்த அதே மனிதர் தான் இப்பொழுது மன்னராகத் தன் முன்னே நிற்கிருர் என்று புரிந்துகொண்டான். 'இரவு அந்த மனிதருடன் எவ்வளவு சகஜமாகப் பழகிஞேம். ஏதேதோ பேசி விட்டோமே' என்று நினைத்து சற்று வெட்கமும், பயமும் அடைந்தான். "அரசே! இரவு நான் உங்களுடன் பழகிய விதத்தில் ஏதாவது தவறு இருந்தால் மன்னிக்கவேண்டும்" என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டான்.

மன்னர் அவனுடன் அன்பாகப் பேசினர். இரவு அவன்செய்த உதவிகளைப் பாராட்டினர். பிறகு சில நாட்கள்வரை அவனை அங்கே தங்கி இருக்கும்படியும், அதற்குள் பொன்ஞட்டிற்கு ஒற்றர்களை அனுப்பி தீர விசாரித்த பின்பு மூத்த ராணி வாசவதத்தையைப் பற்றி, பொன்ஞட்டு மன்னருக்குத் தூதனுப்பலாம் என்றும் கூறினர். அதுவரை செல்லராஜன் சோலை நாட்டுப் பிரஜையாக அங்கு தங்கி யிருக்கவேண்டு மென்றும் உத்தரவிட்டார்.

## 23

ஒரு நாள் பொன்ஞட்டு மன்னர் நாகநந்தர் அரசாங்க மாளிகையின் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும்போது ஒரு சேவகன் வந்து வணங்கினன். "அரசே! சோலை

நாட்டு மன்னரின் தூதர் ஓலையுடன் உங்களைக் காண வந்திருக்கிறார்'' என்று கூறினான். மன்னர் தூதரை அழைத்து வர உத்தரவிட்டார்.

மன்னரின் மனம் மகிழ்ச்சி யடைந்தது. வெகு நாட்களாகச் சோலைநாட்டு மன்னரிடமிருந்து எவ்விதத் தகவலும் வந்ததில்லை. இவரும் சோலைநாட்டு மன்னருக்கு எவ்விதச் செய்தியும் அனுப்பியதில்லை. முன்னர் தம் குழந்தைகளுக்குப் பெயர்சூட்டு விழாவுக்கு வந்திருந்தபோது அவர் சில நாட்கள்கூடத் தங்கவில்லை. எனவே இப்பொழுது தனது மைத்துனர் தயாளநந்தரிடமிருந்து தூதர் வந்திருக்கிறார் என்ற செய்தி உற்சாக மூட்டியது. ஆனால் அந்த உற்சாகம் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை. சோலை நாட்டு மன்னரின் தூதரைக் கண்டதும் அவருடைய உற்சாகமெல்லாம் பறந்து ஆத்திரமாக மாறியது.

தன் முன்னே வந்து பணிவுடன் வணங்கி நின்று ஓலையை நீட்டிய செல்லராஜனைக் கண்டதும் மன்னர் ஆத்திரம் கொண்டார். சபையில் உள்ள எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். நாடு கடத்தப்பட்ட ராஜத்துரோகி சோலை நாட்டு மன்னரின் தூதனா என்ற கேள்விக்குறி யாவர் முகத்திலும் படர்ந்தது. என்னநடக்கப் போகிறதோ என்று ஐயுற்றனர்.

மன்னர் நீட்டிய ஓலையை வாங்கவில்லை. அக்கினித் தழல் பொங்கும் கண்களுடன் அவனை விழித்துப் பார்த்துக் கொண்டு சீறினார். ''யாரங்கே! இந்த ராஜத்துரோகியைக் கைது செய்யுங்கள்......நாடாளும் மன்னனிடம் நாடகம் ஆடுகிறாயா? உன்மீது வைத்திருந்த பழைய அன்பினால் உனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து நீ செய்த குற்றத்திற்கு மரண தண்டனை அளிக்காமல் நாடு கடத்துவதோடு நிறுத்திக் கொண்டேன். இப்பொழுது நீ என்ன தைரியத்தில் பொன்னாட்டின் மண்மீது காலெடுத்து வைத்தாய்?'' என்று கர்ஜித்தார்.

நான்கைந்து காவல் வீரர்கள் தூதனைக் கைது செய்ய நெருங்கினர். அவர்களைப் பார்த்த செல்லராஜனுக்கும் சற்றுக் கோபம் வந்தது. ''அங்கேயே நில்லுங்கள். உங்க

ளுக்கு என்னைக் கைதுசெய்ய உரிமை இல்லை. நான் உங்கள் மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டவனல்ல. மாட்சிமை பொருந்திய சோலைநாட்டு மன்னர் தயாளநந்தரின் தூதன் என்பது ஞாபகமிருக்கட்டும்.........மேன்மைமிக்க பொன்னாட்டு மன்னரே, நான் சோலைநாட்டிலிருந்து வந்த தூதன். இதோ எங்கள் மன்னர் தங்கள் சமூகத்திற்கு அனுப்பிய ஓலை. இதைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதை நீங்கள் வாங்க மறுப்பதோ என்னைக் கைது செய்வதோ எங்கள் சோலைநாட்டு மன்னரைக் கேவலப் படுத்துவதாகும். நட்புறவோடு இருக்கும் அண்டை நாட்டை அவமதிக்காதீர்கள். எனவே தயவுசெய்து தாங்கள் இதைப் பெற்றுக்கொண்டு பதில் ஓலை தரவேண்டும். இதுவே என் தாழ்மையான விண்ணப்பம்'' என்று பணிவுடன் கூறிக் கொண்டே ஓலையை மீண்டும் நாகநந்தரிடம் நீட்டினன்.

நாகநந்தர் ஓலையைப் பெற்றுக்கொண்டார். அவருடைய ஆத்திரம் அடங்கி நிதான மடைந்தது. மன்னர் ஓலையைப் பெற்றுக் கொண்டதுமே கைது செய்வதற்காக நெருங்கி வந்த காவல் வீரர்கள், பின்வாங்கித் தத்தம் இடத்திற்குச் சென்றனர். மன்னர் ஓலைச்சுருளைப் பிரித்துக்கொண்டே ராஜனைப் பார்த்து "தூதரே! அதோ அன்னியநாட்டுத் தூதர்கள் அமருவதற்கு ஆசனமிருக்கிறது. அதிலே சென்று அமருங்கள்'' என்று உத்தரவிட்டார். ராஜன் ஆசனத்தில் அமர்ந்ததும் சபையோரின் உள்ளம் ஆச்சர்யத்தால் நிரம்பியது.

மன்னர் ஓலையைப் படித்தார். அவருடைய முகத்திலே மீண்டும் ஆத்திரக்குறி எல்லைகடந்து தோன்றியது. படித்து முடித்த ஓலையைத் தன் அருகில் நின்றுகொண்டிருந்த சேவகன் மூலம் பக்கத்தில் அமர்ந்திருந்த மந்திரிக்கு அனுப்பினர். அவரும் ஓலையைப் படித்ததும் ஆச்சரியத்தில் மூழ்கினர். பின்னர் மன்னர் தூதரைப் பார்த்து, "தூதரே! நீர் நாளைக் காலை எங்களுடைய பதிலுடன் திரும்பிச் செல்லலாம். அதுவரை நீரும் உம்முடைய ஆட்களும் எங்களுடைய விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்க வேண்டும்'' என்று கூறினர். ராஜன் மகிழ்ச்சியுடன் மன்னரின் கட்டளையை ஏற்றுக்கொண்டு எழுந்து விடை

பெற்றுக்கொண்டான். ஒரு காவல் வீரன் தூதரை விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்றான். சோலை நாட்டுத் தூதர் சபையை விட்டு வெளியேறியதும் சபை உடனடியாகக் கலைக்கப்பட்டது. மன்னர் மந்திரியை அழைத்துக்கொண்டு தனது அந்தரங்க ஆலோசனை மண்டபத்திற்குச் சென்றார்.

சோலை நாட்டு மன்னரின் ஓலையில் பின்வரும் செய்தி எழுதப்பட்டிருந்தது. "மேன்மைதங்கிய பொன்னாட்டு மன்னர் நாகநந்தர் அவர்களுக்கு! தாங்கள் எனது சகோதரி வாசவதத்தையாரை நீண்ட நாட்களாகச் சிறையில் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டு ஆச்சரியமும், வருத்தமும் அடைகிறேன். நான் அங்கு வந்திருந்து திரும்பிய அன்றையதினமே இச்சம்பவம் நடைபெற்றிருப்பதாக நினைக்கிறேன். இளைய ராணியைத் திருப்திப்படுத்துவதற்காகத் தாங்கள் என் சகோதரிக்கு இழைத்திருக்கும் கொடுமை கண்டு உள்ளம் குமுறுகிறது. இந்த ஓலை கண்டதும் என் சகோதரி விடுதலை அடைய வேண்டும். இல்லையேல் என் சகோதரிக்கு நீதி கிடைப்பதற்காக நான் நடவடிக்கை எடுக்கவேண்டி யிருக்கும். நமது நட்புறவைத் துண்டித்துக்கொள்ள மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். தங்களுடைய முடிவைப் பொறுத்திருக்கிறது நமது இரு நாடுகளுக்கிடையேயும் இருக்கும் உறவு நிலைமையின் எதிர்காலம். தங்கள் முடிவை உடனடியாக அறிய விரும்புகிறேன். இங்ஙனம்—தயாளநந்தர்."

சோலைநாட்டு முத்திரையுடன் திகழ்ந்த அந்த ஓலை நாகநந்தருக்கு எச்சரிக்கை செய்வதுபோல இருந்தது. அதை அவரால் பொறுக்க முடியவில்லை. பட்டத்து ராணியை அவர் சிறையில் அடைக்கவில்லை. ராணி வாசவதத்தை தானே வலிய வந்து அந்த விரதத்தை மேற்கொண்டிருக்கிறார். நாகநந்தர் தடுத்தும் அவள் மறுத்து விட்டாள். எனவே இதைப் பற்றி அவர் ஒன்றும் செய்வதற்கில்லை. இது முழுக்க முழுக்க உள்நாட்டு விவகாரம். உள்நாட்டு விவகாரம் என்றுகூடச் சொல்ல முடியாது. சொந்தக் குடும்ப சமாச்சாரம். அப்படி யிருக்க, சோலை நாட்டு மன்னர், படையெடுத்து வருவது போன்று

எச்சரிக்கை விட்டிருப்பது அவருக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. இன்று இதற்குத் தான் பணிந்து போனுல் எதிர் காலத்தில் மேலும் பல எச்சரிக்கைகள் தொடரலாம் என்று எண்ணினுர். எனவே தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினுர். "இது எங்களுடைய சொந்த விஷயம். இதில் தலையிடுவதற்கு பிற நாட்டவர்க்கு உரிமையில்லை. அவ்விதம் உரிமை பாராட்டி வம்புக்கு வருவதானுல் அதற்குத் தான் தயாராக யிருப்பதாகப் பதிலோலை கொடுத்தனுப்ப விரும்பினுர் மன்னர். ஆனுல் மந்திரி நீதிவாணர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. "அரசே! இது நாட்டு விவகாரமல்ல. வீட்டு விவகாரம். இதை வைத்துக்கொண்டு நாம் சோலைநாட்டைப் பகை மைப்படுத்திக்கொள்ளக்கூடாது. எனவே இந்த ஓலைக்குப் பெரிய ராணியாரிட மிருந்து பதில் அனுப்பும்படி செய் வதே உகந்தது" என்று கூறினுர். மன்னரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

* * *

தன் காதலன் சோலை நாட்டுத் தூதராக வந்திருப் பதைக் கேள்விப்பட்டதும் இளவரசி கலாநந்தினி மகிழ்ச்சியடைந்தாள். இத்தனை நாட்களும் அவள் பட்ட துன்பங்களெல்லாம் மறைந்தோடிப் போய்விட்டன. முன்பின் தெரியாத அந்நிய நாட்டிலே தன் காதலன் என்னென்ன துன்பங்களை அடைந்து கொண்டிருக்கிருனே என்று இவ்வளவு நாட்களாக ஏங்கிக் கொண்டிருந்தாள். ஊண் உறக்கம் கொள்வதில்லை. தன்னுடைய வாழ்க் கையே சூன்யமாகி விட்டது போன்று தோன்றியது. எதிர் காலம் ஓரே இருள் மயமாகத் தென்பட்டது. ஆனுல் அந்த இருளினூடே ஒரு நம்பிக்கைச் சுடர் ஏற்பட்டதைப் போன்ற செய்தியை தன் தோழிகளில் ஒருத்தி கூறியதும் ஆனந்தப் பெருக்கால் திக்கு முக்காடினுள். எப்படியாவது ராஜனின் முகத்தை ஒரு முறை பார்க்க வேண்டும்போலத் தோன்றியது. ஆனுல் எப்படிச் சந்திப்பது? ஒன்றும் வழி தெரியாமல் திண்டாடினுள்.

ஊரில் மீண்டும் பரபரப்புக் கிளம்பியது. நாடு கடத்தப்பட்ட ராஜன் சோலைநாட்டு மன்னரின் தூதராக

வந்து அரண்மனை விருந்தினர் மாளிகையில் ராஜோபசாரத்துடன் தங்கியிருக்கும் செய்தி நகரெங்கும் புயல் போலப் பரவியது. அச்செய்தி பொன்னிக்கும் எட்டியது. இவ்வளவு நாளும் அழுது தவித்துக்கொண்டிருந்த அவள் அளவில்லாத ஆனந்தம் கொண்டாள். தன் மகனைப் பார்க்க வேண்டுமென்று தாயுள்ளம் துடிதுடித்தது. குடிசையைப் பூட்டிக்கொண்டு அரண்மனைத் தோட்டத்தை நோக்கி ஓடினாள். தோட்டத்தில் குப்பன் வேலை செய்வதை நிறுத்திவிட்டு ஏதோ ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தான். அச்சமயம் பொன்னி அங்கு வந்து சேர்ந்தாள். தன் கணவனைப் பிடித்து உலுக்கிக்கொண்டு "மச்சான்! மச்சான்! நமது செல்லராஜா வந்திருக்கிறானும். சோலை நாட்டுத் தூதராக வந்திருக்கிறானும். ராஜாங்க மரியாதையோடு விடுதியில் தங்கி யிருக்கிறானும். சீக்கிரம் போய் அவனைப் பார்க்கவேண்டும்" என்று அழைத்தாள்.

"நல்ல மகனைப் பெற்றுவிட்டாய்! ஏன் இப்படித் துடிக்கிறாய்? இந்த ராஜாங்க மரியாதையெல்லாம் என்ன காரணத்திற்கோ புரியவில்லை. என்னவோ சூது நடக்கிறது. இப்பொழுது மாலை போட்டு மரியாதை செய்வார்கள். அடுத்தகணமே கழுத்தில் கயிற்றைப் போட்டுத் தூக்கிலும் போடுவார்கள் நமக்கு இந்த வம்பெல்லாம் வேண்டாம். ஏற்கெனவே பட்டதெல்லாம் போதும். அந்தப் பிள்ளை நமக்குப் பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்வோம். தாய் தகப்பன் இருப்பது ஞாபகமிருந்தால் அவன் நம் வீட்டிற்கு வரக்கூடாதா?" என்று கூறி, போய்ப் பார்ப்பதற்கு மறுத்துவிட்டான்.

"ஆண்களுக்கு இப்படிக் கல்மனசு கூடாது. நீங்கள் வராவிட்டால் போங்கள், நான் என் செல்லராஜாவைப் பார்க்கத்தான் போகிறேன்" என்று கூறிவிட்டு விருந்தினர் மாளிகையை நோக்கி ஓடினாள்.

விருந்தினர் மாளிகையின் காவல்காரன் பொன்னியைத் தடுத்து நிறுத்திவிட்டான். அவரைப் போய் யாரும் பார்க்கக்கூடாது என்று மன்னர் உத்தரவிட்டிருப்பதாகச் சொல்லிவிட்டான். "ஐயா சாமி! உங்களுக்கு ரொம்

பவும் புண்ணியமாகப் போகட்டும். நீங்களாவது உள்ளே போய் அவருடைய தாயார் பார்க்க வந்திருப்பதாகக் கூறுங்கள். ஒருமுறை என் கண்மணியின் முகத்தை கண்ணுல் பார்த்தால் போதும். உடனே போய்விடுகிறேன். கொஞ்சம் தயவு செய்யுங்கள்'' என்று மன்ருடிக் கேட்டுக்கொண்டாள். காவல்காரன் சற்று மனமிளகி உள்ளே சென்ருன்.

''ஐயா! தங்களைப் பார்ப்பதற்குத் தங்கள் தாயார் வந்திருக்கிருர். ஒரு முறை கண்ணுல் பார்த்தால் போதுமென்று தவியாய் தவிக்கிருர். உள்ளே வரச் சொல்லட்டுமா ?'' என்று கேட்டான்.

ராஜன் சிறிது தயங்கியபின் உரத்த குரலில் பதில் கூறினுன். ''நான் சோலை நாட்டுப் பிரஜை. எனக்கு இந்த நாட்டில் எவ்வித உரிமையும் கிடையாது. நான் யாரையும் பார்ப்பதற்கில்லை. நான் பழைய தோட்டக்காரன் மகன் செல்லராஜனல்ல என்று கூறிவிடு. சோலை நாட்டு மன்னரின் பிரதிநிதி என்ற ஒரே உரிமையில்தான் இந்த நாட்டில் காலெடுத்து வைத்திருக்கிறேன். எனவே என்னை யாரும் பார்க்கவேண்டாம் என்று கூறிவிடு'' என்ருன்.

அவனுடைய குரல் வெளியே காத்திருந்த பொன்னியின் செவிகளில் கணீரென்று விழுந்தது. அவளுடைய பெற்ற மனம் பிள்ளைப் பாசத்தால் நடுங்கியது. தேம்பித் தேம்பி அழுதுகொண்டே மீண்டும் தோட்டத்தை நோக்கித் திரும்பினுள். அழுதபடி வரும் தன் மனைவியைப் பார்த்ததும், குப்பன் ஒன்றும் புரியாமல் விழித்தான். பதற்றத்துடன் ''என்ன நடந்தது? ஏன் அழுகிருய்?'' என்று கேட்டான். பொன்னி விம்மிக்கொண்டே நடந்ததைக் கூறினுள். குப்பன் ஏளனத்துடன் வாய்விட்டுச் சிரித்தான். ''அப்பொழுதே சொன்னேனே கேட்டாயா? நம் பையன் இறந்துவிட்டான் என்று நினைத்துக்கொள்.'' என்று சொல்லிப் பொன்னியைத் தேற்றினுன். ஆனுல் பொன்னிக்கு அழுகை அடங்கவில்லை.

பொன்னி விம்மிக்கொண்டே விருந்தினர் மாளிகையிலிருந்து திரும்பும்பொழுது, அவளுடைய குரலைக்கேட்டு ராஜனின் உள்ளம் தளர்ந்தது. தன்னுடைய தாயைப்

பார்க்க வேண்டுமென்று அவனுக்கும் ஆவல் தான். ஆனால் தான் ஏற்றுக்கொண்டுள்ள பணியை வெற்றியுடன் முடிக்க வேண்டுமே என்று கவலைப்பட்டான். தன் தாயை சந்திப்பதன் மூலம் மன்னரின் உள்ளத்தில் சந்தேகத்தை எழுப்பிவிடக் கூடாதே என்று மனத்தைக் கல்லாக்கிக் கொண்டிருந்தான். ஆனால் பெற்றதாயின் தேம்பும் குரல் செவியில் விழுந்ததும் அவளைப் பார்ப்பதற்காக வாசல் வரை குழந்தையைப்போல ஓடிவந்தான். ஆனால் அதற்குள் பொன்னி தேம்பிக்கொண்டே வெளியேறிவிட்டாள். தூரத்தில் செல்லும் அவளுடைய உருவத்தைக் கண்டதும் அவனுடைய கண்களிலும் நீர் துளிர்த்தது.

அச்சமயம் மந்திரி நீதிவாணர் அங்கு வந்துசேர்ந்தார். அவர் வரும் வழியில் பொன்னி அழுதுகொண்டு செல்வதைப் பார்த்திருக்கிறார். எனவே விருந்தினர் மாளிகையை அடைந்ததும் காவல்காரனிடம் விசாரித்து நடந்ததைத் தெரிந்துகொண்டார். இப்பொழுது உள்ளே வந்ததும் கலங்கிய கண்களுடன் நிற்கும் ராஜனைக் கண்டு அவருடைய மனம் இரக்கம் கொண்டது. "சோலை நாட்டுத் தூதரே! நீர் உமது தாயைச் சந்திக்க ஏன் மறுத்துவிட்டீர்?" என்று கேட்டார்.

"அமைச்சர் அவர்களே! நான் உங்கள் நாட்டிலிருந்து நாடுகடத்தப்பட்டவன். இந் நாட்டின் எல்லையைத் தாண்டும் பொழுது இந் நாட்டிலுள்ள பந்த பாசங்கள் அனைத்தையும் துறந்துவிட்டவன். எனவே நான் தாயென்ற பந்தத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் மீண்டும் உங்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவனாவேன். அப்படியானால் எனக்கு மீண்டும் நீங்கள் தண்டனை விதிக்க வேண்டி வருமல்லவா? நான் இப்பொழுது சோலை நாட்டு மன்னரின் தூதர். அந்த ஒரே உரிமையில்தான் எனக்கு விருந்தினர் மாளிகையில் இடம் கிடைத்திருக்கிறது. இல்லாவிட்டால் தூக்குமேடையிலோ அல்லது சிறைச்சாலையிலோதான் இடம் கிடைத்திருக்கும் அல்லவா?" என்று கேட்டுவிட்டு தன் துக்கத்தை மறைக்க வாய்விட்டுச் சிரித்தான்.

ராஜனின் பதிலைக் கேட்ட நீதிவாணர் மகிழ்ச்சி அடைந்தார். பின்னர் "தூதரே! சிறையிலிருக்கும் பெரிய ராணியார் உம்மைச் சந்திக்க விரும்புகிறார். நீர் சிறைக்குச் சென்று அவரைச் சந்திக்கவேண்டுமென்பது மன்னரின் கட்டளை. ஆகையால் பிற்பகலில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறது. தயாராக யிருங்கள்" என்று கூறிவிட்டு மந்திரி விடை பெற்றுக் கொண்டார்.

* * *

ராணி வாசவதத்தை தான் எழுதி வைத்திருக்கும் ஓலையுடன் சோலை நாட்டு மன்னரின் தூதரைச் சந்திப்பதற்குத் தயாராக யிருந்தார். ஆனால் அவர்முன் செல்ல ராஜன் வந்து நின்றதும் ஆச்சர்யத்தால் திகைத்துப் போனாள். அவனைப் பார்த்ததும் ஆத்திரம் பொங்கியது. அன்று இரவு நடந்த சம்பவத்தைப் பற்றியும், அதன் விளைவாக ராஜன் நாடு கடத்தப்பட்டதைப் பற்றியும் அவள் கேள்விப்பட்டிருந்தாள். மன்னரின் உப்பைத் தின்று வளர்ந்த அவன் இவ்வளவு பெரிய துரோகத்திற்குத் துணிந்ததைக் கேள்விப்பட்டதும் அவள் அவன்மீது வெறுப் படைந்திருந்தாள். இதற்கு முன்பெல்லாம் அவனைப் பார்க்கும் பொழுது அவளுடைய உள்ளத்தில் ஏற்பட்ட தாய்மை உணர்ச்சி இப்பொழுது சிறிதும் உண்டாகவில்லை. வெறுப்புடன் "நாடு கடத்தப்பட்ட நீ இங்கு எப்படி வந்தாய்?" என்று கேட்டாள்.

"தாயே! மன்னிக்க வேண்டும். நான் சோலை நாட்டு மன்னரின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன். தங்கள் சகோதரருக்குத் தாங்கள் ஓலை வைத்திருப்பதாகவும், என்னை நேரில் காண விரும்பியதாகவும் கூறினார்கள். அதற்காக இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறினான்,

"ஓஹோ! அப்படியா! சோலை நாட்டு மன்னர் பிற நாட்டு ராஜத் துரோகிகளை அந்நியநாட்டுத் தூதர்களாக அமர்த்திக் கொள்ளுவது என்று முடிவுசெய்துவிட்டாரா? நல்லது. அவர் இஷ்டப்படியே நடந்துகொள்ளட்டும். அவருடைய உள்நாட்டு விவகாரத்தில் நாங்கள் ஒன்றும்

குறுக்கே நிற்கவில்லை, பிறநாட்டு உள் விவகாரங்களில் அவரும் தலையிடவேண்டாமென்று கூறிவிடுங்கள். தங் கையை விடுதலை செய்ய அவர் ஒன்றும் கவலைப்பட வேண்டாமென்று சொல்லுங்கள். பொன்னுட்டு மன்ன ரின் மனைவியாக ஆவதற்கு முன்புதான் அவருக்கு என் னிடம் சகோதரர் என்ற உரிமை இருந்தது. இப்பொழுது கணவர்தான் எல்லோருக்கும் மேலானவர். அவருக்கு இல்லாத கடமையும் உரிமையும் வேறு யாருக்கும் இருக்க முடியாது. ஆகையால் என்னை விடுதலை செய்யவேண்டு மென்ற கவலை என் சகோதரருக்கு வேண்டாமென்று கூறி விடுங்கள். இதோ என்னுடைய ஓலை. நான் உங்களிடம் சொல்ல விரும்புவதை யெல்லாம் அந்த ஓலை சொல்லும். கொண்டுபோய்க் கொடுங்கள்'' என்று கண்டிப்புடன் கூறி ஓலையைக் கையில் கொடுத்தாள். ராஜன் ஓலையைப் பெற்றுக்கொண்டு ராணியை மரியாதையுடன் வணங்கி விட்டு வெளியேறினன். அவனுடைய உள்ளத்திலே வருத்தம் தோய்ந்திருந்தது. முன்பெல்லாம் இளவரசி கலாநந்தினியுடன் இங்கு வரும்பொழுது ராணி வாசவ தத்தை தன்னிடம் எவ்வளவு அன்பாக நடந்துகொண் டார்? ஆனுல் இப்பொழுது எவ்வளவு வெறுப்புற்றிருக் கிருர்? இதற்கெல்லாம் காரணம் இளவரசி தன் மீது கொண்ட காதல்தானு? காதல் அவ்வளவு கொடுமை யானதா?

இவ்வாறு சிந்திக்கத் தொடங்கிய அவனுடைய உள்ளம் கலாநந்தினியின்மீது பாய்ந்தது. அவளை எப்படி யாவது ஒருமுறை பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பினுல் நல்லது என்று நினைத்தான். ஆனுல் எப்படிப் பார்ப்பது என்பதுதான் அவனுக்கும் புரியவில்லை.

* * *

இரவு வெகு நேரமாகிவிட்டது. அரண்மனை அமைதி யில் மூழ்கிக் கிடந்தது. அங்கு மிங்கும் மங்கலான வெளிச் சங்கள் தெரிந்துகொண்டிருந்தன. அப்பொழுது இரண்டு வீரர்கள் மங்கிய ஒளியிலே விருந்தினர் விடுதியை நோக்கி

மெதுவாக நடந்து சென்றுகொண்டிருந்தனர். இருள் படிந்த இடமாகவே பார்த்து பூனைபோல் பதுங்கிச் சென்றது பார்ப்பவர்களுக்குச் சந்தேகத்தை உண்டாக்கும் விதத்தில் இருந்தது. ஆனால் அவர்களைப் பின்பற்றி மற்றொரு உருவம் சற்று தூரத்தில் மறைந்தபடியே வந்துகொண்டிருந்தது. இருவரும் விருந்தினர் விடுதியை அடைந்தனர். அங்கு காவல்காத்துக் கொண்டிருந்த வீரன் இவர்களைக் கண்டதும் உரத்த குரலில் "யார்" என்று அதட்டி வழி மறித்து நிறுத்தினான். வந்தவர்கள் இருவரும் தயங்கி சிறிது நேரம் மௌனமாக நின்றனர். பின்னர் தட்டுத் தடுமாறும் குரலில் நாங்கள் "சோலை நாட்டுத் தூதரைச் சந்திக்க வேண்டும்" என்று கூறினர்.

காவல் காரனுக்கு வியப்பாகப் போய்விட்டது. "என்ன! சோலை நாட்டுத் தூதரையா? . அதுவும் இந்த நேரத்தில். என்ன முக்கிய காரியமோ?......"

"வந்து... உம்... பெரிய ராணி ஏதோ அவசரமாக ஓலை ஒன்று கொடுத்தனுப்பினார்கள். தூதர் நாளைக் காலை ஊருக்குத் திரும்பிவிடுவதால் இன்று இரவே கொடுத்து விட்டு வரும்படி சொன்னார்கள். அதற்காகத்தான் இந்த இரவிலேயே இங்கு வந்தோம்."

"அப்படியா! இரவு நேரத்தில் ஓலை கொண்டுவரும் வீரர்களுக்கு குரல் பெண் குரலாக மாறிவிடும்போல் இருக்கிறது. ஒருவேளை பனியில் குரல் மாறி யிருக்கலாம். பரவாயில்லை. அந்த ஓலையைக் கொடுங்கள் பார்க்கலாம்."

"ஓலையை நீ படிக்கக் கூடாது. எனவே உனக்கு எப்படி நாங்கள் அதைக் காண்பிக்கலாம்."

"ஓஹோ! அதுவும் சரிதான். ஓலையை நான் படிக்கவில்லை. ஓலையைப் பார்க்காமல் நான் எப்படி உங்களை உள்ளே அனுமதிக்க முடியும்? ஓலையை எடுத்துக் காட்டுங்கள். தாராளமாக உள்ளே போகலாம்."

ஆண் வேடத்தில் வந்த இரண்டு பெண்களும் ஓலையைத் தேடுவதாகப் பாவனை செய்தார்கள். ஆனால் இருந்தால்தானே கிடைப்பதற்கு?

காவல்காரன் ஏளனத்துடன் சிரித்துக்கொண்டே கூறினன். "ஓலே கிடைக்காது. அதை வாங்கிக் கொள்ளு வதற்கு இங்கே ஆளும் இல்லே. நீங்கள் சோலே நாட்டுத் தூதரைச் சந்திப்பதற்கு வந்த இளவரசியின் தூதர்கள் என்பது எனக்குத் தெரியும். இப்படியெல்லாம் நடக்கு மென்பதற்காகத்தான் அவரை மாலேயே ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டார் மன்னர். ஆனுல் இப்பொழுது உங்களேக் கைது செய்து மன்னரிடம் ஒப்புடைக்க வேண்டியது என் னுடைய கடமை. என்ன சொல்கிறீர்கள்?" என்று கண்டிப்புடன் கூறினன்.

அதைக் கேட்ட தோழி பயத்தால் நடுங்க ஆரம் பித்தாள். ஆனுல் இளவரசி தன்னுடைய தலேப் பாகையையும் ஒட்டு மீசையையும் எடுத்துவிட்டு சற்று வெளிச்சம் நன்ருகப்படும் இடத்தில் வந்து நின்ருள். இளவரசியைக் கண்டதும் சேவகன் சற்று திகைப் படைந்தான். மரியாதையான குரலில் "உடனே சென்று விடுங்கள். யாரும் கண்டால் ஆபத்து" என்று கூறி அனுப்பி வைத்தான்.

தன் காதலன் திரும்பிப் போய்விட்டான் என்ற செய் தியைக் கேட்டதும் இளவரசிக்கு ஏமாற்றமும், வருத்த மும் உண்டாகியது. இனி அவரை என்று காணப் போகி ருேமோ என்ற ஏக்கம் அவளேப் பிய்த்துத் தின்றது. சோர்ந்த முகத்துடன் தன் மாளிகைக்குத் திரும்பலானுள். சில அடிகளே எடுத்துவைத்திருப்பாள். அப்போது மங்கிய ஒளியிலே ஒரு கிழ உருவம் அவர்களேக் கடந்து சென்றது. அந்த உருவத்தை அவள் எங்கோ கண்டிருக்கிருள். ஆமாம்! முன்பு ஒரு நடுநிசியில் செல்லராஜனும் அவளும் கலேக்கோயிலிலிருந்து திரும்பிவரும் பொழுது மரத்தடி யிலே சந்தித்த அதே உருவம்தான். இவரை செல்லராஜ னின் தாத்தா என்று அவன் அறிமுகப் படுத்தியது அவ ளுக்கு ஞாபகம் வந்தது. அவர் உண்மையிலேயே ஏதோ ஒரு உளவுகாரர்தான். இல்லாவிட்டால் இரவு நேரங் களில் சுற்றி அலேய வேண்டியதேன்? இன்று செல்ல ராஜன் சோலேநாட்டுத் தூதனுக இங்கு வந்து சென்றதற் கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கவேண்டும். இத்

தனை சந்தேகங்களும் ஒரே கணத்தில் அவள் உள்ளத்தில் பளிச்சென்று தோன்றின. உடனே சற்று அதிகாரம் கலந்த குரலில் "ஐயா பெரியவரே! சற்று நில்லுங்கள். நீர் யார்? உமக்கு இங்கு என்ன வேலை? உங்கள் மீது எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. நீர் ஏதோ ஒற்றர் வேலை செய்கிறீர் அல்லவா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

கிழவர் சற்று தாமதித்து நின்று புன்னகை புரிந்தார். ஆனால் எதுவும் பதில்சொல்லவில்லை. மீண்டும் இருளிலே நழுவி மறைய ஆரம்பித்தார். உடனே இளவரசி விருந்து மாளிகையில் நின்ற காவல்காரனை அழைத்து "அதோ! அங்கொரு கிழவர் செல்கிறார். அவரைப்பார்த்தால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது, அவரை உடனே கைது செய்யுங்கள்" என்று உத்தரவிட்டாள். ஆனால் காவல்காரன் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சற்று சிந்தித்துக்கொண்டு "இளவரசியாரே! நீங்கள் தான் இங்கு சந்தேகப்படக் கூடிய நிலைமையில் வந்திருக்கிறீர்கள். அப்படியிருக்க, நான் யாரைக் கைது செய்வது? தயவுசெய்து உடனே இங்கிருந்து போய்விடுங்கள்" என்று கேட்டுக்கொண்டான். இளவரசி வேறு வழியின்றி தம் மாளிகைக்குத் திரும்பிவிட்டாள்.

## 24

கடந்த சில மாதங்களாகப் பொன்னாட்டு மன்னர் நாகநந்தர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். ஒருசமயம் வேட்டைக்குப் போயிருந்தபொழுது அவருடைய காலிலே கெண்டைச் சதையில் ஒரு காயம் ஏற்பட்டது. அற்பமாகத் தோன்றிய அந்தக் காயம் அரண்மனை வைத்தியர்களின் சிகிச்சைகளுக் கெல்லாம் கட்டுப்படாமல் படிப்படியாக வளர்ந்து ரணமாகிவிட்டது. ரணத்திலே விஷத்தன்மை ஏற்பட்டுவிட்டதாக வைத்தியர்கள் எல்லோரும் கூறினார்கள். ஆனால் அந்த ரணத்தை ஆற்றுவதற்கு எந்த வைத்தியர்களாலும் முடியாமல் திண்டாடினார்கள். படுத்த படுக்கையாக வேதனை

யில் துடித்துக்கொண்டே மன்னர் படாதபாடு பட்டு வந்தார். மன்னரின் கால் ரணத்தைத் தீர்ப்பவர்களுக்கு வேண்டிய பரிசுகளெல்லாம் வழங்கப்படுமென்று பொன்னுடெங்கும் பறைசாற்றப்பட்டது. யாராரோ கத்துக்குட்டி வைத்தியர்கள் எல்லாம் அரண்மனைக்கு வந்து, தங்கி, வைத்தியம் செய்வதாகச் சொல்லி, ராஜவிருந்துகளை அனுபவித்துவிட்டுத் தோல்வியுடன் திரும்பினர். ஏதாவது ஒரு வைத்தியத்தில் தீர்ந்துவிடாதா என்பதற்காக எந்த வைத்தியர் வந்தாலும் அட்டியின்றி வரவேற்று விருந்தளித்தது அரண்மனை.

அப்படியிருக்கையில் ஒருநாள் அரபு தேசத்திலிருந்து ஒரு முஸ்லீம் ரண வைத்தியர் வந்துசேர்ந்தார். அவர் மந்திரியைப் பார்த்து தன்னுல் மன்னரின் ரணத்தை நிச்சயமாகக் குணப்படுத்த முடியுமென்று வாக்களித்தார். அவரை அழைத்துக் கொண்டு நீதிவாணர் மன்னரிடம் வந்து அறிமுகப் படுத்தினுர். "அரசே! வடக்கே வெகு தொலைவிலிருந்து இந்த முஸ்லீம் வைத்தியர் வந்திருக்கிருர். இவர் தங்களைக் குணப்படுத்துவதாகக் கூறுகிருர்" என்ருர்.

மன்னர் தன் முன் நிற்கும் அந்த வைத்தியரை ஏறிட்டுப் பார்த்தார். அவருடைய உடைகளும், தோற்றமும் மிகவும் விசித்திரமாக யிருந்தன. அரேபிய முறையில் அவர் உடை உடுத்தியிருந்தார். தலையிலே முக்காடிட்டு அதன்மேல் ஒரு பெரிய உருமால் கட்டியிருந்தார். தலைப்பாகையில் தொங்கிய நீண்ட துணி மார்புப் பக்கமாகச் சுற்றி தோள் வழியாகப் பின்னோக்கிச் சென்று தொங்கியது. இளமையும், தேஜசும் நிரம்பிய அந்த முகத்திலே அழகிய இளந்தாடியும் மீசையும் ஒன்ருேடொன்று வந்து உறவாடி ஐக்கியப்பட்டு நெற்றிப் பொட்டுகளை நோக்கி மேலேறிச் சென்றுகொண்டிருந்தன. சாயம் தீட்டப்பட்டிருந்ததால் அடர்ந்த புருவமும் அழகிய தாடியும் செம்பட்டையாகக் காட்சி யளித்தன. உடல் பூராவும் மறைத்துக்கொண்டு அழகிய வேலைப்பாடு நிறைந்த ஒரு மேலங்கியை அணிந்திருந்தார். இடுப்பிலே ஒரு நீண்ட பை தொங்கிக்கொண்டிருந்தது. அவருடைய கால்களை

ஜிகினு வேலைப்பாடு அமைந்த பாதரட்சைகள் அலங்கரித்துக்கொண்டிருந்தன. மன்னர் தன்னைப் பார்த்ததும் மண்டியிட்டு வணங்கி சலாம் செய்தார் அரபு வைத்தியர்.

"ஐயா வைத்தியரே! உங்களுக்கு எந்த தேசம்?" என்று கேட்டார் மன்னர்.

"நம்பள் அரேபியாமே வந்தான். துனியாசப்கோ சுத்தரான். நிம்பிள்கி ரணம் கேட்டான். நம்பள் வந்தான்" என்று கூறிவிட்டுக் கம்பீரமாகச் சிரித்தான்.

"ஓஹோ! அப்படியா. மிகவும் மகிழ்ச்சி. அதோ அந்த ஆசனத்தில் அமருங்கள். உங்கள் பெயரென்ன?" என்று கேட்டுக்கொண்டே மன்னர் ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டினர். அரேபிய வைத்தியர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டே "ஹுசூர்! நம்பள் பேர் அல்லாதீன்" என்றான்.

"அல்லாதீன்! நீங்கள் இந்த ரணத்தைக் குணப்படுத்திவிட்டால் உங்களை என்றென்றும் அரண்மனை வைத்தியராக வைத்துக்கொள்ளுகிறேன். வேண்டிய பரிசுகளெல்லாம் தருகிறேன். முதலில் வேதனையை உடனடியாகக் குணப்படுத்தவேண்டும்" என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டார் மன்னர்.

அல்லாதீன் முகத்திலே நம்பிக்கை தென்பட்டது. "மகாராஜ்! அல்லா எல்லாம் செய்வான். அல்லாக்கா பேர் சொல்லி நம்பள் மருந்து போட்டால் பஸ். ஜல்தி ஜல்தி குணப்படுரான் தேக்கோஜி" என்று பணிவுடன் கூறினன்.

மன்னர் வைத்தியருக்கு வேண்டிய சாதனங்களை எல்லாம் ஏற்பாடு செய்து கொடுக்கும்படி மந்திரிக்கு உத்தரவிட்டார். சேவகர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்களிடம் கொதிக்கிற வெந்நீரும், வேறு சில சாதனங்களும் கொண்டுவரும்படி வைத்தியர் கூறினர். பின்னர் பக்கத்திலுள்ள ஓர் அறையில் சென்று வைத்தியர் தன் பைக்குள் இருந்த மூலிகையை எடுத்து அரைத்துக்கொண்டு மன்னரிடம் வந்துசேர்ந்தார். புண்ணை நன்ருக

வெந்நீர்விட்டுக் கழுவி, பின்னர் தான் அரைத்து வைத்திருந்த பச்சிலை மருந்தை ரணத்திலே வைத்து மேலே ஒரு மெல்லிய வெண்துணி போட்டுக் கட்டினார். அந்தப் பச்சிலை மருந்து பட்டவுடனேயே மன்னரின் வேதனையெல்லாம் அடங்கிவிட்டது. நொடிப்பொழுதில் இந்த மாற்றத்தைக் கண்ட மன்னர் ஆனந்தமடைந்தார். "அல்லாதீன்! உம்முடைய மருந்து நல்ல மருந்துதான். உடனே வலி நின்றுவிட்டது" என்று கூறி வைத்தியரை உற்சாகப்படுத்தினார் மன்னர். பின்னர் மந்திரியைப் பார்த்து "நீதிவாணரே! நமது விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்க இவருக்கு ஏற்பாடு செய்யுங்கள். இவருக்கு யாதொரு குறையும் ஏற்படக்கூடாது" என்று உத்தரவிட்டார்.

வைத்தியர் தன் மூட்டை முடிச்சுகளையெல்லாம் கட்டிக்கொண்டார். மறுபடி மாலையில் வருவதாகக் கூறிவிட்டு நீதிவாணருடன் புறப்படத் தயாரானார். அச்சமயம் தந்தையைப் பார்ப்பதற்காக இளவரசி கலாநந்தினி உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டதும் அல்லாதீன் சற்று நிலைகுலைந்து நின்றுவிட்டார். அவருடைய நெற்றியிலே அந்தக் குளிர்ந்த காலை நேரத்திலும்கூட அரும்பரும்பாக வியர்வை துளிர்த்தன. தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்க்கும் அந்தப் புதிய வெளிநாட்டாரின் பார்வையை கலாநந்தினியால் பொறுக்க முடியவில்லை. தலையைக் கவிந்துக்கொண்டு தந்தையிடம் சென்றாள். "அப்பா! இப்பொழுது எப்படியிருக்கிறது?" என்று கவலையுடன் கேட்டாள். அதற்கு மன்னர் மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டே "அதோ அந்த வைத்தியர் அரபு தேசத்திலிருந்து வந்திருக்கிறார். அவர் இப்பொழுது தான் ஒரு மருந்து போட்டார். வலி உடனே நின்று விட்டது. விரைவில் குணமாகிவிடும் என்கிறார்" என்று கூறி மந்திரியுடன் வெளியே சென்றுகொண்டிருக்கும் அந்த வைத்தியரைச் சுட்டிக் காட்டினார். கலாநந்தினி நன்றியறிதலுடன் அந்த வைத்தியரைத் திரும்பிப் பார்த்தாள். அந்த வைத்தியரும் அதே சமயம் திரும்பிப் பார்த்துப் புன்னகை புரிந்தார். அதைக் கண்ட கலாநந்தினி மிகவும் அருவருப்புக் கொண்டாள். முன்பின் தெரியாத யாரோ

ஒரு அன்னியன் அவளைப் பார்த்துச் சிரிப்பதென்றால் அவளைப் பற்றி என்ன நினைப்பது. வைத்தியர் பிறருக்கு வைத்தியம் செய்வதில் கெட்டிக்காரர்தான் போலிருக்கிறது. ஆனால் இவருக்கு வைத்தியம் செய்ய வேறு யாராவது வேண்டும் போலிருக்கிறதே என்று தனக்குள்தானே எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

## 25

விருந்தினர் மாளிகையில் வைத்தியருக்கென்று ஒரு தனியான அறையை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். அவர் அதிலே தங்கியிருந்தார். நடுப்பகல் ஆனதும் பணிப் பெண்கள் உணவு கொண்டுவந்தனர். அரபு வைத்தியர் தமிழ் நாட்டு உணவை ரசித்துச் சாப்பிட்டதைப் பார்த்த பணிப்பெண்கள் ஆச்சரியப்பட்டனர். பணிப் பெண்களில் ஒருத்தி "ஐயா! உங்கள் நாட்டில் இந்த மாதிரி சாப்பாடு இருக்காதே. எங்கள் தமிழ் நாட்டுச் சாப்பாடு உங்களுக்குப் பிடிக்கிறதா?" என் கேட்டாள்.

"வாரேவா. நிம்பள் தமிள் கானு நல்லா இருக்கான். பலே பலே அச்சா இருக்கான்" என்று கூறிக்கொண்டே வயிறார உண்டு முடித்தார் வைத்தியர். பின்னர் பணிப் பெண்களெல்லாம் சென்றதும் கதவைத் தாளிட்டுக் கொண்டு சற்று நேரம் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தார்.

வெயில் தாழ்ந்து மாலையானதும் வைத்தியர் எழுந்து தன்னுடைய ஆடை அலங்காரங்களை எல்லாம் முடித்துக் கொண்டு வெளியே கிளம்பினார். விருந்தினர் மாளிகையின் காவல்காரனைப் பார்த்து "ஹரே சிப்பாய்! நிம்பிள் ஊரிலே தோட்டம் இருக்கானு?" என்று கேட்டார்.

"தோட்டம் இருக்கானுவா? தோட்டம், துரவு, கொல்லை கொடிக்கால் எல்லாப் பயல்களும் இருக்கிறான்கள். இங்கே நம் அரண்மனைக்குள்ளேயே பெரிய நந்தவனம் இருக்கிறது" என்று கூறினான் காவல்காரன்.

"அப்போ நம்பள்கி அதைப் பார்க்கிறான், நிம்பள் வழி சொல்லும்" என்று அரண்மனைத் தோட்டத்திற்கு வழி கேட்டான் அரபு வைத்தியன்.

காவல்காரன் சற்று யோசித்துவிட்டு "ஐயா! இப்போது நீங்கள் அங்கே போகமுடியாது. அரண்மனைப் பெண்கள் அங்கே இந்த நேரத்தில் உலாவ வருவார்கள். ஆகையால் மற்ற ஆண்கள்யாரும் அங்கே போகக்கூடாது. தோட்டத்து வேலையாட்கள் மட்டும்தான் போகமுடியும்" என்றான்.

இதைக்கேட்ட அரபு வைத்தியன் விழுந்து விழுந்து சிரித்தான். "அரேரே நிம்பள்கி பொம்பளேங்ககூட கோஷா போட்ரான் ஹை. ஹரே சிப்பாய்! நம்பள் பொம்பளே பார்க்கப் போரானில்லே. மருந்துக்கு ஒரு செடி புடுங்கணும். ராத்தரி ராஜாவுக்கு மருந்து போடணும் இல்லே" என்று கேட்டான்.

"சரி சரி. நீங்கள் போகவேண்டியது அவசியம்தான்" என்று கூறி அரண்மனைத் தோட்டத்திற்கு வழி சொல்லி அனுப்பினான் காவல்காரன்.

அரபு வைத்தியன் அரண்மனைத் தோட்டத்திற்குள் நுழையும்பொழுது இளவரசி கலாநந்தினி அங்கே உலவ வந்திருந்தாள். தோட்டத்திற்கு உலவ வரும்பொழுதெல்லாம் கலாநந்தினி ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சிறிது நேரம் தனியே அமர்ந்து ஏதோ சிந்தனைகளில் மூழ்கி யிருப்பாள். பழைய சம்பவங்களுக்கெல்லாம் காரணமாக இருந்த அந்த ரோஜா புதர் இன்னும் அங்கேயே அடர்ந்து வளர்ந்து பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தது. அங்கிருந்த எத்தனையோ பழைய செடிகள் பட்டு மறைந்துபோய் விட்டன. ஆனால் அவற்றின் புதிய பரம்பரை தங்கள் மூதாதைகளின் காலடி மண்ணிலே புத்துயிர் பெற்று வளர்ந்து அங்கேயே நிலைத்து நின்றன. அந்த இடத்திற்கு வரும்பொழுதெல்லாம் கலாநந்தினிக்குத் தன் காதலனின் எண்ணம் வந்துவிடும். தன்னுடன் வந்த தோழிகளை அனுப்பிவிட்டு சிறிது நேரம் தனிமையிலிருப்பாள். இன்று தினமும் அவ்விதம் ஏகாந்தத்தில் மூழ்கியிருக்கும்

பொழுது யாரோ தன்னை நெருங்கிவரும் காலடி யோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அரபு வைத்தியன் சிரித்துக்கொண்டே அங்கு வந்து நின்றான். அவனைக் கண்ட கலாநந்தினி ஆத்திரத்துடனும் அருவருப்புடனும் எழுந்து நின்றாள். உடனே அரபு வைத்தியன் தலையைத் தாழ்த்தி "சலாம் மாலேகும், இளவரசி!" என்று வணக்கம் தெரிவித்து நின்றான்.

கலாநந்தினிக்குக் கோபம் வந்தது. மரியாதை தெரியாத இந்த அன்னிய வைத்தியனை நன்றாகத்திட்டி அனுப்ப வேண்டுமென்று தோன்றியது. ஆனாலும் தன் தந்தைக்கு மருத்துவம் செய்து குணப்படுத்தும் அவனை அவ்விதம் திட்டுவது சரியல்ல என்று நினைத்து, தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு "ஏன் ஐயா! உங்களுக்குப் பண்பாடு தெரியாதோ?" என்று கேட்டாள். அவளுடைய குரலிலே ஓரளவு ஆத்திரம் தொனித்ததை அவளால் மறைக்க முடியவில்லை.

"க்யா இளவரசி? பண்பாடு சொன்னால் என்ன? நம்பள்கி தமிள் அச்சா தெரிரானில்லே. தோடே டஹ்ரோ! அபி பாத்து கண்டு பிடிக்கிறான்" என்று சொல்லிக் கொண்டே அரபு வைத்தியன் தனது மேலங்கிச் சட்டைபைக்குள் கையைவிட்டு ஒரு சிறிய ஓலைச் சுவடியை எடுத்தான். அதைச் சிறிது புரட்டினான். பின்னர் அதை மீண்டும் பைக்குள் போட்டுவிட்டு "அச்சா! கண்டுபிடிச்சிட்டான். பண் சொன்னா பாட்டு. பாடு சொன்னா பாட்டு பாடு. அச்சா. நிம்பள் நம்பளை பாட்டு பாடச் சொல்றான் இல்லே" என்று கூறிவிட்டு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

அவனுடைய அசட்டுத் தனத்தைக் கண்டு பரிதாபத்துடன் சிரித்துவிட்டு "ஐயா வைத்தியரே! நீர் செய்வது வைத்திய மல்ல. பைத்தியம். வைத்தியருக்குப் பாடக் கூடத் தெரியுமா?" என்று ஏளனத்துடன் கேட்டாள் இளவரசி.

"ஓ நல்லா பாட்டுப் பாடரான் கேளுங்கோ" என்று சொல்லிவிட்டு அருகில் யாராவது இருக்கிறார்களா என்று

சுற்று முற்றும் பார்த்தான். அதைக் கண்ட இளவரசி "வைத்தியரின் பாட்டைக் கேட்டு யாரும் கல்லை எடுத்துக் கொண்டு அடிக்க வந்துவிடுவார்கள் என்று பார்க்கிறீரா? பக்கத்தில் யாரு மில்லை. சற்றுத் தொலைவில்தான் இருக்கிறார்கள். பயப்படாமல் பாடலாம்" என்று தைரிய மூட்டிவிட்டுச் சிரித்தாள்.

இதுவரை தன்னுடைய இயற்கைக் குரலை மாற்றிப் போலியாகப் பேசிவந்த செல்லராஜன் தன்னுடைய இயற்கையான குரலில் மெதுவாகப் பாட ஆரம்பித்தான்.

**"காதல் கரங்கள் வளர்த்த செடிகளில்**
**காற்றி லசைந்திடும் ரோஜாவே**
**வேதனை தீர்த்திடக் காதலன் வந்திடும்**
**வேளையும் வந்தது கண்டிடுவாய்"**

குரலாலும் பாட்டின் அர்த்தத்தாலும் இளவரசி கலாநந்தினி தன் எதிரே நிற்கும் அரபு வைத்தியன் யார் என்பதைக் கண்டுகொண்டாள். ஆச்சரியத்தால் பிரமித்துப் போனாள். "யார், நீங்களா? என்னால் அடையாளம் கண்டுபிடிக்கவே முடியவில்லையே!"

"ஆமாம் கலாநந்தினி. நானேதான். உன்னுடைய செல்லராஜனேதான். பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும்கூடப் பிரிந்திருக்க முடியும். ஆனால் உன்னைப் பிரிந்திருப்பது என்பது இனிமேல் என்னால் முடியாது. எப்படியாவது உன்னை அடைந்தே தீரவேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

கலாநந்தினியின் உள்ளம் ஆனந்தப் பெருக்கால் கரை புரண்டது. சிறிது நேரம் ஒன்றும் பேச முடியாமல் தத்தளித்தாள். அவளுடைய கண்களிலே கண்ணீர் துளிர்த்தது. சிறிது நேரம் அவனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னர் ஏதோ பேசப் போகும் பொழுது தோட்டக்காரன் மனைவி பொன்னி அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தாள். அதைக் கண்ட கலாநந்தினி ராஜனைப் பார்த்து "வைத்தியரே! நான் போய் வருகி

றேன்'' என்று கூறிவிட்டுத் தன் மாளிகையை நோக்கிச் சென்றுவிட்டாள்.

கலாநந்தினிக்கு அந்த ரோஜாப் புதர், எவ்வளவு முக்கியம் வாய்ந்ததாகத் தென்பட்டதோ அதே மாதிரி பொன்னிக்கும் அந்த ரோஜாப் புதர் ஒரு முக்கியமான இடமாக விளங்கியது. அந்த ரோஜாப் புதரைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவளுக்குத் தன் மகனின் ஞாபகம் வந்துவிடும். அந்தப் புதரைப் பார்த்துச் சிறிதுநேரம் மௌனமாகக் கண்ணீர் வடித்து தன் மனவருத்தத்தைத் தீர்த்துக் கொள்ளுவாள். அதிலே அவளுக்கொரு ஆறுதல். பொன்னி அங்கு வந்ததும் அங்கு நிற்கும் புதிய ஆளை ஏற இறங்கப் பார்த்தாள். அவனுடைய உடைகளும் சிவந்த தாடியும் மீசையும் அவளுக்கு விசித்திரமாகக் காட்சியளித்தன.

செல்லராஜனுக்குத் தன் தாயைக் கண்டதும் அளவு கடந்த பரிதாபம் ஏற்பட்டது. ''அம்மா இதோ உன் மகன் வந்துவிட்டேன். அன்று தினம் நீ என்னை அன்புடன் பார்க்க ஓடி வந்தபோது பார்க்க முடியாது என்று மறுத்துவிட்ட கல்நெஞ்சன் இதோ உன் முன்னால் நிற்கிறேன். மன்னித்துவிடு அம்மா'' என்று அவள் காலில் விழுந்து கதறவேண்டும்போல் தோன்றியது. ஆனால் அவ்விதம் செய்வது தன்னைக் காட்டிக்கொடுத்து சங்கடத்தில் மாட்டி விடும் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே உள்ளத்தில் பொங்கும் ஆவல் அத்தனையையும் அடக்கி ஒடுக்கிவிட்டான். மனதைக் கல்லாக்கிக் கொண்டான். நாடகத்தை எப்படியும் நன்றாக நடத்தி, தான் வந்த காரியத்தில் வெற்றியடைய வேண்டுமென்று உறுதி செய்துகொண்டான்.

தன் முன்னே நிற்கும் புதுவிதமான ஆசாமியைப் பார்த்து ''ஐயாவுக்கு எந்த ஊர்?'' என்று கேட்டாள் பொன்னி.

''நம்பள்கி ஊர் கேட்கிறான். அரேபியா தேசத்திலே வந்தான். நிம்பள் ராஜாக்கி வைத்தியம் செய்யரானில்லே நான்.''

"ஓஹோ! புதிசாக வந்திருக்கும் வைத்தியரா நீங்கள்? காலையிலே மருந்து கட்டினதிற்குள்ளே வலி யெல்லாம் நின்று போச்சென்று எல்லாரும் சொல்லுகிறார்களே. நீங்கள்தானா அந்த வைத்தியர்! நல்ல கைராசிக்காரர் தான்."

"ஹறே! அது நம்பள் கைராசி யில்லே. நம்பள் ஊர்லே நம்பள் அம்மா இருக்கிறு. அவள் படே படே நல்லவள். அவளெ நெனச்சு நம்பள் மருந்து போடறான். வியாதி ஸப் ஓடிப்போருன்" என்று கூறிச் சிரித்தான் அரபு வைத்தியன்.

"நீங்கள் ரொம்ப ரொம்ப நல்ல மனுஷர். பெற்ற தாயை இவ்வளவு தூரம் கொண்டாடுகிறீர்கள். ஆனால் எல்லாப் பிள்ளைகளுமா உங்களைப்போலத் தாயைக் கொண்டாடுகிறார்கள்? உங்களைப் பெற்றவள் மிகவும் புண்ணியவதி" என்று சொல்லிவிட்டு ஒரு ஆழ்ந்த பெரு மூச்சு விட்டாள். பின்னர் பரிதாபத்துடன், பூத்துக் குலுங்கும் ரோஜா மலரைப் பார்த்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தாள். அவள் கண்களிலே நீர் தாரை தாரையாக வழிந்தது. அதைப் பார்த்ததும் செல்லராஜனுக்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது. அவனுடைய கண்களிலும் நீர் மல்கியது. "அம்மா! நிம்பள் ஏன் ரோஜாப் பூவைப் பார்த்து அழுருன். ரோஜாப்பூ நிம்பிள்கி வேணுமா? சொல்லுங்கோ நான் புடுங்கித் தரான்" என்ருன்.

பொன்னி தன் கண்களைத் துடைத்துக்கொண்டே "இல்லை ஐயா! எனக்கும் உங்களைப்போல ஒரு மகன் இருந்தான்......"

"ஏன். இப்போ அவன் செத்துப் போயிட்டானு?"

"அப்படி யெல்லாம் சொல்லாதே ஐயா. சிரஞ்சீவி யாக வாழவேணும். அவன் இப்பொழுது நல்ல இடத் திலே நல்ல நிலையிலே இருக்கிருன். பெரிய மகாராஜாவிட மிருக்கிருன்."

"ஓஹோ! அப்படீஞ அவன் நிம்பளே கவனிக்கிரு னில்லே சொல்லுங்கோ. அதுதான் நிம்பள் அழுகிருன் ......"

"அவன் நல்லவன்தான். நிலைமை அப்படி மாறிப் போய்விட்டது. அவனை எங்கள் மகாராஜா நாடு கடத்தி விட்டார்......"

"ஏன்? என்ன தப்பு செய்தான்?"

"உம்மோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டுப் போகிருரே இளவரசி, அவராலே வந்ததுதான் இதெல்லாம். தாய்க்குப் பிள்ளை இல்லாமல் செய்துவிட்டாள் புண்ணிய வதி" என்று கூறிக்கொண்டே தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள். அச்சமயம் பொன்னியைத் தேடிக் கொண்டு குப்பனும் அங்கு வந்துசேர்ந்தான். நடந்த விஷயங்களை ஓருவாறு ஊகித்தறிந்துகொண்ட அவன் "இவளைப் பாருங்களய்யா. மகன் மகன் என்று சொல்லி அழுதுகொண்டே இருக்கிருள். உலகத்திலே இல்லாத அதிசயமாக இவள் ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டா ளாம். ஏங்கித் தவிக்கிருள். பெற்று வளர்க்கிறவரை யில்தானே பிள்ளை நமக்குச் சொந்தம். அப்புறம் நீ யாரோ நாஞரோ. இது தெரியாமல் இவள் அழுது கொண்டே யிருக்கிருள். நீங்கள்தான் சொல்லவேண்டு மையா" என்ருன்.

அரபு வைத்தியன் பொன்னியைத் தேற்றினுன். "அழாதே அம்மா! நிம்பள் புள்ளே ஒரு நாளைக்கு நிம்பிள்கி வரான். எல்லாம் அச்சா ஆயிப்போகும்" என்று கூறி விடை பெற்றுக்கொண்டு விருந்தினர் மாளிகையை நோக்கிச் சென்ருன். விருந்தினர் மாளிகையில் அவனை அழைத்து வரும்படி மன்னர் அனுப்பிய வேலையாள் தயாராகக் காத்துக்கொண்டிருந்தான். உடனே தன் அறைக்குள் நுழைந்து மருந்துப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு அரபு வைத்தியனுன செல்லராஜன் மன்னர் மாளிகைக்குப் புறப்பட்டான்.

## 26

அரபு வைத்தியரின் மருந்து அற்புதமாக வேலை செய்தது. இரண்டே நாட்களுக்குள் மன்னரின் ரணம் ஆறித் தழும்பாக மாறிவிட்டது. மன்னர் எழுந்து நடமாட ஆரம்பித்துவிட்டார். இதுவரை இந்த மாதிரி சிறந்த வைத்தியரைத் தான் கண்டதே இல்லை யென்று மனமாரப் போற்றிப் புகழ்ந்தார் மன்னர். தன்னைக் குணப்படுத்து வதற்கென்று கடவுளே எங்கிருந்தோ இந்த வைத்தியரை அனுப்பி வைத்திருப்பதாக மன்னர் பெருமைப்பட்டுக் கொண்டார். அரபு வைத்தியரின் புகழ் மூன்றுவது நாளே நகரமெங்கும் பரவியது. நகரப் பிரமுகர்கள் எல்லோரும் தங்கள் உடம்பில் ஏதேதோ வியாதிகள் இருப்பதாகக் கூறி அரபு வைத்தியரின் தரிசனத்திற்கு வர ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் அரபு வைத்தியர் யாருக்கும் வைத்தியம் செய்ய மறுத்துவிட்டார். ரண வைத்தியத்திற்கு மட்டுமே தனது குருநாதர் மூலிகை சொல்லிக் கொடுத்திருப்பதாகவும், அதுவும் அல்லாவின் அந்தரங்க ஆணையில்லாமல் வைத்தியம் செய்ய முடியாது என்றும் மறுத்துவிட்டார். இதனால் அரபு வைத்தியரிடம் பல பிரபுக்கள் குடும்பப் பிரமுகர்களுக்குச் சிறிது மன வருத்தம். என்றாலும் அரபு வைத்தியருக்கு அரண்மனை யில் அளவுகடந்த மரியாதையும் உபசாரமும் ஏற்பட்டது. அவர் ராஜோபசாரத்துடன் விருந்தினர் மாளிகையில் தங்கிவந்தார். வைத்தியருடைய உள்ளமெல்லாம் இளவர சியை எப்படிச் சந்திப்பது என்பதிலேயே லயித்திருந்தது.

ஒருநாள் வைத்தியருக்கு உணவு பரிமாறுவதற்கு வந்த தோழிகளில் ஒருத்தி ஒரு விசித்திரப் பண்டத்தை வைத்தியரின் கையிலே கொடுத்து "ஐயா! மன்னரின் வியாதியை விரைவில் குணப்படுத்தியதற்காக எங்கள் இளவரசி இதை தங்களுக்குப் பரிசாகக் கொடுத்தனுப்பி யிருக்கிறார்" என்றாள்.

"அச்சா! துமாரா இளவரசிக்கு ரொம்ப ரொம்ப மெஹர்பாணி சொல்றேன். ரொம்ப ரொம்ப நன்றி சொல்

10

ருன். அவன்கிட்டே நீம்பள் சொல்லணும்'' என்று கூறி வைத்தியர் அந்தப் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

தோழிகளெல்லாம் சென்றதும் அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு இளவரசியின் பரிசுப் பொருளை ஆராய ஆரம்பித்தான். அது ஒரு சிறிய வெள்ளிப் பெட்டி, மிகவும் அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது. பெட்டியின் உள்ளே சிறுசிறு அறைகள் அமைத்து மூடப் பட்டிருந்தன. அறையின் மூடியைத் திறக்க முடியவில்லை. இளவரசி பரிசனுப்பி யிருக்கிருள் என்றவுடனேயே அதில் தனக்கு முக்கிய செய்தியிருக்குமென்று செல்ல ராஜன் நினைத்தான். ஆனுல் பெட்டிக்குள் இருக்கும் அறையின் மூடிகளை எப்படித் திறப்பது என்றே புரிய வில்லை. வெகுநேரம் வரை முயற்சி செய்தும் திறக்கமுடி யாததால் மனச்சோர்வும் ஆத்திரமும் உண்டாகியது. பெட்டியைத் தன் முன் இருந்த மேஜைமீது வைத்துவிட்டு ஆத்திரத்துடன் ஒரு பக்கமாக ஒதுக்கித் தள்ளினுன். பெட்டி ஒரு மூலையிலிருந்து இன்னெரு மூலைக்கு உராய்ந்து கொண்டு சென்றது. அப்போது பெட்டிக்கடியில் அமைக் கப்பட்டிருந்த நான்கு கால்களும் மேஜையில் உராய்ந்து சருக்கின. கால்கள் அப்போது திருகப்பட்டுத் தளர்ச்சி அடைந்ததால் பெட்டிக்குள் இருந்த அறைகளின் மூடி படாரென்று திறந்துகொண்டன. அதைக் கண்ட செல்ல ராஜன் மிகவும் மகிழ்ச்சி யடைந்து பெட்டியின் சிறிய அறைகளை உற்றுநோக்கினுன். ஓர் அறையினுள்ளே ஓர் ஓலைச்சுருள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான். அதை ஆவலுடன் எடுத்துப் படித்தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது, ''ஐயா அரபு வைத் தியரே! என்னுடைய வியாதிக்கும் தங்களிடம் சிகிச்சை பெற விரும்புகிறேன். இரவு ஊரடங்கியதும் அரண்ம னைக்கு மேற்கே ஆற்றங்கரையில் உள்ள கோயிலுக்கு வந்து சேருங்கள். கோயிலைச் சுற்றிலும் சிறிய திருமதில் இருக்கிறது. கோயில் கதவு தாளிடப்பட்டிருக்கும். தாங் கள் சுவரில் ஏறிக் குதித்து கோயிலுக்கு உள்ளே வந்து காத்திருங்கள். நான் அங்கு வந்து தங்களைச் சந்திக் கிறேன்.''

ஓலையில் கையெழுத்திடப்படவில்லை. அந்த ஓலையை மறுபடியும் அந்தப் பெட்டிக்குள் வைத்து பெட்டியின் கால்களைத் திருகி மூடிவிட்டான். பின்னர் அந்தப் பெட்டியை தன்னுடைய மருந்துப் பைக்குள் பத்திரமாக வைத்துத் தன்னுடைய பொருள்களுடன் பாதுகாப்பான ஓரிடத்தில் வைத்துவிட்டான்.

அன்று பகல் முழுவதும் பொழுது ஆமை வேகமாக நகர்ந்தது. பகல் உணவு வந்தபொழுது சரியாகச் சாப்பிட முடியவில்லை. இரவானதும் தன்னுடைய அறையைப் பூட்டிக்கொண்டு காவல்காரனிடம் தான் வெளியே போவதாகவும் வெகு நேரம் கழித்துத் தான் திரும்பி வருவதாகவும் கூறிச் சென்றான்.

அரண்மனைக்கு மேற்கே உள்ள அந்தக் கோயிலை நோக்கி நடந்தான். அவனுக்கு அந்த இடம் புதிதல்ல. முன்னர் பல முறை இதே ஆற்றங்கரைக் கோயிலுக்கு வந்திருக்கிறான். அப்போதெல்லாம் அவன் அங்கே எவ்விதப் புதுமையையும் கண்டதில்லை. ஆனால் இன்று அந்த இடம் ஓர் அதியற்புதமான சொர்க்கலோகமாகத் திகழ்ந்தது. அமைதியான அந்த இரவில் ஆற்றுநீர் சலசலப்புடன் ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஓசை ஓர் இனிய காதல் கீதமாக அவன் செவியிலே பாய்ந்துகொண்டிருந்தது. குளிர்ந்த காற்று அவனுடைய உடலைத் தழுவிக்கொண்டு சென்றது. எங்கோ வெகு தொலைவிலிருந்து நாய்கள் குரைக்கும் சப்தம் காற்றிலே மெதுவாக மிதந்து வந்தது. வானிலே நிலவில்லை. நட்சத்திரங்களின் மங்கிய ஒளி மட்டும் பூமியின்மீது இலேசாகப் படர்ந்து கருமியின் தானத்தைப் போல வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த மங்கிய ஒளியிலே தனிமையான இரவிலே பொங்குகிற ஆவலுடன் ஆற்றங்கரையில் அமைந்திருந்த சிவன் கோயிலை அடைந்தான். வெளிச் சுவரின் கதவு பூட்டப்பட்டிருந்தது. உயர்ந்திருக்கும் ஆற்றங்கரையின் பக்கமாக உள்ள சுவர் தாழ்வாகயிருந்தபடியால் அந்தப் பக்கமாக ஏறிக்குதித்து உள்ளே சென்றான். பிரகாரத்தின் ஒரு ஓரத்தில் இருளில் அமர்ந்து கொண்டு காத்திருந்தான்.

வெகு நேரம் சென்றதும் கோயிலின் ஒரு பக்கத்துச் சுவருடன் இணைக்கப்பட்டிருந்த ஓர் கதவு திறக்கப்பட்டது. இதுவரை கோயிலுக்குள் யாரும் இல்லை யென்று நினைத்துக்கொண்டிருந்த ராஜன் இப்பொழுது சற்றுத் திகிலடைந்தான். சுற்றுச் சுவரிலுள்ள கதவு திறந்திருந்தால் வெளியிலிருந்து யாராவது வருகிறார்கள் என்று நினைத்திருப்பான். ஆனால் இப்பொழுது திறக்கப்படும் கதவு கோயிலின் உள் கட்டிடத்துடன் சேர்ந்திருந்த ஓர் அறையின் கதவானபடியால் கோயிலுக்குள்ளிருந்து யாரோ வெளியே வருகிறார்கள் என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. ஒருவேளை காவல்காரனாக இருக்கலாமோ வென்று எண்ணினான், எனவே சந்தேகப்பட்டு சற்று தூர ஒதுங்கி ஒளிந்துகொண்டான். திறந்த அறையின் கதவு வழியாக சிப்பாய் உடையணிந்த ஒருவன் வெளியே வந்தான். நாலாபுறமும் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு "யாரங்கே?" என்று அதட்டினான். அரபு வைத்தியன் வேஷத்திலிருந்த செல்லராஜனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மூச்சுவிட்டால்கூட சப்தம் கேட்குமென்று நினைத்து அடங்கி ஒடுங்கி ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டான். ஆனால் அந்த வீரன் செல்லராஜன் தங்கியிருந்த இருள் படிந்த மூலைக்கு அவனைத் தேடிக்கொண்டு வந்துவிட்டான். இனிமேல் மறைந்து நின்று பயனில்லை என்று நினைத்து தைரியமாக வெளிவந்து, சிப்பாயைப் பார்த்து "நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

சிப்பாய் கோபத்துடன் ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தான். "நன்றாக இருக்கிறது உன் கேள்வி! கோவிலுக்குக் காவல்காரனாகிய நான் கேட்கவேண்டிய கேள்வியை நீ முந்திக்கொண்டு கேட்டுவிட்டாய். சரி இப்பொழுது பதில் சொல். நீ யார்?"

"நான் அரண்மனையில் இருக்கும் அரபு வைத்தியன் உங்கள் நகரமெங்கும் எனது புகழ் பரவியிருக்க உனக்கு மட்டும் தெரியாமல் போய்விட்டதா? மன்னரின் ரணத்தை இரண்டே நாளில் குணப்படுத்திய மகா பண்டிதன் நான்."

"ஓஹோ அப்படியா? ஐயா அரபு வைத்தியரே, அர்த்த ராத்திரியிலே ஆற்றங்கரைச் சிவன் கோயிலுக்கு வரவேண்டிய அரிய சந்தர்ப்பம் என்னவோ, நான் அறியலாமா?"

"மூலிகை பறிப்பதற்காக வந்தேன்."

"சரிதான். பட்டப்பகலில் மூலிகை கண்ணில் தட்டுப்படாது என்று மையிருட்டு நேரம் பார்த்து மருந்து தேட வந்தீராக்கும்."

"ஆமாம். பகலில் நான் மூலிகை பறித்தால் அது என்ன மூலிகை என்று எல்லோருக்கும் தெரிந்துவிடும் ஆகவே என்னுடைய வியாபார ரகசியத்தைக் காப்பதற்காக இரவிலே வந்திருக்கிறேன்."

"வியாபார ரகசியமா? அல்லது வேறு ஏதாவது விவகார ரகசியமா? உள்ளதைச் சொல்லும். அரபு வைத்தியர் பிறந்து வளர்ந்தது எல்லாம் இந்த நாட்டில்தானே?"

"இல்லை நான் அரேபியாவில் பாலைவனத்தில் பிறந்தவன்."

"அப்படியானால் உம்மால் எப்படி சுத்தமாகத் தமிழ் பேச முடிகிறது? நீர் போட்டிருப்பது வேஷம் என்கிறேன். உலகத்திலே வேஷம் போடுபவர்கள் அதிகமாகி விட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டே சிப்பாய் ஏளனமாகச் சிரித்தான்.

"ஆமாம். வேஷதாரிகள் அதிகமாகிவிட்டார்கள். என்னுடைய வேஷத்தைக் கலைப்பதற்கு முன் உன்னுடைய வேஷத்தைக்கலைக்கிறேன் பார்" என்று சொல்லிக் கொண்டே கிட்ட நெருங்கி சிப்பாயினுடைய தலைப்பாகையையும், ஒட்டு மீசையையும் பிடித்திழுத்தான் செல்லராஜன். வேஷம் கலைந்த கலாநந்தினி சிரித்துக் கொண்டே "என்னை அடையாளம் தெரிந்துகொண்டுதான் நாடகமாடினீர்களா ?" என்று கேட்டாள்.

செல்லராஜன் அவள் கரங்களைப்பற்றி அருகில் உள்ள படிக்கட்டிற்கு அழைத்துச் சென்று அமர்ந்து

கொண்டு "ஆமாம்! முதலில் நான் பயந்து போய்விட்டேன். நீ பேச ஆரம்பித்ததும் குரல் உன்னைக் காட்டிக்கொடுத்து விட்டது. அப்புறம் நானும் நாடகமாடினேன். அது சரி. நீ கோயிலுக்குள்ளிருந்து எப்படி வருகிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"நான் கோயிலுக்குள்ளிருந்து வரவில்லை. கோயிலை ஒட்டினாற் போலுள்ள இந்த அறை எங்கள் அந்தப்புரத்திற்குப்போகும் சுரங்க வழி. இந்தக் கோயில், அரண்மனை அந்தப்புரப் பெண்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கோயிலுக்கு பொதுஜனங்கள் அதிகமாக வரமாட்டார்கள். வருடத்திற்கு ஒரு முறைதான் பொது ஜனங்கள் இந்தக் கோயிலுக்குள் வர முடியும். இதோ இந்தக் கோயிலிலிருந்து மேற்குப்பக்கச் சுவர் ஓரமாக இன்னொரு சுரங்கவழி செல்லுகிறது. அது நேரே ஆற்றுக்குச் சென்று ஒரு படித்துறையாக அமைந்திருக்கிறது. சில சமயங்களில் நாங்கள் நீராட வருவதுண்டு. அந்தப்புர அறையிலே அடைபட்டுக் கிடக்கும் எங்களுக்கு இயற்கை அழகை ரசிப்பதற்கு இவ்விதம் ஏதாவது ஒரு வசதி வேண்டாமா?"

"ஆமாம்! ஆமாம்! நிச்சயமாக வேண்டியதுதான். இவ்வித வசதி இல்லாவிட்டால் நாம் இங்கு சந்தித்திருக்க முடியுமா? இவ்வித முன்னேற்பாட்டுடன் இந்தக் கோயிலைக் கட்டி முடித்த கட்டிட நிபுணர்கள் வாழ்க! அவர்கள் புகழ் ஓங்குக! அவர்களுக்கு நம்முடைய நன்றி என்றும் உரித்தாகுக!" என்று கேலியாகச் சொல்லிச் சிரித்தான்.

வெகு நேரம்வரை இருவரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர். செல்லராஜன் தன்னுடைய திட்டங்களையெல்லாம் அவளுக்கு விளக்கிக் கூறினான். "அன்பே! இனி என்னால் உன்னைப் பிரிந்து வாழமுடியாது. நாம் இருவரும் எங்காவது கண்காணாத இடத்திற்குச் சென்று விடுவோம். உன்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தும் மன்னரின் நன்றியை மறக்கக்கூடாது என்று எவ்வளவோ பாடுபட்டேன். அதற்குக் கிடைத்த பரிசுதான் உனக்குத் தெரியுமே. எனவே, இந்த மாறுவேடத்தில் நீண்டநாள்

இருப்பது என்பது முடியாது. நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் செல்லராஜன்.

கலாநந்தினி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்ததற்கு அறிகுறியாக ஒரு நீண்ட பெருமூச்சு எழுந்தது. பின்னர் தழுதழுத்த குரலில் பேச ஆரம்பித்தாள். "நீங்கள் நாடு கடத்தப்பட்ட பிறகு, நான் பட்ட வேதனைகள் கொஞ்சமல்ல. ஆனால் அந்த வேதனைகளுக்கும் ஊடே தோன்றிய சிறிய நம்பிக்கைச் சுடர்போல நீங்கள் ஒரே ஒரு நாள் சோலை நாட்டுத் தூதுவராக வந்துவிட்டுச் சென்றீர்கள். அன்றிரவு உங்களைச் சந்திப்பதற்காக நானும், என் தோழியும் திருட்டுத்தனமாக விருந்தினர் மாளிகைக்கு வந்தோம். ஆனால் அதற்குள் நீங்கள் சென்றுவிட்டீர்கள். உங்களைத் தேடிக்கொண்டு உங்கள் தாத்தாவும் அங்கு வந்திருந்தார்......"

"என்ன என் தாத்தாவா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே"

"புரியவில்லையா? முன்பு தலைநகரத்திலே கடற்கரைக் கோயிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வரும்பொழுது மரத்தடியில் ஒரு கிழவர் நம்மைச் சந்திக்கவில்லையா? அந்தக் கிழவரைத்தான் சொல்லுகிறேன்."

"அவர் என் தாத்தாவல்ல. உனது தந்தை! பொன்னாட்டு மன்னர்; சாட்சாத் நாகநந்தர்தான் அந்த வேடத்தில் வந்தவர்."

இதைக் கேட்டதும் இளவரசி வெலவெலத்துப் போனாள். அப்படியானால் அன்றிரவு மறுபடியும் தன் காதலனைத் தேடிப்போன விஷயம் அவருக்குத் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவர் இதுவரை தெரிந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. ஆகையால் தந்தை எவ்வளவு பெருந்தன்மையாக நடந்துகொள்கிறார் என்று எண்ணிப் பார்த்தாள். இப்படிப்பட்ட தந்தைக்கு இழுக்குத் தேடும் முறையில் தான் எதுவும் செய்துவிடக்கூடாது என்று அவளுடைய உள்ளம் உறுத்தியது.

"நீங்களன்றி எனக்கு வாழ்வில்லை. நீங்கள் இல்லையென்று ஆகிவிட்டால், நான் மரணத்தைத்தான் தழுவிக் கொள்வேன். ஆனால் எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. மன்னரின் மனதை மாற்றிவிட முடியும். உரிய காலம் வரும்பொழுது அவரிடம் கெஞ்சிக் கேட்டால் என்னுடைய காதல் சுடரை அணைத்துவிடமாட்டார் என்பது திண்ணம். அவருடைய அனுமதியுடன் நான் உங்களை அடைவேன். இல்லையேல் உயிரைத் துறப்பதற்குத் தயார். ஆனால் பொன்னாட்டு மன்னரின் மகள் கலாநந்தினி காதலைப் பெரிதென்று எண்ணிக் கடமையை மறந்து பரம்பரைக்கு இழுக்கைத் தேடிக் கொடுத்துவிட்டு எங்கோ ஓடிவிட்டாள் என்ற ஏளனப் பேச்சுக்கு இடமளிக்க மாட்டேன். அவசரமின்றி நிதானமாகப் பொறுத்திருந்து பார்ப்போம். சில நாட்கள் நீங்கள் எனக்காக இந்த மாறு வேடத்தில் இருந்துதான் ஆகவேண்டும். அடிக்கடி நாம் இங்கே சந்தித்துக் கொள்ளலாம். ஆபத்து ஒன்றும் வராது" என்று கூறினாள். செல்லராஜனும் ஒப்புக்கொண்டான். மேலும் சிறிது நேரம் வரை இருந்துவிட்டு கலாநந்தனி தன் சுரங்க அறைக்குள் சென்று மறைந்தாள். அரபு வைத்தியரும் அரண்மனையை நோக்கி நடந்தார்.

## 27

சில நாட்களாக இளையராணி மோகனதத்தையின் மூளை அதிகமாக வேலை செய்துகொண்டிருந்தது. அவளுடைய உள்ளத்திலே பலவிதமான சிந்தனைகளும், சதித் திட்டங்களும் உருவாகிக்கொண்டே இருந்தன. தான் இவ்வளவு நாட்களாகக் கண்டு வந்த கனவுகள் உருக்குலைந்து சிதைந்து சின்னாபின்னமாகிவிடுமோ என்று பயப்பட்டாள். அவளுடைய பயத்திற்குக் காரணமில்லாமலில்லை.

தன் அருமை மகனுக்கு முடிசூட்டி, பொன்னாட்டையும் தன் கைக்குள் அடக்கி வைத்துக்கொள்ள அவள் கனவு கண்டாள். தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டால் மன்னர் மண்டையைப் போட்டதும்

ராஜ்யம் தன் கைக்கு மாறிவிடும் என்று நம்பினாள். இவ் விஷயமாக மன்னரிடம் பேசி முடிவு செய்வதற்குக் காத்திருந்த பொழுது, மன்னர் நோய்வாய்ப் பட்டார். அது அவளுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. படுக்கையிலிருக்கும் மன்னரிடம் ஒரு நாள் பேச்சை எடுத்தாள். "அரசே! உங்களுக்கு வயதாகிவிட்டது. நமது குழந்தைகளுக்கும் மணம் முடிக்க வேண்டிய பருவம் வந்துவிட்டது. குழந்தைகள் இருவருக்கும் தகுந்த இடத்தில் பெண்ணையும், மாப்பிள்ளையையும் பார்த்து மண முடிக்க வேண்டுமல்லவா?" என்று கேட்டாள்,

மன்னர் நாகநந்தர் மோகனதத்தையின் உள்ளக் கிடக்கையை ஓரளவு நன்றாகப் புரிந்திருந்தார் அவளுடைய மனக் குதிரை எந்தப் பாதையிலே ஓடிக்கொண்டிருக்கிறது என்பது அவருக்குத் தெரியும். எனவே சிறிது புன்னகை செய்து விட்டு "ஆமாம் இளையராணி!" என்றார்.

"அது மட்டுமல்ல. இந்த வயோதிகக் காலத்தில் அரசாங்க பாரத்தை நீங்களே முழுக்க முழுக்க ஏற்று நடத்துவது என்பதும் முடியாது. இளவரசன் வீரநந்தனுக்கு இப்பொழுதே இளவரசுப் பட்டத்தைக் கட்டிவிட்டால் பிற்காலத்தில் அரச பாரத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவனுக்கும் போதிய அனுபவம் வந்துவிடும். உங்களுக்கும் சிறிது வேலைப் பளு குறையும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கொஞ்சுகிற தோரணையில் கேட்டாள்.

இதைக்கேட்ட மன்னர் சிறிது அலட்சியமாக வாய் விட்டுச் சிரித்தார். "நானும் உன்னைப் போலத்தான் நினைக்கிறேன். ஆனால்."

"ஆனால்?..."

"நாம் நினைப்பதற்கும் நம் நாட்டுச் சட்டம் நினைப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதை நீ தெரிந்திருப்பாய் என்று நினைத்தேன். நம் நாட்டுச் சட்டத்தின்படி மூத்தராணியே பட்டமகிஷி. பட்டமகிஷியின் குழந்தைக்குத்தான் அரச உரிமை சேரும்."

"மூத்த ராணியின் குழந்தை பெண் குழந்தை ஆயிற்றே. இந்த நாட்டை பெண் ஆளமுடியுமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள். தன்னுடைய கனவுகள் சிதைவதைக் கண்டு அவளால் பொறுக்க முடியவில்லை.

"பெண் என்பதற்காக அரச உரிமையை மறுத்து விட முடியாது. நாட்டு மக்களும் சம்மதிக்கமாட்டார்கள். ஏன்; நானும்கூட சம்மதிக்க மாட்டேன். சட்டத்திற்கு விரோதமான செயலை நாகநந்தன் செய்யமாட்டான்" என்று உறுதியான குரலில் கூறினார்.

"சட்டம்! சட்டத்தை இயற்றுபவர் நீங்கள்தானே?"

"மன்னன்தான் சட்டத்தை உண்டாக்குகிறான். ஆனால் மன்னனும் சட்டத்திற்குக் கட்டுப் பட்டவன்தான். மன்னன் சட்டத்தை மீறி நடந்தால் மக்கள் மட்டும் சட்டத்திற்குக் கட்டுப்படுவார்களா?"

மோகனதத்தைக்கு கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது. மன்னரின் மனத்தை மாற்ற முடியாது என்று தெரிந்துகொண்டாள். தன்னுடைய திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டதால் ஆத்திரத்துடன் அங்கிருந்து வெளியேறினாள்.

இச்சம்பவம் நடந்ததற்குப் பிறகு மோகனதத்தையின் உள்ளத்திலே பயங்கரமான சிந்தனைகள் துளிர்விட ஆரம்பித்தன. தன்னுடைய அருமை மகன் வீரநந்தனுக்கு அரச உரிமை கிடையாது. ஆனால் எங்கோ பிறந்து இங்கு வந்து வளரும் இந்த அநாதைப் பெண் நாட்டை ஆளப் போகிறாள். இதை எப்படி அவளால் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? தன்னுடைய முன்னேற்றப் பாதையிலே முட்டுக்கட்டையாக நிற்கும் அனாதைப் பெண்ணை ஒழித்துக்கட்ட வேண்டும். ஆனால் தான் அகப்பட்டுக் கொள்ளாமல் அவளை எப்படி ஒழித்துக் கட்டுவது?

மேற்கண்ட பேயெண்ணங்கள் தலைதூக்கி ஆடிக் கொண்டிருக்கும்பொழுது அதற்கேற்ற ஓர் அரிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

மன்னர் பரிபூரண குணமடைந்ததும் நான்கைந்து நாட்கள் நிம்மதியாக எங்கேயாவது போய் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பினார். கடந்த பல வருடங்களாக அவர் கலை நகரத்திற்குப் போய் தங்கியிருந்தது கிடையாது. எனவே இப்பொழுது அங்குபோய் சில நாட்களைக் கழிக்க விரும்பினார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் முடிவடைந்தன. கலைநகரத்திற்குப் புறப்படும்பொழுது கலாநந்தினியையும், இளவரசனையும் கூட அழைத்தார். ஆனால் கலாநந்தினி தனக்கு வரமுடியாது என்று மறுத்துவிட்டாள். மன்னர் இளவரசனையும், துணைக்கு அழைத்துக் கொண்டு வேண்டிய வேலையாட்களுடன் கலைநகரத்திற்குச் சென்றுவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு தன் வேலையை முடித்துக்கொள்ள நினைத்தாள் மோகனதத்தை. அவளுடைய மூளை முன்னெச்சரிக்கையுடன் வேலை செய்தது. அரண்மனையின் புதிய மருத்துவச்சியை அழைத்துவரச் சொன்னாள். தனக்கு சில தினங்களாக இரவில் தூக்கம் பிடிப்பதில்லை என்றும், ஆகையால் நன்றாகத் தூங்குவதற்கு ஏதாவது மருந்து கொடுக்கும்படியும் கேட்டாள். அவ்வாறே மருத்துவப் பெண் ஏதோ ஒரு சூரணத்தை பொட்டலங்களாக மடித்துக் கொண்டுவந்து கொடுத்து ஒவ்வொரு இரவுக்கும் ஒவ்வொரு பொட்டலமாக உபயோகிக்கும்படி கூறிச் சென்றாள்.

அன்றிரவு கலாநந்தினி உணவு அருந்தி முடிந்ததும் ஏதோ ஒரு ஓலைச் சுவடியை வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தாள். அந்த ஓலைச் சுவடியிலிருந்த இலக்கியம் அவள் மனதைக் கவரவில்லை. அவளுடைய உள்ளமெல்லாம் ஆற்றங்கரைக் கோயிலில் காத்திருக்கும் அரபு வைத்தியனிடம் செல்லத் துடித்துக்கொண்டிருந்தது. தன் மாளிகையில் உள்ள தோழிகள் இன்னும் படுத்துறங்கச் செல்லாமல் ஏதேதோ வம்பளந்து கொண்டிருப்பது அவளுக்கு எரிச்சலை ஊட்டியது. "என்னைப் படிக்க விடாமல் ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? போய்ப் படுத்துத் தூங்குங்கள்" என்று உத்தரவிட்டாள். தோழிகள் ஒவ்வொருவராக வெளியேறிவிட்டனர். அச்சமயம் அந்-

தப்புரப் பணிப்பெண் ஒருத்தி வழக்கம்போல இளவரசிக்குப் பால் கொண்டுவந்து கொடுத்தாள். ஆனால் வழக்கமான பணிப்பெண் வராமல் புதிய ஒருத்தி வந்ததைக் கண்டு "ஏன், அவள் எங்கே போய்விட்டாள்? நீ கொண்டு வந்திருக்கிறாயே!" என்று கேட்டாள்.

"இன்று தினம் அவள் எங்கோ அவசரமாகப் போவதாகவும், என்னிடம் உங்களுக்குப் பால் கொண்டு வரும்படியும் சொல்லிவிட்டுச் சென்றாள். நான் கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டுப் பாலை கலாநந்தினியிடம் கொடுத்தாள்.

கலாநந்தினி பாலை வாங்கிக் குடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் தூக்கம் தலையைச் சுற்ற ஆரம்பித்தது. "அடடே! இன்று என்ன இப்படித் தூக்கம் வருகிறது? நாம் தூங்கிவிட்டால் அவர் நமக்காகக் காத்திருப்பாரே" என்று தன்னைச் சமாளித்துக் கொள்ள நினைத்தாள். ஆனால் அவளையும் மீறி தூக்கம் ஆட்கொண்டுவிட்டது. படுக்கையில் போய்க்கூடப் படுக்காமல், அமர்ந்து படித்துக் கொண்டிருந்த இடத்திலேயே தூங்கிவிட்டாள். பின்னர் சிறிது நேரத்தில் யாரோ வந்து அசையாமல் தூக்கிப் படுக்கையில் கொண்டு போய் கிடத்துவதைப் போன்று தோன்றியது. ஆனால் இதென்ன! படுக்கை ஏன் மரப் பெட்டிபோல அவ்வளவு இடைஞ்சலான இடமாக இருக்கிறது? மரப் பெட்டியா படுக்கையா? எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனந்தமாகத் தூக்கம் வருகிறது. இவ்வளவு சுகமான தூக்கத்தை என்றுமே கண்டது கிடையாது. ஒருவேளை இது ஒரு கனவாக இருக்கலாமோ. தான் எங்கோ படுக்கையோடு தூங்கிக்கொண்டு பிரயாணம் செய்வதுபோலத் தோன்றியது...... அப்புறம் அவ்வளவுதான். அவளுக்கு இலேசாக இருந்த பிரக்ஞையும் போய்விட்டது.

* * *

செல்லராஜன் அரபு வைத்தியர் வேஷத்தில் ஆற்றங்கரைக் கோயிலில் வந்து வெகு நேரம்வரை காத்திருந்தான். நல்ல நிலவு காய்ந்துகொண்டிருந்தது. நிலவும்,

இரவும் வீணுவதை அவனுல் பொறுக்க முடியவில்லை. ஒவ்வொரு விஞடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. காத்திருந்து காத்திருந்து பொறுமையின் எல்லைக்கே வந்துவிட்டான். இன்று சந்திப்பு நேரத்தை மறந்துவிட்டு கலாநந்தினி தூங்கிப்போய்விட்டாள் என்ற முடிவுக்கு வந்தான். கடைசியில் ஏமாற்றத்துடன் விருந்தினர் மாளிகைக்குத் திரும்ப நினைத்தான். திரும்ப நினைத்து சில அடிகள் எடுத்து வைத்ததும் சுரங்க அறையின் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. உடனே அவனுக்கு நம்பிக்கை பிறந்தது. ஆனுல் கலாநந்தினியை பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று நினைத்தான். தான் இவ்வளவு நேரம் காத்திருந்தும் ஏங்கியதற்குப் பதிலாக அவளையும் தனிமையில் சிறிதுநேரம் சஞ்சலப்பட விடவேண்டுமென்று நினைத்தான். ஒரு ஓரமாக பூத்துக் குலுங்கி நிற்கும் செடிகளின் பின்னே போய் மறைந்துகொண்டான். அங்கிருந்து கொண்டு கலாநந்தினி சுரங்க அறையிலிருந்து வெளிவந்து தன்னைக் காணுமல் திண்டாடித் தவிப்பதைப் பார்த்துக் கேலி செய்ய வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான். அறைக் கதவு திறக்கப்பட்டது. ஆனுல் நான்கு முரடர்கள் ஒரு பெரிய மரப்பெட்டியைத் தூக்கிக் கொண்டுவந்து ஒரு ஓரமாக வைத்தார்கள். அதைக் கண்டதும் செல்லராஜன் ஆச்சரியப் பட்டான். அந்தப்புறச் சுரங்க வழியே அவர்கள் இந்தப் பெட்டியைக் கொண்டு வந்திருப்பதால் அரண்மனையிலிருந்துதான் ஏதோ முக்கியமான பொருள்களை இவர்கள் திருடிக்கொண்டு வந்திருக்கிருர்கள் என்பது அவனுக்கு நன்ருகப் புரிந்துவிட்டது. திடீரென்று மறைவிடத்திலிருந்து வெளியே பாய்ந்து திருடர்களை அடித்துத் துரத்திவிட்டு பொருளை மீட்கலாம் என்று நினைத்தான். ஆனுல் அதற்குள் அந்த முரடர்கள் மெதுவான குரலில் ஏதோ பேச ஆரம்பித்தார்கள். எனவே தன்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு அவர்கள் என்ன பேசிக் கொள்கிருர்கள் என்பதைக் கூர்ந்து கவனித்தான்.

"அண்ணே! அதே மரத்தடியிலேதானே பெட்டியைப் புதைக்கச் சொன்னுர்கள் இளையராணி?" என்ருன் ஒருவன்

அவனுடைய பேச்சைக் கேட்டதும் ராஜனின் முகத்திலே ஆச்சரியம் தென்பட்டது. "என்ன! இளைய ராணி புதைக்கச் சொன்னார்களா? அப்படியானால் இவர்கள் திருடவில்லையா?" என்று நினைத்தான். அதற்குள் இன்னொரு முரடன் பேசுவது கேட்டது.

"இல்லேடா! இந்த மரத்தடியிலே தான் புதைக்கச் சொன்னார்கள்" என்றான்.

"அந்த மரத்தடியிலுமில்லை, இந்த மரத்தடியிலுமில்லை. இரண்டு மரத்துக்கும் நடுவேதான் புதைக்கச் சொன்னார்கள்" என்றான் மூன்றாமவன்.

"ஏண்டா இந்த வம்பெல்லாம். எந்த இடத்தில் புதைத்தாலும் சரி, சீக்கிரமாகப் புதைத்துவிட்டுப் போகவேண்டும் இல்லை யாராவது பார்த்தால் நம்மை வெட்டி இங்கேயே புதைத்துவிட்டுப் போய்விடுவார்கள்" என்று நான்காமவன் கூறிவிட்டு வேலையைத் துரிதமாக முடிக்கும்படி தூண்டினான்.

பின்னர் குழிதோண்டும் படலம் ஆரம்பமாகியது. நான்கு முரடர்களும் கொண்டுவந்திருந்த ஆயுதங்களைக் கொண்டு வேகமாகக் குழியைத் தோண்டி முடித்தார்கள். பெட்டியை இறக்கினார்கள். மண்ணைப் போட்டு மூடினார்கள். சமதளமாக்கிய பின் மீண்டும் சுரங்கத்திற்குள் போக ஆரம்பித்தார்கள். அச்சமயம் ஒரு முரடன் இன்னொரு பிரச்னையைக் கிளப்பினான். "அண்ணே! பெட்டிக்குள் என்ன வைத்திருப்பார்கள்? பெட்டியை இறக்கும் போது ஏதோ கிலுகிலுவென்று சத்தம் கேட்டதே. நகை நட்டு ஏதாவது இருக்குமோ?" என்றான்.

"ஏன் நாம் பங்கு போட்டுக்கொள்ளலாமென்கிறாயா? இளையராணிக்கு நகை நட்டுகளைப் பத்திரப் படுத்துவதற்கு இடமில்லாமலா இங்கு வந்து புதைக்கச் சொன்னார்கள். அப்படியிருக்காது. ஏதோ பெரிய இடத்துச் சமாசாரம். அந்தப்புரத்திலுள்ள எந்தப் புண்ணியவதியாவது ரகசியமாகப் பிள்ளை பெத்திருப்பாள். அதை இப்படி மூடி மறைக்கிறார்கள். நமக்கென்னத்துக்கு

இந்த வம்பெல்லாம். நீ உள்ளே வரப்போகிறாயா இல்லையா? இல்லையானால் உன்னை வெளியே விட்டுப் பூட்டிவிட்டுப் போய்விடுவோம்'' என்றான் மற்றொருவன்.

பின்னர் எல்லோரும் சுரங்க அறைக்குள்ளே சென்று விட்டனர். கதவு தாளிட்டுப் பூட்டப்படும் சப்தம் கேட்டது. செல்லராஜன் அவசரமாக வெளியே வந்தான். அவனுக்கு எல்லாம் புதிராகத் தோன்றியது. பலவித சந்தேகங்கள் உதித்தன. அவசரம் அவசரமாக புதைத்திருந்த பெட்டியைத் தோண்டி எடுத்தான். பெட்டியைத் திறந்து பார்த்தான். உள்ளே ஒரு பெண்ணுருவம் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. நில வொளியிலே நன்றாக உற்றுப் பார்த்தான். கலாநந்தினியின் துவண்டுகிடக்கும் உருவத்தைக் கண்டதும் துக்கமும், ஆத்திரமும் ஏற்பட்டது. இளையராணி மோசனதத்தை செய்த அட்டூழியத்தைக் கண்டு மனம் வெதும்பினான். விரைவாகப் பெட்டிக்குள்ளிருந்த கலாநந்தினியின் உடலை வெளியே எடுத்து வைத்தான். அவளுடைய முகத்தை இன்னும் நன்றாக உற்றுப் பார்க்கும்பொழுது மெதுவாக சுவாசம் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பின்னர் அவளுடைய உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும் சூடேறும்படியாகத் தேய்த்தான். இவ்விதம் சிகிச்சை செய்ததும் கலாநந்தினி படிப் படியாக உணர்வு பெற ஆரம்பித்தாள். அதைக் கண்ட செல்லராஜன் பயம் தெளிந்து மகிழ்ச்சி யடைந்தான்.

சிறிது நேரம் சென்றதும் கலாநந்தினி பரிபூரணமாகக் குணமடைந்தாள். தூக்க மருந்தாலும், காற்றோட்டமின்மையாலும் மயக்க நிலையை அடைந்திருந்த அவள் இப்பொழுது குணமடைந்ததும் சுற்றுமுற்றும் பார்த்து ஒன்றும் புரியாமல் சற்றுத் திகைத்தாள். எதிரே உட்கார்ந்திருக்கும் செல்லராஜனின் உருவம் நிழல்போலக் காட்சி யளித்தது. அவனைப் பார்த்து மெதுவான குரலில் ''நான் எங்கிருக்கிறேன்?'' என்று கேட்டாள். பின்னர் சிறிது நேரம் சென்ற பிறகுதான் அவளுக்குப் படிப்படியாக ஞாபகசக்தி வர ஆரம்பித்தது. நன்றாக தெளிவு பெற்றதும் செல்லராஜன் நடந்த விஷயங்களை யெல்லாம்

அவளுக்கு - எடுத்துக் கூறினுன். மோகனதத்தையின் ஆட்கள் பெட்டியைக் கொண்டுவந்து புதைத்ததையும் அவர்கள் பேசிக்கொண்டதையும் கூறினுன். இளவரசி கலாநந்தினி நடந்த விஷயங்களை ஒருவாறு ஊகித்து அறிந்து கூறினுள். "இரவு நான் காத்துக்கொண்டிருக்கும்பொழுது வழக்கமாகப் பால் கொண்டுவரும் பணிப் பெண்ணுக்குப் பதிலாக வேருெருத்தி வந்தாள். அவள் மோகனதத்தையின் கையாள் என்பது இப்பொழுதுதான் புரிகிறது. அவள் கொண்டுவந்த பாலைக் குடித்ததும் அசாத்தியத் தூக்கம் வந்தது. தன்னுணர்வு இல்லாமல் தூங்கிவிட்டேன். பின்னர் யாரோ என்னைப் பெட்டிக்குள் வைத்துத் தூக்கி வந்தது மாதிரி உணர்ச்சி ஏற்பட்டது. அவ்வளவுதான். அப்புறம் எதுவுமே தெரியவில்லை" என்று கூறினுள்.

பின்னர் இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். சுரங்கவழி அடைபட்டிருப்பதால் இனி இளவரசி அந்த வழியாகத் திரும்பி அந்தப்புரத்திற்குப் போய்ச் சேரமுடியாது. போவதாஞல் தலைவாசல் வழியே போகவேண்டும். அப்போது பலவித சந்தேகங்கள் ஏற்படும். அப்படியே போய்ச் சேர்ந்தாலும்கூட இளைய ராணி மோகனதத்தை இன்னும் பல சதிகளைச் செய்வாள். மன்னரும் ஊரில் இல்லை. நடந்த சம்பவங்களையெல்லாம் சொல்லி மோகனதத்தையை அம்பலமாக்கலாம் என்ருல் அத்தோடு செல்லராஜனின் அரபு வைத்தியன் வேஷமும் கலைந்துவிடும். அதனுல் செல்லராஜனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். எனவே இளைய ராணி அமைத்திருக்கும் பொறியில் மீண்டும் போய் மாட்டிக்கொள்ளுவதைவிட தப்பித்துப் போய் விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தார்கள். எனவே இருவரும் ரகசியமாக அந்த நாட்டிலிருந்து தப்பித்துவேறு எங்கேயாவது போய்விடுவது என்று முடிவு செய்தனர்.

நிலவு பொழியும் அந்த இரவிலே கலாநந்தினியை அழைத்துக் கொண்டு செல்லராஜன் ஆற்றங்கரை நெடுக நடந்து சென்ருன். வெகு தூரம் சென்றதும் ஒரு ஒற்றையடிப்பாதை தென்பட்டது. அவ்வழியே நடந்து சென்றதும் அங்கொரு பாழடைந்த மண்டபம் இருந்தது. கலா

நந்தினியால் மேலும் நடக்கமுடியாதபடியால் அந்தமண்டபத்திலே தங்கி இரவைக் கழிப்பதற்கு முடிவு செய்தனர்.

## 28

பொழுது விடிந்ததும் அந்தப்புரத்திலே பரபரப்பு ஏற்பட்டது. இரவிலிருந்து இளவரசி காணாமல் போய்விட்டாள் என்ற செய்தி கலாநந்தினியின் மாளிகையிலிருந்த அத்தனை தோழிகளையும் பணிப் பெண்களையும் ஆச்சரியத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்தியது. இளவரசி காணாமல் போய்விட்ட செய்தி வெகு விரைவிலே அரண்மனை முழுவதும் பரவிவிட்டது. இளையராணி மோகனதத்தை இந்தச் செய்தியைக் கேட்டதும் அளவு கடந்த ஆச்சரியமும், வருத்தமும் கொண்டவள் போல நடித்துக் கொண்டாள். "ஐயோ! மன்னர் இல்லாத சமயத்தில் இப்படி நேர்ந்திருக்கிறதே. மன்னர் வந்து கேட்டால் என்ன சொல்வது?" என்று துடியாகத் துடித்தாள். அதே சமயத்தில் சில பணிப் பெண்கள் வேறொரு செய்தியையும் கொண்டுவந்தார்கள். அன்று காலையில் அரபு வைத்தியருக்கு காலை ஆகாரம் கொண்டு சென்ற பணிப் பெண்கள் முதல் நாள் இரவிலிருந்தே அவர் விருந்தினர் மாளிகையில் இல்லை என்ற செய்தியையும் கொண்டு வந்தனர். இச் செய்தியைக் கேட்டதும் மோகனதத்தையின் உள்ளம் வேறுவிதமாகத் திட்டமிட ஆரம்பித்தது. காக்கை உட்காரவும் பனம்பழம் விழவும் சரியாக அமைந்திருக்கிறதே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டாள். இதை வைத்துக் கொண்டு அரபு வைத்தியனுக்கும் இளவரசிக்கும் முடிபோட்டு, கதை கட்டிவிட்டால் தன்னுடைய குற்றத்தைச் சுலபமாக மறைத்துவிடலாம் என்று நம்பினாள். அவ்விதம் கதைகட்டுவதற்கு ஏதாவது கிடைக்காதா வென்று தோழிகளை விசாரிக்க ஆரம்பித்தாள். வழக்கமாக அரபு வைத்தியருக்கு ஆகாரம் கொண்டுபோய்க் கொடுக்கும் பணிப் பெண்களை அழைத்து "உள்ளதைச் சொல்லுங்கள். அரபு வைத்தியரும், இளவரசியும் ஏதாவது பேசிக் கொண்டதுண்டா? அவர்களிடையே செய்திப் போக்கு வரத்து ஏதாவதுண்டா? இருவரும் ஒரே நாளில் காணாமல்

போயிருக்கிறார்களே. அதனால் எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. தெரிந்ததை மறைக்காமல் சொல்லுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கும் தண்டனை கிடைக்கும்'' என்று பயமுறுத்தினாள்.

பணிப் பெண்களில் ஒருத்தி மிகவும் நடுக்கமுற்று ''அவர்கள் பேசிக் கொண்டதையோ, சந்தித்ததையோ நாங்கள் பார்த்தது கிடையாது. எங்கள் மூலமாக எவ்விதத் தகவலும் தெரிவித்துக் கொண்டதில்லை. ஆனால் ஒருநாள் அரசரின் வியாதியைக் குணப்படுத்தியதற்காக அரபு வைத்தியருக்குப் பரிசாகக் கொடுக்கும்படி ஒருசிறிய வெள்ளிப் பெட்டியை இளவரசி கொடுத்தனுப்பினார்கள். அதைத்தவிர வேறொன்றும் கிடையாது'' என்று கூறினாள்.

உடனே மோகனதத்தை சில வீரர்களை அனுப்பி விருந்தினர் மாளிகையில் அரபு வைத்தியர் தங்கியிருந்த அறையைப் பரிசோதனைசெய்து அங்குள்ள பொருள்களையெல்லாம் கொண்டு வரும்படி உத்தரவிட்டாள். வீரர்களும் அவ்வாறே செய்தார்கள். வெள்ளிப் பெட்டியைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் அவளுக்கு பயன்படக் கூடியவையாக இல்லை. எனவே வெள்ளிப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். ஆனால் அவள் கண்ணுக்கு ஒன்றும் தென்படவில்லை. ஆனால் உள்ளே ரகசிய அறை மூடப்பட்டிருப்பதைக் கண்டுகொண்டாள். ஆனால் அதைத் திறப்பதற்கு வழி தெரியாமல் திண்டாடினாள். அதனால் தடையம் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் இந்த வெள்ளிப்பெட்டி ஒன்றையே தன்னுடைய கட்டுக்கதைக்கு அஸ்திவார மாக்கிக்கொள்வதென்ற முடிவுக்கு வந்தாள். பின்னர் நீதிவாணரை அழைத்துவரச் செய்து தன்னுடைய சந்தேகக் கதையை ஒப்புவித்தாள். உடனே மன்னருக்குச் செய்தி அனுப்பி அவரை உடனடியாகக் கலை நகரத்திலிருந்து வரவழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டாள்.

நீதிவாணர் மோகனதத்தையின் சொல்லைப் பரிபூரணமாக நம்பவில்லை. இளவரசி அவ்வளவு பண்பாடு அற்றவள் அல்ல என்று நம்பியிருந்தார். என்றாலும் சூழ்நிலை

என்னவோ மோகனதத்தையின் சொல்லை உண்மையாக் கிக்கொண்டிருப்பதால் அவரால் நிச்சயமான ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆகையால் மன்னருக்கு ஒரு குதிரை வீரன் மூலம் செய்தி அனுப்பினார்.

கலை நகரில் சில நாட்கள் அமைதியாக இருக்க விரும்பிய மன்னருக்கு இச் செய்தி அளவு கடந்த அதிர்ச்சியை உண்டு பண்ணியது. உடனே புறப்பட்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். இளையராணி தன் சந்தேகங்களையெல்லாம் மன்னரிடம் சொல்லி முதலைக்கண்ணீர் வடித்தாள். மன்னர் முதலில் நம்பவில்லை. மோகனதத்தை இதில் ஏதோ சூழ்ச்சி செய்கிறாள் என்று நினைத்தார். அதனால் அரபு வைத்தியரின் அறையிலிருந்து எடுத்துவரப்பட்ட வெள்ளிப்பெட்டியை மன்னரிடம் கொடுத்து "நான் சொல்லுவதில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையானால் இந்த வெள்ளிப் பெட்டியைப் பாருங்கள். இந்தப் பெட்டியை உங்கள் மகள் வைத்தியருக்குப் பரிசாகக் கொடுத்தனுப்பினாளாம். ஆனால் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை" என்று சொன்னாள்.

மன்னர் பெட்டியை வாங்கிப் பார்த்தார். ஆம்! இந்த வெள்ளிப் பெட்டியை அவர் வெகு நாட்களுக்கு முன்பு கலாநந்தினிக்குப் பரிசாகக் கொடுத்திருந்தார். அந்தப் பெட்டியில் உள்ள ரகசிய அறையை உடனே திறந்து பார்த்தார். அதற்குள்ளிருந்த ஓலைச்சுருள் மன்னரின் சந்தேகத்தை அறவே நீக்கிவிட்டது. அரபு வைத்தியரும், தன் மகளும் எவ்விதம் தப்பித்துச் சென்றிருப்பார்கள் என்பதைப் புரிந்துகொண்டார். உள்ளே இருந்த ஓலைச் சுருளும், அதிலுள்ள செய்தியும் தனக்குப் பெரிதும் உதவியாக இருந்ததைக் கண்டு மோகனதத்தை மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். தன்னுடைய திட்டம் இவ்வளவு திறமையுடன் வெற்றி பெற்றுவிட்டதை நினைத்துப் பெருமைப் பட்டுக்கொண்டாள். தன்னுடைய கொலைக் குற்றத்தை என்றென்றும் வெளியாகாமல் செய்துவிட்ட அந்த ஓலைச் சுருளுக்கும், அந்த அரபு வைத்தியனுக்கும் மனமார நன்றி செலுத்தினாள். ஆனால் அவளுக்கு இன்னும் ஒரு சந்தேகம் மட்டும் தெளிவடைய

வில்லை. இளவரசி புதைக்கப்பட்டு மண்மூடிப்போய் விட்டாள். ஆனால் இந்த அரபு வைத்தியன் மட்டும் ஏன் அரண்மனைக்குத் திரும்பவில்லை. ஆனால் ஒரு வேளை அவன் எங்கேயாவது வேலையாகச் சென்றிருந்து, இன்றோ நாளையோ திரும்பிவந்தாலும்கூட அவனால் ஒன்றும் செய்துவிட முடியாது. இளவரசியைத் தான் அழைத்துச் செல்லவில்லை என்று சொன்னாலும்கூட நம்புவதற்கு யாருமில்லை. இளவரசியை எங்கோ மறைத்து வைத் திருப்பதாகக் குற்றம் சுமத்தலாம். இவ்விதமெல்லாம் எண்ணித் தனக்குள் தானே அகமகிழ்ந்து கொண்டாள் மோகனதத்தை.

மன்னருக்கு ஆத்திரமும், வருத்தமும் அளவுகடந்து ஏற்பட்டது. அவர் கலாநந்தினியை மிகவும் அன்புடன் போற்றி வளர்த்து வந்தார். அவள் செல்லராஜனைக் காத லித்ததைக்கூட பெரிய குற்றமாகக் கருதவில்லை. அழகும் அறிவும் வீரமும் கடமை உணர்ச்சியும் நிரம்பிய ஒரு சிறந்த வாலிபனை, சின்னஞ்சிறு வயதிலிருந்து உடன் பழகி வந்த தன் மகள் காதலித்தது மனித இயற்கைதான் என்று மன்னித்துவிட்டார். ஆனால் தன் அரச பரம்பரைக்கு இழுக்கு வரக்கூடாதே யென்பதற்காக மகளுடைய காதலை அவரால் அனுமதிக்க முடியவில்லை. ஆனால் இப்பொழுது முன்பின் தெரியாத அந்நிய நாட்டான் ஒருவனைத் தன் மகள் காதலித்ததுதான் அவருக்கு மிகவும் அருவருப்பை உண்டாக்கியது. அவள் இவ்வளவு இழிவான நிலைமைக்கு வருவாள் என்று கனவிலும் நினைத்ததில்லை. தன்னுடைய பரம்பரைக்கே தீராத இழுக்கு நேர்ந்துவிட்டதாக எண்ணி மனம் புழுங்கினார்.

அரசர் மந்திரியை அழைத்து நாடெங்கும் பறை யறையச் செய்வித்தார். "மன்னரின் வியாதியைக் குணப் படுத்த வந்த அரபு வைத்தியரை எங்கு கண்டாலும் பிடித்துக் கொண்டுவந்து மன்னரிடம் ஒப்படைக்க வேண் டும். அவரைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரம்பொன் கள் பரிசு வழங்கப்படும். அரபு வைத்தியரை ரகசியமாக மறைத்து வைத்திருப்பவர்களுக்கும், உதவுபவர்களுக்கும் கடும் தண்டனை வழங்கப்படும்" என்று முரசறையும்படி உத்தரவிடப்பட்டது.

# 29

பொழுது புலர்ந்து வெகுநேர மாகிவிட்டது. இளவரசி அப்பொழுதுதான் கண்ணை விழித்துப் பார்த்தாள். இரவு வெகு நேரம்வரை அவளுக்குத் தூக்கம் வரவில்லை. எதிர்காலத்தைப் பற்றிய குழப்பமான சிந்தனைகள் உள்ளத்திலே வட்டமிட்டுக் கண்ணிமைகளை மூடவொட்டாமல் தடுத்துவிட்டன. பிறந்ததிலிருந்து பஞ்சணையில் படுத்துச் சுகமாகத் தூங்கிய அவளுக்கு, பாழடைந்த மண்டபத்தின் கட்டாந்தரையில் கையைத் தலைக்கு வைத்துப் படுத்துறங்குவது என்றால் எப்படித் தூக்கம் வரும்? விடியப்போகும் தறுவாயில்தான் அசதியால் தன்னை மறந்து தூங்க ஆரம்பித்தாள். எனவே பொழுது புலர்ந்து வெகு நேரமாகிய பின்புதான் விழித்தெழ முடிந்தது.

கண்விழித்துப் பார்த்தபோது அருகில் செல்லராஜன் இல்லாததைக் கண்டு திகைப்படைந்தாள். பாழடைந்த மண்டபத்தைச் சுற்றுமுற்றும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். மண்டபத்தின் எல்லா பாகங்களிலும் சிலந்திப் பூச்சிகள் வலை விரித்துத் தாவி விளையாடிக் கொண்டிருந்தன. இடிந்த சுவர்களின் விரிவுகளிலிருந்து ஒருவிதமான சிள்வண்டு ரீங்காரம் இட்டுக் கொண்டிருந்தது. சுற்றிலும் நான்கு புறமும் அடர்ந்து வளர்ந்த காடு பயங்கரத்தை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. தனிமையும், அந்த பயங்கரச் சூழ்நிலையும் அவளை வாட்டின. செல்லராஜன் எங்கு சென்றிருப்பான் என்று அவளுக்குப் புரியவில்லை. பயத்துடன் நடுங்குகிற குரலில் "ராஜா" என்று கூவினாள். அந்தப் பாழடைந்த மண்டபமும் காடும் போட்டி போட்டுக்கொண்டு "ராஜா! ராஜா" என்று எதிரொலி எழுப்பின. அந்த எதிரொலியைக் கேட்டு கலாநந்தினி மேலும் பயப்பட்டாள்.

செல்லராஜன் அப்போது அங்கு வந்துசேர்ந்தான். காட்டில் சென்று காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அருகில் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் நீரோடையில்

குளித்துவிட்டு, சில கனிகளையும் பறித்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். "என்ன இளவரசியாரே! அழகிய தோழிகள் சூழ அந்தப்புரத்தில் வாழ்ந்துவந்த உங்களுக்கு இந்தப் பாழடைந்த மண்டபம் பயங்கரமாகத் தோன்று கின்றதா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான். ஆனால் அவனுடைய சிரிப்பிலே ஆழ்ந்த வருத்தமும் இரக்கமும் தென்பட்டன.

"பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? இந்தப் பாழடைந்த மண்டபத்திற்கு வராவிட்டால், மண்ணில் புதைந்த பெட்டிக்குள் மரணத்தின் மடியில் கிடந்திருப்பேன். பாழடைந்த மண்டபமாக இருந்தாலும் சரி, பஞ்சணை மெத்தைகளும், பாங்கியரும் சூழ்ந்த அந்தப்புர அழகு மாளிகையாக இருந்தாலும் சரி, இனி என்னுடைய ராஜா எங்கிருக்கிறாரோ அதுதான் எனக்குச் சொர்க்கம். ராஜா இல்லாத இடத்தில் ராணிக்கு வேலையில்லை. காதல் பாதை கரடு முரடானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை நேரடியாக அனுபவித்துப் பார்க்கும் பாக்கியம் இப்பொழுது எனக்குக் கிடைத்திருக்கிறது. பல்லக்கில் சுகமாகப் போவதைவிட பாதங்கள் நோக காதல் பாதையில் போவதில்தானே இன்பமிருக்கிறது" என்று கூறி மகிழ்ச்சியுடன் சிரித்தாள் கலாநந்தினி. சிறிது நேரத்திற்கு முன்பு அவளுடைய உள்ளத்திலே குடிகொண்டிருந்த பயம் இப்பொழுது எங்கோ ஓடி மறைந்துவிட்டது.

பின்னர் அவளை ராஜன் ஓடைக்கு அழைத்துச் சென்றான். இளவரசி கானகத்துச் சிற்றோடையில் பல் துலக்கி முகம் கழுவினாள். மனித சஞ்சாரமற்ற அந்த இடத்தில் மணற்பாங்கான சரளைக் கற்களூடே ஓடிக்கொண்டிருக்கும் தெள்ளிய நீரின் ஸ்பரிசம் இன்பமளித்தது. அந்த நீரிலே ஆயுள் பூராவும் விளையாடிக் கொண்டிருக்கலாம் போல் தோன்றியது. முகங்கழுவி முடிந்ததும் இருவரும் ஓடைக் கரையிலே அமர்ந்து கனிகளை உண்டு ஓடை நீரைக் குடித்துப் பாழடைந்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர்.

இனிமேல் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றி யோசித்தனர். "கண்ணே! நாம் இருவரும் இதே கோலத்தில் பகலில் பிரயாணம் செய்து பொன்னாட்டைக் கடக்க முடியாது. உன்னையும் என்னையும் அடையாளம் கண்டு கொள்வார்கள். ஆகையால் நான் நகருக்குள் சென்று நாம் மாறுவேடம் போட்டுக் கொள்வதற்கு வேண்டிய உடைகளைச் சம்பாதித்து வருகிறேன். அது வரை நீ இங்கேயே பத்திரமாக இருக்கவேண்டும். நான் மதியத்திற்குள் வேண்டிய உடைகளுடனும், உணவுகளுடனும் திரும்பி வருகிறேன்" என்று கூறினான் செல்லராஜன். கலாநந்தினி சம்மதித்தாள். செல்லராஜன் தன்னுடைய அரபு வைத்திய உடைகளைக் களைந்துவிட்டுத் தனது தலைப்பாகைக்காக உபயோகப் படுத்தப்பட்ட துணியை இடையில் கட்டிக்கொண்டு தாடி மீசைகளையெல்லாம் களைந்துவிட்டு ஒரு கிராமத்தானைப் போல வெளியேறினான்.

* * *

நடுப்பகலும் கழிந்து வெகுநேரம் ஆகிவிட்டது. மதியத்திற்குள் திரும்பி வருவதாகச் சென்ற தன் காதலன் இன்னும் வந்து சேராததால் கலாநந்தினி மிகவும் கவலைப் பட்டாள். பசி தலையைச் சுற்றியது. போன இடத்தில் செல்லராஜனுக்கு என்ன நேர்ந்ததோ? ஒருவேளை அடையாளம் கண்டுகொண்டு அரண்மனை ஆட்கள் பிடித்துக் கொண்டார்களோ? அப்படியானால் தன் கதி இனி என்னவாகும்? அரண்மனைக்குத் திரும்பிச் செல்வது என்பது முடியாது. அரண்மனையில் இதற்குள் என்ன அமளி நடக்கிறதோ? தன்னைக் கொன்று புதைத்துவிட்டதாக மோகனதத்தை நினைத்துக்கொண் டிருப்பாள். ஆனால் எங்கோ காணாமல் போய்விட்டதாக அவளும் சேர்ந்து கொண்டு பொய் சொல்லுவாள். அரபு வைத்தியரையும் காணவில்லை என்றதும் தங்கள் இருவருக்கும் சேர்த்து கதை கட்டிவிடுவாள். மன்னரும், சிறையிலிருக்கும் தன் தாயும் இதைக்கேட்டு மிகவும் மனம் புழுங்குவார்கள். எல்லோரும் தன்னைப்பற்றி இழிவாகப் பேசுவார்கள்.

பெற்றோர்கள் அவமானத்தால் தலைகுனிவார்கள். ஆனால் என்ன செய்வது? சூழ்நிலை அப்படியாகிவிட்டதே. இனி அவைகளையெல்லாம் நினைத்து என்ன பயன்? விதி எவ் வழியே அழைத்துச் செல்லுகிறதோ அவ்வழியே நடந்து செல்வதைத் தவிர வேறு கதியில்லை. ஆனால் போன தன் காதலன் இதுவரை வரக்காணோமே. அவருக்கு ஏதாவது நடந்துவிட்டால் தானும் இந்தக் காட்டிற்குள்ளேயே உயிர் நீத்துவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. இவ் வாறெல்லாம் எண்ணிக் கண்ணீர் வடித்துக்கொண் டிருந் தாள். அப்போது யாரோ வரும் காலடியோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ஒரு வயோதிக முஸ்லீம் கிழவனார் தடியை ஊன்றித் தள்ளாடி நடந்து வந்தார். அவர் தோளிலே ஒரு சிறிய மூட்டை தொங்கிக்கொண் டிருந்தது. ஆளைப் பார்த்தால் அடையாளமே தெரியவில்லை. ஒருவேளை செல்லராஜன் தான் அந்த மாறுவேடத்தில் வருகிறானோ வென்று சந் தேகப்பட்டாள். ஆனால் அருகில் வந்த பிறகும்கூட எவ் வளவு உற்றுப் பார்த்தும் இனம் விளங்கவில்லை. எனவே வேறு யாராகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற் பட்டது. மௌனமாக சந்தேகக் குறியுடன் அந்தக் கிழவனாரை ஏற இறங்கப் பார்த்தாள்.

கிழவனார் தோளிலிருந்த மூட்டையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அல்லாவின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே மண்டபத்தின் திண்ணையில் உட்கார்ந்தார். பின்னர் கலாநந்தினியைப் பார்த்து "தாயே! ரொம்ப தூரம் நடந்து வந்ததால் தண்ணீர் தவிக்கிறது. கொஞ் சம் தண்ணீர் கொடுக்கிறாயா?" என்று கேட்டார் கிழவனார்.

கலாநந்தினிக்கு ஓரளவு இருந்த சந்தேகமும் தீர்ந்து விட்டது. செல்லராஜன் இன்னும் வந்து சேரவில்லை. ஆனால் இச்சமயத்தில் இந்த முஸ்லீம் கிழவர் இங்கு வந்தது அவளுக்கு ஒரு விதத்தில் தைரியமூட்டியது. தனியாக இருப்பதைவிட இந்தக் கிழவனாருடைய துணையுடன் இருப்பது நல்லதென்று தோன்றியது. ஆனால் இந்தக்

கிழவர் இந்தப் பாழடைந்த மண்டபத்திற்கு ஏன் வர வேண்டும்? ஒருவேளை இவர் அரசாங்க ஒற்றராக இருந் தால்? தன்னை அடையாளம் கண்டுகொள்வாரோ? இவ் விதம் சந்தேகப்பட்டுக் கொண்டே கிழவனாரைப் பார்த்து "ஐயா! இங்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. இங்கு யாரும் குடியிருக்கவு மில்லை. நானும் உங்களைப்போல ஒரு பிரயாணிதான்" என்று கூறினாள்.

கிழவனார் தலையை ஆட்டிக்கொண்டே கூற ஆரம்பித் தார். "நானும் அப்படித்தான் நினைத்தேன். அது சரியாகப் போச்சு. உங்கள் பேரென்ன?" என்று கேட்டார்.

கலாநந்தினிக்குக் கிழவனாரின் பேச்சு பிடிக்கவில்லை. "என் பெயர் எதுவாக இருந்தால் என்ன? அதோ! அருகி லிருக்கும் ஓடையில் தண்ணீர் இருக்கிறது; போய்க் குடி யுங்கள். குடித்துவிட்டு வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு போய்ச் சேருங்கள்" என்று சற்றுக் கடுகடுப் புடன் கூறினாள்.

அவளுடைய ஆத்திரத்தைக்கண்டு கிழவனாருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "அம்மா! கோபிக்க வேண்டாம். வந்த வேலையைப் பார்க்கிறதற்குத்தான் உங்கள் பேரைக் கேட்டேன். செல்லராஜன் என்னை அனுப்பியிருக் கிறார்..."

"என்ன! செல்லராஜன் அனுப்பியிருக்கிறாரா? அவர் ஏன் இன்னும் வரவில்லை? அவருக்கு என்ன நேர்ந்தது?" என்றெல்லாம் பதற்றத்துடன் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

"அவருக்கு ஒன்றும் நேரவில்லை. இந்த ஓலையை உங் களிடம் கொடுத்து அழைத்து வரச்சொன்னார். நகரில் இப்பொழுது காவல் பலமாக இருப்பதால் அவரால் இங்கு வர முடியவில்லை. அரபு வைத்தியரை பிடித்துக் கொடுப் பவருக்கு ஆயிரம் பொன் பரிசாகக் கொடுப்பதாகப் பறை சாற்றியிருக்கிறார்கள். இதோ பாருங்கள் இந்த ஓலையை" ஒன்று கூறி ஓலையை எடுத்து கலாநந்தினியிடம் கொடுத் தார் கிழவனார்.

கலாநந்தினி ஓலையை வாங்கிப் படித்தாள். ஓலையில் இருப்பது செல்லராஜனின் கையெழுத்துத்தான். ஆனால் இதிலும் ஏதாவது சூழ்ச்சி இருந்தால், ஒருவேளை அவரைப் பிடித்து வைத்துக்கொண்டு நிர்ப்பந்தம் செய்து இந்த ஓலையை எழுதி வாங்கி, தன்னையும் பிடிப்பதற்குச் சூழ்ச்சி செய்தால் என்ன செய்வது? அப்படியிருந்தாலும் கூட செல்லராஜன் இல்லாமல் இவள் மட்டும் தப்பித்திருந்து என்ன பலன்? எனவே என்ன நடந்தாலும் போவது தான் நல்லது என்று முடிவு செய்தாள்,

கலாநந்தினி யோசிப்பதைக் கண்ட கிழவனார், "என்னம்மா என்னை நம்பவில்லையா? அல்லா ஆணையாகச் சொலகிறேன். உன்னை ஒருபோதும் மோசம் செய்யமாட்டேன்" என்று கூறினார்.

"ஐயா பெரியவரே! என்ன நடந்தாலும் சரி! நான் உங்களுடன் வருகிறேன். என்னை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று கூறிப் புறப்படத் தயாரானாள்.

உடனே கிழவனார் "தாயே! தாங்கள் இந்த உடையோடு வரக்கூடாது. பொதுமக்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். அதனால் உங்களுக்கும் ஆபத்து. உடந்தையாக இருந்ததாக எனக்கும் ஆபத்து. இதோ இந்தப் பொட்டணத்திற்குள் எங்கள் முஸ்லீம் பெண்கள் அணிந்துகொள்ளக்கூடிய கோஷா திரை இருக்கிறது அதை அணிந்து உங்களை மறைத்துக் கொள்ளுங்கள். யாரும் விசாரித்தால் என்னுடைய மனைவி என்று கூறிவிடுகிறேன்" என்று சொல்லி மூட்டையை அவிழ்த்து கோஷாவை எடுத்துக் கொடுத்தார். கலாநந்தினி அதைப் பெற்றுக்கொண்டு அணிந்து கொள்ளுவதற்குத் தயங்கி நின்றாள்.

"என்னம்மா தயக்கம்? என் மனைவி என்று பேச்சுக்குத்தானே சொன்னேன். அப்படிச் சொல்வதால் பாதகம் ஒன்றும் நேர்ந்துவிடாதல்லவா? வெட்கப்பட வேண்டாம். அணிந்துகொண்டு என்னோடு வாருங்கள்" என்று அவசரப்படுத்தினார் கிழவர்.

கலாநந்தினி அவ்விதமே கோஷாத் திரையிட்டுத் தன்னை மூடி மறைத்துக்கொண்டு முஸ்லீம் கிழவரின் பின்னே நடக்க ஆரம்பித்தாள். நேற்று இரவிலிருந்து நடக்கும் சம்பவங்கள் யாவுமே அவளுக்குப் புதிய அனுபவங்களை உண்டாக்கின. கோஷாவில் மறைந்து கொண்டிருக்கும் அவளைப்போலவே அவளுடைய எதிர்காலமும் இனம் தெரியாமல் மூடி மறைத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அடுத்த கணம் என்ன நடக்கப் போகிறதோ வென்றுகூடத் தெரியவில்லை. தனது முகத்தை மூடியிருக்கும் திரையில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் சிறிய துவாரங்களின் வழியே பார்த்துக்கொண்டே அந்தக் கரடுமுரடான காட்டுப் பாதையில் முன்பின் கண்டறியாத யாரோ ஒருவருடன் நடந்துகொண்டிருந்தாள். பலவித சிந்தனைகளால் குழம்பிய மனத்துடன் நடந்துகொண்டிருந்த அவள் வழியிலிருந்த சிறிய கல்லொன்றால் இடறப்பட்டு தட்டுண்டு தடுமாறிக் கீழே சாய்ந்துவிட்டாள். அதைக்கண்ட கிழவனார் திடீரென்று பாய்ந்து தூக்கி நிறுத்தி அடிபட்ட கால் பெருவிரலைத் தடவிக் கொடுத்தார். அயல் மனிதரின் ஸ்பரிசம் பட்டதும் கலாநந்தினியின் உடலெல்லாம் கூசியது. தன்னை அவசரமாகக் கிழவனாரின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு கிழவனாரை அருவருப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள். கோஷாவுக்குள்ளிருந்தபடியே "கிழவனாரே! ஏன் என்னைத் தொட்டீர்கள்? உங்கள் மனைவியென்று நடிப்பதற்காக ஒப்புக் கொண்டேன். அதற்காக என்னைத் தொடக்கூடிய உரிமை வந்துவிட்டதா? இடறி விழுந்தால் எழுந்திருப்பதற்கு எனக்குத் தெரியாதா?" என்று கோபமாகக் கூறினாள்.

"அம்மா! மன்னித்துக் கொள்ளுங்கள். ஏதோ அவசரத்தில் இந்தமாதிரி நேர்ந்துவிட்டது. நான் உங்கள் தந்தைக்குச் சமானம். ஒன்றும் தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள். இந்தச் சம்பவத்தை செல்லராஜனிடம் சொன்னால் அவர்கூடத் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டார். என்னைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் இருவரும் இரண்டு உடலும், ஓருயிரும்" என்று சமாதானப்படுத்தினார் கிழவர்.

இருவரும் வெகுதூரம் நடந்து நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவள் பல்லக்கில் செல்லும்பொழுது வழியில் கண்ட நகர மக்களெல்லாம் நின்று மரியாதை செலுத்துவது வழக்கம். ஆனால் இன்று அந்த மக்கள் அவளைத் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை. இன்று பொன்னகரமே அவளுக்கு ஒரு புதிய நகரமாகத் தோன்றியது. நகரத்திலுள்ள சாதாரண மக்களில் அவளும் ஒருத்தி யென்ற உணர்ச்சி ஏற்பட்டது.

கிழவர் அவளை அழைத்துக்கொண்டு பல வீதிகளையும் கடந்து ஜனசந்தடி குறைவாக உள்ள ஒரு சிறிய வீதிக்கு வந்து சேர்ந்தார். வீதியின் கடைசியில் ஒரு பழைய வீடு பூட்டிக் கிடந்தது. கலாநந்தினியையும் அழைத்துக்கொண்டு வாசற் படிக்கட்டில் ஏறி தன் இடையில் இருந்த சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தார். வீட்டின் உள்ளே நுழைந்துகொண்டு கோஷாவுக்குள் இருக்கும் கலாநந்தினியை உள்ளே வரும்படி சைகை காட்டினார்.

கலாநந்தினி தயங்கினாள். அவளுடைய உள்ளத்திலே சந்தேகம் வலுப் பெற்றது. பூட்டிக்கிடக்கும் வீட்டிற்குள் செல்லராஜன் இருக்கமாட்டார் என்று நிச்சயமாக நம்பினாள். என்றாலும் வீதியில் நின்றபடி கிழவருடன் வாதம் செய்வது சரியல்லவென்று நினைத்து உள்ளே நுழைந்தாள். கிழவர் கதவைச் சாத்தித் தாளிடப் போனார். அப்போது கலாநந்தினி அவரைத் தடுத்து நிறுத்தி "ஐயா! இதுவரை நான் உங்களை நம்பி வந்தேன். ஆனால் இப்பொழுது சந்தேகம் ஏற்படுகிறது. செல்லராஜனிடம் அழைத்துச் செல்வதாகச் சொல்லி என்னை ஏன் இங்கு கூட்டிவந்தீர்கள். அவர் எங்கே? இந்த வீட்டில் வேறு யாருமில்லையா? உங்கள் மனைவி மக்களெல்லாம் இங்கே இல்லையா?" என்று கேட்டாள்.

கிழவனுருக்கு அவளுடைய கோபத்தைக் கண்டு சிரிப்பு வந்தது. "அம்மா! ஏன் வீணுகப் பயப்படுகிறீர்கள்? இந்த வீட்டிலேயே சிலநாட்கள் வசிக்கவேண்டியிருக்கும்" என்றார்.

"என்ன! உம்முடனு?"

"இல்லை! உங்கள் காதலருடன்! இரவு நடுச்சாமத்திற்கு அவர் வந்துவிடுவார். அதுவரை உங்களைப் பாது காத்து ஒப்படைக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு. அதற்கப்புறம் உங்கள் பாடு! அவர் பாடு!" என்று கூறிக் கிழவனார் வருத்தப்பட்டுக் கொண்டார்.

கலாநந்தினி கோஷா திரையை எடுத்துவிட்டு வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். சில நாட்கள் தங்கியிருப்பதற்கு வேண்டிய சாதனங்கள் எல்லாம் தயாராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சமையலறையில் சமையலுக்கு வேண்டிய பண்டங்கள் இருந்தன. குளிப்பது, முழுகுவது போன்ற எல்லா வசதிகளும் வீட்டிற்குள்ளேயே அமைந்திருந்தது. எக்காரணத்தை முன்னிட்டும் வெளியே போகவேண்டிய தேவை இல்லை. எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு "பெரியவரே! ஏற்பாடெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இப்பொழுது வயிற்றைக் கடிக்கிறது. காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லை. சிறிது நேரத்திற்குள் ஏதாவது சாப்பிடாவிட்டால் உயிரே போய்விடும். சாப்பாட்டிற்கு ஏதாவது வழி செய்யுங்கள்" என்றாள் கலாநந்தினி.

"சமையலறையில் எல்லாம் தயாராக இருக்கிறது. சீக்கிரம் ஏதாவது செய்து சாப்பிடுங்கள்" என்றார் கிழவனார்.

"ஐயையோ! எனக்குச் சமைக்கத் தெரியாதே!"

"அப்படியா! சமைக்கத் தெரியாத பெண்ணை மணந்து கொண்டு என் நண்பர் என்னென்ன சிரமப்படப் போகிறாரோ தெரியவில்லை. வேண்டுமானால் நான் இப்பொழுது சமைத்துத் தருகிறேன். நாளையிலிருந்து செல்லராஜன் அடுப்படி உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளட்டும்" என்று கூறிவிட்டு, கிழவர் அடுப்படியில் நுழைந்து சமையலுக்கு ஏற்பாடு செய்தார். இளவரசியும் அவருக்கு உதவ முன்வந்தாள். வேலை செய்து பழக்கமில்லாததால் அவளுடைய உதவி உபத்திரவமாகவே இருந்தது.

இரவு விளக்கேற்றுவதற்குள் சமையல் முடிந்தது. கிழவர் இளவரசிக்கும் உணவு பரிமாறிவிட்டுத் தானும்

உண்டு முடித்தார். பின்னர் கலாநந்தினி, தனியாக இருந்த அறையில் நுழைந்து தாளிட்டுப் படுத்துக் கொண்டாள்.

இரவு வெகுநேரம் கழித்து நன்ருகத் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது யாரோ தன் அறையின் கதவைத் தட்டும் சப்தம் கேட்டு கலாநந்தினி திடுக்கிட்டுக் கண் விழித்தாள். ஆவலுடன் சென்று அறையின் கதவைத் திறந்தாள். அங்கே சிரித்த முகத்துடன் செல்லராஜன் நின்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கலாநந்தினிக்கு அளவற்ற ஆனந்தம் ஏற்பட்டது. வெகு நாட்களுக்குப் பிறகு செல்லராஜனின் இயற்கையான உருவத்தை இன்றுதான் பார்க்கிருள். நாடு கடத்தப்பட்ட தற்கப்புறம் இப்பொழுதுதான் அந்த அன்பு ததும்பும் அழகு முகத்தை முதன் முறையாகக் காண்கிருள். இதற்கு முன்பு சந்தித்தபோதெல்லாம் அரபு வைத்தியராக சந்தித்திருக்கிருளே ஒழிய செல்லராஜனை சந்தித்ததில்லை. எனவே மிக்க மகிழ்ச்சியுடன் "மெய்க்காப்பாளர் படைத் தலைவரே வாருங்கள்! சோலைநாட்டுத் தூதரே வாருங்கள்! அரபு வைத்தியரை விட்டுவிட்டு நீங்கள் மட்டும் வந்திருக்கிறீர்களே எனக்கு உயிர் கொடுத்த அரபு வைத்தியர் எங்கே?" என்று கிண்டலாக வரவேற்ருள் கலாநந்தினி.

செல்லராஜன் உள்ளே நுழைந்து அமர்ந்துகொண்டு "இளவரசியாரே! மன்னிக்கவேண்டும். அரபு வைத்தியர் அரச தண்டனைக்குப் பயந்து உங்களையும் விட்டுவிட்டு தன் நாட்டுக்கு ஓடிவிட்டார். உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் கொடுத்திருக்கிருர். அது கிடக்கட்டும். ஆகாரமெல்லாம் முடிந்ததா? மிச்சம் மீதி ஏதாவது எனக்கு வைத்திருக்கிறீர்களா? அல்லது சாயபுவும், நீயும் சேர்ந்து தீர்த்துவிட்டீர்களா?" என்று கேட்டான்.

"ஆஹா! உங்களுக்கில்லாமலா? வாருங்கள். அடுக்களைக்குப் போவோம். நான் பரிமாறுகிறேன். வயிருரச் சாப்பிடுங்கள்" என்று கூறி அடுக்களைக்கு அழைத்தாள்.

"சமையலெல்லாம் பிரமாதமாக இருக்கும். இளவரசி கையாலே சமைத்து இந்த ஏழைத் தோட்டக்காரன் மகன் சாப்பிடுவதென்ருல் இதைப் போன்ற பாக்கியம் வேறு என்ன இருக்கிறது?"

"நீங்கள் தவருகக் கணக்குப் போடுகிறீர்கள். உங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைப்பதற்கு இன்னும் நாளாக வேண்டும். சமைத்துப் பழகிக்கொண்ட பிறகல்லவா அது சாத்தியப்படும். இன்று உங்கள் சாயபு நண்பர் தான் சமைத்தார். அவர் மிகவும் நன்ருகச் சமைக்கிருர். நல்ல மனிதர். என்னிடம் மிகவும் அன்பாக நடந்துகொண்டார்" என்று சாயபுவைப் பற்றிப் புகழ ஆரம்பித்தாள்.

"புகழ்ந்ததெல்லாம் போதும். அவர் இருக்கிருரா? போய்விட்டாரா? நான் வந்த பிறகு போகலாம் என்று சொல்லியிருந்தேனே. அவர் எங்கே?" என்று கேட்டான்.

"பக்கத்து அறையில் படுத்திருப்பதாகவும், என்னைப் பயமின்றித் தூங்கும்படியும் கூறிஞர். நீங்கள் இன்னும் அவரைப்பார்க்க வில்லையா?" என்று கூறி செல்லராஜனை அந்த அறைக்கு அழைத்துச் சென்ருள்.

அந்த அறை திறந்து கிடந்தது அதிலே தரையில் ஒரு பாயில் தலைக்கு எவ்வித உயரமும் வைத்துக் கொள்ளாமல் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை போர்த்துக் கொண்டு ஒரு உருவம் மூடி முக்காடிட்டுப் படுத்திருந்தது. செல்லராஜன் கலாநந்தினியையும் அந்த உருவத்தையும் மாறி மாறிப்பார்த்துவிட்டு "பார்த்தாயா இந்த சாயபு தூங்குவதை? மனிதன் மூச்சுப் போகக்கூட இடமில்லாமல் மூடிக்கொண்டிருக்கிருர். ஐயா சாயபு எழுந்திருமையா!" என்று கூறிக்கொண்டே அருகில் சென்று போர்வையை வெடுக்கென்று இழுத்தான். உள்ளே சில தலையணைகளும் சாயபுவினுடைய தொப்பியும், உடைகளும், தாடியும் காட்சி யளித்தன. அதைக் கண்ட கலாநந்தினிக்கு விஷயமெல்லாம் விளங்கிவிட்டது. ஆச்சரியத்துடன் "அடடே நீங்கள்தாஞ அந்த சாயபு! என்னுல்கூட அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையே? எதற்காக என்னிடமே

இந்த வேஷம் போடுகிறீர்கள்?'' என்று விளையாட்டாகக் கோபித்துக் கொண்டாள்.

செல்லராஜன் தன் திட்டத்தை விளக்கிக் கூறினன். ''இதோ பார்! நம் இருவரையும் அரசாங்க ஒற்றர்கள் தேடிக் கொண்டிருக்கிருர்கள். தற்சமயம் பொன்னுட்டின் எல்லையைக் கடப்பது சரியல்ல. ஆகவே இந்த வேட்டை அடங்கும் வரை சில நாட்கள்வரை இந்த வீட்டில் தலை மறைவாக வசிக்கவேண்டும். பகல் பூராவும் நான் சாயபு வாக இருப்பேன். நீ கோஷாஸ்திரியாக இருக்க வேண்டும். வெளியேபோய் வருவதற்கும், வீட்டு மேல்வேலைகளுக்கும் ஒரு வேலைக்காரியை ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளை யிலிருந்து அவள் வேலைக்கு வருவாள். மிகவும் எச்சரிக் கையோடு சில நாட்கள் கழித்துவிட்டுத் தப்பித்துச் சென்று விடலாம்.'' என்ருன்.

''ஒரு சந்தேகம். வருகிற வேலைக்காரியும், உங்கள் சாயபு நண்பரைப் போல வேஷக்காரி அல்லவே?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''இல்லை! இல்லை! அசல் வேலைக்காரிதான்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே அவளும் கலந்து கொண்டாள்.

## 30

**சா**யபு வீட்டின் ரகசிய வாழ்க்கை அமைதியாக நடந்து வந்தது. சாயபுவின் மனைவி வீட்டை விட்டுக் கிளம்புவதே இல்லை, வேலைக்காரியின் முன்புகூட கோஷா வைக் கலைப்பதில்லை. வேலைக்காரி முருகாயி கடைக்கு சாமான்கள் வாங்கு வதற்குப் போய்வருவாள், தண்ணீர் இறைத்துப் பாத்திரங்களில் நிரப்பி வைப்பாள். காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் வந்து வேலைகளைச் செய்து விட்டுப் போவதோடு சரி. வேலை மிகவும் சுலபம் தான், ஆனுல் நல்ல சம்பளம் கிடைத்தது.

ஆனுலும் அவளுக்கு ஏதோ ஒரு சந்தேகம் எழுந்து கொண்டே இருந்தது. எவ்வளவு ஐதீகமான கோஷா

ஸ்திரீயாக இருந்தாலும்கூட தன்னைப்போன்ற ஒரு பெண்ணைக் கூடவா கோஷா இல்லாமல் பார்க்கக்கூடாது என்று நினைத்துக் கொள்வாள். குளிக்கிற அறையில் களைந்து வைத்திருக்கும் ஈரத்துணிகளை அவள்தான் துவைத்துக் காயப்போட வேண்டும். அந்த உடைகளைப் பார்க்கும்பொழுது அவை முஸ்லீம் பெண்ணினுடைய உடைகளாகத் தெரியவில்லை. எனவே கோஷா முகமூடிக்குள் மறைந்திருப்பது ஒரு இந்து பெண்தான் என்று சந்தேகப்பட ஆரம்பித்தாள். இந்தக் கிழவயதில் சாயபு யாரோ ஒரு இந்துப் பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்து வைத்திருக்கிறார் என்று நினைத்தாள். எது எப்படியிருந்தாலும் அவளுக்கு நல்ல வரும்படி கிடைக்கிறது என்ற முறையில் திருப்தியுடனே வேலைசெய்து வந்தாள்.

ஒரு நாள் குளிக்கும் அறையில் ஈரத்துணிகளை எடுத்துத் துவைப்பதற்காக உள்ளே நுழைந்த பொழுது அங்கே ஒரு ஆபரணம் இருப்பதைக் கண்டாள். குளிக்கும்போது கழற்றி வைத்த அந்த நகையை கோஷாஸ்திரி மறந்து வைத்துவிட்டாள் என்று தெரிந்தது. நகை மிகவும் விலை உயர்ந்ததாக இருந்தது. அதை அபகரித்துக் கொண்டால் நிறைய விலைக்கு விற்கலாம் என்று நினைத்தாள். எடுத்து மறைத்துக்கொண்டு சென்றுவிட்டால் மறுபடி திரும்பி மாலையில் வரும்பொழுது சாயபு நகையைப் பற்றிக் கேட்டால் தெரியாது யென்று கூறிவிடலாம். தன் மீது சந்தேகப்பட்டால் வேலையை விட்டு நீக்கிவிடுவார். மேற்கொண்டு எதுவும் வழக்காட முடியாது ஏனென்றால் இந்துப் பெண்ணை ஒளித்து வைத்திருக்கும் இவர் வழக்குத் தொடரமாட்டார் என்று நம்பினாள். ஆகையால் வெகு விரைவிலே தன் வேலையை முடித்துக் கொண்டு நகையுடன் வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள்.

சாயபு வீட்டைவிட்டு வெளியேறிய வேலைக்காரி தன் வீட்டிற்குச் செல்லவில்லை. தனக்குத் தெரிந்த பொற்கொல்லர் வீட்டிற்குச் சென்று அவரிடம் நகையைக் கொடுத்தாள் ' ஐயா! இந்த நகையைப் பாருங்கள். இதை வைத்துக்கொண்டு எனக்குப் பணம் கொடுங்கள். கொஞ்ச காலம் கழித்து நகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுகி

றேன்" என்ருள். பொற்கொல்லர் நகையைப் பார்த்ததும் சந்தேகப்பட்டார். நகை மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கிறது. இந்த நகை இவளுக்குத் தவருன வழியில் தான் கிடைத்திருக்க வேண்டும். ஆகையால் பயமுறுத்திக் குறைந்த விலைக்கு வாங்கிவிடலாம் என்று நினைத்தார். "இது உன்னுடைய நகையல்ல உள்ளதைச் சொல். எங்கிருந்து கிடைத்தது? உள்ளதைச் சொல்லாவிட்டால் சங்கடமேற்படும்" என்று பயமுறுத்தினுர்.

"ஐயா! இந்த நகை என்னுடையதல்ல என்பது உண்மைதான். ஆனுல் இதை நான் திருடவில்லை. வழியில் கிடந்து கண்டெடுத்தேன். இதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு ஏதாவது கொஞ்சம் பணம் கொடுங்கள் போதும்" என்று நடுங்கிக்கொண்டே கூறினுள். அவளுக்குச் சிறிது பணத்தைக் கொடுத்து தன் வியாபாரத்தை லாபகரமாக முடித்துக்கொண்டார் பொற்கொல்லர்.

வேலைக்காரி முருகாயி சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பொற்கொல்லர் நகையை எடுத்துக் கொண்டு அரண்மனைப் பொற்கொல்லர் வீட்டை நோக்கி நடந்தார். "அரண்மனைப் பொற்கொல்லருக்குப் பெரிய பெரிய பிரபுக்கள் அதிகாரிகள் எல்லோரையும் தெரியும். எனவே இந்த நகையை அவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தால் நல்லவிலைக்கு வாங்கிக் கொள்வார். தனக்கு நிறைய லாபம் கிடைக்கும். இன்று நாம் நரிமுகத்தில் விழித்திருக்கிறேம்" என்று நினைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றுர்.

அரண்மனைப் பொற்கொல்லர், நகையைக் கையில் வாங்கி நன்ருக உற்றுப் பார்த்தார். சிறிது நேரம் வரை ஏதோ ஆராய்ச்சி செய்தார். சற்று யோசித்துவிட்டு "ஐயா! இது மிகவும் விலை உயர்ந்த பொருள். இதை வாங்குவதற்கு அந்தப்புரத்தி லுள்ளவர்கள்தான் ஏற்றவர்கள். நீரும் என்னுடனேயே அரண்மனைக்கு வாரும் மன்னரிடம் நகையைக் காட்டி உமக்குத் தக்க ஆதாயத்துடன் விற்றுத் தருகிறேன்" என்று சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

இரண்டு பொற்கொல்லர்களும் மன்னரின் மாளிகையை அடைந்தனர். அங்கு நின்ற காவல்காரனிடம் அரண்மனைப் பொற்கொல்லர் வந்திருப்பதாகவும், மன்னரை அவசியம் பார்க்க விரும்புவதாகவும் செய்தி அனுப்பினார். காவல்காரன் உள்ளே சென்று உத்தரவு பெற்று வந்து அனுமதி கொடுத்தான். அரண்மனைப் பொற்கொல்லர் தன்னுடன் வந்தவரை வெளியே நிறுத்திவிட்டு மன்னரிடம் சென்றார்.

மன்னர் தனிமையில் வீற்றிருந்தார். அவருக்கு தன் மகள் காணாமல் போனதிலிருந்து மனநிலை சரியில்லை. கவலையும், அவமானமும் அவரை அரித்துத் தின்றன. மறைந்து சென்ற அரபு வைத்தியனைத் தேடிப்பிடிக்கும் படி பறை அறைவித்து சுமார் ஒருவாரம் ஆகிவிட்டது. இன்னும் ஒருவித தகவலும் கிடைக்கவில்லை. அதனால் அவருடைய உள்ளம் ஆத்திரமடைந்திருந்தது. இச்சமயம் பொற்கொல்லர் பார்க்க வந்திருப்பது அவருக்கு வேண்டா வெறுப்பாகத் தோன்றியது.

பொற்கொல்லர் அரசரை வணங்கி "அரசே! இது இளவரசியாருடைய நகையைப் போலத் தெரிகிறது. இதைக் கொண்டு வந்தவரை வெளியே நிறுத்தி வைத்திருக்கிறேன்" என்று கூறினார்.

மன்னர் நகையை வாங்கி நன்றாகப் பார்த்தார். சந்தேகமே இல்லை. அது இளவரசியினுடையதுதான். தன் அருகில் நின்ற வீரர்களிடம் "வெளியே இந்தப் பொற்கொல்லருடன் வந்து காத்திருக்கும் மனிதனைப் பிடித்துக் கொண்டுவா" என்று உத்தரவிட்டார்.

நல்ல லாபத்தை எதிர்பார்த்துக் காத்து நின்ற பொற்கொல்லர் மன்னர் அழைக்கிறார் என்றதும் மகிழ்ச்சியுடன் உள்ளே நுழைந்தார். ஆனால் மன்னரிடமிருந்து வந்த கேள்வி அவரை நிலை குலையச் செய்தது.

"பொற்கொல்லரே! இது யாருடைய நகை தெரியுமா? இளவரசியாருடையது. உமக்கு எப்படிக் கிடைத்தது. உண்மையை மறைக்காமல் கூறிவிடும். இல்லையேல்

தண்டனை கிடைக்கும்'' என்று சீற்றமுடன் கேட்டார் மன்னர்.

பொற்கொல்லருக்குக் கால் கைகளெல்லாம் நடுங்கி விட்டன. "அரசே! எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் இதைத் திருடவில்லை. என் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு பெண் குடியிருக்கிருள். அந்த முருகாயி தான் இந்த நகையைக் கொண்டுவந்து கொடுத்தாள். எங்கோ வழி யில் கிடந்து கண்டெடுத்ததாகக் கூறினுள். நானும் அதை நம்பி விலைக்கு வாங்கிவிட்டேன். இளவரசியாருடைய நகையாக இருந்தால் இதைத் தாங்களே எடுத்துக் கொள் ளுங்கள். என்னை விட்டுவிட்டால் போதும்'' என்று மன்றுடிக் கேட்டுக்கொண்டார். இளவரசியார் காணு மல் போன விஷயம் அவருக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது!

மன்னர் வேலைக்காரி முருகாயியை உடனே பிடித்து இழுத்து வரும்படி உத்திரவிட்டார். சிறிது நேரத்தில் வேலைக்காரி முருகாயி பயந்து நடுங்கிக் கண்ணீர் வடித்துக் கொண்டே காவல் வீரர்கள் புடைசூழ மன்னரின் முன் வந்து சேர்ந்தாள்.

"இந்த நகை உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று மன்னர் கேட்டார்.

அதற்கு அவள் முன்பு தான் பொற்கொல்லரிடம் கூறியதைப் போலவே தெருவில் கிடந்து கண்டெடுத்த தாகக் கூறினுள். ஆனுல் மன்னர் அதை நம்பவில்லை. இதோ பார்! இந்த நகை வழியில் கிடந்து கண்டெடுக்கக் கூடிய பொருளல்ல. நீ உண்மையைக் கூறுவிட்டால் உனக்குச் சரியான தண்டனை கிடைக்கும். காவல் வீரர் களை விட்டுச் சித்ரவதை செய்யப்படுவாய். இப்போதே உள்ளதைக் கூறிவிட்டால் மன்னிப்புக் கிடைக்கும். என்ன சொல்கிருய்?'' என்று கண்டிப்பாக எச்சரித்தார் மன்னர்.

முருகாயி உள்ளதைக் கூறிவிட்டாள். "அரசே! நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். பேராசை

யால் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்துவிட்டேன். நான் வேலை செய்யும் வீட்டில் இந்த நகையைத் திருடினேன். என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று கெஞ்சினுள்.

"நீ யார் வீட்டில் வேலை செய்கிருய்? அவர்களுக்கு இந்த நகை எப்படிக் கிடைத்தது என்பது தெரியுமா?'' என்ருர் மன்னர்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது மகாராஜா? ஒரு சாயபு தன் மனைவியுடன் கொஞ்ச நாட்களுக்கு முன்பு எங்கள் தெருவில் வந்து குடியிருக்கிருர். அவர் வீட்டில் தான் நான் வேலைசெய்கிறேன். அந்த அம்மா குளிக்கும் போது இந்த நகையை மறந்து வைத்துவிட்டார்கள். சந்தர்ப்பம் பொருத்தமாக இருந்ததால் என்னுடைய சபல புத்தியால் திருடிவிட்டேன். இனிமேல் ஒருபோதும் நான் இந்த மாதிரி செய்யமாட்டேன்'' என்று மன்னரின் காலில் விழுந்து மேலும் கெஞ்சினுள்.

மன்னருக்குச் சந்தேகம் வர ஆரம்பித்தது. அந்த சாயபுவையும், அவருடைய மனைவியையும் பிடித்தால் ஒரு வேளை துப்புக்கிடைக்கும் என்று நினைத்தார். ஒரு வேளை அரபு வைத்தியனே சாயபு வேஷத்தில் கலாநந்தினியுடன் வசித்து வருகிருனே என்றும் நினைத்தார். கலாநந்தினியை நினைக்கும் பொழுது அவருக்கு ஆத்திரம் இன்னும் அதிகரித்தது எங்கிருந்தோ வந்த அரபு வைத்தியனுடன் அரச போகத்தையே துறந்துவிட்டு ஓடிப்போய் நாடோடி வாழ்க்கை நடத்துவதென்ருல் தன் மகள் எவ்வளவு இழிநிலை அடைந்திருக்கிருள் என்று நினைத்து ஆத்திரம் கொண்டார். இந்தச் சந்தேகம் வந்ததும் உடனடியாக அந்த முஸ்லீம் கிழவரையும், அவர் மனைவியையும் அழைத்து வரும்படி உத்தரவிட்டார்.

சாயபுவும் அவர் மனைவியும் தங்கள் வீட்டு வேலைக்காரியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். காலையில் குளிக்கும் அறையில் மறந்து வைத்துச் சென்ற நகை காணுமல் போனதும் வேலைக்காரியின் மீது சந்தேகம் ஏற்பட்டது. வேலைக்காரியைத் தவிர வேறு யார் திருட முடியும்? எனவே நகையைத் திருடிச் சென்றவள் திரும்பி

வருவாளா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. சந்தேகத்துடன் காத்திருக்கும்பொழுது கதவு தட்டும் ஓசை கேட்டது. சாயபு வேலைக்காரி வந்துவிட்டாள் என்று நினைத்து அவசரமாகப் போய் கதவைத் திறந்தார். கதவைத் திறந்த போது கண்ட காட்சி வேருக இருந்தது. ஆயுதபாணிகளாக ஐந்தாறு வீரர்கள் வழியை மறைத்துக்கொண்டு நின்ருர்கள். அவர்களில் தலைவன் போலத் தோன்றிய ஒருவன், "ஐயா சாயபு! உங்களேயும், உங்களது மனைவியையும் அழைத்து வரும்படி மன்னர் உத்தரவிட்டிருக்கிருர். வீட்டைப் பூட்டிக்கொண்டு உடனே இருவரும் எங்களுடன் வாருங்கள்," என்று அதிகார தோரணையில் உத்தரவிட்டான்.

மன்னர் அழைக்கிருர் என்பதைக் கேட்டதும் சாயபுவுக்கு உள்ளுக்குள் பயம் தோன்ற ஆரம்பித்தது. தங்களுடைய இரகசியம் தெரிந்துகொண்டுதான் மன்னர் அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பி யிருக்கிருரோ என்ற சந்தேகம் வந்தது. அப்படியாளுல் இந்த வீரர்களை அடித்துத் தள்ளிவிட்டுத் தான் தப்பித்துக் கொள்வதே நல்லது என்று நினைத்தார். அவ்விதம் செய்வதற்கு அவரால் முடியும். ஆளுல் கலாநந்தினியை என்ன செய்வது? அவளை விட்டுவிட்டுத் தான் மட்டும் தப்பித்துச் சென்று என்ன பிரயோஜனம்? இவ்விதம் குழம்பிய மனத்துடன் காவல் வீரர்களின் தலைவனைப் பார்த்து "மன்னர் எங்களை ஏன் அழைக்கிருர்? நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று சாக்குப் போக்குச் சொல்லித் தப்பித்துக் கொள்ள நினைத்தார்.

காவல்காரன் விடுவதாக இல்லை. "ஐயா! நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. உங்களிடம் வேலை பார்த்தவள் ஒரு நகையைத் திருடி இருக்கிருள். அவளுடைய திருட்டுக் குற்றம் வெளிப்பட்டுவிட்டது. அந்த நகையை உங்களிடமிருந்து திருடியிருப்பதாகச் சொல்லுகிருள். அது உண்மைதாளு என்பதை விசாரிக்க உங்களை அழைத்துவரச் சொன்ஞர்" என்ருன்.

இச்சமயம் கோஷா திரைக்குள் மறைந்திருந்த கலாநந்தினியும் அங்குவந்து என்ன தகராறு நடக்கிறது என்று

கவனித்துக் கொண்டிருந்தாள். தன்னுடைய நகை மன்னரின் கைவரை போய்விட்டது. அந்த நகையைக் கண்டதும் அது இளவரசிக்குச் சொந்தமானது என்பதைப் புரிந்து கொண்டிருப்பார். எனவே இரகசியம் அம்பலமாகிவிடும் என்று நினைத்தாள். தன் கணவனை உள்ளே அழைத்து தனியாகக் கூட்டிக்கொண்டுபோய் "ராஜா! நாம் இப்பொழுது சங்கடத்தில் மாட்டிக் கொண்டோம். இதிலிருந்து தப்ப வேண்டுமென்றால் நகை நம்முடையதல்ல வென்றும், நம் வீட்டில் களவாடியதாகச் சொல்லுவது பொய்யென்றும் வாதிக்க வேண்டும். அதற்குமேல் நடப்பது நடக்கட்டும்" என்று கூறி, இருவரும் மரியாதையாக மன்னரிடம் போய்விடுவது நல்லது என்றாள். இல்லையேல் வீண் சந்தேகம் ஏற்படும் என்றும் வற்புறுத்தினாள். கடைசியில் இருவரும் சேவகர்களுடன் புறப்பட்டனர்.

மன்னரின் முன்பு சாயபுவும், அவர் மனைவியும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். இதற்குள் மந்திரி நீதிவாணரும் வேறு சில முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர். வேலைக்காரி முருகாயியும், இரண்டு பொற்கொல்லர்களும் மன்னரின் முன் நின்று கொண்டிருந்தார்கள்.

மன்னர் சாயபுவை நன்கு உற்றுக் கவனித்தார். அவர் கொண்ட சந்தேகம் வீண் என்று தோன்றியது. சாயபு தான் அரபு வைத்தியன் என்று சந்தேகப்படுவதற்கு எவ்வித ஆதாரமும் தெரியவில்லை. ஆனால் இந்த நகை இவர்களிடமிருந்து திருடப் பட்டிருந்தால் இவர்களைத் தூண்டித் துருவி விசாரிக்கும்பொழுது ஏதாவது துப்பு மட்டும் நிச்சயம் கிடைக்கு மென்று நம்பினார்.

மன்னர் சாயபுவைப் பார்த்து "ஐயா சாயபு! உம்முடைய பெயரென்ன?" என்றார்.

"முகமது அப்துல்லா!"

"இதோ இங்கு நிற்கும் வேலைக்காரி முருகாயி உம்முடைய வீட்டில் வேலை செய்பவளா?"

"ஆமாம் அரசே!"

"இவள் இந்த நகையை உம்முடைய வீட்டிலிருந்து திருடியதாகச் சொல்லுகிருள். இது உம்முடைய நகை தானு?" என்று கூறி மன்னர் நகையை அப்துல்லாவிடம் காட்டினர்.

அப்துல்லா நகையை வாங்கிப் பார்த்தார். "இல்லை! எங்களுடைய நகையல்ல. வேலைக்காரி பொய் சொல்லு கிருள். என்னைப் போன்ற ஏழை முஸ்லீம் இவ்வளவு விலை உயர்ந்த நகைக்கு எங்கே போவது? அது மாத்திர மல்ல. இது இந்து சமூகத்தினர் போடக் கூடிய நகை. எங்கள் முஸ்லீம் பெண்கள் இவ்வித நகை அணிவது கிடையாது. இதை வேறு யாரோ பிரபு வீட்டில் திருடி யிருக்கலாம். எங்களுக்கும் இந்த நகைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை அரசே!" என்று கூறினர் சாயபு.

மன்னருக்கு ஒன்றும் புரியவில்லை. சாயபு சூழ்ச்சி செய்து பொய் சொல்லுகிருரா, அல்லது வேலைக்காரி பொய் சொல்லுகிருளா என்று குழப்பம் ஏற்பட்டது. மன்னர் வேலைக்காரியைப் பார்த்து "என்ன முருகாயி! சாயபு சொல்லுவதைக் கேட்டாயா? உள்ளதைச் சொல். முதலில் தெருவில் கிடந்து எடுத்ததாகக் கூறினையல்லவா? இப்பொழுது சாயபு கூறுவதும் நீ முன்பு கூறியதற்கு அனுசரணையாக இருக்கிறது. உண்மை எதுவாக இருந்தா லும் மறைக்காமல் தைரியமாகச் சொல், உண்மையைக் கூறினல் உனக்கு ஒருவித தொந்தரவும் ஏற்படாது" என் ருர்.

வேலைக்காரிக்கு சாயபுமீது கோபம் ஏற்பட்டது. சாயபு இது இந்துக்கள் நகை யென்று கூறியதைக் கேட் டதும் அவளுக்கு வேருெரு எண்ணம் தோன்றியது. இந்த சாயபு ஏதோ திருட்டுத்தனம் செய்கிருர். இவரை அம்பலப் படுத்தியாக வேண்டு மென்று நினைத்தாள். மன்னரைப் பார்த்து சற்று ஆத்திரத்துடன் "அரசே! நான் சத்திய மாகச் சொல்கிறேன். இந்த சாயபுதான் பொய் பேசுகிருர். இந்த நகை இந்துக்களின் நகை என்று சொல்லித் தப்பித் துக்கொள்ளப் பார்க்கிருர். இருவருடைய மனைவியே ஒரு இந்துப் பெண்ணுக இருக்கலாம் என்று சந்தேகப்படு கிறேன். இவருடைய மனைவி குளிக்கும் அறையில்

களைந்து வைக்கும் உடைகளெல்லாம் இந்துக்களுடைய உடையாகவே இருக்கின்றன. இந்த அம்மாளை விசாரித்தால் தெரியும்'' என்றாள்.

மன்னர் கோஷாவுக்குள் இருக்கும் பெண்ணைப் பார்த்து ''அம்மா! உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க நான் விரும்பவில்லை. இந்த நகை எங்கிருந்து கிடைத்தது என்பதை உண்மையைச் சொல்லிவிட்டால் போதும். நீங்கள் இந்துவாக இருந்தாலும் சரி, முஸ்லீமாக இருந்தாலும் சரி. எனக்குக் கவலை இல்லை'' என்று மரியாதையுடன் கேட்டார் மன்னர். ஆனால் கோஷா ஸ்திரியிடமிருந்து எவ்வித பதிலுமில்லை. சிறிதுநேரம் பொறுத்துப் பார்த்த மன்னர், ''ஏனையா சாயபு! உம்முடைய மனைவி ஊமையா? ஏன் பதில் பேசாமல் நிற்கிறார்'' என்றார்.

''அரசே! நாங்கள் மிகவும் ஐதீகமானவர்கள். கோஷா ஸ்திரி பிறருடன் பேசுவது கூடாது. என்ன கேட்க வேண்டுமானாலும் என்னிடம் கேளுங்கள்'' என்று பதற்றத்துடன் கூறினார் சாயபு.

இச்சமயம் கோஷாவுக்குள் இருந்த பெண் தேம்பித் தேம்பி அழும் குரல் கேட்டது. அதைக் கண்டு எல்லோரும் ஆச்சர்யமுற்றனர். மன்னரும், மந்திரி நீதிவாணரும் இரகசியமாக ஏதோ முணமுணத்துக் கொண்டார்கள். பின்னர் மன்னர் வேலைக்காரியை அழைத்து ''முருகாயி! நீ கூறுவது உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பெண் அணிந்திருக்கும் கோஷா திரையை நீயே விலக்கிவிடு'' என்று உத்திரவிட்டார். வேலைக்காரி கோஷா ஸ்திரியை நெருங்கினாள். சாயபு துள்ளிக் குதித்துப் போய் தடுப்பதற்கு முயன்றார். இதற்குள் கோஷா ஸ்திரியே தன்னுடைய திரையை விலக்கிவிட்டு எல்லோருக்கும் முன்பாக வந்து நின்றாள்.

கலாநந்தினியைக் கண்டதும் மன்னரும், மந்திரியும், மற்றவர்களும் திடுக்கிட்டனர். சேவகர்கள் எல்லோருமே ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். வேலைக்காரி முருகாயி விதிர்த்துப் போய் நின்றுவிட்டாள்.

மன்னருக்குத் தன் மகளை இங்நிலையில் கண்டதும் ஆத்திரமும் அவமானமும் பொங்கியது. "ஏன் அழுகிருய்? மன்னர் குலத்திலே பிறந்து மானங்கெட்டதனமாக வாழ்க்கை நடத்தும் உனக்கு வெட்கமும், மானமும் கூட இருக்கிறதா? ஏன் நீலிக் கண்ணீர் வடிக்கிருய்? பட்ட மகிஷியின் வயிற்றிலே பிறந்த உனக்கு பட்டம் கட்டி அரசுரிமை கொடுக்க நினைத்தேன். அதற்காக நானல்லவா வெட்கப்படவேண்டும்? நானல்லவா கண்ணீர் வடிக்க வேண்டும். ஏன் கண்ணீர் வடிக்கிருய்? இரவோடு இர வாக அழைத்துச் சென்ற அரபு வைத்தியன் எங்கே? அவன் உன்னை சாயபுவுக்குக் கைமாற்றிவிட்டான? கை மாறிக் கைமாறிக் காட்சி அளிக்கும் கன்னிகையே! நீ என் மகளல்ல. என் மகள் என்றே இறந்துவிட்டதாக நினைத் துக் கொள்கிறேன். நீ தொலைந்துபோ. ஆனல் என் னுடைய குலகௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக உன்னை நான் பலி யிட்டாகவேண்டும். உள்ளதைச் சொல். நம்பிக்கைத் துரோகம் செய்த அந்த அரபு வைத் தியன் எங்கே!" என்று கர்ஜனை செய்தார் மன்னர்.

தன் தந்தையின் கூரிய சொல்லம்புகளைக் கேட்கச் சகிக்காத கலாநந்தினி மன்னரின் காலடியிலே விழுந்து தேம்பிக்கொண்டே "தந்தையே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நீங்கள் எண்ணுவதுபோல அவ்வளவு கேவலமானவளல்ல நான்" என்றுள்.

"நீ ஓடி மறைந்தது குற்றமல்லவா?"

"நான் ஓடவில்லை. என்னை ஓடும்படி செய்துவிட் டார் உங்கள் இளையராணி. நான் அரபு வைத்தியனுடன் ஓடிவிட்டதாக இளையராணி கதை கட்டி யிருக்கலாம். ஆனல் அவர்களுடைய உள் அந்தரங்கத்தில் அது பொய் என்பது அவர்களுக்குத் தெரியும். நான் இங்கு உயிரோடு நிற்பதைக் கண்டால் இளையராணி மோகனதத்தை ஆச்சரியத்தால் மலைத்துப் போவார். கொன்று புதைத்த பிணம் கூண்டேறி வழக்காட வந்திருக்கிறதே என்று பயந்து நடுங்குவார்......"

"என்ன சொல்கிருய்? எனக்கு ஒன்றும் புரிய வில்லையே!"

"உண்மை. உங்களுக்குப் புரியாதுதான். உடனே உங்கள் இளையராணியை அழைத்து வாருங்கள். அப்போதுதான் எல்லாம் புரியும்" என்றாள்.

மன்னர் இளையராணியை அழைத்து வரும்படி உத்தர விட்டார். இளையராணி மோகனதத்தை வந்து சேர்ந்தாள். மன்னரின் முன் கலாநந்தினி நிற்பதைக் கண்டு ஒன்றும் புரியாமல் திகைத்தாள். ஆற்றங்கரைக் கோயிலில் அடி மண்ணிலே புதைந்து கிடக்கவேண்டிய அவள், அரசரின் முன் நிற்பதென்றால் ஆச்சரியம் ஏற்படாதா என்ன?

கலாநந்தினி திகைப்புடன் நிற்கும் தன் சிற்றன்னையைப் பார்த்து "இளையராணியாரே! பயப்பட வேண்டாம்! உங்களால் கொன்று புதைக்கப்பட்டு, உங்கள் கட்டுக் கதையில் அரபு வைத்தியனுடன் ஓடிவிட்ட அதே கலாநந்தினிதான் பேசுகிறேன். ஆவி ரூபத்தில் அல்ல. அங்க அவயவங்களுடன் மனித சரீரத்தில் நின்றுதான் பேசுகிறேன். நீங்கள் பாலிலே மயக்க மருந்து கொடுத்து பெட்டிக்குள்ளே வைத்து உங்கள் வேலையாட்கள் மூலமாக, சுரங்க வழியாக ஆற்றங்கரைக் கோயிலில் புதைக்கச் செய்தீர்களே, அதே கலாநந்தினி பேசுகிறேன். மாண்டவர்கள் மீண்டது எப்படி என்று கேட்கிறீர்களா? மந்திரத்தால் அல்ல, சந்தர்ப்பவசத்தால்தான். சந்தர்ப்பம் உங்களைச் சதிசெய்துவிட்டது. என்ன செய்யலாம்?"

கலாநந்தினி கூறுவது மன்னருக்கும், நீதி வாணருக்கும் ஒரே புதிராக இருந்தது. ஆனால் மோகனதத்தை தன்னுடைய குற்றம் அம்பலமாகிவிடப் போகிறதே என்று நடுநடுங்கினாள். எனவே தற்காப்பில் ஈடுபட நினைத்தாள். "அரசே! இவள் தப்பித்துக்கொள்ள ஏதேதோ என்மீது பழிசுமத்துகிறாள். நான் கொன்று புதைத்து விட்டேனாம். இவள் எழுந்து வந்துவிட்டாளாம். இந்த மாயாஜாலத்தை எல்லோரையும் நம்பச் சொல்லுகிறாள். நீ அரபு வைத்தியனுடன் ஓடிப்போனது பொய் என்றால் அன்று இரவு உன்னோடு காணாமல் சென்ற

அரபு வைத்தியன் எங்கு போய்விட்டான்?" என்று குத்த லாகக் கேட்டாள் மோகனாங்கி.

இதுவரை பேசாது நின்ற சாயபு திடீரென்று பேச முன் வந்தார். "அரபு வைத்தியன் எங்கும் போய்விட வில்லை. இதோ உங்கள் முன்னால்தான் நிற்கிறேன்" என்றான். மன்னரும் மற்றும் எல்லோரும் அதிசயத்துடன் சாயபுவையே பார்த்தனர். அதே சமயம் சாயபு தன் பொய்த் தாடி மீசைகளையும், குல்லாயையும் களைந்தெறிந் தார். சாயபு நின்ற இடத்தில் செல்லராஜனைக் கண்டு எல்லோரும் திடுக்கிட்டனர்.

மன்னருக்கு அளவு கடந்த ஆச்சரியமும், ஆத்திரமும் ஏற்பட்டது. "நீ இங்கு எப்படி வந்தாய்? அரபு வைத்தி யனாக வேஷம் போட்டதும் நீதானா? எதற்காக இந்த நாடகமெல்லாம்?" என்று சீறினார்.

"அரசே! நான் சோலைநாட்டுத் தூதராக வந்து சென்றபின் சோலைநாட்டிலேயே வசிப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. இந்தப் பொன்னாட்டின் புனித மண்ணின் மீது அவ்வளவு பிரியம். ஆனாலும் உங்கள் ஆணையை மீறக்கூடாது என்பதற்காக அங்கேயே காலம் கழித் தேன். அப்போது நீங்கள் தீராத ரணத்தால் துன்பப் படுவதாகக் கேள்விப்பட்டேன். தந்தையைக் காட்டிலும் சிறந்த அன்பு செலுத்தி, சிறு வயதிலிருந்தே என்னைக் காப்பாற்றிய மன்னர் பெருமானுக்கு என்னுடைய கடமை யைச் செய்ய நினைத்தேன். நல்ல மருந்து என் கைவச மிருந்தது. வந்தேன். குணப்படுத்தினேன். ஆனால் இளவரசியை என்னால் மறக்க முடியவில்லை. இருவரும் சந்தித்துப் பழகி வந்தோம். நீங்கள் கலைநகரத்திற்குச் சென்ற சமயத்தில் ஒருநாள், சுரங்க வழியாக வழக்கமாக வரும் இளவரசியைச் சந்திப்பதற்கு ஆற்றங்கரைக் கோயி லில் காத்திருந்தேன். அப்போது இளையராணியாரின் ஆட்கள் ஒரு பெட்டியைக் கொண்டுவந்து புதைத்தார்கள். எனக்குத் தற்செயலாக சந்தேகம் ஏற்பட்டது. அவசர மாகத் தோண்டி எடுத்துப் பெட்டியைத் திறந்து பார்த் தேன். பெட்டிக்குள் இளவரசி மயங்கிக் கிடந்தாள்.

பின்னர் மயக்கம் தெளிவித்து இருவரும் வெளியேறினோம். முதலில் இது உண்மையா, இல்லையா! என்பதை உங்கள் இளையராணியிடம் கேளுங்கள்'' என்றான் செல்லராஜன்.

மோகனதத்தை எல்லாம் பொய் என்று மறுத்துக் கூறினாள். உடனே செல்லராஜன் ''நான் சொல்வதற்கு சாட்சியம் இருக்கிறது. ஆற்றங்கரைக் கோயில் பன்னீர் மரத்தடியில் தோண்டிப் பார்த்தால் அந்தப் பெட்டி இன்னும் கிடைக்கும். அந்தப் பெட்டியைக் கொண்டு வந்து புதைத்த ஆட்களில் ஒருவனை எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இளையராணியின் அந்தப்புரத்தில் வேலை பார்ப்பவர்கள்தான் அவர்கள். வேண்டுமானால் அங்கு வேலை பார்க்கும் முனியனைக் கூப்பிட்டு விசாரி யுங்கள். பெட்டி தூக்கி வந்தவர்களில் அவனும் ஒருவன்'' என்று கூறினான்.

உடனே முனியன் அழைத்துவரப்பட்டு விசாரிக்கப் பட்டான். ''மகாராஜா! எங்களுக்கு ஒன்றும் தெரியாது. இளையராணி ஒரு பெட்டியைக் கொடுத்து சுரங்க வழி யாகச் சென்று புதைத்துவரும்படி சொன்னார்கள். அந்தப் பெட்டிக்குள் என்ன இருந்தது என்பது எங்களுக்குத் தெரியாது'' என்று கூறினான் முனியன்.

இவற்றை யெல்லாம் கேட்ட மன்னர் இளையராணி யின் மீது சந்தேகப்பட ஆரம்பித்தார். கலாநந்தினியைக் கொன்றுவிட்டால் தன் மகனுக்கு அரசுரிமை கிடைக்கு மென்று நினைத்து ஒருவேளை கொலை செய்யவும் துணிந் திருப்பாள் என்று நம்பினார். ஆனால் மோகனதத்தை இன்னும் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ள முன் வரவில்லை.

பின்னர் கலாநந்தினி சொன்னதன்பேரில் அவளுக்குப் பால் கொடுத்த வேலைக்காரி கொண்டுவந்து விசாரிக்கப் பட்டாள். அவள் ''மகாராஜா! எனக்கு ஒன்றும் தெரி யாது. இளையராணி என்னிடம் பாலைக் கொடுத்து இள வரசியிடம் கொடுத்துவிட்டு வரும்படி கூறினார்கள். நான் கொண்டுவந்து கொடுத்தேன்'' என்றாள்.

"அதில் ஏதாவது மருந்து கலந்திருந்ததா?"

"அது எனக்குத் தெரியாது. ஆனால் இளையராணி யார் என்னிடம் பாலைக் கொடுக்கும்பொழுது அவருடைய காலடியில் இரண்டு கசங்கிய இலைகள் கிடந்தன. நான் தற்செயலாக அதைக் கவனித்தேன். உடனே இளைய ராணியார் அதை எடுத்து வெளியே எறிந்துவிட்டுப் போகும்படி கூறினார். நான் அப்படியே செய்தேன்."

"அது என்ன இலை என்பது தெரியுமா? இதற்கு முன்பு அந்த இலையைப் பார்த்திருக்கிறாயா?"

"அது என்ன இலை என்று எனக்குத் தெரியாது. மருத்துவப்பெண் மருந்து கட்டிக்கொண்டு வரும் இலை மாதிரி இருந்தது."

உடனே அரண்மனை மருத்துவப்பெண் வரவழைக்கப் பட்டாள். பயந்து நடுங்கிக்கொண்டே மருத்துவப்பெண் வந்து சேர்ந்தாள். மந்திரி நீதிவாணர் அவளை விசாரித் தார். அதற்கு அவள் "இளவரசி காணாமல் போனதினத் தன்று, இளையராணியார் என்னிடம் நன்றாகத் தூங்கு வதற்கு மருந்து கேட்டார். நான் மூன்று நாளைக்கு உப யோகிக்கும்படி மூன்று பொட்டலங்கள் செந்தூரங்கள் மடித்துக் கொடுத்தேன்" என்றாள்.

"அந்த மூன்று பொட்டலங்களையும் ஒரே சமயத்தில் பாலில் போட்டுக் குடித்தால் என்ன ஆகும்?"

"அளவு கடந்த தூக்கம் வரும். தன்னுணர்ச்சி இல்லாமல் மங்கிக்கிடக்க நேரிடும். ஆனால் உயிருக்கு ஆபத்து ஒன்றும் வராது" என்றாள்.

இப்பொழுது இளையராணியின் மீதிருந்த குற்றச் சாட்டு ஊர்ஜிதமாகிவிட்டது. எனவே அவளால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. தரையைப் பார்த்தபடியே தலைகுனிந்து நின்றாள். அதைக் கண்ட மன்னர் மிகவும் ஆத்திரம் கொண்டார். "மோகனதத்தை! உன்னுடைய பேய்ச் செயல்களெல்லாம் அம்பலமாகிவிட்டன. அன்று தினம் செல்லராஜன் கலாநந்தினியைக் காப்பாற்றி

இருக்காவிட்டால் அவள் இறந்து போயிருப்பாள். உன்னுடைய சதியும் மறைந்து போயிருக்கும். அன்று தினம் உத்தமியான பட்டமகிஷியை உன்னுடைய சதிச் செயலால் சிறைவாசம் செய்யச் செய்தாய். இன்று அவளுடைய அருமை மகளை அரச உரிமைக்குரிய ஒரே பெண்ணை கொலை செய்வதற்குத் துணிந்தாய். உன்னைப் போன்ற கொலைகாரியை, வஞ்ச நெஞ்சம் படைத்த குள்ளநரியை எனது மனைவியாக இனியும் அந்தப்புரத்தில் வைத்துக் கொள்ளத் தயாரில்லை. நீ எனக்கு மட்டுமல்ல, மனித இனத்திற்கே விரோதி. உன்னுடைய குற்றத்திற்கு என்ன தண்டனை விதித்தாலும் தகும். ஆனால் உனக்கு சிறைத் தண்டனை விதிப்பதன் மூலம் கருணை காட்டுகிறேன். போ! என் முன் நிற்காதே! யாரங்கே! இவளை இழுத்துச் செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டார் மன்னர்.

சேவகர்கள் மோகனதத்தையை அழைத்துச் சென்றனர். வடிகிற கண்ணீருடனும், தாழ்ந்த தலையுடனும் சேவகர்களுடன் வெளியேறினாள்.

அடுத்தபடியாக மன்னரின் பார்வை கலாநந்தினியின் மீது திரும்பியது. ''கலாநந்தினி! நீ முழுக்கக் குற்றமற்றவள் என்று கூறிவிட முடியாது. நீ ஆளப்பிறந்தவள். பொன்னாட்டின் எதிர்கால அரசி. அரச குலத்திலே பிறப்பவர்களுக்குக் காதலைவிடக் கடமைதான் முக்கியம். நீ செல்லராஜன் மீது கொண்ட காதல் களங்கமற்றது. ஆனால் குல சம்பிரதாயப்படி அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. நான் அவனை நாடு கடத்திய அன்றே நீ அந்தக் காதலைத் துறந்திருக்கவேண்டும். கடமையைப் பெரிதென்று எண்ணாமல் காதலைப் பெரிதென்று எண்ணியதால் நீயும் குற்றம் இழைத்திருக்கிறாய். அதற்கு நான் உனக்குத் தண்டனை கொடுக்கிறேன். அந்தத் தண்டனை என்ன தெரியுமா? நீ உன்னுடைய காதலைத்துறந்து விடவேண்டுமென்பதுதான். இந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்வதைத் தவிர உனக்கு வேறு வழியில்லை'' என்று கூறி முடித்தார்.

இதைக் கேட்ட கலாநந்தினி மிகவும் துடி துடித்தாள் "அப்பா! இந்தத் தண்டனை மிகவும் கொடியது. இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. என்னுடைய அரச உரிமையைப் பறித்துக் கொள்ளுங்கள். ஆனால் காதலைப் பறிக்காதீர்கள். என்னுடைய உயிரை வேண்டுமானாலும் துறக்கத் தயார். அவரின்றி இனிமேல் உயிர்வாழ முடியாது. எனவே காதலைத் துறப்பது என்பதைத்தவிர வேறு எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று கண்ணீர் வடித்துக் கொண்டே கூறினாள்.

மன்னர் சற்று நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் செல்லராஜனைப் பார்த்து "செல்லராஜா! நீதான் பெரியகுற்றவாளி. இளவரசியின் மனதைக் கவர்ந்தது முதல் குற்றம். அந்தக் குற்றத்திற்குத் தண்டனையாக நாடு கடத்தினேன். அத்தண்டனையை மீறித் திரும்பிவந்தால் மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்திருந்தேன். என்னுடைய எச்சரிக்கைகளை அலட்சியப் படுத்தினாய். சோலை நாட்டு மன்னரின் உள்ளத்திலே துவேஷத்தை உண்டாக்கி சோலை நாட்டுத் தூதனாக என்னிடமே தூது வந்தாய். அது உன்னுடைய இரண்டாவது குற்றம். மறுபடியும் அரபு வைத்தியன் என்ற வேடத்தில் என்னை ஏமாற்றி அரண்மனை விருந்தினனாக வந்து இருந்துகொண்டு உன்னுடைய காதற் குற்றத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டாய். வைத்தியனாக வந்து என்னுடைய ரணத்தைக் குணப்படுத்தினாய்; அதற்காக என்னுடைய நன்றி. ஆனால் உன்னுடைய மூன்றாவது குற்றத்தை மறைத்துவிட முடியாது. கடைசியில் அரசாள வேண்டிய இளவரசியைக் கடத்திக் கொண்டு செல்ல முயற்சித்தாய். அது நான்காவது குற்றம். மற்ற குற்றங்களை எல்லாம் மறந்துவிட்டாலும்கூட ஏற்கெனவே நாடுகடத்தப்பட்ட நீ அதை மீறி வந்ததால் அதற்குரிய தண்டனையை அனுபவித்தாக வேண்டும். நாளை காலை நகர மக்களின் முன்பாக உனக்குச் சிரச்சேதம் நடைபெறும்" என்று கூறிமுடித்துவிட்டு எழுந்து நின்றார். அவருடைய முடிவைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டனர். மந்திரி நீதிவாணர் ஒன்றும் சொல்ல முடியா

மல் திண்டாடினார். கலாநந்தினி தன் தந்தையின் முடிவைக் கேட்டதும் பிரமை பிடித்தவள்போல சிறிதுநேரம் ஒன்றும் பேசமுடியாமல் நின்றாள்.

செல்லராஜன் நிலைகுலையவில்லை. "அரசே ஒரு வார்த்தை" என்றான்.

"சொல்!" என்று அலட்சியமாக உத்தரவிட்டார் மன்னர்.

"மன்னர் பெருமானே! நான் உங்களுடைய முடிவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். ஏழைக் குடிசையிலே பிறந்த என்னை அரசாங்கப் பள்ளியிலே பயிலுவித்து சிறந்த வீரனாக்கினீர்கள். தந்தையைப் போல அன்பு செலுத்தினீர்கள். அரண்மனை உத்தியோகத்திலும் அமர்த்தினீர்கள். ஆகையால் என்னுடைய உடல், பொருள், ஆவி எல்லாம் உங்களுக்கே சொந்தமானவை. பின்னொரு காலத்தில் போர்க்களத்திலே உங்களுக்காகப் போரிட்டு வீரமரணம் அடைய வேண்டியவன் நான். எப்பொழுதிருந்தாலும் உங்களுக்காக உயிர்விட வேண்டியவன் நான். நாளையே உங்களுடைய கட்டளைக் கிணங்க உயிர்விடுவதில் எனக்கு ஒன்றும் தயக்கமில்லை. மிகவும் நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் உங்களுடைய தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறி, மன்னரைப் பணிவுடன் வணங்கினான். அந்தக் காட்சி அங்கிருந்த எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கிவிட்டது. நீதிவாணர் கண்ணீர் வடித்தார். மன்னரும்கூட இலேசாகக் கண்கலங்கினார். மனம் பேதலித்த அவரால் அங்கு மேலும் நிற்கமுடியவில்லை. வருத்தத்துடன் அவ்விடத்தைவிட்டு வெளியேற ஆரம்பித்தார். உடனே கலாநந்தினி ஓடிவந்து அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

"அப்பா! உங்களுடைய மகள் கடைசியாக ஒன்று கேட்கிறேன். அதையாவது மறுக்காமல் எனக்குக்கொடுங்கள்" என்றாள்.

"என்ன வேண்டும்? செல்லராஜனின் உயிரைத் தவிர வேறு எது வேண்டுமானாலும் கேள்" என்றார்.

"தந்தையே! என் காதலரைத் தவிர வேறு எதுவும் எனக்கு வேண்டியதில்லை. அவரைப் பிரிந்து என்னுல் வாழமுடியாது. அவருக்குக் கிடைத்த மரண தண்டனை எனக்கும் கிடைக்கவேண்டும். அவர்மீது சாற்றப்பட்டிருக்கும் குற்றங்களுக்கெல்லாம் நானே மூலகாரணம். அதனுல் எனக்கும் மரண தண்டனையை விதியுங்கள். கணவருடன் சேர்ந்து உயிர்விடும் பாக்கியம் எனக்கும் கிடைக்கட்டும். மறுக்காதீர்கள்" என்று கெஞ்சினுள்.

மன்னரின் உள்ளத்திலே ஆத்திரத்தீ மூண்டது. யாரை உயிருக்குயிராக வளர்த்து வந்தாரோ, அவள் தன்னைப் பெரிதாக எண்ணுமல் மாற்ருன் ஒருவனை உயிருக்குயிராகப் போற்றுவது வருத்தமாக இருந்தது. தன் மகள் தோட்டக்காரன் மகன் ஒருவனைக் காதலித்தாள் என்ற இழிச்சொல் மறைவதற்கு அவளுக்கும் மரணதண்டனை கொடுப்பதே மேலென்று எண்ணினுர். ஆகையால் மிகவும் கோபத்துடன் "உன் விருப்பம் அதுவானுல் எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. பொன்னுட்டின் மன்னர் குல கௌரவத்திற்கு ஏற்பட்ட மாசு உன்னேடு மடியட்டும்" என்று கூறிவிட்டு மன்னர் அங்கிருந்து கோபத்துடன் சென்றுவிட்டார்.

அன்று மாலையில் பொன்னகரத்து மக்களெல்லாம் திடுக்கிடும் செய்தியைக் கேள்விப்பட்டார்கள். அச்செய்தியை அவர்களால் நம்பவே முடியவில்லை. என்ன நடந்தது என்று ஒன்றுமே புரியாமல் திண்டாடினுர்கள். பொன்னகர மக்களை ஆச்சரியத்திலும், வருத்தத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்தும் அச் செய்தியை பறையறைவோன் பின்வருமாறு தெரிவித்துக்கொண்டே சென்ருன். "இதனுல் சகலமான பேர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்ருல் நாடுகடத்தப்பட்டிருந்த செல்லராஜனையும், இளவரசி கலாநந்தினியையும் நாளைக்காலை சூரியோதயம் கழிந்து சில நாழிகைக்குள் ஊருக்குக் கிழக்கே உள்ள கொலைக்கள மைதானத்தில் சிரச்சேதம் செய்யும்படி மன்னர் உத்தரவிட்டிருக்கிருர்."

# 31

மறுநாள் காலை பொன்னகர மக்கள் கண்களுக்கு சூரியோதயம் இரத்தக்கறை படிந்ததாகத் தோன்றியது. நகரிலுள்ள பெரும்பாலோர் அதிகாலையிலேயே எழுந்து கொலைக்கள மைதானத்திலே கூடிவிட்டார்கள். 'ஐயோ! இளவரசிக்கு இந்தக் கதியா வரவேண்டு'மென்று வாய்விட்டுப் புலம்பினர் சிலர். 'மன்னருக்கு இவ்வளவு கல்மனசு கூடாது' என்றனர் சிலர். 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்தால் யார்தான் பொறுத்துக் கொள்வார்கள்?' என்றார்கள் வேறுசிலர். ஆனால் அவர்களுடைய அனுதாப மொழிகளெல்லாம் தண்டனையை நிறுத்தப் போகின்றனவா என்ன? எனவே செல்லராஜனின் கடைசி அத்தியாயத்தைப் பார்ப்பதற்காக அவர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள்.

குற்றவாளிகளைத் தண்டிக்கும் மேடைக்குப் பக்கத்தில் குற்றவாளிகளின் நெருங்கிய உறவினர் நிற்பதற்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே பொன்னாட்டு மன்னர் நாகநந்தர் மௌனமாக நின்றுகொண்டிருந்தார். அவருக்கு அருகில் சிறையிலிருந்து கொண்டுவரப்பட்ட பட்டமகிஷி வாசவதத்தை நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய முகத்திலே சொல்ல முடியாத வேதனை குடிகொண்டிருந்தது. தன்னுடைய மகளின் முடிவு இப்படியிருக்குமென்று அவள் கனவில்கூட நினைத்தது கிடையாது. வெகு காலத்திற்குப் பின்பு பிறந்த ஒரே குழந்தையையும் கொலைக் களத்திலே நின்று விடைகொடுத்து அனுப்புவதற்கு நேர்ந்ததை எண்ணிக்கூட அவள் அவ்வளவாக வருந்தவில்லை. தன் வயிற்றிலே பிறந்த பட்டத்து இளவரசி காதலைப் பெரிதென்று எண்ணிக் கடமையை மறந்து ஊரறிய, உலகறிய தனது குலத்திற்கு இழிவு தேடி விட்டாளே என்றுதான் அவள் கவலைப்பட்டாள். இதனால் ஏற்பட்ட வெட்கத்தால் முன்னே கூடியிருக்கும் பொதுஜனங்களைக்கூட அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. பட்டமகிஷியின் அருகில் இளையராணி மோகனதத்தையின் மகனான இளவரசன் வீரநந்தன் கவலையுடன் நின்று

கொண்டிருந்தான். தன் தாயின் சதிச் செயலால் அவள் சிறை சென்றது ஒருபுறம் கவலையாக இருந்தது. இப்பொழுது மரணதண்டனை அனுபவிக்கப் போவதால் அரசுரிமைப் பட்டம் தன்னைத் தவிர வேறு யாருக்குமில்லை என்று ஊர்ஜிதமாகப் போகிறது. அதனால் தான் தனது சகோதரிக்காகக் கவலைப்படுவதாக நடித்துக் கொண்டு நின்றான். மனத்திற்குள் அவனுக்குச் சந்தோஷமே. அதே சமயம் தனக்குப் போட்டியாக முளைத்த செல்லராஜன் வேறு ஒழிந்துபோவது அவனுக்குத் திருப்தியையே கொடுத்தது. ஆனாலும் அவற்றை எல்லாம் மறைத்துக்கொண்டு நகர மக்கள் முன்பு வருத்தப்படுவதாகக் காட்டிக் கொண்டான்.

மன்னர் குடும்பத்தினருக்கு அருகில் சற்று தள்ளினாற் போல் தோட்டக்காரக் குப்பனும், அவன் மனைவி பொன்னியும் நின்று கொண்டிருந்தார்கள். குப்பனின் முகத்தில் கவலைக்குறியே தென்படவில்லை. ஆனால் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தான். ஆனால் பொன்னி கண்ணீர் வடித்தபடியே நடுங்கிக் கொண்டு நின்றாள்.

குறிப்பிட்ட சமயம் வந்தது. குற்றவாளிகள் இருவரையும் சில வீரர்கள் கொலைக்கள மேடைக்கு அழைத்து வந்தனர். உதவிப் படைத்தலைவர் வீரசேனன் குற்றவாளிகளுக்குச் சற்று தூரத்தில் நின்றார். அவருக்கு அடுத்தாற்போல் மந்திரி நீதிவாணர் நின்றார். அவர் மன்னரிடம் சென்று ஏதோ பேசிவிட்டு மறுபடியும் குற்றவாளிகளின் அருகே வந்தார். குற்றவாளிகளைப் பார்த்து "உங்களுக்குத் தண்டனை நிறைவேற்ற வேண்டிய சமயம் வந்துவிட்டது. இவ்வுலகத்தை விட்டுப் பிரிவதற்கு முன் அருகில் நிற்கும் உங்களுடைய பெற்றோர்களிடம் கடைசி மரியாதையைச் செலுத்தி விடைபெற்றுக் கொள்ளுங்கள்!" என்றார்.

காவலாளர்கள் மந்திரியின் அனுமதி பெற்று செல்லராஜனைப் பிணைத்திருந்த விலங்குகளைக் களைந்தனர். செல்லராஜனும், கலாநந்தினியும் தங்கள் பெற்றோர் நிற்குமிடத்திற்குச் சென்றனர்.

கலாநந்தினி தன் தந்தையின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். மன்னர் தன் மனதைக் கல்லாக்கிக்

கொண்டு வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டார். கலாநந்தினி தாயின்முன் மண்டியிட்டு வணங்கினுள். இதுவரை மௌனமாக நின்ற வாசவதத்தையால் இப்பொழுது துக்கத்தை அடக்க முடியாமல் விம்ம ஆரம்பித்துவிட்டாள். அந்த விம்மல்களுக்கிடையே சில வார்த்தைகள் அறைகுறையாகச் சிதைந்து வெளிவந்தன. "......மகளே......விதி வென்றுவிட்டது......எனது மனக்கோட்டை...நொறுக்கி......நீ என்......" அதற்குமேல் அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. மகளை வாரி அணைத்துக்கொண்டாள். கலாநந்தினியும் குழந்தையைப்போலத் தேம்பினுள். பின்னர் தலைகுனிந்தபடியே மேடைக்குச் சென்றுவிட்டாள்.

செல்லராஜன் முதலில் மன்னரை வணங்கிவிட்டு, பின்னர் தன் தந்தையின் கால்களைத் தொட்டு வணங்கினுன். குப்பன் எவ்வித சலனமுமின்றி மரக்கட்டைபோல நின்றுன். "நீ என்னுடைய மகனல்ல. போய் வா" என்று வெறுப்புடன் கூறினுன். அவனுடைய வார்த்தைகள் மன்னர் செவியிலும் விழுந்தன. மன்னர் குப்பனைப்பற்றி 'இவனென்ன இவ்வளவு வைராக்கியம் கொண்டுவிட்டானே. இவன் நம்மைவிட திடசித்தம் உடையவன்தான்' என்று எண்ணி வியந்துகொண்டார்.

செல்லராஜன் தன் தந்தையின் சொல்லைப் பொருட்படுத்தாமல் தாயின் அருகே சென்றுன். அருகில் வந்த மகனைக் கட்டி அணைத்துக்கொண்டு ஒரேயடியாகக் கூச்சலிட ஆரம்பித்தாள் பொன்னி. அவளுடைய பரிதாபக் குரலைக் கேட்டு அங்கிருந்த எல்லோருமே கதிகலங்கிவிட்டனர். இந்தத் தர்மசங்கடமான நிலை குப்பனின் உள்ளத்திலே ஒரு புதிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது. தன் மனைவியிடம் இப்பொழுது உள்ளதைக் கூறுவிட்டால் அவளும் அங்கேயே உயிர் விட்டுவிடுவாளோ என்று பயந்தான். உடனே பொன்னியைப் பார்த்து "பொன்னி! உண்மையாகவே சொல்லுகிறேன். இவன் நம்முடைய மகனல்ல. நீ பெற்றது பெண் குழந்தை. நீ மயக்கமாகக் கிடந்தபடியால் உனக்கு இந்த விபரம் புரியாது. உன்னுடைய பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு மருத்து

வச்சி இந்த ஆண் குழந்தையைக் கொடுத்துச் சென்றாள். அவள் என்னிடம் சத்தியம் வாங்கி இருந்தபடியால் இத்தனை நாட்களாக உன்னிடம் உண்மையை மறைத்துவிட்டேன். நம் குழந்தை எங்கோ சௌக்கியமாக இருக்கிறது. நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம்'' என்று கூறி அவளைத் தேற்றிக்கொண்டே செல்லராஜனைப் பார்த்து ''அப்பா! நீ சாகப்போகும் போதாவது இந்த உண்மையைத் தெரிந்துகொள். நீ எங்களுடைய உண்மைக் குழந்தையல்ல. வளர்ப்புக் குழந்தைதான்'' என்றான்.

இதைக் கேட்ட செல்லராஜன் திடுக்கிட்டுப்போனான். அவன் உள்ளம் படாதபாடு பட்டது. அவனுக்குச் சாவதைப் பற்றிக் கவலை இல்லை. கடைசியாக சாவதற்குமுன் தன் பெற்றோரைத் தெரிந்துகொண்டு ஒருமுறை பார்த்துவிட்டுச் சாகவேண்டும் போலத் தோன்றியது. ''ஐயா! அப்படியானால் என்னுடைய உண்மையான பெற்றோர் யார்? சொல்லுங்கள்! சாவதற்குமுன் ஒருமுறையாவது அவர்களுடைய முகத்தைப் பார்க்கவேண்டும்'' என்று கெஞ்சினான்.

''எனக்கும் உன் பெற்றோர் யார் என்பது தெரியாது. உன்னைக் கொண்டு வந்து எங்களுக்குக் கொடுத்தவள் முன்பு அரண்மனையில் வேலை பார்த்த மருத்துவப்பெண் இருளாயி. அவள் இப்பொழுது எங்கிருக்கிறாளோ தெரியாது. ஒருவேளை இறந்துபோயிருக்கலாம்'' என்று கூறினான் குப்பன்,

செல்லராஜன் மனம் ஒடிந்துபோனான். எப்படியாவது ஒருமுறை தன் பெற்றோரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை பலமாகப் பிடித்துக்கொண்டது. எனவே அருகில் நின்ற மன்னரிடம் சென்று முறையிட்டான். ''அரசே! நான் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால் அதற்குள் ஒருமுறை என் பெற்றோரைப் பார்க்க விரும்புகிறேன். நீங்கள் தான் உதவிசெய்ய வேண்டும். நீங்கள் விசாரித்தால் ஒருவேளை கண்டு பிடிக்கலாம்'' என்று மன்றாடினான்.

மன்னர் ஒன்றும் புரியாமல் சற்று திகைத்து நின்றார். பின்னர் ''அப்பா! உன்னுடைய நிலைமைக்கு நான் மிகவும் வருந்துகிறேன். உன் தாய் தந்தையர் யார்

என்று கண்டு பிடிப்பது சாத்தியமில்லை. மருத்துவப்பெண் இறந்து வெகுகாலமாகிவிட்டது. ஆகையால் யாரிடம் விசாரிக்க முடியும்? என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை'' என்று கூறிவிட்டார்.

செல்லராஜனும் வேறு வழியின்றி வருத்தத்துடன் கண்ணீர் வடித்தபடியே மேடைக்குச் சென்றுவிட்டான். கொலையாளிகள் வாளைத் தீட்டிக்கொண்டு தயாராக நின்றார்கள். கொலைத் தண்டனை நிறைவேற்றுவதற்கு அறிகுறியாக முதல் முரசு முழங்கியது. உடனே மேடைமீது நின்ற காவல் வீரர்கள் கறுப்புத் துணியால் குற்றவாளிகளுடைய கண்களைக் கட்டினார்கள்.

அச்சமயம் கூட்டத்திற்குள் ஏதோ சலசலப்பு ஏற்பட்டது. மைதானத்தை நோக்கி இரண்டு குதிரைகள் வேகமாகப் பாய்ந்தோடி வருவது தெரிந்தது. மன்னரும் மற்றவர்களும் ஆச்சரியத்துடன் தூரத்தில் வந்துகொண்டிருக்கும் குதிரைகளை உற்றுப் பார்த்தனர்.

இரண்டாவது முரசு முழங்கியது. பலிபீடத்தில் குற்றவாளிகள் இருவரும் தங்கள் தலைகளைத் தாழ்த்தி வைத்துக்கொண்டனர் அருகில் நின்ற ஒருவன் மரணமடையப் போகும் குற்றவாளிகளின் செவியில் விழும்படியாக ஒரு துதிப்பாடலைப் பாடினான். கொலையாளிகள் மூன்றாவது முரசு முழங்கியதும் தங்கள் வேலைகளைச் செய்வதற்காக அருகில் வந்து தயாராக நின்றனர்.

மூன்றாவது முரசு முழங்கப் போகும் சமயம், குதிரைகள் மேடைக்கு அருகே வந்து நின்றன. குதிரையிலிருந்து இறங்கிக்கொண்டே சோலை நாட்டு மன்னர் தயாளநந்தர் "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று உரக்கக் கூறினார்.

தயாளநந்தரைக் கண்டதும் நாகநந்தர் தான் நின்ற இடத்திலிருந்து இறங்கி அவசரமாக தயாளநந்தர் இருக்குமிடத்திற்கு வந்தார். அவரை எவ்விதம் வரவேற்பது என்பது நாகநந்தருக்குப் புரியவில்லை. வெகு நாட்களுக்குப் பின்பு இப்பொழுது திடீரென்று வந்து நிற்கும் தன் மைத்துனர்மீது சற்றுக் கோபம்கூட வந்தது "ஏன் நிறுத்

தச் சொல்லுகிறீர்கள்? உங்கள் தூதர் என்ற முறையில் குற்றவாளிக்குப் பரிந்துகொண்டு வந்திருக்கிறீர்களா? குற்றவாளிகளைத் தண்டிப்பதோ, மன்னிப்பதோ எங்களுடைய இஷ்டம். இது எங்களுடைய உள்நாட்டு விவகாரம். இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை'' என்று கண்டிப்பாகக் கூறினார் நாகநந்தர்.

''இல்லை! இது உங்கள் உள்நாட்டு விவகாரமல்ல. இது உங்களுடைய உள்வீட்டு விவகாரம். அதனால்தான் தலையிட விரும்புகிறேன். கொலைக் களத்திலே நிற்பது என்னுடைய தூதரல்ல. உங்களுடைய மகன். இந் நாட்டின் பட்டத்திற்குரிய இளவரசன்'' என்றார்.

''என்ன இது புதிராக இருக்கிறது? செல்லராஜன் என்னுடைய மகனா? நான் எப்படி நம்புவது?'' என்று திகைப்புடன் கூறினார் நாகநந்தர்.

அதே சமயம் பின்னால் வந்த குதிரையிலிருந்து ஒரு கிழவியும், வீரனும் இறங்கினர். கிழவி வேகமாக மன்னரை நோக்கி வந்தாள். மன்னரின் காலடியிலே விழுந்து கண்ணீர் விட்டுக்கொண்டே ''அரசே! என்னை ஞாபகமிருக்கிறதா? நான்தான் உங்கள் அரண்மனையின் பழைய மருத்துவப் பெண் இருளாயி. உங்கள் உப்பைத் தின்றுவிட்டு உங்களுக்கே துரோகம் செய்த சண்டாளி. என்னைக் கொலை செய்யுங்கள். இளையராணியின் தூண்டுதலால் நான் மோசம் போனேன்'' என்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள் கிழவி.

மன்னர் கிழவியை உற்றுப் பார்த்தார். சந்தேகமே இல்லை. அவருக்கு இப்பொழுது நன்றாக அடையாளம் தெரிந்தது. ''நீ என்ன சொல்லுகிறாய்? எல்லாம் விபரமாகக் கூறு'' என்றார்.

''அதற்குத்தான் நான் வந்திருக்கிறேன். முதலில் இந்தத் தண்டனையை ரத்து செய்யுங்கள். என்னால் இத்தனை துன்பங்களுக்கு ஆளாகிய அந்த இளவரசரை நான் பார்க்கவேண்டும்'' என்று துடி துடித்தாள்.

மன்னர் தண்டனையை ரத்துசெய்ய உத்தரவிட்டார். மேடையிலிருந்த குற்றவாளிகளின் கண்களை அவிழ்த்து

விட்டனர். செல்லராஜன் மேடையிலிருந்து இறங்கி வந்ததும் சோலைநாட்டு மன்னரையும் அஞ்சலையின் வீட்டில் கண்ட அரைப் பைத்தியக் கிழவியையும் கண்டு ஆச்சரியப் பட்டான்.

கிழவி ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் கூறினாள். இளையராணியும், வீரசேனனும் ஆயிரம் பொன் கொடுப்பதாகச் சொல்லித் தன்னை இந்தச் சதிச் செயலுக்குத் தூண்டியதையும், அவர்கள் சொல்லைக் கேட்டு மூத்த ராணிக்குப் பிறந்த ஆண்குழந்தையை குப்பனிடம் கொடுத்துவிட்டு,குப்பனின் மனைவி பொன்னிக்குப் பிறந்த பெண் குழந்தையை மூத்தராணியின் குழந்தையாக மாற்றி வைத்ததையும், பின்னர் தன்னை நம்பாமல் வீரசேனன் கொலை செய்வதற்காகக் கொண்டு போனதையும், வண்டி குடை கவிழ்ந்து வீழ்ந்ததையும், அதற்கப்புறம் என்ன நடந்தது என்று தனக்கே தெரியவில்லை என்றும் கூறினாள்.

சோலை நாட்டு மன்னர் தயாளநந்தர் மற்ற விவரங்களைக் கூறினார். "நாகநந்தரே! இவள் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. ஒரு நாள் உங்கள் நகரத்துக்கப்பாலுள்ள மலைச்சரிவில் விழுந்து அடிபட்டு மயங்கிக் கிடந்தாளாம். அருகே ஒரு வண்டி குடை கவிழ்ந்து நொறுங்கிக் கிடந்ததாம். அவ்வழியே வந்த எங்கள் நாட்டு ஒற்றர்கள், யாரோ வேதனையால் முனகும் சப்தம் கேட்டு அருகில் சென்று பார்த்தார்களாம். அப்போது இவள் "ஐயோ! என்னைக் கொல்லவேண்டாம். ரகசியத்தை ஒருபோதும் சொல்லமாட்டேன்" என்று தன்னுணர்வின்றி முணங்கிக் கொண்டிருந்தாளாம். அதைக் கண்ட ஒற்றர்கள் இவளிடம் ஏதோ ரகசியமிருக்கிறது என்று அவளை சோலை நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அவளுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தோம். பிழைத்துக் கொண்டாள். ஆனால் ஞாபகசக்தியை இழந்து அரைப் பைத்திய நிலையில் யார் எதைக் கேட்டபோதிலும் 'ரகசியத்தைச் சொல்லமாட்டேன்' என்று கூறிக் கொண்டே சோலைநாட்டில் கடந்த இருபது வருடங்களாக எனது பராமரிப்பில் இருந்து வந்தாள். நாங்கள் எவ்வ

ளவோ முயன்றும் ஞாபக சக்தியைக் கொண்டுவர முடிய வில்லை. கடைசியில் நேற்று திடீரென்று கால் தவறி விழுந்து மண்டையில் அடிபட்டு மூர்ச்சையானாள். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்தது. அவளுக்கு ஞாபக சக்தி வந்துவிட்டது. பின்னர் விசாரித்தபோது நடந்த விஷயங் களையெல்லாம் கூறினாள். அதிலிருந்து தோட்டக்காரன் மகனாக வளர்ந்த செல்லராஜன்தான் உங்களுடைய மகன் என்றும் என்னுடைய மருமகளாக அரண்மனையில் வள ரும் கலாநந்தினிதான் தோட்டக்காரன் மகள் என்றும் தெரிந்து கொண்டேன். இப்படியிருக்கையில் நேற்றிரவு எனது ஒற்றர்கள் வந்து செல்லராஜனுக்கும், கலாநந்தி னுக்கும் மரணதண்டனை விதித்துப் பறைசாற்றிய செய் தியை என்னிடம் கூறினார்கள். கிழவியை அழைத்துக் கொண்டு இரவே புறப்பட்டு வந்தேன். நாகநந்தரே! இதோ இங்கு நிற்கும் செல்லராஜன் உங்களுடைய மகன். கலாநந்தினிதான் தோட்டக்காரன் மகள்'' என்று கூறி முடித்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த செல்லராஜன் மன் னரிடம் ஓடி, மகிழ்ச்சியுடன் கட்டிப் பிடித்துக்கொண்டு ''அரசே! நீங்கள்தான் என் தந்தையா? நான் பாக்கியசாலி தான். சிற்றன்னையின் சதி என்னைத் தோட்டக்காரனின் வீட்டிற்கு அனுப்பி வைத்தாலும்கூட நான் உங்கள் அன் பைப் பெற்று வளர்ந்தேன். நீங்கள் எப்பொழுதும் என் தந்தையாகவே விளங்கி வந்திருக்கிறீர்கள்'' என்றுகூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

மன்னரால் ஒன்றும் பேசமுடியவில்லை. ஒருபுறம் ஏற்பட்ட மகிழ்ச்சி அவர் தொண்டையை அடைத்துக் கொண்டது. மற்றொருபுறத்தில் மோகனதத்தையின் மீது ஏற்பட்ட ஆத்திரம் அவருடைய கைகால்களை யெல் லாம் நடுங்கச் செய்தது. நடுங்குகிற கைகளால் தன் மகனை ஆரத் தழுவிக் கொண்டார். பின்னர் தந்தையிட மிருந்து விடுவித்துக்கொண்டு தன் தாயை நோக்கி விரைந் தான் செல்லராஜன். ஆனால் அவனால் மன்னரிடம் நடந்து கொண்டதைப்போல மூத்த ராணியாரிடம் நெருங்கிச் செல்ல முடியவில்லை. இவ்வளவு நாட்களாக பழகிய

தோஷம் சற்று மரியாதை காட்டி ஒதுங்கி நிற்கும்படி செய்தது. ஆனால் வாசவதத்தை அவனை வாரி அணைத்துக் கொண்டு உச்சியிலும் நெற்றியிலும், கன்னங்களிலும் முத்தமிட்டுக் கொண்டே விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

இளவரசி கலாநந்தினிதான் தான் பெற்ற மகள் என்று தெரிந்ததும் பொன்னி ஆவலுடன் சென்று தன் மகளை வாரி அணைத்துக் கொண்டாள். குப்பனுக்கு ஆனந்தம் அளவு கடந்து போய்விட்டது. தன் மகள் இவ்வளவு காலமாக இளவரசியாக இருந்திருக்கிருள் என்ற பெருமை அவனுக்குப் போதையை ஊட்டியது.

ஆனல் இளவரசி கலாநந்தினி தர்மசங்கடமான நிலைமையில் மாட்டிக் கொண்டாள். இவ்வளவு நாட்களாகப் பழகிவந்த பழக்க வழக்கங்கள் அவளை இன்னும் இளவரசியாகவே ஆக்கி வைத்திருந்தது. எனவே தன் தோட்டக்காரத் தாய் தந்தையருடன் இரண்டறக் கலக்கமுடியாமல் திண்டாடினுள். இதற்குள் அவளுக்கு இன்னொரு பயமும் ஏற்பட்டது. தோட்டக்காரன் மகளாகிய தன்னைப் பட்டத்து இளவரசனுகிவிட்ட செல்லராஜன் கைவிட்டுவிடுவாரோ என்ற பயமும் ஏற்பட்டது.

மன்னர் உடனே வீரசேனனைத் தேடினுர். இதற்குள் வீரசேனன் கூட்டத்திற்குள் நழுவ ஆரம்பித்துவிட்டான். உடனே வீரசேனனைக் கைது செய்து கொண்டுவரும்படியும், சிறையிலிருக்கும் மோகனதத்தையை கைப்பிடியாக அழைத்து வரும்படியும் உத்தரவிட்டார்.

வீரசேனனைத் தேடுவதற்கு என்று சில வீரர்கள் கிளம்பினர். மோகனதத்தையைச் சிறையிலிருந்து அழைத்து வருவதற்கென்று சில வீரர்கள் சென்றனர். அவர்கள் சிறைச்சாலையை அடைந்தபோது அங்கே வீரசேனன் தனது சகோதரியை விடுதலை செய்துகொண்டு தப்பித்துச் செல்வதற்குத் தயாராகிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட வீரர்கள் அவன்மீது பாய்ந்து கைதுசெய்ய முயற்சித்தனர். அதற்குள் வீரசேனன் தன் கையிலிருந்த உடைவாளால் தற்கொலை செய்துகொண்டு சிறைச்சாலை

யிலேயே உயிரை விட்டான். அந்தக் காட்சியைக் கண்ட மோகனதத்தை வாய்விட்டுக் கதறினாள். வீரர்கள் அவளுக்கு ஆறுதல் கூறி அவளை மன்னர் இருக்குமிடத்திற்கு அழைத்துவந்தனர்.

மன்னர் முன் வந்ததும் மோகனதத்தை அழுது கொண்டே "அரசே! நான் செய்த தெல்லாம் தவறு. புண்ணியவதியான வாசவதத்தையின் முன்பும், தங்களின் முன்பும் தலை நிமிர்ந்து நிற்பதற்கு அருகதையற்றவள். என் சகோதரரின் துர்ப்புத்தியால் சீர்குலைந்து போனேன். அந்தப் பாவியும் சிறைச்சாலையில் தற்கொலை செய்து கொண்டான். என்னை இங்கு கூடியிருக்கும் மக்களின் முன்பு இதே கொலைக்களத்தில் சிரச்சேதம் செய்யுங்கள். ஆனால் என் மகன் ஒரு பாவமும் அறியாதவன். அவனை மட்டும் காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினாள்.

"அவன் உன் மகனா? இல்லை. என் மகன். அவனைப் பற்றி நீ ஒன்றும் என்னிடம் சொல்ல வேண்டியதில்லை. உனக்கு மரண தண்டனை விதிப்பதற்காக அழைத்துவர வில்லை. உன்னை விசாரிப்பதற்காகவே அழைத்தேன். நீயே குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டாய். நல்லதாகப்போய் விட்டது. நீ செய்த குற்றத்திற்காக ஆயுள் பூராவும் சிறையில் கிடக்க வேண்டும். போ" என்று கூறிவிட்டு சேவகர்களிடம் அழைத்துச் செல்லும்படி உத்தர விட்டார்.

இவற்றை யெல்லாம் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வாசவதத்தை மன்னரிடம் வந்து "அரசே! மோகனதத்தைக்குச் சிறைத் தண்டனை கொடுக்க வேண்டாம். அதற்குப் பதிலாக நானே தொடர்ந்து சிறையி லிருக்கத் தயார். அது எனக்குப் பழக்க மாகிவிட்டது. எனது சகோதரி மோகனதத்தை தன்னுடைய குற்றத்தைப் பரிபூரணமாக உணர்ந்து கண்ணீர் வடிக்கிறாள். இந்நிலையிலும் அவளுக்குத் தண்டனை கொடுப்பது நியாய மில்லை. பகையை அன்பினால்தான் வெல்ல வேண்டும். இவ்வளவு நாளும் நான் தங்களுக்காகச் சிறையிலிருந்தேன். இனி எனது சகோதரிக்காகச் சிறையிலிருக்கிறேன்" என்று புன்னகையுடன் மன்றாடினாள்.

இதைக் கேட்ட மன்னர், தன்னுடைய மைத்துனர் தயாளநந்தரைப் பார்த்து "பார்த்தீர்களா உங்கள் தங்கையை? நான் ஏதோ சிறையிலடைத்ததாகக் கூறி தூதனுப்பினீர்களே! உங்கள் தங்கைக்கு அந்தப்புர வாழ்க்கையைவிட சிறை வாழ்க்கை பிடித்திருக்கிறது என்றால் நான் என்ன செய்வது? சரி! வாசவதத்தை! உன்னிஷ்டம் எதுவோ அப்படியே நடக்கட்டும்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினர் மன்னர்.

உடனே மோகனதத்தை "ஐயோ! அந்தப் புண்ணியவதியை மறுபடியும் சிறைக்கு அனுப்புவதா? முடியாது. நான் போகிறேன். நான் செய்த பாவங்கள் தண்டனையால் குறையட்டும்" என்றாள்.

மன்னர் மறுபடியும் ஒரு முறை சிரித்தார். "வாசவதத்தையின் இஷ்டம்போல என்றால் நீங்கள் ஏன் தப்பாக நினைத்துக்கொள்ள வேண்டும். உன்னை மன்னித்துவிட வேண்டுமென்பது அந்தப் பத்தினித் தெய்வத்தின் இஷ்டம். அதை நான் அப்படியே ஒப்புக்கொண்டேன்' என்றார்.

உடனே அங்கிருந்த எல்லோரும் மகிழ்ச்சியுடன் சிரித்தனர். ஆனால் அந்தச் சிரிப்பிலே கலந்துகொள்ளாமல் காதலர் இருவரும் சற்று தனியாக நின்று ஏதோ ரகசியம் பேசினர்.

"எதிர்கால மன்னரே! நான் தோட்டக்காரரின் மகள் என்ற காரணத்தால் என்னைக் கைவிட்டுவிடுவீர்களோ?" என்று வருத்தத்துடன் மெல்லிய குரலில் கேட்டாள் கலாநந்தினி.

"எதிர்கால பட்டமகிஷியே! நீ இளவரசியாக இருந்தபோது தோட்டக்காரன் மகன் என்ற காரணத்தால் என்னைக் கைவிடவில்லையே? அப்படி இருக்கும்போது நான் ஏன் உன்னைக் கைவிடவேண்டும். சந்தேகமில்லாமல் நீதான் என் பட்டமகிஷி" என்று பதிலளித்தான் செல்வராஜன்.

"என்ன! பட்டமகிஷியா? அப்படியானால் என்னைத் தவிர வேறு மகிஷிகளும் இருப்பார்களா? மன்னர்குலப்

பெண்களாகப் பார்த்து வேறு யாரையாவது கலியாணம் செய்துகொள்ளப் போகிறீர்களா? ஒருவேளை சோலைநாட்டில்......" என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினாள் கலாநந்தினி.

"அதெல்லாம் ஒன்றுமில்லை மகாராணி! நீ தான் என் ராணி! என் இதயராணி! ஏன் வீணாகச் சந்தேகப்படுகிறாய்?" என்று கிண்டலாகக் கோபித்துக்கொண்டான் செல்லராஜன்.

மன்னர், கூடியிருந்த மக்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார். "அன்புள்ள குடிமக்களே! சோலை நாட்டு மன்னர் அவர்களே! பொன்னாட்டின் மந்திரி பிரதானிகளே! இங்கு யாருடைய மரணதண்டனையை நிறைவேற்றுவதற்காகக் கூடியிருந்தோமோ அந்தக் குற்றவாளிகளுக்கு வேறொரு தண்டனையை விதிக்கப்போகிறேன். அந்தத் தண்டனையால் அவர்களுக்குக் கிடைக்கப்போவது மரணம் அல்ல. மணம். திருமணம். முன்பு நாடுகடத்தப்பட்டு, நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்ட மாஜி செல்லராஜன் இந்தக் கணத்திலிருந்து ராஜநந்தனாக புத்துயிர் பெற்றிருக்கிறார். அவரே எதிர்காலத்திற்கு அரசராக பொறுப்பேற்கும் உரிமை படைத்த பட்டத்து இளவரசர். அதாவது எனது மூத்தராணி வாசவதத்தையின் திருப்புதல்வர். அவருக்கு வெகு விரைவிலேயே திருமணமும் இளவரசப் பட்டமும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வெகு விரைவில் கலாநந்தினியும், ராஜநந்தரும் தம்பதிகளாவார்கள்" என்று கூறி முடித்தார்.

இதைக் கேட்ட பொதுமக்கள் சந்தோஷத்தால் ஆரவாரித்தனர். "மன்னர் நாகநந்தர் வாழ்க! இளவரசர் ராஜநந்தர் வாழ்க!" என்ற ஜெயகோஷம் வானைப்பிளந்தது. மக்கள் கூட்டத்தினர் ராஜநந்தனைப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். உடனே செல்லராஜன் என்ற ராஜநந்தர் கொலைக்கள மேடையிலே ஏறி நின்றுகொண்டு கம்பீரமான குரலில் பேசலானார்.

"அன்புக்குரிய பொன்னாட்டுப் பொதுமக்களே! சோலைநாட்டு, பொன்னாட்டு மன்னர் அவர்களே! அர

சியல் துணைவர்களே! என் வளர்ப்புத் தாய் தந்தையரே! நான் பிறந்த உடனேயே தாயிடமிருந்து பிரிக்கப்பட்டேன். பின்னர் பிறந்த பொன்னாட்டிலிருந்தும் பிரிக்கப்பட்டேன். ஆனால் இப்பொழுது பெற்ற தாயும், பெற்ற தாயை விட மேலான பிறந்த பொன்னாடும் கிட்டியிருக்கிறது. சின்னஞ்சிறு வயதிலிருந்தே ஏழைக்குடிசையிலே வளர்ந்தேன். சாதாரண குடிமக்களில் ஒருவனாக வாழ்ந்தேன். உடலை உழைத்து நன்றாகப் பாடுபட்டேன். இதனால் ஏழ்மையும் உழைப்பும் பரிச்சயமாகிவிட்டன. ஏழைகளின் துன்பம் என்ன என்பதை நன்றாக அறிவேன். உழைப்பின் தன்மை என்ன என்பதையும் நன்றாக அறிவேன். இந்த அனுபவங்கள் எனது எதிர்கால வாழ்வுக்கு உறுதுணையாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் நல்ல அனுபவங்களை அடைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த எனது சிற்றன்னையார் அவர்களுக்கும், காலம் சென்ற வீரசேனன் அவர்களுக்கும், மருத்துவக் கிழவி இருளாயிக்கும் நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். அவர்கள் நோக்கம் எதுவாக இருப்பினும் அதனால் எனக்கும் இந்த நாட்டிற்கும் கிடைத்துள்ள பலன் நன்மையாகவே அமைந்திருக்கிறது. அவர்கள் செய்த உதவியினால் மாளிகைவாசி குடிசையிலும், குடிசை வாசி மாளிகையிலும் வாழ்ந்து பழகுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. கலாநந்தினியை நான் மணந்து கொள்ளப் போவதால் நாட்டிலே ஒரு பெரிய மாற்றம் நிகழ்கிறது என்பதுதான் அர்த்தம். தோட்டக்காரனும், தொண்டைமானும் சம்பந்திகளாகிறார்கள். கோபுரமும், குடிசை வீடும் சம்பந்தம் செய்துகொள்ளுகின்றன. ஆஹா! என் சிற்றன்னையார் எவ்வளவு பெரிய நன்மையைச் செய்திருக்கிறார்கள்! பெற்ற தாயை சின்னஞ்சிறிய வயதிலே பிரிந்ததால் ஏற்பட்ட நன்மை இது பிறந்த பொன்னாட்டைப் பிரிந்ததால் அண்டை நாடுகளில் சென்று அறிமுகப்படுத்திக்கொண்டு பழகிப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதனாலும் நன்மை தான். இவ்விதம் பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும் பிரிந்ததால் ஏற்பட்ட நன்மைகளையும், அனுபவங்களையும் நான் மறந்துவிடமாட்டேன். எதிர்

காலத்தில் ஆட்சி என் பொறுப்பில் வரும்பொழுது அது குடிமக்களுள் ஒருவனால் நடத்தப்படும் ஆட்சியாகத் திகழும் என்று உறுதி கூறுகிறேன். பொன்னாட்டு மக்களின் பேரன்பு என்றும் என்பால் இருக்கவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.''

உடனே மக்களின் வாழ்த்தொலி வானமளாவியது. வெகுநேரம் வரை இடைவிடாது கரகோஷம் ஒலித்தது.

''மன்னர் நாகநந்தர் வாழ்க!'' என்று முழங்கினர்.

''சோலை நாட்டு மன்னர் தயாளநந்தர் வாழ்க!'' என்று முழங்கினர்.

''இளவரசர் ராஜநந்தர் வாழ்க!'' என்று முழங்கினர்.

பின்னர் திடீரென்று யாரோ ஒருவர் ஒற்றைக் குரலில் ''எதிர்கால அரசி கலாநந்தினி வாழ்க!'' என்று குரல் கொடுத்தார். உடனே அங்கு கூடியிருந்த ஜன சமுத்திரம் வாய்விட்டுச் சிரித்தது. அந்தச் சிரிப்பொலி விண்ணெங்கும் வியாபித்தது. பொன்னாட்டின் காடு, மலை, ஆறு, குளம் எங்கணும் அந்தச் சிரிப்பொலி எதிரொலித்தது.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே''

— பாரதியார்.

...ராசர் பல்கலைக்கழக...
அவ்வை
தி.சு. சண்முகம் நூல...
தமிழியல்துறை.